
பூவை.எஸ்.ஆறுமுகம்
களத்துமேடு
செல்வி பதிப்பகம்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

சமூக நாவல்

# களத்து மேடு

பூவை எஸ். ஆறுமுகம்

செல்வி பதிப்பகம்
காரைக்குடி—623 001

செல்வி - 77
முதற் பதிப்பு : டிசம்பர் 1985
உரிமை பதிவு

O,31,3NA,K
M 5

விலை ரூ. 15-00

அச்சு : காக்ஸ்டன் அச்சகம், சென்னை 1

| | | |
|---|---|---|
| Title | : | KALATHU MEDU |
| Editor | : | POOVAI S. ARUMUGAM |
| Language | : | TAMIL |
| Subject | : | SOCIAL NOVEL |
| Book Size | : | CROWN 8 VO |
| Pages | : | 184+8=192 |
| Edition | : | FIRST EDITION<br>DECEMBER 1985 |
| Publisher | : | SELVI PATHIPPAHAM<br>KARAIKUDI - 623 001 |
| Classification | : | O, 31, 3NA, K |
| | : | M 5 |
| Price | : | Rs. 15-00 |

# பதிப்புரை

கிராமத்துச் சூழ்நிலையில் விளைந்தது இந்தக் ‘‘களத்து மேடு’’ கதை.

கதையைப் படிக்க ஆரம்பித்தால் நாமும் களத்து மேடு சென்று கண்விரியப் பார்ப்போம்.

கதையின் நடு நாயகி தைலம்மை.

அவள் தீ ! அவளே நீர்!

அவள் பூவிதழ் விலக்கி, பொன் மலர் தூவினால் அங்கே கனலின் கொழுந்து சிரிக்கும் !

பூவை. எஸ். ஆறுமுகம் அவர்கள் கதிரையும் கதிர் மணியையும் புதுமையாகப் புனைந்து நம்மையெல்லாம் அழைக்கிறார் சக்தியின் விதியைக் காண்பதற்கு !

படியுங்கள்; அருமையான விளைவிற்கு வித்திட்டுப் பயிர் படைத்த ஆசிரியரைப் பாராட்டி நன்றியுடன் மகிழ்வோம்.

காரைக்குடி
10-12-1985

வீர. சிவராமன்
செல்வி பதிப்பகம்

பூவை

எஸ், ஆறுமுகம்

எழுதிய

# களத்து மேடு

கிராமத்து மண்ணில்

விளைந்த

நல்ல கதிர் மணி

படிக்கத் தெவிட்டாத

பைந்தமிழ்ப் புதினம்

படித்துச்

சுவையுங்கள்

செல்வி

பதிப்பகம்

# களத்து மேடு

## தோரண வாயில்

பெண், தனக்கு உயிர்ப்பான கற்பின் நிறை எனும் காப்புப் பூணுவதன்மூலம், அவளது பெண்மை உரியினும் இனிதாக அமைகிறது; உயிரினும் மேம்பட்டதாகவும் அமைகிறது. இத்தகைய புதிர் விளையாட்டின் விடைக்காகக் காத்துத் தவம் கிடக்கும் கேள்விகள் ஒன்றா, இரண்டா ?

விடை, விதி வடிவம் கொள்ளும்போது, வினாவுக்கு வினை ரூபம் கொள்ளுவதுதானா கஷ்டம் ?....

வினாவுக்கும் விடைக்குமாகச் சட்டுப் பாலம் அமைக்க வல்ல பெண்ணுக்கும் அவளது பெண்மைக்கும் இப்புவியிலே அமைந்துவிடுகின்ற சோதனைகளே அக்கினிப் பரீட்சையாக அமைய, அதன் விளைவாகவோ அல்லது விளையாட்டாகவோ, அப் பெண்ணும் அவளது பெண்மைச் சக்தியும் தீக்குளித்து, அந்நிலையின் முடிவாக ஊருக்கும், உலகத்துக்கும் அவள் பெயர் ஓர் உதாரணமாகவும், உத்தாரணமாகவும் ஆகின்ற நடப்பிலேதான் அவள் வாழ்வும் கனவும் கதை உருவம் எடுக்கின்றன.

இதுதான் தைலம்மையின் நடப்புச்சித்திரம்.

'தைலம்மை !'—

நாகரிகம்' என்ற வெளிவேஷம் புனையத் தெரியாத—புனைய வேண்டிய இக்கட்டு இல்லாத-பட்டிக்காட்டுப் பதுமை அவள் ! பதுமைக்குப் பேசத்தெரியும். அதுவே ஓர் அதிசயம் அல்லவா ?

அவள் தீ !

அவளே நீர் !

அவள் பூவிதழ் விலக்கி, பொன் மலர் தூவினால், அங்கே கனவின் கொழுந்து சிரிக்குமே !....

அவள் இன்முகம் ஏந்தி, எழில் நலம் காட்டினால், அங்கே அன்பின் மலர்ச்சி ஏடு விரியுமே ! ..

அவளுடைய வீரம் செறிந்த தமிழ்ச்சாதியின் மறக்குலப் பண்பாட்டிலே தொக்கி நின்ற போராட்டங்கள், புதிர்கள், பிரச்சனைகள், படிப்பினைகள், சொப்பனங்கள், இங்கிதங்கள், விதரணைகள், வினயங்கள் எத்தனை எத்தனையோ !...

ஆஹா, அவள் கனவுக் கிளி ! அவள் எத்தனை எத்தனையோ இளவட்டங்களின் கனவாக, அவர்களுக்கு வாய்த்த கனவாக நின்று, அவளே கனவின் தர்மமாக— வாழ்வின் நியமமாக— விதியின் தலைவியாக—கற்பின் கனலியாக—பெண்மையின் சக்தியாக—சக்தியின் விதியாக நிலவுகின்ற நடப்புக் கதையை என்னென்பேன் !...

அந்த நடப்புக் கதையை நீங்களும் அறியத் துடிப்பு உண்டாகிறதல்லவா ?— அப்படியென்றால் களத்துமேடு உங்களை அழைக்கிறது. அமைதிபூத்த நம்பிக்கையுடன் அண்டிச்செல்லுங்கள் !...

புரட்சியும் புதுமையும் தோரணம் கட்டி உங்களை வரவேற்கும் !...

# கதை கொத்து : 1

## இறை மணம்

அந்தப் பெரிய குதிரில் விதை நெல் அழகுடன் கோடை கட்டி வைக்கப்பட்டிருந்தது. ராஜ கோபுரத்துக்கு அமைந்த

பொற்கலசம் போன்ற அந்தம். விசாலமான வாசலிலே கீழ் வசமாக அமைப்பு. கீற்றுக் கொட்டகையில் குதிர் காபந்தாக அமைந்திருந்தது. 'எதிர்காலம் மிக உண்டு' என்ற தாத்பர் யத்துடன் நிமிர்ந்து தழைத்து நின்று பூக்களைச் சொரிந்த வண்ணம் இருந்த முருங்கைப் போத்தின் நிழல் அந்தக் குதிருக்குக் கிட்டிய துணை. வடமேற்குப் பக்கத்தில் நிலைத்துவிட்ட மாட்டுக்கொட்டிலும் தென்கிழக்குப் புறத்தே ஒய்யாரமாக நின்ற வைக்கோல் போர்க் கும்பலும் விதை நெல் சேமிப்புக்கு வாய்த்திட்ட காட்டுக் காவலோ ?

அந்தி வானத்தின் விந்தைக் கதிர்கள் சுந்தரப் பூரிப்புடன் நெடு வாசல் நெடுகிலும் விளையாடிக் கொண்டிருந்தன. பிரிவின் கிலேசம் லவலேசமாவது குறி சொல்ல வேண்டுமே! —கிடையாது. 'ஒன்றின் முடிவு இன்னொன்றின் ஆரம்பத் துக்குப் பிள்ளையார்சுழி இடுவதே தர்மம், மரபு, நியதி !' என்னும் விதியின் தடம் ஒற்றிய தத்துவம் அந்திக் கதிர் களுக்குப் பாடம் ஆகியிருக்கும் போலும் !

அவள் இருட்டை விட்டு வெளியே வந்தாள். வாசலுக்கு வந்தும்கூட, இன்னமும் அவளது கண் எரிச்சல் அமரவில்லை. நாசூக்காக மூக்கை உறிஞ்சிக்கொண்டு, சுங்கடியின் முக தலைவைக் கொய்து, முகத்தைத் துடைத்தாள். இப்போது கண்கள் துலாம்பரமாக விளங்கின. வாசலிலே விளையாடிய மஞ்சள் வெயிலின் எழில் கூட அவளுக்குப் புதிய அர்த்தத் தையே கொடுத்தது. "என்னமோ, இண்ணைக்கு அல்லாமே புதுசாட்டந்தான் மனசுக்குத் தோணுது. ம்....என்னோட மனசுக்கு ஏத்தாப்பிலவே, ஆத்தா மூத்தவளோட லவிதமும் ஒத்துமையா எழுதிக்கிடந்துச்சுதின்னா, அப்பாலே எம்பாடு வேட்டைதான் ! .... அப்பாலே, அப்பன்காரக கிட்டவும் காதைக் கடிக்கத் தோதுப்படும். அடடே, நான் மறந்தே பூட்டேனே ?....இப்பத்தான் அப்பனுக்கு கண்டு முதல் சோலி அல்லாம் ஒஞ்சுக்கிடக்குது. காலைக்கையை உதறிப்போட ஒரு கிழமை வேணாமா ?...அந்தக்கெடு பொறுத்துத்தான்

அல்லாத்தையும் சொல்லோணும்? ம்....சமைஞ்ச குட்டிக்கு லாயக்கா பெத்தவ மட்டும் இருந்திருந்தாக்கா, என்னா குறைச்சல் எனக்கு?......அவுக அவுகவிதி அவுக அவுக ளோட!...ஊம்!'

நினைவுகளின் சங்கமத்தில் அவளது கன்னி நெஞ்சம் உறவாடியதே தவிர, அவள் ஒட்டவில்லை.

அவள் : தைலம்மை!

அவள் நெடு மூச்செறிந்தாள். கொட்டடி ரவிக்கையின் இருதயப்பகுதியில் வெம்மையின் சூடு; மதர்ப்பின் துள்ளல்!

பழம் கனிந்தால் தரையில் உதிரும்.

எண்ணங்கள் கனிந்தால் பெருமூச்சு உதிரும்.

கிடாரி ஓங்கார நாதமிட்டு ஓடி வந்தது. 'ம்......மா!' என்ற அக் குரலிலே பிரணவப் பொருளின் பொருள் குரல் ஈந்திருக்க வேண்டும்! சந்தைப்பேட்டைப் பூரணி சீவிய கொம்புகளை காவி வர்ணம் நிறக்கும்படியாக குமரிப் பெண்ணைப் போல சிலுப்பிக்கொண்டு வந்து நின்றது. அதன் முகம் சாம்பிக்கிடந்தது. மழை தண்ணீர் இருந்திருந் தால், புல், தழை மண்டிக் கிடக்கும். இந்த வாயில்லா ஜீவன்களின் முகங்களும் செழித்து விளங்காதா? ஒரு குடங்கை வைக்கோலைத் தின்றது அது நின்றவாக்கிலே. எம்பித்தாவியபடி சேகரம் செய்துபோட்டாள், இருந்திருந் தாற்போல, அவளுக்கு அடுப்படி ஞாபகம் வந்தது. ஆக்கின குழம்பு கொதித்துக்கொண்டிருந்தது. பலாச்சுளை வற்றல்கள் முழுவேக்காடு கண்டிருக்கும். சோறு நுரை கட்டிப் பொங்கத் தொடங்கிவிடலாம். வெள்ளைக் கட்டை. கொஞ்சம் தாங்கித் தான் வேகும்!

காலமும் கனவும் கேள்வியும் பதிலுமாக உருவெடுத்து. உருக்காட்ட, அந்த நினைவு நிலைத் தடுமாற்றத்துடன்

உட்புறம் தாவியோட எத்தனிக்கையில், சரிந்துவிழுந்த மேற் புறச் சேலையை வாகாகக் கொய்து போட்டுக் கொண்ட போது, மார்பகத் திரட்சியில் விரல் நுனி ஸ்பரிஸசுகம் பெற, அம்மயக்கத்தில் சற்றே லயித்து நின்று, பிறகு உள்ளே அடியெடுத்து வைத்தபோது, எல்லாமே அவள் போட்ட புள்ளிக்குத் தப்பாமலே இருக்கக் கண்டாள். 'சவாசு !...' மகிழ்வு தடம் காட்டியது. தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள். 'அப்பன் காரக வந்திடுவாக. கோழி கூப்பிட கஞ்சி குடிச்சிட்டுப் பறிஞ்சவுக, திரும்புற பொழுதுதான். ம்!...எப்பவும் போற இடம் வார இடத்தைச் சொல்லிப்புட்டுத்தான் புறப்படு வாங்க. இப்பைக்கு அந்த வழக்கமும் அத்துப்போச்சு...... ஆத்தாடி, மறந்துப்புட்டேனே.......! குடி தண்ணி ஒரு முட்டி இறைச்சாந்திட வேணும்...அடி சாய்ஞ்சிருச்சே!—'

பிரிமணைகளை வரிசைக்கிரமாகப் பரப்பிவைத்து அதன தன் இடத்தில் வெஞ்சனம், சோறு, குழம்பு என்று சட்டிப் பானையை அமர்த்திவிட்டு, நீர் கொணர எண்ணிப் பானையை எடுத்தாள் தைலம்மை.

"தைலி!...ஏலே தைலி!"

தோழியை அழைத்தாள் தோழி.

"அடியே பொன்னாயி ! ... இப்பத்தான் ஒன்னை நெனைச்சுக்கினேன். நீயே நேருக்கு நேரே வந்து நிக்கிறியே...! வா, வெரசா...அப்பன்காரரு வூட்டிலே இல்லே!..."

தென் முகத்தில் நின்ற வேப்ப மரத்தை இலக்கு வைத்துப் பிரிந்து நடந்தார்கள்.

"சாமியார் கேணிக்கா போவம்?"

"அங்கிட்டாலதான் கள்ளியைச் சீவிப் போட்டிருக்காங்களாங்காட்டியும் !...கங்காணித் தோட்டத்துக்குத் தான் நாட வேணும்."

"ஓ...அங்கால போவணுமாக்கும்? புரியுது ... புரிஞ்சுக் கிட்டுது ; நட. எட்டிப்போடுடி காலை ! ... "பொன்னாயி விஷமத்தனமாக நகைத்தாள். அவள் அவசரக்காரி. ரவிக்கையை முடிந்துகொள்ளாத குறையைத் தீர்த்தாள். 'கைப்பிள்ளையோட தீனக்குரலிலே என்னதான் மட்டுப் பட்டுத் தொலைக்குது? ... ம்... என்னை மாதிரி இப்பைக்கு தைலியும் நினைவுப்பிசகா இப்பிடி இருந்திருந்தா...இந் நேரம் ...?' எதையோ நினைத்தாள். எதுவோ தோன்றிற்று.

சொறிநாய் ஒன்று ஓடி மறித்தது. விலகியது. மடத்துக் குளம், சாம்பான் பள்ளம், வாணியன் செக்கடி—இப்படி பகுதிகள் விலகின.

சங்கரன் குடியிருப்பு பின் தங்கியது!

பொன்னாயின் பதட்டத்தைக் கண்டுகொள்ளாதவளாக, அடி வைத்து அடி மிதித்து நடந்தாள். விழிதேய, வழி வளர்ந்தது. விழி துயில, விழி விழித்தது.

சிரித்தும் சினந்தும் ஊராண்ட ஆத்தா காட்டேறிக்கு அஞ்சலி செலுத்தி நடந்தார்கள்!...

கங்காணித் தோட்டம் வந்தது. தோட்டத்தின் தலைப்பை மிதித்ததும் தீயை மிதித்தவளையொப்ப தைலம்மை ஏன் அவ்வாறு நடுங்கினாள்?...

"தைலி, என்னடி அப்பிடியே நிலை குத்தி நின்னுப் புட்டே?"

பிடரியில் குந்திய கேள்வி, தைலம்மைக்குச் சுயப் பிரக்ஞையின் பிடரியைத் தட்டியதோ?

"ஒண்ணுமில்லியே! .."

சொற்களின் தடுமாற்றம் அவளைக் காட்டிக் கொடுக்க வில்லை.

தைலம்மை நடந்தாள்,

பனிவாடை வீசியது.

முன்பகுதி நிலவு ரசனை யுணர்வு மண்டிய பாவனையில் மண்ணைக் கண்காணித்துக்கொண்டிருந்தது.

நளினமான மெல்லிளங் காற்றும், மன மோகனச் சீதளமதிக் கதிர்களும் அச்சூழலுக்கென்று இயற்கை அமைத்துக் கொடுத்த சீதனம்போல விளங்கியது.

இருமருங்கிலும் தென்னங்கன்றுகளும் ஒட்டுச் செடிகளும் நிரம்பியிருந்தன.

மூசு மூசென்று ஆளுக்கு நாலு கடகால் தண்ணீர் இறைத்து நிரப்பிக் கொண்டனர்.

இரண்டு கை பச்சைத் தண்ணீரை அள்ளி எடுத்து முகத்தில் வீசினாள் தைலம்மை. ஒரு வாய்த் தண்ணீர் அவளது தாகத்துக்குப்போதக் காணோம். மறுகை உதவியது.

புறப்பட்டு விட்டாள் தைலம்மை. அள்ளிச் செருகிய கொண்டை; அதிலே மருக்கொழுந்துக் கொத்து. எங்கும் நீக்கமற நிறைந்துவிட்ட இறையை நிகர்த்து மணம் கூடியது; மணத்தினைக் கூட்டியது.

காந்தக் கவர்ச்சி மின்னி விளையாடிய நயனங்கள். போதையின் போதம் தெளித்துக்கிடந்த இதழ் துண்டங்கள். விழிகளும் உதடுகளும் பாவத்துடன் உண்டு பண்ணிய குறுஞ் சிரிப்பு. விதியின் சூட்சமச் சிரிப்பின் விடுகதைப்பாணியில் அடிக்கடி ஒளிந்து ஒளிந்து தோன்றியது.

மதுக்குடம் ஏந்திய பருவத் திளைப்புடன் 'தலைச் சும்மாட்டில்' சுமந்த நீர்த்தோண்டியுடன் ஒயிலே அவளாக—அவளே ஒயிலாக—நடந்தாள்.

விழிபற்றி, வழி பற்றினாள் பொன்னாயி.

காத்தாஞ் செட்டி சவுக்கைத் தோப்பை அண்டியதும், காலிலே ஏதோ இடறவே, ஏது காணத் துடித்தவளாக, குடத்தை இடுப்பில் வாங்கிக் கொண்டு குனிந்தாள் தைலம்மை.

வறுமை ஒருருக் கொண்ட பாங்கினிலே பெண் ஒருத்தி எலும்புந்தோலுமாக மண்ணில் சாய்ந்திருந்தாள். தண்ணீர் தெளிக்கப்பட்டது. மயக்கம் தெளியும் குறி கண்டது. மூச்சு இரைத்தது. வாழ்க்கையின் ஓட்டப்பந்தயத்தில் தலைகால் புரியாமல் தட்டுக்கெட்டு அலைந்த அலைச்சலின் களைப்புத்தான் அப்படி மூச்சை இயக்கிற்றோ, என்னவோ?...

"ஆத்தா!..."

தைலம்மை, அனுதாபத்துக்குரியவளை அனுதாபத்துடன் அழைத்தாள். அவள் இமைகள் நெகிழ்ந்து நனைந்தன.

"தா...யே!"—பதிலுக்குக் குரல். தாயாக மதித்தவளையே தாயாக்கினாள். பாசம் உறவு கடந்ததல்லவா, லோகமாதாவைப் போன்று!

காலமும் தொலையும் கண்ணாமூச்சி ஆடின.

அபலைக்குச் சோறுபடைத்தாள் தைலம்மை.

"தாயே, ஒனக்குச் சாமி ஒண்ணும் குறை வைக்க மாட்டாதம்மா!" தைலம்மையை விழுங்கிவிடுபவளாக ஏன் அப்படிப் பார்க்க வேண்டும்?...

தைலம்மையின் கண்கள், இதயத்தை ஒத்து நிரம்பின. "ஒங்க பேரு என்னாங்க?" என்று கேட்டாள்.

"தாயே, இந்த நாதியத்தவளோட ஊரு, பேரு, கதை, காரணம் எல்லாம் எதுக்கம்மா ஒனக்கு?...நான் போயிட்டு வாரேன்! தெய்வத்தை நினைச்சாலும், நினைக்காங்காட்டியும் தெனைக்கும் ஒன்னை மனசார நினைக்க மறக்க

மாட்டேனாக்கும்!...'' புறப்பட்டாள். அவளுடன் பொன்னா யிக்கும் விடுதலை!

கணங்கள் சில ஓடியிருக்கும்.

''ஆத்தா!'' என்ற பாசக் குரல் ஓடிவந்து விழுந்தது.

கைவிளக்கின் சிமிட்டலில், சுவர்க் கண்ணாடியில் முகம் பார்த்து லயித்திருந்த தைலம்மை, கன்னங்களின் செம்மை யில் கலந்திருந்த முகப்பருக்களை நோக்கியபடி இருந்தாள். அழைப்பின் ஒலிகேட்டதுதான் தாமதம், ''அப்பா!...'' என்று பதில் குரல் ஈந்தவாறு, வெளிப்பக்கம் ஓடி வந்தாள்.

வாசலில் நின்னார், செங்காளியப்பன் சேர்வை. கையிலே ஒரு முடிச்சு. முகத்திலே அடங்காத களிப்பு. தோற்றத்திலே வெற்றியின் கருவம். ''ஆத்தா!...ஒரு பெரிய சமாசாரம் கெலிச்சிட்டுது என்மட்டுக்கும்!...சதா நான் கவலைப்பட்ட சங்கதி அது!...ஆத்தா தைலம்மை!... உம்பிட்டு கண்ணாலச் சம்பந்தம் தெகைஞ்சிருச்சம்மா. தலைக்கறி ருசி அது இருக்கிற சட்டிக்கு ரவையாச்சும் புரியாது. அது கணக்கிலே, ஆத்தா மூத்தவளோட தீர்ப்பு இது பரியந்தம் தெரியாமல் இருந்திச்சு என் வரைக்கும். ஆனா, ஒன் அதிஷ்டம், அந்தத் துப்புக்குக்கூட தடயம் கண்டு சொல்லுயிருக்கு!...ஒனக்கு மாப்பிள்ளை யாரு, தெரியுமா தைலி?...'' என்று ஆனந்தத்தின் ஆர்ப்பாட்டத் துடன் அருமைத் தவப்புதல்வியிடம் ரகசியமாகப் பேச லானார் செங்காளியப்பன் சேர்வை; நரை படர்ந்த குடுமி யைத் தடவிக்கொண்டார்; கருக்கரிவாள் மீசையை முறுக்கி விட்டார்.

திறந்தவாய் மூடாமல் பேசின பேச்சை திறந்த வாய் மூடாமல் கேட்டுக்கொண்டேயிருந்த கன்னி, முடிவில் எதிர்க் கேள்வி விடுத்தாள்.

''மெய்யாலுமா அப்பா?...'' என்று கேட்டாள் தைலம்மை.

அவளது மாநிற மேனி குலுங்கியது. கழுத்தில் இழைந்த தங்கச் சங்கிலியும் குலுங்கியது. 'சிலட்டூரு மாப்பிள்ளை எனக்கு மச்சானா ஆகப்போறாங்கடாமே!' என்று அவள் மனம் ஆனந்தக்கடலாடத் தொடங்கியது !

# கதிர்க் கொத்து : 2

## ''இவுகதான் மாப்புள்ளே!''

தைலம்மை, ''மெய்யாலுமா?'' என்று தொடுத்த வினாச் சரத்தின் உட்குரலை அனுமானம் செய்யத் துடிப்புக் கொண்டவர்போல, செங்காளியப்பன் சேர்வை அப்படிப் பட்ட பதட்டத்துடன் தம் மகளை ஆழ்ந்து நோக்கினார்.

அவளோ, தன் தந்தையின் மனக் கிட்டங்கியில் இருந்த திட்டக் கனவின் கருத்தினை ஊகம் செய்துகொள்ள முயலுபவளாக, அப்படிப்பட்ட ஆர்வத்திளைப்புடன் சேர்வையை உறுத்துப் பார்த்தாள். பெற்றவர் ரகசியம் பேசிய பான்மையும் பாவனையும் அவளுக்கே மலைப்பைக் கொடுத்திருக்கவேண்டுமோ?- அதனால்தான், அவள் தன்னையும் அறியாமல், அவ்வாறு கேள்வி கேட்டாளோ?- 'மெய்யாலுமா?' என்ற எதிர்க் கேள்வி மகிழ்வில் பிறந்ததா? இல்லை, ஏமாற்றத்தில் முளைத்ததா ? — அவளுக்கே ஒன்றும் விளங்கவில்லை.

சேர்வை ஒரு கனைப்புக் கனைத்து விட்டு, மறுமுறையும் தைலம்மையை ஏறிட்டுப் பார்த்தார். ''என்னம்மா, ஒனக்கு மனசுக்குச் சம்மதந்தானே?...'' என்று மிடுக்குக்

குலையாமல் கேட்டார்; மீசையை முறுக்கியதோடு நின்று விட்டார்; மீசையில் விளையாடிய கோல நிலாவை எதுவும் செய்யவில்லை. அவரது விழி விரிப்பு மாய மந்திர ஜமுக்காளமா, என்ன, மகளின் முகத்தைக் கண்டே அகத்தைப் படித்துக் கொள்ள! அவருக்கு ஒன்றும் மட்டுப் படவில்லை. மீண்டும் பலமாகக் கனைத்தார். கையிலிருந்த முடிச்சை முகப்பு ஓட்டுத் திண்ணை முந்தலில் வைத்தார், பதனமாக. 'ஒருக்கா', இதிலேதான் மாப்புள்ளை கமுக்கமா ஒளிஞ்சு குந்திக்கிணு இருக்காங்களோ?' என்று ஒரு நையாண்டி நினைப்பும் அவளுக்கு ஓடாமல் இல்லை. ஆனால், மனம் ஓட்டமாக ஓடிக்கொண்டிருக்கையில், கேலிக்கு இடம் ஏது ?

கனைப்பின் அர்த்தத்தைக் கன்னி அறியமாட்டாளா?- அறிவாள். அறிந்தவள் தானே! "அப்பா!"

ஆவல் கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டது. "என் னாம்மா?"

"சத்த முந்தி காதுக்கும் காதுக்கும் பொருத்தி வச்சுப் பேசின பேச்சு ஓட்டுக்கும் சுத்தம் தானுங்களே ?"

'மறுகா...?"

"அப்பாலே...?"

"வாயைத் தொறம்மா!"

"நீங்க பேசிவந்திருக்கிற அந்தச் சிலட்டூர் மாப்புள்ளைக்காரகளைப் பத்தி ஓங்க மனசு நாளைப் பின்னக்கி எப்பவுமே தடம் புரளாதுங்களே?..."

"ஊஹும்! சத்தியம் இது!"

"ஏன்னா, நாளைக்கு இந்தச் சம்பந்தம் சாடிசற் முறிஞ்சு போச்சுதின்னாக்க, அப்புறம் இந்தச் சங்கரங்குடி யிருப்பு அறுவது குடிகளும் நம்பளை வறுத்துப் [illegible]ட்டு

வாயிலே போட்டு மென்னு துப்பிடுங்க. அதுக்காவத்தான் இதை எச்சரிக்கையாய்ச் செப்புறேனாக்கும் !...''

''அதெல்லாம் ஒன் அப்பனுக்குப் புரிஞ்ச கதைதான்! தைலி! ''

''அதான் மெய்யான தாக்கலாச்சுங்களே! வந்து...''

''என்னம்மா தொக்குவைக்கிறே?''

''இந்த மாப்புள்ளைக் காரகளை எப்படி நீங்க கண்ணி கட்டிப் புடிச்சீங்க?''

''அதுவா? ''

கேட்டுவிட்டு, ஒரு தக்கம் சிரித்தார். சிரித்துவிட்டு, ''அதெல்லாம் ஒனக்கு எதுக்கம்மா? அது பெருங் கதை யாக்கும்! அல்லாம் நம்ம சாமியான சாமி பெருங்காரை முண்டரோட கிருபையாக்கும்! '' என்று மையமாகப் பேசினார். எங்கோ 'பொடி' வைத்துப் பேசிய பேச்சை அவர் அப்படியே மறைக்கப் பார்த்தார். ஆனால், கொம்பு சுற்றிய சேலையை அப்படியே அந்தரத்தில் விட்டுவிட இயலுமா?... இதம் கணித்துத்தானே எடுக்கவேண்டும்!

'அப்பன்காரக ஆளான ஆளு...... ஆவுடையார் கோயில் ஆளாச்சே ! இவுக திட்டம் என் மூளைக்கு வருமா ? ...ம் .. பாவம், பசிக்கிறக்கம் அப்பா ருக்கு!...விட்டுபுடிப் போம்! .... விடியட்டும் !...'

தைலம்மை நகை பூத்தாள். 'வாங்கப்பா, சோறு உண்ணுறதுக்கு,'' என்று அழைத்தாள்.

''அதுசரியம்மா ! மாப்பிள்ளை சங்கதி என்னாச்சம்மா?'' மறுகித் திரியும் காளையும் இந்த மனமும் ஒரே ஜாதிதான்!

'மாப்புள்ளைப் பேச்சுத் தானே ? ... ஒங்களுக்கே புடி ...ச்சுதின்னா எனக்கு மாத்திரம் புடிக்காதாங் காட்டி ?

ஒங்க பொண்ணு பேரிலே நீங்க வச்சிருக்கிற பாசம் ஊர் ஒலகம் அறிஞ்சதாச்சே? வாங்க, மூஞ்சியைக் கழுவிக்கிட்டு வாங்க!"

சேர்வை வெற்றிப் பெருமிதத்தினைப் புன்னகையாக்கிக் கொண்டு எழுந்தார்; நெட்டி பறித்தார்; கை முடிச்சை எடுத்தார்.

"முடிச்சை மாந்தளைப் பொட்ட கத்திலே வைச் சிடட்டுமா?"

"நீ போயி சோத்தைக்கொட்டி ஆறவை, சருவச் சட்டியிலே. நான் முடிச்சை வச்சிட்டு வாரேன்!"

'முடிச்சிலே மாப்புள்ளையைவிட ஒசத்தியா என்ன குந்தியிருக்குது"... தந்தையின் போக்கு இப்போதும் ஒரு 'வகை'யாக இருந்தது. 'பத்து ஊருத்தண்ணி குடிச்சவுக அப்பாரு.... பத்தாயிரம் பேருக்குத் தண்ணிகாட்டினவுக அவுக. இப்பிடிப்பட்டவுக, ஆயி செத்த இம்மாம் காலமாய்—இந்தப் பத்து வருசமா—என்னைக் கட்டிக்காக்க வேணுங்கிற ஒரே குறிப்போடே ஒத்தைக்காலிலே நின்னு என்னை ஆளாக்கிப்பட்டாங்க! அவுக மனசு இஷ்டப்படி நடக்கிறதைத் தவிர, எனக்கு வேறே நெனைப்பு வரவேபுடாது!... அது எம்புட்டுக் கடமை! ஆமா!'

குறிஞ்சிப்பாடி வட்டியைக் கழுவினாள். வெஞ்சினைத் தட்டும் தயாராயிற்று. சோறு ஆவி பறந்தது. ஆக்கின குழம்பு மணத்தது. அடுப்பில் சுட்ட 'கும்மளான் கருவாட்டுப் பொடி' வாசனை தூவியது. வாய்க்கு உணக்கையாக வேளா வேளைக்கு ஏதாவது "கவுச்சி" இருக்கவேண்டும் சேர்வைக்கு!

அடுப்படியைப் பிரிந்து நடுக் கூடத்தை அண்டி, வாசற் பகுதிக்குக் கண்ணோட்டம் சமைத்து, அப்பனை அழைத்

தாள். சோற்றுக் கையை உதடுகளின் ஓரத்தே பொருத்தி வசமாக அலட்டினாள்.

ஆலத்தம்பாடிக் காளை இடது கால்களை 'கெந்தி' நடந்தது. அதை இப்போது பார்த்து மருந்திட்டார். செவலைக்கு உண்ணிகள் மிஞ்சிக்கிடந்தன. ஒட்டினார். ஓட வில்லை அவை; ஒட்டின; ரத்தப்பசையை உறிஞ்சி நப்புக் கொட்டியவாறு ஒட்டிவிட்டன. பிறர் சொத்தை தெய்வத் திற்குக்கூட அஞ்சாமல், நயவஞ்சனையாக ஏப்பமிட்ட ஒருவன், தான் மேலும் மேலும் உயர்ந்து செல்வதை அறிந்து எக்காளமிட்டுச் சிரித்து, அத்துடன் நில்லாமல் தன்னைப் படைத்தத் தெய்வத்தையே ஏளனம் செய்தபடி, இன்னும் தொடர்ந்து தீமைகள் செய்வதிலேயே கருத்துக் கொள்வதைப் போலத்தான் இந்த உண்ணிகளின் போக்கும் இருந்தது. அயலவன் பொருளுக்குப் பேயாசையுடன் பேராசைப்படும் இந்த மனித உண்ணிகளுக்குத் தண்டனை என்ற ஒரு முடிவு காலத்தின் கரங்களில் மறைந்திருக்கும் ரகசியம் எங்ஙனம் தெரிய முடியும்? அந்த ரகசியம்தானே வாழ்க்கையின் மந்திரம்! அதுதானே சிருஷ்டியின் அந்தரங்கம்!

"அப்பாரே!"

உடுக்களைச் சுற்றி விளையாடி நீந்தியது நிலவு.

"இந்தாலே வாரேன், ஆத்தா!"

வடக்கு முக்கத்தில் ஆவாரஞ் செடி ஒண்டலில் இருந்த முட்டியைக் கவிழ்த்தார் சேர்வை. முட்டின்றி வழிந்தது. நீர் துவாலையால் முகம், கை, கால்களைத் துடைத்தார். "விபூதிக் கொட்டுக் கடையைக் கொண்டாம்மா" என்றார். திருநீறு வந்தது, மூன்று பட்டைகள் விழுந்தன. 'தாயே பராபரி...அப்பனே!' முனகிக் கொண்டே மூன்றாம் பயணமாக விபூதியை வாயில் போட்டுக் கொண்டார். குடுமியைத் தட்டி விட்டுக் கொண்டு உள்ளே மடங்கினார். வயதை ஒளித்த அவரது நடையில்தான் எத்தனை மிடுக்கு!

"பொண்ணு ஒண்ணு கண்ணாளத்துக்கு நின்னாக்க, அதாலே கண்டு ஒனக்கு வயசு கூடிப்பிட்டுதின்னு பல்லு மேலே பல்லு போட்டு யாராச்சும் செப்ப வாய்க்குமா?" என்று நடேச அம்பலம் 'ஆறுதலைக் கட்டுப் பஞ்சாயம்' ஒன்றில் அம்பலப் படுத்தவில்லையா?—சேர்வை என்றால் சேர்வை தான்! வயசு அறுபதுக்கு மிதந்ததே?

வட்டி, வட்டியும் முதலுமாகக் கொடுத்தது போலும்! எடுத்துக்கொண்டார் செங்காளியப்பன். அதன் விளைவாகவே, ஏப்பங்கள் கூடின. உண்ட மயக்கம் கூடியது, 'செம்மறிக் கிடையைப் பூட்டிப்புட்டு, எல்லாக் கதவையும் நாதாங்கி போட்டுப்புட்டு, சாப்பிட்டு ஆனதும் படுத்துக்க தைலி! எனக்குத் தூக்கம் அசத்தது!...'' நூவரெலியாச் சுருட்டுடன் வாசலில் கிடந்த நார்க் கட்டிலில் வந்து சாய்ந்தார். வேப்பமர இலைகள் சாய்ந்தாடின.

தகப்பன் உறக்கத்தின் கால்களிலே சரண் புகுந்ததை அறிந்தாள் மகள். அவள் பாதங்களிலே பசி அடைக்கலம் புகுந்தது.

தைலம்மை வட்டிலின் முன்னே குந்தினாள். வலது காலை மடக்கியும் இடது காலை உயர்த்தியும் குந்தியிருந்தாள். சோற்றில் குழம்பை ஊற்றினாள். 'சாகத்தட்டு' நிரம்பியது. கை விளக்கை நகர்த்தியது கை. ஒரு கவளம் அள்ளிப் போட்டாள். ஒரு நினைவு வந்தது.

அந்த ஒரு நினைவு!

ஆவணத்தான் கோட்டை தேரோட்டம் அன்று. ஊர் விழாக்கோலம் பூண்டிருந்த நேரம். உறவும் பாசமும் முயங்கித் திளைத்த வேளை. தைலம்மை கனவின் வடிவமாக நீர் கொணரப் புறப்பட்டாள். கங்காணித் தோட்டத்துக் கேணிக்கு நடந்தாள். கனவுகளுடன் நடந்தாள்; ஆசை

களுடன் நடந்தாள். உயிருடன் பிறந்த பரிவு, அன்பு, பண்பு, பாசம் போன்ற உயரிய நல்லுணர்வுகளுடன் நடந்தாள்.

கிணற்றில் வாளியை அமிழ்த்தித் தண்ணீர் சேந்தினாள். வெயிலின் உக்கிரம் வேர்வையைச் சேந்தியது.

"இந்தாப்பாருங்க!" என்றொரு புதிய குரல் நூதனமான தொனியுடன் கேட்கவே, அவள் பொன்னின் பாவையாக மின்னி, பொற்பின் பதுமையாகத் திகழ்ந்தாள். ஆமாம்; வயசுப்பிள்ளை வாட்ட சாட்டமான அமைப்புடன் வந்து நின்று வலியப் பேசினால், அதே வயசு வாலைக் குமரிக்கு நாணம் பூக்காமல் இருக்குமா, என்ன? "என்னாங்க!" என்று பவ்யமாகக் கேட்டாள் தைலம்மை.

"தாகமாயிருக்குது!"—கையில் தார்க்குச்சி சகிதம் காணப்பட்டவன், விவரம் விளக்கினான்.

தைலம்மை அவள் வயசுப் பெண்டுகளிடம் பேச வாயெடுத்தால், வெகு துப்புரவான நகைச்சுவை வெடிகளை அள்ளி அள்ளி வீசுவது அவள் வழக்கம். இப்போது அவள் தன்னுள் எண்ணமிட்டுக் கொண்டாள். 'தாகமா?...என்னா தாகமோ?...' வந்த வடிவழகன் குனிந்த தலை நிமிரவில்லை.

"இந்தாங்க."

வாளியில் நீரெடுத்தாள்; மேடையை உரசி நின்றாள். இரு கரங்களையும் குவித்துக் குனிந்து நின்றவனின் தாகம் தீர்த்தாள். நீர் அருந்துகையில், அவள் அறியாத வண்ணம் அவளுடைய போதம் நிறைந்த போதை எழிலை அவன் பருகினான். அவன் உணராத வகையில் அவனது புதுவனப்பை அவளும் ரசித்தாள்.

"ரொம்ப நன்றி...வரட்டுமா?..."

"நல்லதுங்க!..."

அவன் பிரிய மனமின்றிப் புறப்பட்டான்.

அவள் மீண்டும் இடைமறித்தாள்.

"ஆமா, ஒங்க பேரு?"

"ஏம் பேர்...சரவணன்!.... சிலட்டூர் கங்காணிக்குத் தலைமகன்!..."

முத்துப் பற்கள் முல்லை இதழ் வெட்டி மூரல் சிந்தின.

"ஏம் பேரு தைலம்மை!...பக்கத்து ஊர் ...சங்கரன் குடியிருப்பிலே செங்காளியப்பன் சேர்வைன்னா அல்லாருக்கும் அத்துபடி!..."

"ஓஹோ!....அவுக பொண்ணா...சபாசு, சபாசு!

அவன் ரேக்ளாவுடன் கடுகி மறைந்து விட்டான். மறுகணமே, மறைந்த அவனை அவளது நெஞ்ச மெனும் நித்திலப் பூப்பந்தலிலே கொலு வீற்றிருக்கச் செய்து விட்டாள்! கனவும் தனிமையும் சரவணன் ஆகிப்பொலிந்த பின், அவளுக்கு என்ன குறை?....மெய்தான்; மோனத்தில் ஞானம் பிறக்கிறது. அதே மாதிரி, காதலும்தான் பிறக்கின்றது!

விக்கல் எடுத்தது. அப்புறம்தான் அவளுக்கு இப்புவனத்தின் ஞாபகம் ஊடுருவியது. லோட்டாவை எட்டி எடுத்தாள். குடித்தாள். 'ஆமா... அப்பன் சொன்ன மாப்புள்ளை இதே ஆளுதான்!...... அல்லாம் ஆத்தாளோட கடாட்சம்தான்... நாம நெனைக்கிறதை கடவுள் நெனைக்காதின்னு பேசுற பேச்சு பொய்! இந்தச் சம்பந்தம் மட்டும் ஒரு குந்தகமும் இல்லாமல், சுபமா முடிஞ்சிட்டா, மேலைக்கு ஆத்தா சந்நதியிலே போயி பொங்கல் வச்சு பள்ளயம் படைக்கோணும்!" எங்கொ கவுளி பேசியது. சீரான இடம், செம்மையாகக்காரியம் கைகூடும் என்று மட்டுப்படுத்திக் கொண்டாள்; மூசு மூசென்று வட்டிலைக் காலிசெய்தாள்.

பனியின் கூதல் ஆரம்பித்துவிட்டது.

கொட்டடியில் சிதறிக் கிடந்த சாணத்தைச் சுமந்து எருக்குழியில் வீசி கை கழுவினாள். கூடத்தில் படுத்துக் கொண்டாள்.

காக்கைகள் கம்பலை எழுப்பிக் கொண்டிருந்தன !

ஊர்ப் பொது விளக்கு அழுது வடிந்தது !

விடிந்தது பொழுது.

விளைந்தன விந்தைகள்.

மண்ணைப் பொன்னாக்க ஏர்க்கலப்பைகளும் உழவு மாடுகளும் புறப்படத்தொடங்கிவிட்டன. பின் சாமத்தில் உழவு மழைபொழியத் தொடங்கிய பின், உழைப்பின் சக்தி உற்சாகம் பெறக் கேட்கவா வேண்டும்? உழுது, நீர்பாய்ச்சி, நாற்று நட்டு, கதிர்மணிகள் சிரிக்கின்ற பொன்னான காட்சி களை இப்போதே மனக்கண்ணிலே தரிசிக்க ஆரம்பித்து விட்டனர் மக்கள் !

செங்காளியப்பன் சேர்வை தீவிரமான சிந்தனையுடன் வேப்பங் குச்சியும் கையுமாக வாசலில் வந்து நின்றார். வடக்கே அறுவடை முடிந்து வீணே கிடந்த ஆதிபிரமர்சாமி நஞ்சைத் தாக்கு, குப்பந் தேவன்தாக்கு, வல்லவாரி எல்லைத்தாக்குகளை 'தொழி' உழுது போடுவதற்கான ஆயத்தங்களைப்பற்றியும், மேற்கே நிலக்கடலை பிடுங்கிக் கிடந்த துண்டுகளை உழுது இடைப்பட்டமாக, எள், உளுந்து பாவுவதற்குரிய ஆக்க வழிகளைப்பற்றியும் ஆலோசித்தார் அவர். தோளில் கிடந்த துண்டை எடுத்துக் தலையில் முண்டாசு சுற்றிக்கொண்டு வாய் கொப்பளிக்க முனைந்தார். பிறகு உள்ளே விரைந்து சுவாமி கும்பிட லானார் பெரியவர்.

அப்பொழுது, வாசலுக்குத் திரும்பினாள் தைலம்மை. நெற்றியில் விபூதி விளங்கிற்று. நல்ல களையுடன் திகழ்ந்தாள். காதற் கனவின் கனியான இன்பத் தவிப்பை உள்ளடக்க மாட்டாமல், எம்பி எம்பித் தணிந்த வாளிப்பு மிக்க நெஞ்சை அழுத்தியவளாக நின்றாள். பாலுணர்வின் மோகக் கிறக்கம் சூடேறி விளையாடியது. நல்லதற்கும் தீயதற்கும் தெய்வமே துணை. ஆகவே, தெய்வத்தை நாடினாள். அவள் சமன் நிலை எய்தினாள்.

"ஆண்டே!"

ஏறிட்டு விழித்தாள்.

சேரிச்சாம்பான் மரியாதையுடன் வாசலை மிதிக்காமல் மர நிழலில் மனித உருவமாக நின்றான்.

"வாப்பா, சும்மா இங்கிட்டாலே வா!" என்று முகமன் மொழிந்தாள் தைலம்மை, வணங்கிய குரலிலே!

நன்றியின் ஈரப்பெருக்குடன் கிழவன் வந்தான்.

அதற்குள் சேர்வை வந்துவிடவே சாம்பான் தார்க்குச் சிக்கு ஆளான மாடாக பின்னோக்கி நடந்தான்.

"என்னடா!"

"சாமிக்கு தண்டனுங்க!... ஆண்டே வரச் சொன்ன தாய் எங்க மச்சாவி மவன் காதிலே போட்டுச்சு.... அதான் பரிஞ்சாந்தேன்!...."

"வார நெல்லு கொண்டாந்திருக்கிறே யில்லே! வெள்ளாமை விளைச்சல் முடிஞ்சு எம்மாம் காலமாச்சு?...."

"ஆண்டேக்கு ஒரு தாக்கலுங்க. ஒங்க தம்பிக்கிட்டவும் ரொம்ப வேண்டிக்கிட்டேன்....அவுகளும் பெரியமனசு பண்ணி சம்மதிச்சாங்க. அவுகளுக்குக்கொடுக்கிறதாட்டம் மேலைக்கு அல்லாத்தையும் கூட்டி ஒண்ணடி மண்ணடியாய் ஒங்க காலடியிலே குமிச்சுப் போடுறேனுங்க. மனுசங்கதான் ஏய்ச்சுப் பழகினவுங்கன்னு நெனைச்சிருந்தோம். இப்ப

வரவர வானமும் அப்படி ஆகிப் புடுச்சுங்களே!.... ஒரே மரத்திலே ஒரு கிளை நனைஞ்சும் ஒரு கிளை காஞ்சும் கிடக்கிற கூத்து இப்பத்தானுங்களே நடக்குது? ஏழை பாழைங்களுக்குக் கொஞ்சம் ஈவிரக்கம் காட்டுங்க! இந்த வார நெல்லு ரெண்டு கலத்தை வச்சுத்தானா நீங்க உண்ணப் போறீங்க?...''

வேதனை பேசியது.

மூச்சு முட்டியது.

செக்குச் சத்தம் துளைத்தது.

''ஏலே....நிறுத்துடா அதோடே! எங்க அண்ணன் தம்பிக்குள்ளாற புகுந்து விளையாடிப்புட்டு, வாரநெல்லை ஏப்பமிட்டுப் புடலாம்னு நெனைப்பாடா நாயே? உன் வாலாட்டம் இங்கிட்டு செல்லாது!... அது ஒனக்கே புரியும்!.... நீ எங்கிட்ட வந்து ஒப்பாரி வைக்காதே! ஒன்னை இப்பிடிப் படைச்சானே அவன்கிட்ட போயி அழு! நாய்க்கு வாலை அளந்து வச்சிருக்கானே, சும்மாவாடா பின்னே ? போடா, போயி, வார நெல்லை ஏத்தியாந்து போடு!.... இல்லாங் காட்டி, நாளைக்கு உன் குச்சு ஆலாப் பறந்துப்புடும்!....''

சொற்களில் சோளம் பொறிந்தது. ஆனால், அந்த ஏழையின் கண்ணீரிலே எரிமலை கனன்றதே. பாவம்!

''பாவத்தைக் கணிக்க, புண்ணியத்தைப் பரிசீலிக்க இந்த மனித ஜடங்களுக்கு ஞானம் ஏது?'' என்று கேட்கத் தான் வானம் திடுதிப் பென்று முழங்கிச் சாடுகிறதோ?...

தைலம்மையின் காந்தக் கண்கள் குளமாயின. அந்தக் குளத்தினின்றும் தரைக்கு வீசி எறியப்பட்ட மீன் ஆனது அவளது மனம். மெல்ல, தந்தையை நெருங்கினாள். ''அதைப் பாருக்கில்ல!'' என்று நயந்துரைத்தாள்.

''இந்தாப்பாரு தைலி! ஒன் சோலியை குதாவிடை இல்லாமப் பார்த்துக்க. இது மாதிரி சங்கதிகளுக்கு வக்கணை

பேச ஒனக்கு வயசு பத்தாது!...ஏலே...சாம்பான் ! நடடா எட்டி!...'' என்று கூக்குரல் பரப்பினார்.

சாம்பான் சாம்பிய முகத்துடன் புறப்பட்டான். மறந்து விடாமல், கை கூப்பிக் கும்பிடு செலுத்தி விட்டுத்தான் புறப் பட்டான். லேஞ்சை உதறி கண்களைத் துடைத்தபடி புறப்பட்டான்.

மோனச் செஞ்சுடர் சித்து விளையாடிக் கொண்டி ருந்தது.

வாசலில் ஒருபக்கத்தில் கடலைக் காய்களும் மறு பகுதி யில் மிளகாய்ப் பழங்களும் காய்ந்து கொண்டிருந்தன.

கஞ்சி குடிக்கக் கூப்பிட்டாள் புதல்வி.

தந்தை ஒப்புதல் தெரிவித்தார்.

அப்போது வந்த ஒரு நபரைக்கண்டதும், ''அடடே... செட்டியலூட்டுத் தம்பியா? வாங்க...குந்துங்க!.... என்று வரவேற்றார்.

வந்தவர், ஊர் வெற்றிலை பாக்குடன் திருமண மடல் ஒன்றையும் மரவையில் வைத்துக் கொடுத்தார்.

அதை வாங்கிக் கொண்டார் சேர்வை, அழைப்பைப் பிரித்தார். ''ஆயி, இதைப் படியம்மா!'' என்று கொடுத் தார். ஒதுக்கமாக வந்து நின்ற தைலம்மை 'உ. சிவமயம்' என்று வாசிக்க ஆரம்பித்து முடித்தாள்.

''ஆத்தாடி!... பலேடா ராசான்னானாம்! 'நீ உசத்தி, நான் உசத்தின்னு ஒரு அஞ்சு வருசத்துக்கு முந்தி கொத்துப் பழி வெட்டுப்பழி போட்டுக்கிட்டுக் கிடந்த ரெண்டு கட்சிக் காரகளுக்குள்ளாறவே சம்பந்தம் சாடிக்கை குதிர ஆரம்பிச் சிருச்சு... இது இப்பவும்கூட எனக்குச் சொப்பனம் கணக்கிலே தான் தோணுது!...ம்....ஒங்க போத்தக்குடி

செட்டிய வூட்டுச் சனங்களொப்ப—எங்களுக்கும் ஒரு விடிவு பூத்திடுமா? ஊம்!....எங்க குடியிருப்புக்குச் சோதனைக் காலம் வந்துக் கிட்டிருக்குதே! மகமாயியோட சித்திரைத் திருநாளிலே முதல் காளாஞ்சி தவசல் இருக்குது... அப்பாலே ஊர்ப் பஞ்சாயத்து முடிச்சு வேறே! சரி... நல்லதுங்க! உங்க 'சூனா பானா'வை விசாரிச்சதாச் சொல்லுங்க!.... உங்க செட்டியார் தர்மசிந்தனைக்காரரு!.... மனுசராப் பொறந்த வுங்க அப்படித்தான் இருக்கோணும்! இல்லாட்டி, கருஞ்சனங் களுக்கு, கண்ணாளத்திலே வடிச்சுக் கொட்டுறத்திற்கு மனசு வருமாக்கும்?... சரி, போயிட்டு வாறீங்களா? " வழியனுப்பி வைத்தார். பிறகு சாப்பிட்டார். வயற்புறம் சென்று திரும்ப உத்தேசம்.

தைலம்மையின் தோழிகள் பொன்னாயி, பூவாயி, சிங்காரம், அசோதை, அகிலாண்டம், அன்னக்கொடி ஆகியோர் வந்தார்கள். தண்ணீர் கொண்டுவரத்தான் இத்தனை பெரிய பட்டாளம்! கிணறு தோண்ட வல்ல!...

எல்லோரையும் அனுப்பிவிட்டாள். அந்திக்குத் தான் அவள் கிணற்றடிக்குப் போவாளாம் !

சேர்வை தாய் வீட்டில் நின்றவாறு புறப்பட ஆயத்தப் பட்டுக் கொண்டிருந்தார்.

அது தருணம், வாசலில் மாட்டு மணிச்சத்தம் அற்புதம் சேர்த்து ஒலிக்கவே, தைலம்மை வெளிப்புறம் வந்தாள்.

வாசலில் நின்ற ரேக்ளாவிலிருந்து சிலட்டூர் சாமியப்பக் கங்காணியின் மைந்தன் சரவணன் இளமீசையை நெருடியபடி குதித்து நின்றான்.

"வாங்க! " என்று வரவேற்புச் சொன்னாள் தைலம்மை. அதிர்ஷ்டம் வீடுதேடிவரும் தருணம், அதிசயப் படாமல் இருக்க முடியுமா ?

"ஆமா "

நகைக்கீற்று இனிக்காதா ?

தைலம்மையைத் தேடிக்கொண்டு வந்த அவளது சிற்றப்பன் மகள் பூங்காவனம் உள்ளே நுழைந்ததும். சரவணனை ஒருமுறை முறைத்துப்பார்த்து விட்டு ஏனோ சொல்லாமல் கொள்ளாமல் பேயறைப்பட்டவளாக ஓடிவிட்டாள் !

வாசற்புறம் வந்த சேர்வை, வீடு தேடி வந்திருந்த விருந்தாளியைக்கண்டு குதூகலம் அடைந்தார். "வாங்கங்கிறேன்!" என்று வாய்நிறையச் சொன்னார். மகள் தூண் மறைவில் நிற்பதைக் கண்டார். "ஆத்தா, இவுகதான் மாப்புள்ளே!" என்று சன்னக்குரலெடுத்துச் சொல்லிவிட்டு, "சுடுதண்ணியை பொசுக்கிணு" என்று பெருங் குரலில் பேசினார்.

அவள் நாணத்தின் பூவையாக உள்ளே மறுகினாள். "மாப்புள்ளையை அப்பன்காரக எனக்கு இன்னாரின்னு சொல்லிப் புட்டாங்க! ஆனா, அதுக்கு முந்தி, அந்த ஆம்பிளைக்கு என்னை இன்னாரின்னு சொல்லி வைக்கலையே? ...ம்...அந்த மாப்புள்ளைக்கா என்னை இனம்புரியாது? ம்!"

தைலி சிரித்தாள்.

அவளை அழைத்தது புழக்கடை!

# கதிர்க் கொத்து 3

## சேக்காளி சிங்காரம் !

புவனத்தைச் சுற்றி விளையாடிக் கொண்டிருந்த செஞ்சுடர்க் கோமான் அப்பொழுது சங்கரன் குடியிருப்பு செங்காளியப்பன் சேர்வைகாரரையும் சிலட்டூர்ச் சரவணனையும் சுற்றி விளையாட்டு காட்டிக்கொண்டிருந்த விந்தையான நேரம் அது! திருக்கைவால் கட்டிய தார்க்குச்சியை லாகவமாகச் சுழற்றி, சிலம்பம் விளையாட்டுப்பாணியில் ஒரு 'மடங்கு' அமைத்து, பிறகு கீழ்வசமாகத் தாழ்த்தி, இடுப்பில் செருகிக் கொண்டான், சரவணன். குணதிசை நோக்கி நின்றவனின் கண்கள் கூசின. கதிர் முத்தங்கள் அவனை அவ்வாறு செய்தன. அவன் 'லேஞ்சை'ப் பிரித்து முண்டாசை அவிழ்த்தான். தடுமனுக்கு சாம்பிராணிப் புகைப் பிடிக்கையில் நெற்றித் தளம் வேர்வைக்குளமாகுமே அதன் பாங்கிலே, அவனுடைய நெற்றியில் வேர்வை கொட்டியது. பாங்குற அமைந்திருந்த புருவ விளிம்புகள் லேசாக நடுங்கிச் சுழித்தன. அவன் முகத்தைத் துடைத்துக் கொள்வதற்கும், மறுவினாடி ஒரு தும்மல் போடுவதற்கும் கச்சிதமாக இருந்தது.

சேர்வை, கொட்டடியில் நின்று தண்ணீர்த் தொட்டியை நக்கிக் கொண்டிருந்த காளைகளைக் கண்டதும், உள்ளே தாழ்வாரத்தில் பிரப்பங் கூடையிலிருந்த பிண்ணாக்குத் துணுக்குகளை எடுத்து வந்து தொட்டியில் பிட்டுப் போட்டார்; கழு நீரை இரண்டு வாளி எடுத்துவந்து கொட்டினார்; பதக்குத் தவிட்டையும் தூவினார். குச்சியால் கலக்கி விட்டார்.

இப்போது மாடுகளுக்குக் கொண்டாட்டம்!

"ஆமாங்கறேன்...நானும் பேச்சு பராக்கிலே ஒதிய மரமாட்டம் நின்னுகிட்டேயிருக்கேனே, நீங்க வந்த காலோட வசங்கெட்டு நின்றுகிட்டிருக்கீகளே...! வாங்க.... வாங்க...! உள்ளாற.. நடைக்குப் போய்க் குந்துவம்!...." என்றார் சேர்வை.

அதுசமயம், சரவணனின் பார்வை உள்ளே வலை விரித்ததை அறிந்த சேர்வை எதையும் கண்டு கொள்ளாத வராக, "வந்து...இப்ப போச்சில்ல...அதானுங்க எம் பொண்ணு. நீங்கதான் அதை ஒரு நடை எப்பவோ எங்கணயோ பார்த்திருக்கிறதாச் சொன்னீங்களே! இல்லாங் காட்டி, நீங்களாவது இந்தச் சம்மந்தத்துக்கு மனசு ஒப்புற தாவது! சரி...நடங்கங்கிறேன்!..." என்று சிரிப்பும் பேச்சு மாக வெளியிட்டவாறு முன்னே வழிகாட்டி, மச்சுப்படியில் இருந்த அமராப்பூராப் பாயை எடுத்து விரித்தார்.

"குந்துங்க!"

"ம்!"

உட்கார்ந்தான் சரவணன். சுற்றிச் சூழ நோக்கினான். உச்சியில் வேயப்பட்டிருந்த சீமை ஓடுகள் கரிதட்டிப் போயிருந்தன. ஓட்டுச் சுவர்கள் ஒட்டாமல் நின்றன. கூடு விட்டுக் கூடு பாய்ந்த அவனது கண்கள் அவனையும் அறியாமல் கொல்லை அடுப்படிக்குத் தாவி ஓடின. விழிகள் தம் இணையினைத் தேடினவோ?...'கொஞ்ச முந்தி வந்த நான், வந்த சூட்டோடவே அந்த மரத்து ஓண்டலிலே ஒளிஞ்சிக்கிட்டிருந்தாக்க, மறுகடுத்தமும் அந்தக்குட்டியை நேருத்தரமாப் பார்க்கிறதொப்ப பார்த்திருக்க ஏலுமே!...ம்.... அதால என்னாவாம்?...கிணத்துத் தண்ணியை வெள்ளமா கொண்டு போயிடப் போவுது?...தைலம்மை உண்டன சூட்டிகைதான்! இல்லாங்காட்டி, 'வாங்க' அப்படின்னு என்னை உபசரித்திருக்க ஏலுமா?...' என்ற எண்ண ஓட்டம் அவனை வளைத்தது. அவன் விழிகளை வளைத்துச் சுழற்ற எண்ணிய அந்தப் பேசும் விழிகளை அவனால் சந்திக்க முடியவில்லை, அப்போதைக்கு!

‘‘போச்சில்ல...! அதான் எம்பொண்ணு!...’’ என்பதாகத் தைலம்மையை சரவணனுக்கு அறிமுகப்படுத்தினாரே சேர்வை. அந்தப் பான்மையும் பாணியும் மிகுந்த பண்புடன் விளங்கின. சரவணம் மனத்திற்குள் அந்நிலையைப் போற்றினான். ‘முந்தி ஒருவாட்டி இந்தக் கன்னியைக் கங்காணித் தோட்டத்திலே திருநாளப்ப கண்டு பேசின சங்கதி முச்சூடும் சேர்வைகாரவுகளுக்குத் தெரியாதில்ல!...’ —நினைவு, சிரிப்பின் கரையில் ஒதுங்கிற்று. ‘எங்கணே போயிடுச்சு தைலம்மை? காப்பித் தண்ணியும் விருந்துந் தானா இப்பைக்கு ஓசத்தி?...’

அவன் அவசரம் அவனுக்கு.

அவள் அவசரம் அவளுக்கு.

செங்காளியப்பன் குட்டிப்போட்ட பூனைபோல் அங்கு மிங்கும் நடந்தார்; திரிந்தார். பிறகு, உட்பகுதிக்குச் சென்றார். திரும்பினார். திரும்பிய பொழுதில் அவர் லோட்டா காப்பியுடன் வந்தார். ‘சுடு தண்ணி துளி இருக்கு. வாயிலே ஊத்திக்கிடுங்க!....’’ என்று வேண்டிக் கொண்டே, அன்றையக் கிழமையை ஞாபகப்படுத்திக் கொண்டார். ‘சரி, ஞாயித்துக்கிழமை ராகுகாலம் அந்திக்குத் தான்!....இருபத்தாறேகால் நாழிகைக்குத் தானே!...ம்!’

லோட்டாவை வாங்கினான் சரவணன். ஒருமுறை ஊதினான். ‘அதுகையாலே கொண்டாந்து தரப்புடா தாமா?...’

‘‘சுருக்கணக் குடியுங்க. அக்கம் பக்கத்திலே யாராச்சும் தும்மப் போறாங்க!...’’ என்று துருசுப் படுத்தினார் சேர்வை.

‘‘தும்மலிலே என்னாங்க இருக்கு? நீங்களும் நானும் திடத்தோடே இருந்தாக்க, அப்பாலே என்னாங்க குந்தகம் வரும்?...’’

சொல்லிக்கொண்டே காப்பியைக் குடித்தான் சரவணன். உதடுகளைத் துவாலையின் முனை கொண்டு துடைத்தான் அவன். கழுத்துப் பகுதியையும் சுத்தப்படுத்தினான். பவுன் சங்கிலி தளதளத்தது சுருட்டை முடிக் கிராப்பை வகிடு பார்த்த வாகாக ஒதுக்கி விட்டுக் கொண்டான். முண்டா பனியனை இழுத்து விட்டான்; காற்று மேனியை ஆரத் தழுவியது. ஆடுதுறை வாழைகளிடம் காற்றுக்குப் பஞ்சமா, என்ன ?

சரவணன் யதேச்சையாக ஈசான்ய மூலையில் விழிகளை விரித்த போது, அவனது விழி விரிப்பில் தலை சாய்த்துச் சாய்ந்திருந்த தைலம்மையின் கடைக்கண் வீச்சின் வல்லமையை அவன் தரிசித்தான். சரவணனிடம் அழகுக்குக் குறை இருக்குமா?-அவன் அழகாகப் புன்முறுவல் பூத்தான். அவனது இளநகையின் காந்த ஒளி அந்தக் கன்னித் தேவதையின் காந்தக் கண்களை கூசச் செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், அவள் 'கடலேகதி' என்று ஓச்சமின்றி வேகம் பாய்ச்சி மறைந்திருக்க மாட்டாள். தேவதை என்றால், சும்மாவா?

"ஊம், அப்பாலே....?"

மறுமுறையும் விபூதிப்பட்டை அடித்துக் கொண்டு இடதுகாலை மடக்கியபடி வந்து அமர்ந்தார் சேர்வை. "நீங்க இப்படி திடும்னு வந்து குதிப்பீங்கன்னு தெரியலே. தெரிஞ்சிருந்தா; கவுச்சி ஏதாச்சும் சேகரம் செஞ்சு வச்சிருப்பேன்!..."

சரவணன் தலையைக் குனிந்தபடி, "என்னமோ நினைச்சுக் கிட்டேன். பரிஞ்சு வந்து நிண்ணுப் புட்டேன் எனக்கென்னமோ, அப்பைக்கு அப்பத் தோணுறதை எண்ணி ஆராஞ்சு செயல் படுறதுதான் என் மட்டுக்கும் முடிவு—சட்டம்—சங்கதி எல்லாம்!..." என்று அழுத்தமாகச் சொன்னான். நெஞ்சில் நின்று சதிர் ஆடிக் கொண்

ருந்தாளே தைலம்மை, அதன் தடயம் பற்றி யாருக்கு என்ன அக்கறை?...பலாப்பழத்தை வகிர்ந்து விட்ட மாதிரி அமைந் திருந்த இளம் மீசையைத் தடவிவிட்டுக் கொண்டான் அவன்.

“எங்க ஊரை நாடி வந்ததுக்கு வேறே எதுனாச்சும் காரண காரியம் உண்டுங்களா?...” என்று மீண்டும் தூண்டி னார் சேர்வை. தட்டி முடிந்தார் குடுமியை. ‘வந்த வாகிலே, தைலியை நல்லா பார்த்து நிம்மதி அடையவும் இவுக வந்ததாக இருக்குமோ?...யார் கண்டது இந்தக் கலி காலத்து விடலைங்க போக்கை? ..’

“ஊம்” என்று சொல்லிவிட்டு மெளனம் சாதித்தான் சரவணன்.

மெளனம் காலத்தை விழுங்கியது.

அவன் சாதித்த மெளனத்தின் இறுக்கமான அழுத்தம் சேர்வையை அழுந்திப் பிடித்தது. உள்ளம் ‘திக்’ கென்று அடித்துக் கொள்ளத் தொடங்கியது.

பண்ணைக்காரன் பிரமன் வந்தான். மொட்டை வண்டியைப் பூட்டினான். மாசிப்பட்டம் எள் விதைப்புக்கு ஏர்கள் வந்து சேர்ந்த விவரம் சொன்னான். “நானு வடக்கிட்டுப் போயி குருவை நாத்துக்கு சொல்லி அச்சாரம் கொடுத்துப்புட்டு வாரேனுங்க!” என்று பணம் பெற்றுப் பிரிந்தான்.

அப்போது “அப்பா!” என்று சன்னக்குரல் எடுத்துக் கூப்பிட்டாள் தைலம்மை. இரண்டாங் கட்டில், அடுப்படிச் சுவரைச் சார்ந்திருந்த தூணில் முட்டுக்கொடுத்து நின்றாள். அவள் தங்கக் கொலுசுகள் தளர்ந்தன, நாணம் தளர வில்லை. மூக்கின் நுனி செம்மை கூட்டிற்று.

செங்காளியப்பன் சேர்வை எழுந்து நடந்தார். மகள் கேட்ட விவரங்களுக்கு விடை சொன்னார். விருந்துச்

சாப்பாடு என்றால், சிலட்டூர் கங்காணியார் மகன் அப்படியே சொக்கிப் போய்விட வேண்டுமல்லவா?

திரும்பினார் சேர்வை. "ம்...மறுகா?" என்று சொடுக்கி விட்டார்.

"எல்லாம் ஓங்களைப்பத்தின விசயந்தானாக்கும்!..." என்று கனம் முடுக்கிச் சொன்னான் சரவணன்.

சேர்வையின் கறுத்த முகம் பின்னும் கறுத்தது. செம்மை பாய்ந்து கறுத்தது. "என்னாங்க ஓங்கவீட்டிலே ஏதாச்சும் தகவல் சொன்னாகளா நானு அங்கிட்டு வந்து திரும்பினடியிலே?... சம்பந்தம் சாடிக்கை புடிக்கலைன்னாங்களா ஊட்டுப் பெரியவுக?... இல்லே, நீங்க எங்களுக்குச் செய்யவேண்டிய நம்ம ஜாதிவளமைக் கொத்த சங்கதிகளிலே கூடுதல் கொறைச்சல் வருதா?.... முச்சரிக்கை ஏடு எழுதி, பொன் மாத்தி, பரிசம் போடுறப்ப நீங்க பொண்ணுவூட்டுக்குச் செய்யவேண்டிய—செய்யக் கட்டுப் பட்டிருக்கிற பரிசப் பணத்திலே ஏதானும் சங்கடமா? இல்லை, எங்க தைலம்மைக்கு நாங்க செஞ்சிபோட வேண்டிய நகை நட்டுங் களிலவும் ஏட்டிக்குப் போட்டி சொல்லுறாங்களாங்காட்டி?..." வேதனை உள்ளடங்க, வெய்துயிர்ப்பு வெளிவாங்கியது.

"அதெல்லாம் இல்லீங்க!.... எம் பேச்சுக்கு எங்க வூட்டிலே எங்க அப்பா, ஆத்தா யாரும் எப்பவும் மறுப்பு சொல்லவே மாட்டாக! வந்து..." என்று பாதியில் பேச்சைத் துண்டித்துவிட்டு, பின்புறம் திரும்பி, அங்கே அக்கணம் தைலம்மை இல்லையென்பதை ஊகம் செய்துகொண்டு, "...வந்து அல்லாம் ஓங்களைப்பத்தின நடப்புத்தாக்கல் தானாக்கும்?..." என்று இழுத்தான்.

அதற்குள் நாடி தளர்ந்தவராகத் தோன்றிய சேர்வை, கைமடிப்பில் இருந்த புகையிலைக் காம்பு நுனியைக் கிள்ளி கடைவாயில் அடக்கிக்கொண்டு "சரி, புறப்படுங்க

அங்கிட்டாலே தோட்டக்காட்டரிதி காலாற நடந்து திரும்பு வம்!...... வாரபாதையிலேயே குளிச்சுக்கிடலாம்...! வந்து சாப் பிட்டுப் புட்டு, உண்ட மயக்கம் தெளிஞ் சடியும் ரேக்ளாவைப் பூட்டலாம்!...'' என்று தட்டித் தடவிச் சொல்லி அவரே முன் னால் புறப்படவும் செய்தார். மகள் உள்ளே கைவேலையாக இருந்ததுவும் அவர்வரை நல்லதாகப் போயிற்று.

சரவணன் வாசலுக்கு வந்தான். உச்சிவானை அண்ணாந்து பார்த்தான். சூரியன் உச்சிக்கு வரும் வேளை அண்டிக்கொண்டிருந்தது. சவுக்கை இடுப்பிலிருந்து எடுத்துக் கையில் வைத்தபடி காளையின் பிடிகயிற்றை அவிழ்த்தான். காளையை நுகத்தடியில் பூட்டினான். சந்தைப்பேட்டைப் பூரணி அல்லவா?... இளவரசுப்பட்டம் என்ற நினைப்பு அதற்கு. அதன் ஜாதிவளம் அப்படி கழுத்தை நொடித்தது. சலங்கைகள் ஓசையிட்டன.

''நடந்தே போவலாமே?...'' என்றார் சேர்வை.

''ஓ! அப்படியே செஞ்சிட்டாப் போவுது!'' சரவணன் திரும்புகையில், உள்ளே நடைத் தூணில் ஒட்டுக் கொடுத்த படி மூக்குத்தித் திருகாணியை நிமிண்டியவளாக நின்ற கோலக் கலாபமயிலைக் காணத்தவறவில்லை.

நாய்கள் இரண்டு ஓடிப்பிடித்து விளையாடின! அப் போது, மேற்கு நோக்கிச் சென்ற முத்தையாத்தேவர்— நாலாவது வீட்டுக்காரர், சேர்வையை நோக்கி, ''யாரு இவுக?'' என்று கேட்க, ''இவுகதான் நம்ம புது... மா...ப் புள்ளை!'' என்று பதிலளித்தார்.

குடுகுடு கிழவி ஒருத்தி வழிதடவி வந்தாள். அவிந்த விளக்குடன். உலை வைக்க தீவேண்டும். நெருப்புப்பற்ற வைக்க அவ்வீட்டை நாடி வந்தாள்.

''எங்க ஊர்க்காட்டிலே இப்படி ஒருத்தர் வூட்டிலேருந்து மறு வூட்டுக்கு நெருப்பு கொளுத்த போக மாட்டாக

அப்பிடிப் போனாலும், சீதேவி அவுகளோட போயிடுவான்னு தீ கொளுத்த ஒப்புக்கிடவும் மசியாங்ச!'' என்றான் இளவட்டம்.

நிழல்கள் இரண்டும் ஒன்றை ஒன்று தொடர்ந்தன; ஒன்றுக்கு ஒன்று வழிகாட்டியாகவும் அமைந்தன.

கெக்கடி, மடக்குளம், உள்வாய், செல்லையா சாயாக் கடை கடந்து கிளை வெட்டிப் பிரிந்து ஆவணத்தாங் கோட்டைச்சாலை முனங்கை இலக்கு வைத்துச் செல்லும் வரை ஏனோ சரவணன் வாயைத் திறக்கவில்லை. அறந் தாங்கிச் சந்தைவண்டி ஊர்ந்தது.

சேர்வைக்கோ உள்ளூற வயிற்றில் புளியைக் கரைத்தது. ஆனால் அவரோ ஆயிரம் ஆளுக்குத் தண்ணீர்ப் போக்கு காட்டும் சூராதி சூரர்...வில்லாதி வில்லன் !...

''.... வந்து ...''

''சொல்லுங்களேன் !... ''

சேர்வை ஆவாரம்பத்தைக் காட்டைவிட்டு மடங்கிய உருவத்தைக் கண்டதும், தம் தலையை வேறுபக்கம் சிலுப்பிக் கொண்டார். வந்த உருவம், அவருடன் ஒரே ர்த்தத்தில் கர்ப்பவாசத் துணை இருந்தது !.... 'ம்! வரட்டும் ! ஒரு கை இவனுகளை அல்லாம் பாத்துக்கிடுறேன்! ''

மறு பயணமும் இளசு சரவணன் இதழ் விலக்கினான்.

அதுதருணம், கிழவி ஒருத்தி பயம் தெளித்து, பதட்டம் கண்டு, விழி கலங்கி ஓடிவந்து, சேர்வையை மறித்துக் குறுக்கிட்டு ''செல்லாயிக்கு நெஞ்சடைப்பு வந்திருச்சு துங்க !...'' என்றாள்.

அவ்வளவுதான்.

சேர்வை கதிகலங்கினார். சிலட்டூர்ப் பிள்ளையை முகம் கொடுத்துக்கூட பார்க்காமல் ''உங்களையில்ல, எனக்கு ஒரு அவசரம். நான் ஒரு கல்லு தொலைக்கு ஓடியிட்டுத் திரும்பணும்.... நீங்க நம்ம ஊட்டைநாடிப் போயி இருங்க !... சும்மா வெக்கப்படாமப் போங்க....எப்பவும் அது இனி ஒங்க ஊடுதான்!...'' என்று வார்த்தைகளை அவிழ்ந்து உதறி வீசிவிட்டு விரைந்தார். முதுமை சிரித்ததோ?

சரவணன் சில கணங்கள் அப்படியே நின்றது நின்றபடி நின்றான். பேய்க் கணங்கள் சூழ்ந்து கொண்டதைப் பிரதி பலிப்பவனாக அந்தச் சில கணங்கள் கழிந்தன. பிறகு சுய உணர்வின் விழிப்பினைத் தொட்டுகின்ற வேளையில், தன்னைத் தொடாமல்-தன் உள்ளத்தைத் தொட்ட-உணர்வு விழிப்பதுமையின் இனிய நினைவுகள் தந்த கனவு மயக்கம் அவனை ஆட்டிப் படைத்தது. பதைபதைக்கும் வெயில் அப்போது அவனை என்ன செய்துவிட முடியும்?

உணர்வுகளை மனித மனம் கட்டி ஆளுகின்ற நிலையில் தான், மனிதனுக் குரிய மனத்தின் உண்மையான சுய ரூப பிம்பம் மகிமை பெறுகிறது.

இது நியதி.

ஆனால் நியதிகள் சட்டங்களாகி விடுவதில்லை; அப்படி ஆகிவிடுவதும் முடியாது.

சரவணன் எவ்வளவோ சிரமப்பட்டுத் தன்னையும் தன் உணர்வுகளையும் ஆண்டு மடக்கினான். மடங்கிய பாதையில், அமைதி கனிந்த மனத்துடன் திரும்பி நடந்தான்.

அப்போது, செங்காளியப்பன் சேர்வை வேர்க்க விறு விறுக்கத் திரும்பவும் ஓடிவந்து, ''வந்துங்க, எந்த ஒரு சேதியையும் எங்காதுக்கு முதல் எடுப்பாச் சொல்லாமல், வேறு யாருகிட்டவும் - ஏன் - எம் மககிட்டக் கூட நீங்க

செப்பப்புடாதுங்க !... ரொம்ப சத்தியான வேண்டுதலையுங்க இது! ’’ என்று நயத்துடன் உரைத்து விட்டு, ‘‘சுருக்கண எட்டி நடங்க!’’ என்று தூண்டிவிட்டு, தூண்டில்பட்ட புழுவாக மூச்சுவாங்கி நடந்து ஓடினார்.

சேர்வை சென்ற சடுதியில், மடங்கித் திரும்பினான் சரவணன். பனங்குட்டி ஒண்டலில் ஏதோ சலசலத்தது. கூர்த்தமதி பதித்தான். ‘‘நான் தானுங்க!....வெள்ளையப்பன் சேர்வை!.... இப்ப போனாகளே அவுக எனக்கு மூத்தவுக.... ஒண்ணாப் பொறந்த பொறப்புங்க!... உங்ககிட்ட சத்தை நேரம் வாயாடனும்... நம்மவூடு எங்க அண்ணாச்சி ஆட்டுக்குக்கும் பொறத்தாலே தான் இருக்கு!....’’ என்றார் அந்தப் புது மனிதர்!

நீங்க முன்னாடி நடங்க... நான் வாரேன்! ’’ என்று அன்புடன் சென்னான் சரவணன்.

வெள்ளையப்பஞ் சேர்வை குடையை அக்குளில் இடுக்கிக் கொண்டு பீடு நடை போட்டார். பட்டாளத்தான் கணக்குத்தான்.

‘என்னா கூத்துடா இது? வலைய பட்டிச் சனியனை வெலைகொடுத்து வாங்கிற கதை இப்ப யாருக்குப் பொருந்தப் போவுதோ, விளங்கலையே! மாரியாயி...’

மனத்தின் வழித்துணையாயின, அழகுக் குமரியின் பேசும் விழிகள்!

சரவணன் நடை தொடர்ந்தான்.

செல்லையா டீ கடை வந்தது

உள்ளே நுழைந்தான் சரவணன். குனிந்துதான் அவன் நுழைந்தான். முன் எச்சரிக்கையுடன்தான் அவன் அப்படி நுழைந்தான். எதிலும் கூடுதலான கவனம் அவனுக்கு. ஐந்து ‘கணக்கு’க்கு கங்காணியாக நிர்வாகம் புரிந்தவரின்

பிள்ளை என்றால், அல்ப சொல்பமாக இருக்க முடியுமா? பனை ஓலைக் குடிசை பதமாக இருந்தது.

"வாங்க...குந்துங்க!"

சாயாக் கடைச் சொந்தக்காரர் முகமன் மொழிந்தார்.

"தண்ணி கம்பியா ஒரு தேத்தண்ணி போடுங்க!......" என்றான் சரவணன். அங்கே ஒருவரை விளித்து 'ஓங்க உருளாசிலே மணி என்னாங்க?' என்று வினவினான். "மணி பன்னிரண்டுங்க!...பதினைஞ்சு நாழிப் பொழுது!... தம்பிக்கு லங்கைப் பழக்கம் ஊர்ப்பட்டது உண்டு போலே!... அதான் உருளாசின்னு சொன்னீக போல!......" என்று சொல்லிச் சமாதானப் பட்டவராக, உளுந்துவடையைப் பிட்டுப் போட்டார்.

சாயா போட்டு நீட்டினான் எடுபிடிப் பையன்

அப்போது, "அண்ணாச்சி!" என்று எருச்சிக்காரன் ஒருவன் கூவினான்; அந்தச் சொந்தம் அவனுக்கு ஏழு காசை மிச்சப்படுத்தியது.

சரவணன் தேத்தண்ணீரைப் பருகி முடித்து, காசை மடியிலிருந்து எடுத்துக் கொடுத்துவிட்டுப் புறப்படப் போன சமயத்தில், யாரோ ஒருவன் சீனாக்காரனைப் பற்றிப் பேச்செடுத்தான். அவன் கையில் செய்தித்தாள் ஏதோ இருந்தது. "அண்ணாச்சிக்கு அடுத்த ஊருப்போல!... ஏங்க, பாளத்த அந்தப் பட்டாசுக்காரப் பயமவன் சீனாக்காரன் நம்மளைக் கெலிச்சுப்புட முடியுமுங்களா?" என்று கேட்டான் அக்குடியானவன்.

அவ்வளவுதான்.

சரவணனுக்குக் கண்கள் சிவந்தன. சிகப்பு லேஞ்சை ஓர் உதறு உதறி விட்டுப் போட்டுக்கொண்டான்.

“இந்தாபாருங்க! ஒண்ணு மட்டும் கச்சிதமுங்க!....... நம்ம நேரு மவராசன் இருக்குந்தொட்டியும் நம்ம மண்ணை அசலான் எந்தப்பயமவனும் எப்பவும் துணிஞ்சு இத்தி கூட எடுத்துக்கிட வாய்க்காதுங்க!...... அந்த மாணிக்கத் தலைவருக்கு ஒருவேளை எதுனாச்சும் வந்து ஏடா கூடமா விதி முடிஞ்சுட்டாக்கூட, அதுக்குப் பொறகு, நேருசாமி வழி நடக்கிறத்துக்கு நம்ம நாட்டிலே கைவீச்சுக்கு மேலேகூட உண்மையான தியாகத் தலைவர் மாருங்க இருக்காங்க!...... அதாலே, சப்பை மூக்குகாரப் பனாதிங்களைப்பத்தி தவளைகளை விழுங்கிற தூத்தேரிங்களைப்பத்தி நாம அஞ்சவே தேவையில்லிங்க!...”

நாட்டுப் பற்றின் உண்மையான தேசிய உணர்ச்சிகள் சரவணனின் இதழ்கள் வழியே மடைதிறந்து பாய்ந்தன.

சாயாக்கடை மூக்கின்மீது விரல் வைத்தது.

கூடியிருந்தவர்கள் கைகூப்பி வழியனுப்பி வைக்க, சரவணன் நடந்தான். பூவத்தக்குடி மஞ்சிவிரட்டுப் பொட்டலைத் தாண்டியிருப்பான். “சரவணா?” என்று வெகு சுவாதீனமாக ஏகவசனத்தில் கூப்பாடு போட்டபடி ஒரு குரல் மிதந்து வந்தது.

சரவணன் திரும்பினான். “யாருங்க?...” என்று ‘சம்சயம்’ மிளிரக் கேட்டான். ‘என்ன இன்னிக்கு ஒரே கூப்பாடு மயமாய்போச்சு?”

“நான் உன்னோட சேக்காளி சிங்காரம்! அக்கரைச் சீமையிலே பர்மா பக்கத்திலேருந்து கப்பலேறி வந்திருக்கேன் இப்பத்தான் வந்தேன். இங்கணே எங்க சொந்தம் சோவாரிக்காரவுக அதிகப் பேர் இருக்காங்க!...” என்றான். பாசம் வழிந்தது.

சரவணன் இன்னமும் அந்த ஆளை நறுவிசாக ‘இனம்’ கண்டுகொள்ளக்கூடவில்லை!

"என்னப்பா இது?...உப்புக்கோடு மறிச்சு வெளையாடி னோம்; கிட்டிப்புள்ளு அடிச்சோம்; மாங்கொட்டை போட் டோம்......ஒங்க ஊரிலேதானே அப்ப எங்க அப்பத்தா இருந்துச்சு...நொண்டிக்கோயில் வட்டத்திலேதானே நாம ஆடிப்பாடினோம் !..."

சரவணனுக்கு நினைவு வந்துவிட்டது. "கம்மாய்க்கரை யிலே மூச்சுமுட்டித் தத்தளிச்ச என்னை, உன் உசிரைக் கூட மதிக்காம ஆழத்திலே குதிச்சு காப்பாத்தினியே, அதைச் சொல்லாம, வேறே என்னத்தை யெல்லாமோ சொல்றியே சிங்காரம்?....ஒன்னை இப்பைக்கு அடையாளம் கண்டுக்கிட முடியாமல் முழிச்சாலும், ஒன்னோட அந்த அப்பழுக்கத்த அன்பை நானு ஒரு நாளும் மறக்கவே மாட் டேன்! சிங்காரம்!....வா...ஒரு சாயா குடிச்சிட்டுப் போவ லாம் !......ஒரு கடுத்தம் எங்க ஊட்டுக்கு வா!... இப்ப நான் ஒரு அவசர சோலியா இங்கிட்டாலே நாடி வந்தேன்!... நீ அவசியம் எங்க ஊருக்கு வரவேணும்!...ஆமா.. ..." என்று சொல்லி, அவனை ஆரத்தழுவி, அவன் கைகளைப்பற்றிய வாறு சாயாக்கடைக்கு அழைத்துச் சென்று சாயா வழங் கினான், சரவணன்.

பிறகு சிங்காரம் வடக்குப்புறம் விடை பெற்றுப் பிரிந் தான்.

சரவணன் மேற்கே தன் ஊருக்குப் போவதா, இல்லை தெற்கே தைலம்மையின் மனை நாடிப் புறப்படுவதா என்று சிந்தித்தவனாக, கால் நாழிப்பொழுதுவரை அந்த நார்ம் புளிய மரத்தூரில் கால்கடுக்க நின்றுகொண்டிருந்தான் !...

# கதிர்க் கொத்து 4

## கை நனைக்கவில்லை!......

'அஞ்சும் மூணும் உண்டானா, அறியாப் பொண்ணும் கறி சமைப்பாள்!' என்று மேலக்குடியிருப்புக் கிழவி வள்ளி யாத்தா நொடிக்கு நூறு முறை, முறையிடுவாள். இது அவள் உதிரத்தோடு ஒட்டிவிட்ட வழக்கம்; பழக்கம். இதைச் செவிகொடுத்துக் கேட்பாள் தைலம்மை. இது அவளுடைய கடன். ஒன்று விட்ட ஆயாள் பறைவதை, ஒன்றுவிடாமல் கேட்க வேண்டாமா, பேத்தியான இந்தப் பேத்தி!...

ஐந்தும் மூன்றும் உண்டானால், அறியாப் பெண்ணும் கறி சமைக்கையில், ஐந்தும் மூன்றும் உண்டாயிருந்த தைலம்மைக்கு பொட்டுப் பொழுதிற்குள்ளாக, புழைக்கடைப் பக்கம் இருந்த தென்னந்தட்டி மறைவில் தலைக்கு நாலு செம்பு ஊற்றிக்கொள்ளத்தானா லாகவம் தெரியாது?...... அவசரமும் பதட்டமும் அவளது நரம்புகளில் ஊறியிருந்தது. இன்னும் இரண்டு செம்பு ஊற்றிக் கொண்டாள். வெக்கைக்கு இதமாக இருந்தது. சுருக்கென்று வாசனைச் சவுக்காரக் கட்டியை எடுத்தாள். நுரை தள்ளியது. உள்பாவாடையை ஞாபகத்துடன் மீண்டும் இறுக்கி விட்டாள். நெஞ்சிடை ஊறிய இன்பக் கிளுகிளுப்புடன், அண்டாவிலிருந்த தண்ணீரை அள்ளி அள்ளிக் கொட்டினாள். சற்று எட்டி வந்து, வாசற் புறத்துக்குத் திருஷ்டியைச் செலுத்தி மீட்டுக் கொண்டாள். இப்போது நிதானமும் அமைதியும் அண்டின. 'இனி ஒண்ணுமில்லே!...சமைஞ்ச பொண்ணுமேலு குளிக் கிறப்ப, விருந்தாடிக்கார படி மிதிச்சுப்புட்டாக்க, அப்பாலே எனக்கு வெக்கம் மூண்டுப்புடாதா?... ஐலேசா! தப்பிச் சாச்சு!...' கன்னியா குறிச்சி மஞ்சளின் ரங்கு அவளது வந்த கன்னங்களுக்குக் 'களை' சேர்த்தது.

நசுக்கட்டான் பட்டால், பட்ட அந்த ஓரிடம் மாத்திரம் தான் அரிக்கும்.

ஆனால் நினைவுகள் தீண்டினாலோ, உள்ளம் முழு வதிலும் அரிப்பெடுக்கும்.

ஏதேதோ நினைவுகளுடன், அவள் தலையை வழித்து முடிபோட்டுக் கொண்டு, சேலையை மாற்றிக்கொண்டாள். தேங்காய்ப்பூ துண்டு கொண்டு துவட்டினாள். கோடம் பாக்கம் சேலையும் சின்னாளம்பட்டி ரவிக்கையும் எடுப்பாக அமைந்துவிட்டன. கொண்டையில் செவந்திப்பூ, நெற்றி யில் நீறு.

முகம் பார்க்கக் கண்ணாடியை எடுத்தாள். முகம் காட்டியது; பார்த்தாள். நாசித் துளைகள் புடைத்தன. தோட்டின் விளிம்பில் நீர் கட்டியிருந்தது. இடது பக்கத் தோடு ஒற்றினாள் பார்வை மேய்ந்தது. இடது கன்னத் தில் காதின் ஓரத்தில் கீழ் முனையை உரசின மாதிரி இருந்தது. ஒரு தழும்பு வடு பாய்ந்திருந்தது. எப்போது ஏற்பட்டது? நினைவு வரவில்லை! சின்னஞ் சிறு பிராயத்தில் ஏற்பட்டதாக இருக்குமோ? தீவிரமான சிந்தனையில் ஊடாடியவளுக்கு, பார்வையைக் கீழிறக்கியதும் வெட வெடத்தது. முடிச்சுக்களை நெருக்கினாள். "அன்னிக்கு அந்த அவசரக்காரி பொன்னாயி தண்ணி மொள்ள வந்தப்ப இப்படித்தான்..." என்று அத்துடன் நிறுத்திவிட்டு, மேற் கொண்டு அவளைப்பற்றிய ஏதோ ஒரு யோசனையின் லயிப்பில் கட்டுண்டிருந்த போது, அந்தச் சிந்தனை அவளுக்கு அப்போதைக்கு வேண்டாத ஓர் எண்ணமாகத் தோன்றியது. அதை உணர்ந்துதானோ என்னமோ, அப் போது அங்கே அவள் உயிர்ச் சேடி பொன்னாயி வந்தாள். குண்டானில் அரிசில் குறுணை இருந்தது. "பெருங்கார முண்டருக்கு வாரவெள்ளிக்கு மாசி மகத்தன்னைக்கு மாவிளக்குப் போடனும், தைலி!......" என்று தெரிவித்தாள்.

அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள் தைலம்மை. "என்னாடி, பொன்னி! உம் மூஞ்சி சுனக்கமாயிருக்குது!" என்று பரிவுகுழப்பக் கேட்டாள்.

"மச்சானுக்கு மேலுக்கு முடியலே. ரெண்டு துண்டு கடலை அரிசியை ஆஞ்சு ஆலங்குடிச் சந்தைக்கு வண்டி போட்டுக்கிட்டு கொண்டு போயித் திரும்பிச்சு மச்சான். கொஞ்ச முந்தி வந்ததிலேருந்து அவுகளுக்குக் கண்ணு மண்ணு புரியாத காச்சல். எம்மவளுக்குப் பால் குடுக்கக்கூட எனக்கு ஓடலே!..."—அவளுடைய எடுப்பான நயனங்கள் அழுதன. மூக்கை உறிஞ்சிக் கொண்டாள்.

தைலம்மைக்குக் கண்ணீரைக் கண்டால், அந்தக் கண்ணீரிலேயே கரைந்துபோய்விடுவாள். கதை தெரியாப் பரிசலோட்டியாகத் தவிப்பாள். "கண்ணைத் துடைச்சுக்கடி! உம்மச்சானுக்கு ஆயுசு கெட்டியமாய் எழுதிப் போட்டிருக்கும்! இல்லாங்காட்டி, ஒன்னை ஆசைகாட்டி வசியப்படுத்தி தன் இச்சையைப் பூர்த்தி செஞ்சுகிட்ட சூட்டோடவே நம்ம ஊர்ப் பஞ்சாயத்துக்குத் தலைநீட்டி, தலை வணங்கிப் படிஞ்சிருப்பாரா?....ஆனதலாலே, தன்னை இதயமுள்ளவராய் ரூபிச்சுக்கிட்டு, ஊருப்பேச்சுப் பிரகாரம் ஒன்னையும் ஒப்பி ஏத்துக்கிட்ட அந்த நல்ல ஆம்புளைக்கு ஆத்தா நல்லவள் நல்லதையேதான் செய்வா; என்னை நம்பு!....ஒம்புட்டு மஞ்சளும் மருக்கொழுந்தும் எப்பவும் நிலைக்கும்! கண்ணைத் துடைச்சுக்கடி, பைத்தியம்!" என்று தேறுதல் சொன்னாள்.

வந்த வேலையை அமைதி பூத்த மனத்துடன் கவனிக்கலானாள் பொன்னாயி, கொசுவத்தை இழுத்துவிட்டுக் கொண்டு.

தைலம்மை வாசற்புறம் வந்தாள்.

அவளுக்குத் 'திக்' கென்றது.

காரணம்:

வாசல் திண்ணையில் மேல் வசமாய் ஏறி நின்ற வெயிலைக் காலடியில் போட்டபடி, அங்குச் ‘‘சிவனே’’ என்று சரவணன் சிந்தனை வசப்பட்டு அமர்ந்திருந்தான்!

இதைக் கண்டதும் தைலம்மைக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. ஆனால் நாணம் மட்டிலும் அவளது கதுப்புக் கன்னங்களிலே—கருநீல விழிகளிலே—செவ்விதழ்க் கரைகளிலே—ஓடி ஓடி விளையாடியது. கால் சங்கிலியும் மிஞ்சிகளும் ஓசைப்படுத்தின. நடையில் தன் மேனியைத் தூணுடன் மறைத்துக் கொண்டாள். பின் வசமாக இருந்த சரவணனின் சுருட்டை முடிகள் வெகு துலாம்பரமாகத் தெரிந்தன.

அவளுக்கு அந்நேரத்தில் வேறு ஒரு ஞாபகம் வந்து விட்டது. ‘காலம்பறப் பொழுதிலே சித்தப்பன்காரக மகள் பூங்காவனம் தங்கச்சி இங்கிட்டு வந்து கிட்டணியிலே இந்தச் சிலட்டூர் மச்சானைக்கண்டடியும் பேயறை பட்ட தொத்து அம்மாந்தூரம் ஏதுக்கு அப்பிடி பறந்துபோச்சாம்?...’ காலையிலிருந்து உறுதிக்கொண்டிருந்த இந்நினைவுக்கு யார் விடிவு சொல்ல முடியும்?...

சரவணன் மெல்லத் தலையைப் பக்கவாட்டில் திசை திருப்பிப் பார்த்தான். மாம்பழ வர்ணம் தட்டுப்பட்டது. அவன் புரிந்து கொண்டான். ‘என்னா கூத்து இது!.... அன்னிக்கு ஒரு திருப்பு இந்தப் பொண்ணு கேணிக்கரையிலே எங்கிட்ட எம்புட்டுத் தொளைவு மனசு விட்டு கறைச்சுது!... இப்ப இது.........ஏதுக்கு இப்படி வாயடைச்சு நிக்குதாம்?...’ கைவிரல் மோதிரத்தை நெருடியவாறு சிந்திக்கத் தலைப் பட்டான்.

அவன் கனைத்துக்கொண்டான்.

குதிரைக்குக் கொள் தேவையென்றால் கனைக்குமாம்.

அவனுக்குக் கொள் எதற்கு?—ஏன், பருக்கைகூட வேண்டியிருக்கவில்லை கஞ்சிப்பொழுது தாண்டிவிட வேளை கணித்துக்கொண்டிருந்தது.

"வந்து...."

"அப்பாரு வரலைங்களாங்காட்டி?"

"அவுக வாரத்துக்கு உண்டன பொளுது ஆகிடும்!..."

"அப்பிடி என்ன அவசரம், தெரியலையே?..."

"..............."

"வந்த விருந்தாடியை நடுவா ந்தரத்திலே வுட்டுப்புட்டு அப்பிடி என்னா தலைபோற காரியமோ, ஒண்ணும் விளங்க லீங்களே?..."

நிலைப்படிக்கு அண்டி நகர்ந்தாள்.

அவளது தெளிவான வதனத்தில் கிலேசம் படர்ந்தது. அப்போது, கை வேலையை நிறைவேற்றிக்கொண்டு வீடு திரும்பி வந்த பொன்னாயி நிலைப்படியில் கைந்நொடிப் பொழுது நின்று, அவளைப் பார்த்து கண் ஜாடையால் அழகு காட்டி கேலி செய்து விட்டுப் புறப்பட்டாள். அவனுக்கும் அவளுக்கும் கல்யாணம் திகைந்த தேதி ஊர்ப் பகுதியில் பரவி விட்டிருந்தது. "ஆத்தாடி....நம்ம தைலி இருக்காளே தைலி அவ பார்க்கிறதுக்கு பசுவாத்தான் இருப்பாள்; பாஞ்சாலோ புலி தான்!...அவளைப் படிச்சுக்கிடுறதே ஒரு விடுகதைக்கு நேரேதான்னு நம்ம கூட்டத்திலே மரகதம் சொல்லுவாளே, அவ வாய்க்குச் சர்க்கரைதான் கொட்டணும்!..." என்று சமயத்தை நழுவ விடாமல் நினைத்ததை, நினைத்த கணத்திலேயே கொட்டிவிட்டு, அவசரமாக நகர்ந்தாள். வாசலைத் தாண்டித்தான் அவள் தலை உயர்ந்தது!

"வந்து...."

"ம்!..."

"அப்பாரு இப்பைக்கு வந்து சேர மாட்டாகளாக்கும்?...."

"ஆமா!"

"அப்படின்னா, வாங்க சாப்பிடலாம்!..."

மொட்டினுள் ஊடாடும் உயிர் மணமாகப் பொலிந்தாள் பொற்பாவை.

"ஊஹும்...ஆத்தாடி!..."

அவனையும் அறியாமல், அவள் நின்ற பக்கம் திரும்பி, கொஞ்சம் பலக்கவே வார்த்தைகளைக் கோத்து விட்டான் அவன். பற்களின் இடுக்கில் நமட்டுச் சிரிப்பு நசுங்கியது.

அவளும் யதார்த்தமாகவே சிரித்து வைத்தாள் "ஏதுங்க...என்னைக் கண்டு பயப்படுறீங்களாங் காட்டி?" இதயம் உணர்ந்த பெருமிதத்தில் அவ்வார்த்தைகள் மிதந்தன.

"ஊக்கூம்...ஊரைக் கண்டு பயப்படுறேன்!..." வெகு நிதானமான இங்கிதத்துடன் 'உணர்ந்து' பதில் வெட்டினான் அவன்.

அவள் சேலை முகதலைவை வாய்க்குள் அழுத்திக் கொண்டாள். கச்சை முடிச்சுகள் இறுகித் தளர்ந்தன 'நம்ம ரெண்டு பேர் பொசிப்பும் ஆத்தாளோட சம்மதமும் போழையும் முடியுமாப் பொருத்தி யிருக்கிறப்ப, ஊருக்காக நாம எதுக்கு அச்சப்பட வேணும்...' என்று வாதாடத்தான் கருதினாள் அவள். ஆனால், சிலட்டூர் மச்சான் தன் தந்தை சம்பந்தப்பட்ட ஏதோ ஒரு நடப்பைச் சொல்லத் தயங்குவதை வைத்தும், இப்போது சாப்பிட ஒப்பாத பான்மையை ஆதாரமாக அமைத்தும், மேற்கண்ட கருத்தை

அவள் மேற் கொண்ட நிலையைத் தன் நெஞ்சுக் குழியினுள்ளேயே அமுக்கி விட்டாள்.

பண்ணைக்காரன் வந்து நின்றான்.

அவள் வாசலுக்கு விரைந்தாள்.

“காத்தான் துண்டிலே ரெண்டு படல் சொச்சம் தங்கிப் போச்சு...பாக்கி பூராத் திலேயும் எள்ளு போட்டாச்சு.... ஆறு பேருங்க சுத்தமாய் நின்னுச்சு... நாளைக்கு வெள்ளென ரெண்டு ஏர் ஒண்டிவந்து பிரமர்சாமி தாக்கையும் முடிச்சிருமுங்க...ஐயா இல்லீங்களா, அங்கிட்டுக்கூட தலை காட்டக் காணோ முங்களே?....” என்றான்.

அவள், “அப்பன்காரக வார சமயம். வெளியிலே போயிருக்காங்க, நம்பிக்கைக்கு ஒசந்த பண்ணை நீ இருக்கிறப்ப, வேலை முடையாப்போயிடுமா? நீ போயி குளிச்சிப்புட்டு வா, சாப்பிடலாம்!...” என்று சொன்னாள்.

கடன்வாங்கிச் சென்ற பெட்டி வண்டியை விடிந்ததும் கொண்டுவந்து சேர்ப்பதாக நாட்டார் குடியிருப்பைச் சேர்ந்த நல்லதம்பித் தேவர் செய்தி தூவியிருந்த நடப்பையும் துண்டின் முடிச்சிலிருந்து கிரகித்து வெளியிட்டான் பண்ணைக்காரன். பிறகு அங்கிருந்து கிளம்பினான்.

சரவணனுக்கு வயிற்றைக் கிள்ளியது. இங்கே வருவதா, வீட்டுக்குப் போவதா என்று நெடுநாழி சிந்தித்து, கடைசியில் தைலம்மையின் மானசீகமான தூண்டுதலே இம்முடிவைத் தன்னுள் அமைத்துக்கொடுத்த விந்தையை அவன் எப்படி மறப்பான்? ..... ‘இதோட சித்தப்பன் காரக தாவாங் கொட்டையை ஏந்தி சாப்பிடச் சொன்னாகளே! ..’ என்ற விவரத்தையும் அவன் நாளும் நினைப்பவனே. குப்பாயி ஊருணிக்கலங்கலில் ஒரு முழுக்குப்போட்டு வந்ததுவேறு, அவன் கண்களைக் கிறங்கச் செய்தது.

அவனுடைய ரேக்ளா வண்டிக் காளை கத்திற்று. அவன் எழுந்தான்.

அதற்குள், அன்னப்பெடையாய் மாறி, முன்னேறி, வைக்கோல் பிசிறுகளைக் கொத்தாக அள்ளிக் காளையின் முன்னே தூவினாள். பிறகு நிலைப்படியில் வந்து நிலைத்தாள்.

சரவணன் மீண்டும் கனைத்துக் கொண்டான். பேச ஆரம்பித்தான். "ஒரு உருப்படியான சங்கதியை இப்பைக்கு உங்கிட்ட சொல்லியாக வேண்டிய கட்டத்தில் நான் இருக்கேன்... அதை மறைக்கிறத்துக்குத்தான் உங்க அப்பன் காரக எம்பிட்டோ பாடுபட்டாரு. ஆனா, சாமிக்கே அது சம்மதமில்லே! உண்மையின்று நாம செப்புறோமே, அது வேதானே சாமியிங்கிறதும்! உங்கப்பாரு ரொம்பக் காலமாய் யாரோ அசலிலே ஒரு பொம்பளையோடே கள்ளத்தனமாகத் தொடுப்பு— சிநேகிதம்—வச்சிருக்கிறாராம்! இந்த இடுசாமத் தாக்கல் எங்க பெரிய வூட்டுக்கு எட்டி, அவுக இப்ப எம்மூஞ்சியைப் பார்க்கிறாங்க!... உனக்குத் தெரிஞ்சிருக்க வேணும். எங்க குடும்பம் அக்கம் பக்கம் பதினாலு நாட்டிலவும் தலைமுறை தத்துவமாய் ஒசந்து கெடியுள்ள குடும்பம்! ஆனதாலே, உங்கப்பன்காரக இப்பிடி தடம் மாறி நடக்கிற தாலே, இதை வசமான ஆதாரமாக்கிக்கிட்டு, இப்படி கெட்டப் போக்குக் கொண்டவுக வூட்டிலே கொள்வினை-கொடுப்பினை வச்சுக்கிட்டதாக நாளைப் பின்னைக்கு எங்களை அண்டை அசலிலே ஆம்பளையோ—பொம்பளையோ—பொடிசோ—பல்லுமேலே பல்லுப்போட்டு ஏசிப் பேசுவாங்க... அதுக்கு வகை வைக்கப் புடாது!...அதான் ரெண்டிலே ஒண்ணு சேர்வைகாரக்கிட்ட கேட்டுத் தெரிஞ்சுகிட்டுப் போயிடணும்னுதான், சேதி விழுந்த சுவட்டிலேயே விழுந் தடிச்சுக்கிட்டு முண்டிவந்தேன்!........ ஆனா, அவரோ எங்கேயோ பதறிப்போய் பறிஞ்சிட்டாரு! வந்து இன்னொரு சமாசாரத்தையும் நீ முடிஞ்சுவச்சிக்கணும்! இம்மாதிரி துப்பு

களை நான் உங்காதுக்கு விழுக்காட்டினதாய் நீ கண்டுக் கிடப்புடாது!... ஆமா?...'' என்று எல்லாவற்றையும் ஒரே மூச்சில் கொட்டிவிட்டான் சரவணன்.

ஆனால், பாவம், அந்தக்கன்னி தைலம்மையோ நட்டு வாக்களி கொட்டினமாதிரி துடிதுடித்துப் போய்விட்டாள் !

அவளை அவன் ஏறெடுத்துப்பார்த்த போழ்தில், அவளது நெற்றிமேட்டிலும் கன்னச் சதுக்கங்களிலும் பச்சை நரம்புகள் வேரோடி இருந்ததை அவன் காணத் தவற வில்லை. அவளது விழி விளிம்புகள் முத்துச் சரம் தொடுத்துத் திகழ்ந்த விந்தை மிகுந்த வேதனைக் காட்சி யையும் அவன் காணாமல் தப்பவில்லை.

சரவணனுக்கு மனத்தை என்னவோ செய்தது. மூண்டி ருந்த பசி முரண்டியது. 'சரி; நானு போயிட்டு வாரேன்!'' என்று எழுந்தான்.

அவள் இம்முடிவை அவ்வளவு தீர்மானமாக எதிர்பார்த் தாள் இல்லையே!

"குந்துங்க. சாப்பிட்டுப் போயிடலாம்.''

கெஞ்சியபடி வேண்டினாள்.

"பொறகு ஆகட்டும் !...''

அழுத்தமாகக் குரல் கொடுத்தான்.

"அப்பிடில்லைங்க ...... வந்தவுங்க இத்தியாச்சும் கை நனைச்சிட்டுப் போங்க !— அதான் நல்ல சகுனம் மாதிரி!'' தயவுடன் மன்றாடினாள்.

"அல்லாம் மறுதப்படி ஆகட்டும். இப்ப ரொம்ப லெச்சை கொட்டுப்போச்சுது ! '' மீண்டும் அழுத்தந் திருத்தமாய்ப் பதிலிறுத்தான்.

தைலம்மை மேனி சிலிர்த்தாள். கண் பொடித்தாள்.

மேகங்கள் இரைச்சல் போட்டன. இந்திரன் வானத்தில் வில் அமைத்தான்.

சரவணன் புறப்பட்டு விட்டான்: அவள் மோகினிச் சிலையானாள்.

ரேக்ளாவின் சக்கரங்கள் கன்னி ழியாப்பதுமையின் மனமோகனக் கனவுகளையா நடைபாதையாக்கி மிதித்துப் பறந்தன ?

சுடுசரங்கள் அவளைச் சுடாமல் மாலையாக நீண்டு கொண்டிருந்தன !...

காலம் எனும் புள்ளுக்குவிட்ட இடம் என்றும் இல்லை; தொட்ட இடம் என்றும் கிடையாது.

ஆனால், இது தன் பாட்டில்- தன் லயத்தில் - தன் சுருதியில்-பாடிப் பறந்து கொண்டேயிருக்கும்.

பண்ணைக்காரன் வந்து ஒட்டுத் திண்ணையில் ஒட்டி உட்கார்ந்தான். பூவரச இலை தைத்ததை தண்ணீர் தெளித்து உள்ளங்கையால் சமனப்படுத்திப் போட்டான்.

தைலம்மை வந்து வெஞ்சனம் வைத்தாள். அமர்க்கள மான சமையல். விருந்தாடி மாப்பிள்ளைக்கென்று கருத் துடன் சமைத்ததல்லவா ? — உப்புக் கண்டங்களை வதக்கிச் சமைத்திருந்தாள். வெண்டிக்காய்த் தயிர்ப் பச்சடி. பாலுக்கும் தயிருக்கும் அங்கு முடை ஏது ? மாங்காயும் முருங்கக்காயும் குழம்பு.

நாக்கில் ஈரம் நனைய அவன் உண்ணலானான். 'தென்னஞ்சீகுகளை' வாகாய்ப் பொருத்திவிட்டுச் சாப்பிடத் தொடங்கினான்.

சற்றைக்கெல்லாம் அவள் மறு சோறுவைத்தாள்.

'அக்கா மூஞ்சி வாடியிருக்குதே ?' என்று வருந்தினான் ஏழை.

ஏழைபாழைகளிடம் சோற்றுக்குப் பஞ்சம்தான்.

ஆனால், பச்சாத்தாபத்துக்கு, அன்புக்கு, இரக்கத்துக்கு, கருணைக்குப் பஞ்சம் இல்லை; இல்லவே இல்லை!

"ஒண்ணுமில்லேப்பா ! .. நீ சாப்பிடு... ஆமா, உன் பெண்டாட்டிக்கு கால் கடுப்பு தீர்ந்திடுச்சா?"

அவள் பேச்சை மாற்றினாள்.

அவன் தெரிந்துகொண்டான். "மாப்பிள்ளைகாரக சாப்பிடலீங்களா அக்கா?" என்று மனம் நொந்து வினவினான், விட்ட இலக்கினைத்தொட்டு.

அவள், "இல்லே!" என்று விடை ஈந்தாள், தீனமாக.

பண்ணைக்காரன் எச்சில் தெளித்து அந்திக்குப் பால் கறக்க வருவதாக நினைவூட்டிச் சென்றான்.

அவள் நெடுமூச்சுடன் பாத்திரம் பண்டங்களை உள்ளே எடுத்துக் கொண்டு போய் வைத்தாள். நடையில் வந்து உட்கார்ந்தாள். அடுப்படியைப் பார்க்கப் பார்க்க அவளுக்குப் பசியே எடுக்க வில்லையா?....

விரிந்து கிடந்தது — 'புலந்திரன் களவு மாலை' அதை எடுத்தவளுக்கு, திண்ணைப்புறம் ஏதோ மின்னுவது போலத் தெரிந்தது. நடந்தாள். அங்கே மோதிரம்—மூன்று கல் மோதிரம்—ஒன்று இருந்தது. 'ஆமா; இது சிலட்டூர்க்காரக மோதிரம்தான்!...' என்று முடிவு செய்து, அம்மோதிரத்தைப் பவித்திரமான அன்பின் நெகிழ்ச்சியுடன் எடுத்து உள்ளே கொண்டுபோய் ஐந்தறைப் பெட்டியில் வைத்துத் திரும்பினாள்.

புத்தகம் அப்புறமும் அவளை அழைத்தது, அவள் வாய்விட்டு, மனம்விட்டுப் படித்தாள்.

“முத்திரை மோதிரத்தை
முருகுழலாள் தானெடுத்து
கட்டழகன் மோதிரத்தைக்
கண்களிலே தானும்ஒத்தி
பவுத்திர மோதிரத்தை
பைங்கிளியாள் தானெடுத்து
கண்மணி நாயகரைக்
காணேன் ஒருகாலும்,
மாது மணவாளன்
வந்ததைப் பாரேனோ.
பாராமல் போனேனே,
பாவிநான் ஆனேனே!......”

தொடர்ந்து படிக்கவொட்டாமல் கண்கள் நனைந்தன. மூடிவைத்து எழுந்தாள். ‘ஆத்தா.... என்னைப்பெத்த ஆத்தா!’ என்று தனக்குத்தானே வேதனையில் செருமி, நன்றியின் கனிவுடன் மனம் தளும்பி விதியின் விளையாட்டில் உயிர்ப்பதைப்பு எய்தினாள்.

அப்போது:

வாசற்பகுதியைத் தொட்டு ஒலித்தக் குரல் ஒன்று, “அம்மான்! அம்மான் காரவுகளே!....” என்று ஓலம் பரப்பவே, செய்தி அறிய, சாரைப்பாம்பாகக் கடுகி வெளிப்புறம் பாய்ந்தாள் தைலம்மை. கால்கள் பின்னின. பின்னமின்றித் தப்பித்தாள்.

வாலில் நின்ற வாட்ட சாட்டமான இளவட்டம், “தைலி, சொகமா?” என்று பாசத்தின் தூய்மையான நெருக்கத் துடிப்புடன் கேட்டான்.

சமைந்த பெண்ணோ, கல்லாய்ச் சமைந்தாள். “யாரு நீங்க? ” என்று ஐயம் இழைத்தாள்.

"நானு ஒன்னோட அயித்தைமவன் சிங்காரமாக்கும்!... அடியோடவே என்னை மறந்துபுட்டியா, தைலி?" என்று கம்மிய தொனியில் பரிதாபமாகக் கேட்டு, செய்வகை தெரியாமல் பிரமை தட்டி நின்றான் சிங்காரம்!...

# கதிர்க் கொத்து 5

## சிலட்டூர் மருமகள்

சிங்காரம் சுருட்டைத் தலைமுடியைத் தன்னுடைய இரு கை விரல்களாலும் கோதிவிட்டபடி, தலையை உயர்த்தினான்.

அதே நேரத்தில், தைலம்மையும் குனிந்த தலையை நிமிர்த்தினாள்.

பின்னல் கோலாட்டக் கயிறுகள் இரு தரப்புக்குமாக ஒன்றோடொன்று சந்தித்துப்பிரிந்து விளையாடுவது போல அவளது கோல விழிகளும் அவனது அழகிய கண்களும் ஓர் அரைக்கணம் சந்தித்து விலகிக் கொண்டன.

பிறகு, அவளும் தலையைத் தாழ்த்தினாள்.

அவனும் தன் சிரசைக் கீழ் வசத்தில் சாய்த்து விட்டான்.

இறங்கு முகத்தில் இருந்த கதிர்களைத் தழுவியபடி வீசியது வேப்ப மரக் காற்று.

குனிந்த தலை குனிந்தவாக்கிலேயே, "அம்மான்காரக எப்ப வருவாங்க ?" என்று கேட்டான் இளைஞன்.

"அவுக எப்ப வருவாங்கண்ணே தோணலீங்க....எங்கிட்டாலே பறிஞ்சாங்கண்ணும் மட்டுப்படலீங்களே!" என்று மறுமொழி பகர்ந்தாள் வாலைக் குமரி. சேலைத்தலைப்பின் ஒரு பிசிறு அவளது பல் இடுக்கில் சிக்கியிருந்தது.

"அப்ப நான் போறேன்.... அம்மான் வந்தாக்க, அவுக ளோட ஒடப் பொறந்தா மகன் பர்மா நாட்டிலிருந்து வந்து தேடினதாகச் சொல்லுவீங்களா...?" என்றான் சிங்காரம். அவன் குரல் பரிதாபமாக ஒலித்தது.

அந்தக்குரலின் அந்தப் பாவனை அவளது இயல்பான இரக்கவுணர்வைத் தூண்டி விட்டிருக்க வேண்டும்.

அவன் புறப்பட ஆயத்தப்பட்டபடி, அவளை ஜாடை யாக நோக்கினான். அவன் கண்கள் கலங்கியிருந்ததை அவள் கண்டுகொண்டாள். இப்போது நெகிழ்ந்திருந்த அவள் பெண் நெஞ்சம் மேலும் சலனம் அடைந்தது.

"வந்த காலோட நிக்கறீங்க... நானு சின்னப்பொண்ணு. வக்கணையாப் பேசி குந்த வைக்கிறதுக்கு ஒடலே!.... திண்ணையிலே வந்து உட்காருங்க.தாகத்துக்குச் சாப் பிட்டுப் புட்டுப் போங்க!..." என்று கேட்டுக் கொண்டாள்.

அவன் ஆற்றாமையின் விரக்தியோடு சிரித்தான். ஒன்றும் மறுமொழி பேசாமல், திண்ணையின் முந்தலில் வந்து அமர்ந்தான். கால்கள் லய சுத்தத்துடன் ஆடின.

தைலம்மை உள்ளே மறைந்தாள்.

நீராகாரக் குவளை வெளியே வந்தது.

அவனிடம் அவள் தயங்கித் தயங்கி அக்குவளையை நீட்டினாள்.

அவனும் அதை மறுப்பதா, ஏற்பதா என்ற போராட்டத் துடிப்புடன் ஏந்தினான்.

அது தருணம், எதிரிலிருந்த ஒழுங்கையில் ஒரு சிறுவனும் ஒரு சிறுமியும் மணல் வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்த காட்சியை அவனும் பார்த்தான். அதைப்போலவே, அந் நிலையை அவளும் பார்த்தாள்.

சிறுவனுக்கும் சிறுமிக்கும் சச்சரவு மூண்டது. சிறுவன் அச்சிறுமியைச் சீமை ஓட்டுச் சல்லியால் மொத்தினான். சிறுமி 'குய்யோ முறையோ' வென்று அழுதாள்.

சிங்காரம் குவளையை அப்படியே கீழே வைத்துவிட்டு, தைலம்மையைப் பதட்டத்துடன் நோக்கினான். 'இதாட்டம் நானும் இந்தப் பொண்ணு தைலியை விளையாடறப்ப மொத்தினதை மனசுலே வச்சுக்கணுதான், இப்பைக்கு என்னைப் புரிஞ்சுகிடாத கணக்கிலே மெத்தனமாய் இருக்குமோ ?... இல்லே தன்னாலவே அந்தப் பழசான நடப்பை அப்பவே மனசைவிட்டு நீங்கிப்புடுச்சோ, என்னமோ ?... ம்... பொண்ணு மனசைப் புரிஞ்சுக்கிடுறது ரொம்ப ரொம்ப சிக்கலானதுன்னு அக்கரைச் சீமையிலே பர்மாக்காரக் குட்டி மாஸோஹின் அடிக்கொரு வாட்டி நினைப்பூட்டுமே, அது மெத்தவும் உருப்படியான சமாச்சாரம்தான்போல!... சொந்த அம்மான் மவள் ; சொந்த அயித்தை மவனை இனம் கண்டு கிடுறதுக்குக்கூட வாய்க்காமப் போயிட்டுது...?என்று எண்ணங்களைத் தொடுத்த இளவட்டம், மேலோட்டமாக அவள் முக மண்டலத்தை நோக்கிய வேளையில், அவள் தன்னுடைய இடது கன்னத்தில் காதின் ஓரத்தில் கீழ் முனைத் தழும்பைத் தடவி விட்டவாறு, பலத்த சிந்தனை லயிப்பில் மூழ்கியிருக்கக் கண்டான். அவன் திரும்பவும் அதிர்ச்சி அடைந்தான். 'ஆமா ; என்னாலே உண்டான வடுதான் அது. விளையாட்டிலே வீம்பு பேசின தைலிக்கு நான் வச்ச அடையாளம் அப்பிடியே மாறாம நிலைச்சிருச்சே ?....சே!.... பாவம்!....' என்றோ நடந்த ஒரு விளையாட்டின் வினைக்கு —வினையின் விளையாட்டுக்கு— இப்போது கழிவிரக்கம் கொள்கிறான்—கழுவாய் தேடிக் கொள்வானோ ?...

"தைலி!..."

அவன் அவளைப் பெயரிட்டு அழைத்தான். எதிர்ப் பக்கம் விரைவாகப் பார்வையை ஓட்டினான். அந்தச் சிறுவனும் சிறுமியும் இப்போது சிரித்துக் குதித்தார்கள். ஆகவே, அவனுக்கும் கொஞ்சம் 'தைரியம்' விளைந்தது.

"தைலி!..."

"ம்.!"

"நான் செஞ்சது தப்புதான்!"

"நீங்க என்ன தப்பு செஞ்சீங்களாம்?"

"அடி நாளையிலே நீயும் நானும் புருசன் பொண்டாட்டி விளையாட்டு விளையாடினப்ப, நீ முருதாவாப் பேச, நான் மூக்குக்கு மேலே ஆத்திரப்பட்டு உன்னை ஒட்டுச் சில்லாலே கன்னத்திலே வீசி அடிச்சேனே; அது தப்புதான்!"

அவள் கண்களை மூடியபடி சிந்தனையின் உடும்புப் பிடிக்குத் தண்டனிட்டுக் கிடந்தாள். மீண்டும் அந்தப் பேசும் விழிகளை அவள் பேசாமல் திறந்தாள். கண்ணீர்த் துளிகள் சோகத்தின் மௌனம் போல சந்தடியின்றி உதிரலாயின. எதிர்த்தரப்புச் சிறுவனும் சிறுமியும் அவளுக்குத் தூண்டுதல் ஆயினரோ ?....

"நீங்க எங்க மீனாச்சி அயித்தை மவன்....சிங்காரம் தானே ?" என்று ஓங்கிய குரலெடுத்து ஒய்யாரப்பார்வை தொடுத்து ஓயிலான பாவனை விடுத்துக் கேட்டாள்.

சிங்காரமோ அவளது பாசத்தின் எழுச்சியால் மெய்மறந் தான். 'ம்' என்று மட்டும் தலையை உலுக்கினான். சுடு வெள்ளம் வழிந்தது. மேனி சிலிர்த்தான்!

சிங்காரம் இப்பொழுது தைலம்மையைப் புதிய உரிமை யின் உறவுடன் பார்த்தான்.

அவளோ, நாணத்தின் பாவையானாள். "நீங்க ஒண்ணும் நெனைச்சுக்கிடாதீங்க ....ஒங்க பேரைச் செப் பிட்டேனே!..."என்று தயவுடன் சொல்லி, தன்னுடைய 'முறைமைக்காரனை',த் தலை உயர்த்திப்பார்க்கவும் வெட்கப்பட்டவளாகத் தூண்மறைவில் ஒதுங்கினாள்.

அவள் பேச்சு அவனுக்கு நெஞ்சத்தில் பால் வார்த்த மாதிரி இருந்தது. "இப்பைக்கு எம்பேரைச் சொன்னா

ஒண்ணும் கெடும்பு இல்லையே! நாளைய பின்னைக்கு...ஒரு நல்லது நடக்கிறதின்னு ஒரு முடிவு உண்டாக்கிடுச்சின்னாத் தான், பேரைச் சொல்லுறதுக்கு ரோசிக்கவேணும்!...என்று மிகவும் வெள்ளையாகச் சொல்லிவிட்டுத் தன் பேச்சில் தானே சிரிப்பைக் கண்டவனாகப் புன்னகை பூத்தான்.

இப்பேச்சைக் கேட்டதுதான் தாமதம், அவள் கணப் பைத் தொட்டவளாகத் துடித்தாள்! 'ஐயோ...இது என்ன சோதனை!...பாவம், இந்த அயித்தை மகனுக்கு இங்கணே நடந்த தாக்கல் தகவல் எதுவும் காதுக்கு விழுந்திருக்காது போலத் தோணுது!...ம்....சின்ன வாண்டாக இருக்கையிலே அக்கரைக்குப் போனவுக இப்பத்தானே இங்கிட்டு திரும்பி யிருக்காக!...அதுக்கு ஊடாலே அவுகளைப் பெத்தவுகளும் கண்ணை மூடிக்கிட்டாகளே!...' எண்ணங்களின் முடிவில் அவள் அவனைப் பார்த்து ஒப்புக்கு பதிலுக்குச் சிரித்து வைத்தாள்.

அவனுடைய கண்கள் கனவின் ஆனந்தத்தில் மிதந்தன.

பாவம்!...

அந்தப்பெண்ணின் கன்னக் கதுப்புக்களில் சிந்தூரம் கொஞ்சத் தலைப்பட்டது.

சிங்காரம் வாசற்புறத்தை நோக்கினான். யாரோ செம்மறியை இழுபறியாகப் பற்றிச்செல்ல, செம்மறி காட்டுக் கூச்சல் போட்டது.

நான் போயிட்டு மறுகா வாரேன்!..." என்றான் அவன்.

"இருங்க, ஒருவாய் சுடுசோறு போட்டுக்கிட்டுப் புறிய லாமுங்க" என்று அன்பின் உணர்வுடன் வேண்டுதல் விடுத்தாள்.

"மறுகா ஒரு கடுத்தம் ஆகட்டும், தைலி!"

"இப்ப என்ன வந்திடுச்சுங்க?"

"அம்மான்காரக இல்லையே?"

"நானு அம்மான்மவ இருக்கிறேனுங்களே?"

அவன் பதில் ஏதும் சொல்லாமல், குறுஞ் சிரிப்பு உமிழ்ந்தான். அவன் மனம் எதையெதையோ எண்ணமிட்டது. ஒரு சமயம்—அவள் ஐந்து வயதிலே அறியாப் பருவத்திலே நடமாடிக் கொண்டிருக்கையில், தன் அம்மானும் தன் தாயாரும் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், "அக்கா, ஆத்தா மூத்தவளோட கிருபையாலே தான் எனக்குப் பொறந்த குஞ்சு பொண்ணாய் இருந்திருக்குது!..... அதாலே, ஒங்க மகன் எனக்கின்னு அவதரிச்சிருக்கிற மாப்புள்ளை தானாக்கும்! எம்பேச்சு நெசம்! நீங்களும் அப்பாலே உங்க தம்பிமகள் அது இதின்னு பேச்சை மாத்தி, தடத்தையும் மாத்திப்புடப் புடாதுங்க..." என்று ஒரு முடிவை நிர்ணயம் செய்தார்களே? அதை எண்ணினானா அவன்?

ஆம்; அந்நிலையில்—அந்நடப்பைத்தான் அவன் எண்ணியிருக்க வேண்டும்.

ஆனால், இப்போதைய விதியின் விளையாட்டை அவன் எப்படி அறியக் கூடும்?—அக்கரைச் சீமைக்குச் சிறு பிராயத்திலேயே போய்ச் சேர்ந்த அவன், தன் பெற்றோரை அங்கேயே 'காவு' கொடுத்த பின்னர், அவனும் பர்மா நாட்டுக் "காப்பியா" ஒருவனால் நாடு மாற்றப்பட்டு விட்டதாக இங்கே சேதி வந்து, எல்லோரும் அலறித் துடிக்க, பிறகு மறுவருஷத்தில் தெய்வாதீனமாக அவன் உயிர் பிழைத்த செய்தியும் எட்டியது. அதற்குப்பிறகு இது நாள் பரியந்தம் அவனைப் பற்றி யாதொரு விவரமும் சேர்வைக்குக் கிட்டவில்லை!.... அவன்வரை ஏதோ மர்மம் ஒன்று சூழ்ந்திருப்பதாகவே, ஊர்க்காரர்கள் கருதினார்கள்—அதன்

பேரில்தான், சமைந்த பெண் தைலம்மைக்குக் கல்யாணம் கட்டிவைக்க ஆயத்தம் செய்யலானார்.

மனிதனுக்கும் விதிக்கும் ஊடாக நடைபெறுகிற வல்லமை பொருந்திய மௌனப் போராட்டத்திலே, தெய்வம் என்ற ஒரு சக்திதான் தீர்ப்பு வழங்க வேண்டும். அந்த ஒரு தீர்ப்பு தைலம்மை வரை சாதகமாகவே அமைந்து விட்டதோ? அப்படியென்றால், சிங்காரத்தின் கதையை யார் எப்படித் திசை திருப்பப்போகிறார்களோ?....

தைலம்மைக்கு வர வர, தன் அத்தை மகனை நிறைந்த நெஞ்சுடன்' நேர்மைமிக்க அன்புடன் நிமிர்ந்து பார்க்க வேண்டுமென்ற உணர்வே இற்றுவிட்டது போலத் தோன்றியது. 'என்னதான் ஒக்குமத்தான சொந்தம் சோபாரியா னாக்கக்கூட எம்மட்டுக்கும் இந்த மச்சான்காரக இனி அந்நியம் அசல்தானே!' என்றே அவளது பெண்மையின் சக்தி உட்குரல் எழுப்பிக்காட்டியது. என்றாலும், அறியாப் பருவ மதிலே தானும் சிங்காரமும் மணல்வீடு கட்டி விளையாடியதை — மாங்கொட்டை ஆடியதை — தாயம் போட்டதை எல்லாம் அவள் ஏனோ திரும்பத் திரும்ப நினைவு கூர்ந்தாள். பருவச் செழிப்பு மிகுந்த அவளது மார்பகம் ஏறி ஏறி இறங்கிற்று. தன்னையும் அறியாமல் ஏதோ ஒருவகைப்பட்ட ஏக்கமும் தாபமும் அவளை அலைக்கழிக்கத் துடிப்பதையும் அவள் உணராமல் இல்லை.

தன்னுடைய எதிர்காலக் கணவனுக்காகத் தனிப்பட தயாரித்திருந்த சாப்பாட்டைச் சிங்காரத்திற்குப் படைக்கவே விரும்பினாள் அவள். அவனை உணவு உண்ணும்படியும் கேட்டுக் கொண்டாள்.

ஆனால், அவனோ மறுதளித்து விட்டான்.

அவளுக்கு மனம் மிகவும் சள்ளைப் பட்டது. ''என்ன ராவு காலத்திலே சோறு ஆக்கி வச்சேனோ தெரியலையே!

ரெண்டு பேருமே ஒரு கவளம் கூட உருட்டிப் போட லையே !....'

சிங்காரம் பிரிய மனமில்லாதவனாக—எதையோ இழந்து விட்ட மனநிலை கொண்டவனாக — அங்கிருந்து மெள்ள நழுவ முயன்றான்.

அப்போது:

"மச்சான்!" என்ற குரல் அனுப்பி, சீமைக்கிடாவைப் போன்ற திமிர் கொழிக்க அங்கு வந்து நின்றாள் பூங்கா வனம். சரிந்து விழுந்த சேலையைச் சீர் செய்தபடி, சிங்கா ரத்தின் குறுக்கே வந்து நின்றாள், விதி குறுக்கு மறித்து நின்ற பாங்காக!

சிங்காரம் 'சேக்கை' செம்மைப் படுத்திக் கொண்டான் ; நெற்றிவேர்வையைத் துடைத்துக் கொண்டான். நாசி முனையில் ரத்தம் கட்டியது. விழிகளின் மையத்தில் வியப்பு கொக்கி போட்டது. வந்த பெண்ணை வாயசைக் காமல் பார்த்தான்.

"மச்சான் ! என்ன அப்படி முளிச்சு முளிச்சுப் பார்க்கி றீங்க? நாம ரெண்டுபேரும் உங்க செலட்டூர் பூவரச மரத் தடிச்சாமி பொட்டலிலே கண்ணா மூச்சி கட்டி கட்டி வெளை யாடுவமே, மறந்துப் பூட்டீங்களாக்கும்! என்னமோ, சொந்த மும் பந்தமும் கண்ணுக்கு முன்னாலேதான் செல்லுபடி ஆகும்போல! என்ன அக்கா நானு சொல்லுறது?" என்று 'வேதாந்தம்' படித்து அதே திட்டத்தில் தைலம்மையையும் இழுத்துப் போட்டாள்.

ஆனால், தைலம்மையின் மனோ பாவத்தை, பாவம், இந்தக் கன்னிப் பெண் பூங்காவனம் எப்படி அறிவாள்!

பூங்காவனம் "அக்கா" முறை வைத்து விளித்த பான்மை சிங்காரத்தை தூண்டியது. 'இது...ஆமா...எங்க

சின்ன அம்மான்காரக மவதான்!....என்னமா மறந்திருச்சுது? ..என்னைத் தைலம்மை அடையாளம் புரிஞ்சுக்கிடலை!... அதையொத்து, இப்ப, நான் இந்தப்புள்ளையை யாருன்னு தடயம் கண்டுக்கிட வாய்க்கலையே! என்று உள்ளூற வருந்தினான்.

"நானு உங்க சின்ன அம்மான் பொண்ணுங்க, மச்சான்!" என்று நேசம் பாராட்டி வெளியிட்டாள் பூங்காவனம். சொல்லிவிட்டு அவனை விழுங்கி விடுபவளாக அப்படிப் பார்த்தாள். அப்பார்வையில் கன்னி மனம் நிழலாடியதா?—இல்லை, காலத்தின் விதிதான் மெளனக் குரலெடுத்து நகை செய்ததா?

அவன் சுதாரித்துக்கொண்டு, "ஒன்னை நான் அப்படி ஒண்ணும் மறந்துப்புட மாட்டேனாக்கும்!...என்று சமாளித்தான்.

"எம்பேரு என்னான்னு சொல்லுங்க, பார்க்கலாம்!" என்று ஒரு அதிர்வேட்டைப் போட்டுவிட்டு கை கொட்டிச் சிரித்தாள் கன்னிப்பெண் பூங்காவனம்.

அவன் திகைத்தான்.

"பூங்காவனமின்னு மச்சானுக்குத் தெரியாதாக்கும்! ." என்று 'உரை' ஏற்றி, உள்ளே நுழைந்துவிட்டாள் தைலம்மை.

"ம் .... ஆமா" என்று இணைந்து பாடினான் சிங்காரம். பெரியதொரு சங்கடத்தினின்றும் தன்னைக் காத்துவிட்ட தைலம்மையை அவன் நெஞ்சாரப் போற்றினான்.

"சரி. நான் போயிட்டு பொறகு வாரேன்." என்று 'பய்ணம்' சொல்லிக்கொண்டு சிங்காரம் புறப்பட்டான். அவனைத் தொடர்ந்தாள் பூங்காவனம். அவளுக்கென்று இப்படி ஒரு துள்ளலா?...ஒயிலை உருவமாக்கி, பின்னிப் பின்னி நடந்தாள்.

இரு நிழல்களையும் நெஞ்சில் ஏந்திக்கொண்டு, வாசல் திண்ணையில் சிந்தனைப்பதுமையின் வடிவு பூண்டு குந்தினாள் தைலம்மை. 'ஆமா ஆத்தா நோக்கம் அப்படித் தான் இருக்க வேணும்!...பூங்காவனத்துக்கும் இந்த அயித்தை மவனுக்கும்தான் சாமி முடிச்சுப் போட்டு வச்சிருக்கோணும்!'

அந்தி வந்தது.

தைலம்மை பொழுது பட்டும்கூட, சோற்றுப்பானையை ஏறெடுத்துக்கூட பார்க்கவில்லை. ஆசையுடன் சமைத்த உணவுவகைகளை அன்புடன் ஏற்க மறுத்துவிட்ட உள்ளத்தை-உள்ளங்களைப் - பற்றிய போராட்டத்திலேயே அவள் நாழிப் பொழுதை ஓட்டினாள். 'நம்மரெண்டு பேரோட பொசிப்பும் ஆத்தாளோட சம்மதமும் போழையும் மூடியுமாட்டம் பொருந்தி இருக்கிறப்ப, ஊருக்காக நாம எதுக்கு அச்சப்படவேணும் ?....ஊருல்ல நம்மளைக் கண்டு பயப்பட வேணுமுங்க!'என்று சாப்பிட மறுத்த சரவணனிடம் சமத்காரமாகவும் வக்கணை தப்பாமலும் எடுத்தியம்பியச் சாதுர்ய மொழிகளை அவள் மீண்டும் நினைத்துக் கொண்டாள்.

அதே தொடுப்பில், "நானு ஒன்னோட அயித்தை மவன் சிங்காரமாக்கும் ! ... அடியோடவே என்னை மறந்துப் புட்டியா, தைலி" என்று வேதனையின் வெய்துயிர்ப்புடன் வினாவிடுத்த சிங்காரத்தின் சூழலையும் அவள் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியவள் ஆனாள்.

அந்த இரு வேறு உள்ளங்களுக்குச் சுற்றுச் சார்பாக, அவள் அப்பொழுது தடுமாறினாள். சிலட்டூர் மாப்பிள்ளை சரவணன் கைமறதியாக விட்டுச் சென்ற மோதிரத்தின் ஞாபகம் ஒட்டியது. ஒட்டாமல் பேசிய அவனது மாற்றமும், ஓடி வந்தது. தகப்பன் வந்ததும், அம்மோதிரத்தை உரியவரிடம் சேர்ப்பித்து விடத் துடித்தாள் தைலி.

இந்நிலையிலெ, தைலம்மைக்குத் தன் தகப்பன்மீது தான் கோபம் கோபமாக வந்தது. 'உங்கப்பாரு ரொம்பக் காலமா யாரோ அசலிலே ஒரு பொம்பளையோடே கள்ளத் தனமாகத் தொடுப்பு — சிநேகிதம்— வச்சிருக்கிறாராம்!...' என்று சரவணன் 'கோடி காட்டி' பேசி, விளைந்துள்ள இடு சாமத்திருப்பத்தை எடுத்து விளக்கியதை அவளால் நினைவுக் குழியில் வைத்து மீண்டும் ஒருதரம் ஆராய்ந்து பார்க்கக்கூட மனம் இடம் தரவில்லை. ஏதோ ஒரு விபரீதம் 'வேடம்' புனையக் காத்திருக்கிறது, என்ற அளவுக்கு அவளுடைய மனத்தின் மனம் சதா அச்சுறுத்திக் கொண்டிருந்தது. 'ஆத்தாளே தாயே!... எங்க ரெண்டுபேரு மனசுகளையும் ஒண்ணிலேருந்து ஒண்ணை வெட்டி வெலக்கிப் புடாதே !... இது ஒனக்கு அடுக்கவே அடுக்காது!...' என்று மனம் நொந்து பிரார்த்தித்தாள். 'ஆமா; அப்பன்காரக வந்தடியும் எப்பிடியும் அந்தக் கமுக்கமான தவசலைப் பத்தி உடைச்சுப் பேசி, உண்டு இல்லைன்னு கேட்டுப்பட வேண்டியதுதான்!... இல்லாங்காட்டி, ஒண்ணும் வசப்படாது!' என்று ஒரு தீர்மானத்தையும் உருவாக்கிச் செம்மைப் படுத்திக் கொண் டாள். அப்படிப்பட்டதொரு முடிவுக்குத் தன் மனத்தையும் வலுப்படுத்திக் கொள்ளவும் அவள் தயாரானாள். நாளையப் பொழுது எப்படி விடிந்தாலும் சரி என்ற திட வைராக்கியமும் அவளை அண்டி அவளது ரத்தத்தோடு ரத்தமாக உறைந்து விட்டது.

உள்ளே அடுப்படியை நாடிச் சென்று மீண்ட தைலம் மையை எதிர்பார்த்துக் கொண்டு வாசலில் மகிழ்வின் திளைப்புடன் மெய்ம்மறந்து கனாக் கண்டு கொண்டு நின்ற பூங்காவனத்தின் தோளைத் தொட்டு, "என்னா தங்கச்சியோ!" என்று கேட்டாள்.

"அக்கா! அக்கா!... எனக்கு ஒரு பெரிய அதிர்ஷ்டம் வந்திருக்காக்கும்!....அதை உங்காதுக்கு விளுக்காட்டிட்டுப் போவத்தான் ஓட்டமா ஓடியாந்தேன்!... நானு சிலட்டூரு மரு

மகப் பொண்ணாக ஆகப்போறேனாக்கும்!" என்று ஆனந்தத் துள்ளலுடன் வார்த்தைகளைக் கொட்டி விட்டு, வந்த அடித்தடம் தெரியாமல் ஓடிவிட்டாள் பூங்காவனம்

தைலம்மை அப்படியே சிலையானாள்!

# கதிர்க் கொத்து 6

## ரத்தக் காணிக்கையா?.. ...

கனவுகள் வளர வளர, அதே துரித கதியில்—அதே பரிணாம வலுவில்—ஆசைகளும் வளரத் தொடங்குகின்றன.

இது மனத்தின் இயல்பு.

இதற்கு விலக்கல்லள் தைலம்மை.

ஆகவே, அவள் வளர கனவுகளும் ஆசைகளும் விதி விலக்காக அமையவும் இல்லை.

ஆனால், 'விதி' மாத்திரம் விலக்கு ஆனது.

இல்லையென்றால், அதிசயத் திருக்கூத்துக்கள் அவளை ஒன்றன் பின் ஒன்றாகச் சந்தித்திருக்க முடியுமா?

இராப்பொழுது கழியக்கழிய அவளுக்குப் பயமும் கவலையும் மிஞ்சத் தொடங்கின. 'நான் எதை நெனைப்பேன்? எதை நெனைக்காம இருப்பேன்? ஆபத்தும் சம்பத்தும் ஆருக்கும் உள்ள சங்கதிதான்! அதுக்காக, அப்பன்காரவுகளோட படுத்தடியான தப்பு தண்டாப் போக்கையும் முருதாக் குணத்தையும் கமுக்கமான நடத்தையையும் பூசி மெழுகி ஊரு வாயை மூடிப்புட ஏலுமா? தங்களோட வயிறு காயிறத்தைப் பத்திக்கூட கிலேசப்படாம, எதிரி பட்டினி கிடக்கிறதிலே ஆடிக் குதிக்கிற இந்தப் பாழ்த்த ஊரிலே எப்பிடித்தான் எங் கனா கெலிப்புச் சொல்லப் போவுதோ? ஒண்ணுமே மட்டுப் படலை. அதுக்கொப்ப, இந்தச் சிலட்டூர்

மச்சான்காரவுக வேறே மதியம் கழிஞ்சு பெரிய பாறாங் கல்லாத் தூக்கி எம்மண்டை மேலே வீசிப் போட்டுப்புட்டு மறுகிட்டாங்க!... அப்பன்காரரையும் இம்மாம் பொளுதுக்குக் கூட கண்ணுப் பொறத்தாலே காணலை!... ஆத்தா, நானு சின்னஞ் சிறுசு. எனக்கு ஒண்ணும் தெரியாது. ஆனா, நீ அல்லாம் தெரிஞ்ச புண்ணியவதி. அல்லாத்தையும் நடத்திக் காட்டுற தேவதை நீ! நீதான் என்னோட கண்ணாலத்தைக் குந்தகம் ஏதும் இல்லாம நடத்திக் குடுக்கணும். உன் குஞ்சுக்கு வார நல்லது கெட்டது ஒனக்குத்தானே சேர்த்தி?...' என்று பலவாறாக மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டாள் தைலம்மை.

நிலவின் சீதளக்கதிர்கள் மங்கி வந்ததை ஒத்து அவளது ஆசைக் கனவுகளும் மங்கி வருவது போலப் பட்டது, அவளுக்கு. நெஞ்சு ஏமாற்றத்தின் தூண்டிலில் அகப்பட்டுத் தத்தளித்தது. நயனங்கள் கலங்கலாயின. கபால ஓடு வலித்தது. ஒரே இலக்கில் குந்தியிருந்ததால் மண்டை வெடித்துச் சிதறிவிடும் போலிருந்தது. ஆகவே, திண்ணை ஒட்டிலிருந்து எழுந்தாள். அடுப்படியிலும் கலவடையிலும் இருந்த சோறும் குழம்பும் வெஞ்சனமும் அவளைப் பரிதாபமாக நோக்கின. கதவை நாதாங்கி போட்டு விட்டு, தைலம்மை வாசலுக்கு வந்தாள்.

அப்போதுதான் வயல் காட்டிலிருந்து பண்ணைக்காரன் திரும்பி வந்தான். காளைகளைக் கொட்டடி முளையில் 'உருகுசுருக்கு' போட்டுப் பிணைத்தான். தீவனம் வைத்தான். பிறகு கை கால் முகம் சுத்தம் செய்து திரும்பினான்.

வேப்பங்காற்றை அனுபவித்த அவள், "சோறு போடவாப்பா?" என்று அவன் களைப்பை உணர்ந்து பரிவு கூட்டிக் கேட்டாள்.

"சோத்துக் கென்ன அக்கா அவசரம்?...ரவைப் பொளுதுக்கு காத்தாட தின்னுப்புட்டு வேணும்னாலும்

போடுங்க. ஆமா, முதலாளி ஐயா எங்கணே பறிஞ்சாங்க... இம்மாம் பொழுதுக்கு எனக்குத் தெரிஞ்சு வீட்டுக்கும் வராம உயல் காட்டையும் நாடி வராம ஒருபோதும் இருக்க மாட்டா களே! அவுக மேலுக்கு போன இடத்திலே—வந்த லக்கிலே ஏதாச்சும் ஒச்சம் வந்திடுச்சா? ஒண்ணுமே தெகை புரியக் காணமே?" என்று நைந்த தொனியில் 'உணர்ந்து' பேசினான். நன்றியின் கசிவில் பாசத்தின் குமிழிகள் எம்பின. ஏழைக்கும் நன்றிக்கும் தான் சொந்தம் கூடுதல்!

அவள் என்ன மறுமொழி பகர்வாள், பாவம்?

நாற்றுக் கட்டுக்கள வந்து சேர்ந்தன. சின்னச்சாமி "சொச்சப் பணம் குடுத்துவிடவேணும்," என்று தெரிவித்தான்.

"அல்லாம் அப்பன்காரரு வந்து குடுத்திடுவாக, நாத்துக் கட்டுகளை சீர் குலைச்சிடாம, மேலத் திண்ணைத் தொங்கலிலே அடுக்கிப் போட்டுப் புட்டு, விடிய இங்காலே வா!" என்று ஒரு முத்தாய்ப்பு வைத்து விட்டு, உள்ளே சென்று சருவச் சட்டியை எடுத்தாள். பண்ணைக்காரனின் பசியை அமர்த்த வேண்டாமா?

அவன் உண்டு, ஏப்பம் பறித்து, எச்சில் தெளித்துச் சென்றான். பின் பக்கம், கூப்பிடு தொலைவிலிருந்த சேர்வையின் சோளக் கொல்லைக்குக் காவல் இருக்கப் போய் விடுவான். அவனுக்குத் துணையிருக்கச் சோளக் கொல்லைப் பொம்மை மட்டுமல்ல, அங்கே களவாணித்தனமாக நத்தி ஓடிவந்து மறையும் பறவைக் கூட்டங்களும் தயாராக இருக்கும்!

ஊர் அடங்கிவிட்டது.

அவள் மனம் அடங்கவில்லை.

பசிக்கிறக்கம் அவளுக்குப் பெரிதாகப் படவில்லை. அப்பனைக் காணாத கவலைதான் கலவரமாக உருவெடுத்தது. வயிற்றைக் காயப் போட்டுக் கொண்டு, காய்ந்த நிலவில் அரை நாழிகை நின்றுவிட்டு, பாயையும் தலையணையையும் தஞ்சமடைந்தாள் தைலம்மை. அவளிடம் அவளது கண்களின் புலம்பு முத்துக்கள் தஞ்சம் அடைந்தன.

நித்தில நிலவும் புதிர் நிறைக்காலமும் ஒன்றுக்கொன்று 'பூப்பலி' ஆகிக் கொண்டிருந்தன!

விடியும் வரை செங்காளியப்பச் சேர்வைக்காரரைக் காணோம்!

கீழத் தெருக் கோடியில் நாவித அம்மையப்பன் தோட்டம் இருந்தது. அங்கே இருந்த கேணியில் அருமையான தண்ணீர் ஊறியது. ஒரு சொட்டுத் தண்ணீரைச் சுவைத்தால் அப்படியே கிணற்றோடு குடித்துவிட வேண்டுமென்றுதான் தோன்றும். அவ்வளவு அற்புதமான தண்ணீர் அது. பால்போல வெளுப்பு. கரிசல் பாங்கு மண்ணில் விளைந்த இளநீரின் சுவைப்பு. அப்பால், கேட்க வேண்டுமா, அந்தத் தண்ணீருக்கு உண்டாகியிருந்த கிராக்கியை?

அந்தத் தோட்டத்து அடைப்புக் கதவுகள் எப்போதும் திறந்து கிடந்தன. அதற்குக் காரணம், 'அந்த ஏழைத் தொழிலாளியின் மனக் கதவுகளும் திறந்து கிடந்ததுதான்! அதற்கும் ஒரு பக்குவம் வேண்டாமா? 'பிறரோட பொருளை ஏய்த்துப்பிடுங்கி ஏப்பம் பறிக்கும் நம்பிக்கை மோசக்காரர்கள் பெருகி வரும் மனித மிருகங்களின் கும்பலுக்கு மத்தியில்'

இப்படிப்பட்ட நல்ல மனம் ஒன்றிரண்டு இருக்கக் கண்டு தானே, மழை பெய்யுது!'—மேற்கத்திப் பக்கச் சாமியார் ஒருவர், அந்தத் தோட்டத்தைக் காணும் போதெல்லாம் இப்படிப்பட்ட யதார்த்தப் பேச்சைத்தான் வெளியிடுவார். உண்மை நிலையும் அதுதானே?

ஆதித்த பகவானின் கருணையின் துளிகளெனச் சிந்திச் சிதறி வழிநெடுக விரிந்து கிடந்த கதிர்க்கிரணங்களை இதம் பார்த்து மிதித்தவாறு மடங்கி மடங்கி நடந்து சென்றாள் தைலம்மை. கைச்செலவுக்கு அவளது தோட்டத் தண்ணீர் கை கொடுக்கும். நாலைந்து முட்டி இறைத்தாலே யதேஷ்டம். ஆனால், சோறு வடிக்கவும் நீராகாரத்துக்குச் சோற்றில் இரவில் தண்ணீர் ஊற்றவும் அவளுக்குத் தன் கேணித் தண்ணீர் உதவாது. அயலிடங்களைத்தான் அவள் நாட வேண்டும்.

தோழிகளின் 'படை' சேர்ந்தால் மேற்கே செல்வாள். ஒன்றியாக இருந்துவிட்டால், கிழக்குப் பக்கம் குறி வைப்பாள். இப்போதும் அப்படிப்பட்ட தனிமைக்கு இலக்கானாள். அம்மையப்பன் கிணற்றடிக்கு இலக்கு வைத்தாள். மேலும், 'இப்பைக்கு நாலு குட்டிங்களோடே ஒண்ணடி மண்ணடியாய் போனாக்கா, ஒண்ணுக்கிடக்க ஒண்ணு வாயைக் கிண்டி அவலைக் கொட்டி வேடிக்கை பார்க்குங்க! .. அப்பன்காரக போக்கும் சிலட்டூர் மச்சான் கோவமும் திசை மாறித் திசை திரும்பியிருக்கயிலே, நாம யாரிடம் தான் வாய் கொடுக்க ஏலும்?....பிறத்தியார் கஷ்ட நஷ்டத்திலே ஈவு இரக்கம் காட்டுற ஜன்மங்கதான் இந்த நாட்டுப் புறத்திலே அருப்புருவமாப் போயிடுச்சே?' என்றும் சிந்தித்தாள். ஆகவே, அவளுக்கு அவள் முடிவுதான் விதி. ஆனால், 'விதி'யின் கைரேகையை அவள் எங்ஙனம் உணர முடியும்?

பச்சை வண்ணமும் பொன் ரேக்கும் கொழித்துத் திகழ்ந்த சோளக் கதிர்கொண்டைகளின் அழகுக் கோலத்தை ரசித்தபடி அவள் வழி தொடர்ந்தாள். பாத்தி கட்டிக் காபந்து செய்யப்பட்டிருந்த மிளகாய்க் கன்றுகள் எவ்வளவு அந்த முடன் திகழ்ந்தன! ஒட்டுச் செடிகள் பூத்துக் குலுங்கிய தாய்மையின் கம்பீரக் கவர்ச்சியைத்தான் அவள் மறக்க முடியுமா? இயற்கைத் தாய் புவனத்துக்குத் தந்துள்ள சீத னங்களின் மகிமையை எண்ணி வியந்துகொண்டே அவள் கிணற்றடியைத் தொட்டாள். உள்ளத்தைத் தொட்ட நிகழ் வுகளின் ஆறுதலுடன் அவள் குடத்தைக் கீழே இறக்கி வைத்தாள். வாளியில் கயிற்றைக் கட்டினாள். கடகாலில் செம்பாதி தண்ணீர்தான் வந்தது. மூச்சு இறைத்தது. வேர்வை கொட்டிற்று. நீர் நிரம்பியது. குடத்தின் மேல் வரம்பைச் சோற்றுக்கையினால் தளும்பாமல் லேசாக வழித்து மட்டப்படுத்தினாள். 'இன்னிக்கி போனதும் எங்க தோட்டத் துப் பாத்திகளுக்கு பத்து சால் தண்ணி இறைச்சு ஊத்தணும். சீமைத் தக்காளியும் அநேகமா நாளைக்கு மைக்காநாளு கண்பார்த்திடும். சோளத்துக்கு இனி பயமில்லை..........' என்று நினைவுகளை ஓரே நாளில் தொடுத்த மலராக்கி, அம்மலர்களின் சுகந்தத் தெளிவில் மனம் தெளிந்து, அதே பாவனையின் பரவலான நெகிழ்ச்சியுடன் குடத்தை அலக் காகத் தூக்கித் 'தலைச் சிம்மாட்டில்' வைத்தபோது, எதிர்ப் பட்டாள்வடக்குத்தெரு அங்காளம்மை. பல்லை இளித்துக் கொண்டு 'தங்கச்சியோ' என்று சொந்தம் காட்டினாள். தைலம்மைக்குத் தன் பற்களை இளிப்பதில் என்றுமே கூச்சம் அதிகம். மேலும், அவளது பற்களின் எழிலை அனுபவிக்க வேண்டியவன் அனுபவிக்க வேண்டுமென்கிற தத்துவம் கொண்டவள் அவள்.

'ஊம்' கொட்டிவிட்டு, பேச்சாடாமல் வழிவிலக்கி, தடம் பிரிந்து நடக்கத் திட்டம் புனைந்தாள் தைலம்மை.

ஆனால், அங்காளம்மை விட்டால்தானே? "தங்கச்சி! ஒரு இடுசாமத்தாக்கல் காதுக்கு விழுந்திச்சே,மெய்தானா?... ஒனக்கு தெரியாங்காட்டியும்? எனக்குச் சேதி எட்டிப்புடுச் சாக்கும்! என்ன, அப்படி வெட்டாடாட்டம் தெகை தப்பி முளிக்கிறே?" என்று கேட்டாள்.

தைலம்மைக்கு அந்தச் சவுக்கடி தன் உயிர்த் துடிப்பில் பட்டு விலகியது. 'என்ன?' என்றுதான் கேட்க இருந்தாள். அவள் கேட்டால், அங்காளம்மை என்ன பதில் சொல்வாள் என்றும் அவளும் அறிவாள். தன் தகப்பனைப்பற்றிப் பேச்சு வரும்; அல்லது தன் நேச மச்சானைப் பற்றிய தாக்கல் வரும். இல்லையென்றால்...?

இப்படி அவள் நினைத்தபோது, நேர்மட்டத்தில் பூங்கா வனம் வரக்கண்டாள். அவளைக் கண்டதும், பொட்டில் தட்டினாற்போன்று அவள் நேற்றுச் சொன்ன செய்தி ஞாப கத்திற்கு வரலாயிற்று. "அக்கா, அக்கா! எனக்கு ஒரு பெரிய அதிஷ்டம் வந்திருக்காக்கும்! அதை உங்களுக்கு விளக்காட்டிப்புட்டுப் போவத்தான் ஓட்டமா ஓடியாந்தேன்! நானு சிலட்டூர் மருமகப் பெண்ணாக ஆகப் போறேனாக் கும்..." என்று ஆனந்தத் துள்ளலுடன் வார்த்தைகளைக் கொட்டிவிட்டு வந்த அடித்தடம் தெரியாமல் ஓடிவிட்ட பூங் காவனத்தின் அச் செயல் தைலம்மைக்கு ஏதேதோ புதிர் களைப் போட்டது. விடுகதைகளைப் போட்டது. ஆனால் எதற்கும் அவள் சிக்கலைத் தீர்த்து விடை கண்டுபிடிக்க முடியாமல் தவித்தாள்.

"அக்கா!"

"வா தங்கச்சி!" என்று பதிலுக்கு உரைத்துவிட்டு, தலைச் சுமையாக இருந்த குடத்தைக் கைப்பற்றுதலாக அணைத்துக்கொண்டாள் தைலம்மை. சொட்டுச் சொட்டாக நீர்த் துளிகள் வழிந்தன. அவை அவளது கதுப்புக் கன்னங் களிலும் மூக்குத்தியின் ஒளி முனைகளிலும் விளை

யாட்டுக் காட்டின. நெஞ்சில் பெருமூச்சு! நினைவில் நெட்டு யிர்ப்பு; வதனத் தளத்தில் கவலைகளின் வரிக்கோடுகள்.

“ராவு நம்ம அயித்தை மவன் எங்க வூட்டிலேதான் இலைச் சோறு உண்ணாங்க. கூனிப்பொடி பொறிச்சு வச் சோம்; சுண்டல் குழம்பு ஆக்கினோம். நல்லா ஒரு வெட்டு வெட்டிப்புடுச்சுதாக்கும்!” என்றாள் பூங்காவனம், வெள் ளைச் சிரிப்புடன்.

‘நல்லா ஒரு வெட்டு வெட்டிப் புடுச்சு’ என்று அவள் சொன்னதன் பொருளை, தாத்பரியத்தைத் தைலம்மை அறி வாள்என்றாலும் “யாரை யாரு வெட்டிப்போட்டாங்க!” என்றுகேட்டாள். பூங்காவனம் சிரிக்கவேண்டுமென்று எதிர் பார்த்தாள். ஆனால் அப்போதைய மனநிலையில் அவள் போட்டுதறிய சிரிப்புப் பேச்சு அவளுக்கே சிரிப்பை உண் டாக்கவில்லை. அவள் மனம் பூங்காவனத்தின் பேச்சினைத் தான் ஆராய்ந்து கொண்டிருந்தது.

“சிலட்டூரு மருமகப்பொண்ணாக ஆகப்போகுதாமே எங்க சித்தப்பன் மவ! அப்படின்னா, அதுக்கும் என் னொத்து சிலட்டூரிலேதான் சம்பந்தம் சாடிக்கை கூடியிருக் குதா? ஒக்கப் பிறந்தவருக்கு ஒரு மாத்து மிஞ்சியே செய்யோ ணுமிங்கிற கொள்கையுள்ள சித்தப்பன் காரரு வேணுமின்னே கூட அப்பிடி சிலட்டூரிலேயே மாப்புள்ளை புடிச்சுப் போட் டிருப்பாகளோ? இருக்கும்...! அக்கரைச் சீமையிலே பர்மா நாட்டிலும், லங்கை தேசத்திலும் நாலு கணக்குக் கொண்டு வித்து வந்த என்னோட அப்பன்காரக கிட்ட எங்க சித்தப் பன்தான் வம்புக்குவந்து மிச்சம் கட்டிக்கிட்டுப் போயிடப் போகுறாங்களா?...அந்தலவிதம் இந்தப் பொறப்பிலே கிட் டாது!...ம் !...ஆனாக்க ஒரு சமயம், எங்கப்பன் பேரிலே உள்ள சங்கடத்திலே எம்புட்டு சிலட்டூர் மச்சானையே வலை போட்டுப் புடிச்சு மடக்கிப்பிட்டிருப்பாரோ எங்க சித்தப்பன்?”

அதற்குமேல் தைலம்மைக்கு மூளை வேலைசெய்ய ஒப்பவில்லை. ‘‘ரொம்ப சந்தோசம் தங்கச்சி. அயித்தை மவன் இப்ப எங்கண இருக்காக?’’ என்று விசாரித்தாள்.

‘‘அவுக ராத்திரி எங்கவூட்டிலேதானே தூங்கினாக!’’ என்று சம்பந்தமில்லாமல், எந்தப் பேச்சை எப்படி வெளியிடுவது என்று இங்கிதப்பண்பு புலனாகாமல் செப்பினாள். பிறகு ‘‘இப்ப சிலட்டூர் பக்கம் போயிருப்பாக!’’ என்று கேட்ட கேள்விக்கு உரிய விடையையும் வைத்தாள்.

அது தருணம், தன் அத்தை மகன் சிங்காரத்திற்குப் பிறந்த மண் உரிமை சிலட்டூரில்தான் இருந்தது என்பதையும் அவள் ஆராய்ந்து தீர்மானிக்கவும் செய்தாள். இப்போது அவளுக்கு ஒரு வகைப்பட்ட நிம்மதி கனியத்தொடங்கியது. ‘ஆத்தா, எஞ் சொப்பனத்தைக் காடுமாத்திப்புடாதே, தாயே’ என்று நெஞ்சம் நெக்குருகப் பிரார்த்தித்து ‘வேண்டுதலை’ விடுத்தாள். பின்னர், தன் தங்கச்சியிடம் சொல்லிக் கொண்டு, வீட்டைக் குறிவைத்து எட்டி நடைபோடத் தொடங்கினாள். குறுக்கே மறித்து ஓட்டம்பிடித்தப் பொலி எருதை விட்டு விலகித் தப்பித்தது தம்பிரான் புண்ணியந்தான் போலும்!

கால் மெட்டிகளின் இனிய பண், அவளது காதுகளின் ரசிகத் தன்மைக்கு விருந்து வைத்திருக்க வேண்டும்.

கொல்லை—குடிக்காடுகள் அவளுக்கு வழிவிட்டன.

தைலம்மை வீட்டுவாசலை அடைந்தாள்.

அங்கே நாலைந்துபேர்கள் கூட்டமாகக் கூடியிருந்தனர். ‘கேதக்கார வீடு’ போல அப்பொழுது அவ்வீடு தென்பட்டது. அவ்வாறுதான் அவளுடைய உள்மனமும் எண்ணம் தொடுத்தது

கூட்டத்தைக் கண்டதும் பூவரச மரத்து நிழலில் பொட்டுப்பொழுது கூடத் தாமதம் பண்ணாமல், தலைக் குடத்தை இடுப்புக்கு இறக்கிக்கொண்டு, முகத்தைத் துடைத்து விட்டாள். மாராப்புச் சேலையையும் செப்பனிட்டாள். லாகவமாக நடைபயின்றவளாக மனையைநாடி அந்த மனைப்பூ அடியெடுத்து, அடி பிரித்து வந்தது.

"தங்கச்சியோ தைலி!" என்று கூவி அழுதபடி அவளை அண்டி வந்தார் அடுத்த தெருக் கிழவர் அழகிரி அம்பலம்.

தைலம்மைக்குச் சப்த நாடிகளும் ஒடுங்கின. குடத்தைத் துருசுபண்ணித் தரையில் வைத்தாள். 'தாத்தா, என்னா சங்கதி? எல்லாரும் எதுக்கு இப்பிடித் தெகைச்சு திகை தாங்கிப்போயி, மூச்சுக்காட்டாம நிக்கிறீங்க? ஒங்களோட அல்லார் வாய் முச்சூடும் அடைபட்டுப் போயிருச்சுதாங் காட்டி? அண்ணே, சாமியப்ப அண்ணே! என்ன தவசல்? மூத்தவுகளே, எதுக்கு ஊர்ப்பட்ட கண்ணீர் கொட்டுது ஒங்களுக்கு?" என்று ஒவ்வொருவராக நெருங்கி, நெருக்கமான பாசத்துடன் கேள்விகள் விடுத்தாள்.

ஆனால் யாராவது வாய்திறந்தால்தானே?

என்ன நடந்துவிட்டது?

ஒரு வேளை, தன் தந்தைக்கு உடம்புக்குத் திடுதிப்பென்று ஏதாவது நோய்நொடி வந்திருக்குமோ என்று ஐயங்கொண்டு உள்ளே விரைந்தாள் தைலம்மை.

உள்ளே பயம் செறிந்த அமைதிதான் கோலோச்சிக் கொண்டிருந்தது.

அங்கே யாரையும் காணவில்லை.

அவள் கண்ணீரும் கம்பலையுமாக நின்றாள். "இம் புட்டுப்பேரும் எதுக்கு இங்கிட்டாலே இப்படிக் கூடி வந்திருக் கிறீங்க? சேதியைச் சொல்லுங்க! இல்லாங்காட்டி வந்த போக்கிலே நடையைக் கட்டுங்க!" என்று ஆத்திரம் பொறியக் கூவினாள்.

அவ்வளவுதான்.

கூட்டத்தில் சலசலப்பு உண்டானது.

கிழவர் தொண்டையைக் கனைத்துக்கொண்டார். தைலம்மையை நாடி அந்த ஊன்றுகோல் தளர் நடையிட்டு வந்தது. "தங்கச்சி! உம் மனசை தேத்திக்கிட வேண்டியக் காலகட்டம் வந்து குதிச்சிருக்குது! உன் அப்பன் நம்ம ஊரு களத்து மேட்டுப் பொட்டலிலே செத்துக்கிடக்கிறானாம், தைலி!" என்று செருமியவாறு தாழ் குரலில் செப்பினார் பெரியவர்.

தைலம்மை "ஐயையோ!" என்று விண்முட்டக் கூவி னாள். மண்முட்டப் புரண்டாள். எழுந்து, 'ஆத்தாளின்' திருச்சந்நிதானத்தில் நெடுஞ்சாண்கிடையாகப் போய் விழுந்து, "ஆத்தா, மூத்தவளே! நீ உம்புட்டு உருவத்தை போலவே உம் மனசையும் கல்லாக்கிக்கிட்டியா, தாயே?... இனி நான் என்ன பண்ணுவேன்? கன்னிப் பொண்ணு எனக்கு இனிமே யாரு ஆதாரம்?....ஐயையோ அப்பா! .....— இனி எப்பொறப்பிலே ஒங்களைக் காணப்போகிறேனுங்க? ஐயையோ!" என்று அலறி, மண்டையில் அடித்துக் கொண் டாள். மண்டையை மண்மேட்டில் மோதிக்கொண்டாள்!

செங்குருதித் துளிகள் பீறிடத் தொடங்கின.

கன்னிக் காட்டேறியான ஆத்தாளுக்கு ரத்தக் காணிக்கை செய்தாளோ கன்னிகழியாத் தைலம்மை?

# கதிர்க் கொத்து 7

## விளக்குகள் மூன்று !

'மதுமலர் அபயக்கரம்' காட்டி, அறக்கருணை முகம் காட்டி, அன்பொழுகும் விழி காட்டி, விதியின் வினைக்கு மருந்தும் காட்டி நிற்கவேண்டிய அந்த 'ஆத்தா'—புவனம் ஆளும் லோகத்தாய்—அந்த ரத்தக்காட்டேறி—ஏன் அப்படி எக்காளமிட்டுச் சிரித்தாள்?

தைலம்மைக்குத் திக்கும் புரியவில்லை; திசையும் மட்டுப்பட வில்லை. மீண்டும் மீண்டும் பார்த்தாள். வெறி மூண்ட கண்களால் பார்த்தாள். பிறகு, அவளது நீள்விழிகளின் விளிம்புகளிலிருந்து நீண்ட கண்ணீர் மாலை நீண்டது. அவளுடைய பூக்கரங்கள் அம்பிகையை நோக்கிக்குவிந்தன. கும்பிடு கொடுத்தாள். கும்பிடு கொடுத்துதான் கும்பிடு வாங்க வேண்டும் என்பார்கள்!—ஆத்தாளுக்கும் மனிதப் பிண்டங்களுக்குமா சேடை?...

ஊஹூம்!......

தைலம்மை அங்கிருந்து கொண்டே எதிர்ப்புறம் பார்வையை வீசினாள். எதிர்ப்பக்கத்தில் சூடேறிய வெய்யிலின் தாக்குதலுக்குப் பணிந்த பனைமரங்கள் சுதாரிப்புத் தப்பி நின்றன.

அவள் அத்திசையில் பாய்ந்தாள். 'கொசுவத்தை' வரிந்து கட்டிக் கொண்டு ஓட்டமும் நடையுமாகப் பறந்தாள்-அவளுடன் பாசமும் பக்தியும் பயமும் பறந்தன. தன்னுடன் 'கமுக்கமாக' விதியும் பின் தொடர்ந்த 'துப்பு' அவளுக்கு எங்ஙனம் தெரிய முடியும்?.........

ஒரு தொலைவுக் கல்லில் செம்பாதி தூரம் ஓடியிருப்பாள்.

களத்துமேடு வந்து விட்டது. தாற்புறமும் படர்ந்து

விரிந்து நின்ற புளியமரங்களின் கட்டுக்கோப்பான நிழல் படர்ந்த அந்தக் களத்துமேட்டில் கம்பங் கூத்தாடியைச் சுற்றி நிற்கும் ஜனங்களைப் போல அவ்வளவு கூட்டம் கூடி நின்றது.

"ஐயோ! அப்பன்காரகளே!......" என்று அலறிப் புடைத்தவளாக, தான் வடித்த செங்குருதித்திவலைகளைத் தானே மிதித்து அழித்தவளாக, கண்ணீருடன் அப்படியே ஓடிப்போய், கூட்டத்தின் நட்ட நடுவில் விழுந்தாள் தைலம்மை.

ஊர்க்குடியிருப்பு 'முச்சூடும்' அங்கே கூடிவிட்டது.

அலஞ்சிரான்காடு கணக்கண் விடுதிக்காரர்களும் கும்பல் கூடினர்.

களத்துமேடு திமிலோகப் பட்டது.

"அப்பாரே!" என்று கூக்குரலிட்டாள். தலையை உயர்த்தினாள்.

மறுகணம் அவள் 'ஐயையோ!' என்று நெஞ்சடைப்பு வந்தவள் போலக் குரல் தடுமாறினாள். நீண்ட அவளது கைகள், நீண்டிருந்த செங்காளியப்பன் சேர்வைகாரரின் கால் பாதங்களைத் தொட்டுத் தடவின. "ஐயோ தெய்வமே!..." என்று ஓலமிட்டாள்.

சேர்வைகாரர் பூக்கள் சிதறிய அந்தம்மிகுந்த ரோஜாப்பூ மாலையைப்போலத் தரையில் சாய்ந்து கிடந்தார்.

அவள் கிறுக்குப் பிடித்தவள் போன்று வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

விலகி நின்றார் அழகிரி அம்பலம்—தொண்டுக்கிழம்.

“பாட்டா! என்னைப் பெத்தவுகளுக்கு என்ன வந்திடுச்சாம்?... எப்படி ஆனாகளாம் இப்படி? இந்தக் களந்துமேட்டுக்கு எப்பிடி வந்தாங்க? இல்ல, யாருனாச்சும் கொண்டாந்து போட்டாங்களா?.... உடம்பிலே கடுகத்தனை ரத்தம் தட்டு மறிச்சுக் கெடக்கக் காணோமே?.... என்ன சூது இது? ... இல்ல யாருனாச்சும் வேண்டாத படுபாவிக உயிர்த்துடிப்பிலே குறி வச்சுக் கணிச்சு ஒரே போடாப் போட்டு ஆளை சாச்சுப் புட்டாங்களா?... யாருறாச்சும் பில்லி வச்சுப்புட்டாங்களா? அப்பன்காரவுகளுக்கு வேண்டியவங்க கணக்கை விட வேண்டாதவுக கணக்குத்தானே ஒட்டிக்கு ரெட்டியாயிருக்கும் ஊர் நாட்டிலே!.... ஐயையோ! கன்னிப்பொண்ணு நானு இனிமே எப்பிடி நான் உசிர் தரிக்கப்போறேன்?...” என்று பச்சைப் பாலகியாகத் தேம்பினாள். மூக்கை உறிஞ்சிக் கொண்டு, கூட்டத்தை ஒரு நோட்டமிட்டாள். தன் சிற்றப்பன் வந்திருக்கிறாரா என்று விழிகளைச் சுற்றினாள். பூங்காவனத்தின் அப்பனைக்காணோம். பூங்காவனத்தையும் காணோம்! ‘அடபாவி ஒக்கக்பொறந்த ரத்தமாச்சே!... தான் ஆடாட்டியும் தன்னோட சதை ஆடுமின்னு பூலோகத்திலே சொல்லிக்கிடுவாகளே!’ என்று நினைத்தாள்.

தன் சிற்றப்பனின் நினைவை எண்ணியவளுக்குப் பிறிதொரு ஞாபகம் சூடு காட்டியது.

ஒரு நாள் :

அப்போது செங்காளியப்பன் சேர்வை ‘எட்டுக்கண் விட்டெறிந்து’ —கொண்டிருந்த தருணம். டலாஞ்சூனிலிருந்து கொண்டு வித்து வந்திருந்தார். இளையவர் வெள்ளையப்பன் சேர்வை தனக்குரிய பாகத்தைப் பிரித்து வெட்டி விடும்படி வந்து கேட்டார் கூடப்பிறந்த பிறப்பிடம்.

வந்ததே கோபம் மூத்தவருக்கு! “ஏண்டா பயலே! ஒனக்கு அம்புட்டுத் தொலைவுக்கு துளிர் விட்டுப்போயிடுச்சா?

நான் சொல்லந் தொட்டியும் நீ இதுபத்திப் பேசாதே. பேசினா ஒனக்கு ஒரு விரல்கடை மண்ணுகூட உன்கண்ணுப்பொறத் தாலே காட்ட மாட்டேண்டா!... அப்பாலே, நீ பண்ணு றதைப் பண்ணிக்கடா!... போ!... நானு ஒண்ணும் உம் மண்ணைத்தின்னு ஏப்பம் விட்டுபுட மாட்டேன். அந்த மாதிரிப் பாடத்தை அந்தக் கோகுலகிருட்டினரு எனக்குக் கத்துத்தரலைடா! போ, வௌக்கைப்பொருத்தி வச்சுக்கிட்டு போயி அல்லி அரசாணி மாலையை ஒம்பொஞ்சாதிக்குப் படிச்சுகாட்டு. அந்த நேரத்தில வாச்சும், அண்ணன் தம்பிக் குள்ளாற காடு மாத்தி காடுபோடுற துர்ப்புத்தி—தலகாணி மந்திரம் படிக்கிற பொட்டைப் புத்தி வராம இருக்கட்டும்!...'' என்று பேசி முடித்தது தான் தாமதம்; உடனே பெரியவர் வேர் அறுபட்ட ஒதிய மரமாகத் தரையில் சாய்ந்தார். மீசை வேர்த்துக் கொட்டியது, கண்களில் ரத்தம் கட்டிற்று. தைலம்மை வயிற்றில் அடித்துக்கொண்டு அழுதாள். உடனே நாட்டு வைத்தியருக்கு ஆள் அனுப்பப்பட்டது. சோமசுந் தரம் என்றால் நாட்டு வைத்தியத்தில் அசகாய சூரர். கடுசான மருந்து கொடுத்தார். சேர்வையின் உயிரை எமதர்ம ராஜனிடமிருந்து பறித்துக் கொண்டு வந்து கொடுத்து விட்டார்.

இப்போது அந்நிகழ்வு தைலம்மையின் நெஞ்சத்தைத் தடவியது—கார்கால மின்னலாக. அப்போது அவளுள் 'ஆத்தா காட்டேறி' புகுந்து ஆறுதல் முறுவல் சிந்துவதாகவே ஓர் உணர்வு தர்ம சிந்தையுடன்—பலகீனமில்லாத தன்னம்பிக்கைப் பொலிவுடன்—ஊடாடியிருக்க வேண்டும். ''ஆத்தா, எம்புட்டு ரத்தப் படைப்பு ஒனக்கு இன்னமும் நெஞ்சு முட்டி வரலையா? அப்பன்னாக்க, எம்புட்டு பாழத்த உசிரையே ஒனக்குப் பள்ளயம் போட்டுப் படைச்சுப்புடறேன்! என்னோட அப்பனை பொழைக்க வச்சுப்புடு, மூத்தவளே!'' என்று புலம்பினாள். உடம்பு புல்லரித்தது.

பிறகு, சம்மணம் கோலித் தன் தந்தையின் காலடியில் குந்தினாள் தைலம்மை. புளியம் பூக்கள் பாதங்களில் சிதறிக்

கிடந்தன. அவற்றைப் பதனமாக எடுத்தாள். கைவிரல் களைப் படியவைத்து, தன் தந்தையின் கால்களின் அடிப் பாதங்களைத் தேய்த்துவிட்டாள். அடுத்த வினாடி, அவளுள் ஏன்அப்படிப்பட்ட மின் இயக்கம் தோன்றியது?—சற்றுமுன் வாழைத் தண்டாக ஈரம் பாய்ந்து சில்லிட்டிருந்த கால்கள் இப்போது லேசாகக் சலனம் பெற்ற மாதிரி அவளுக்குத் தோன்றியது.

"ஒங்களைத்தானே?...மேலக் குடியிருப்புக்காரகளே, சத்தெ இங்கிட்டாலே வரமாட்டீகளா? வந்து எங்கப்பாரை அழுத்தமாப் பாருங்களேன்!" என்று மென்மையின் நைப் புடன் அலட்டினாள். அலட்டிய சூட்டுடனேயே, தன் தந்தையின் விழிகளை நோக்கினாள். சவத்தின் விழிகளா கவே அச்சுறுத்தின அவ்விழிகள் இப்போது அவ்வளவு பயம் காட்டுவதாக அவளுக்குத் தோன்றவில்லை

அதற்குள் மேலக்குடியிருப்பு சுப்பிரமணிய தேவர் வந்தார். வந்து சேர்வையை நோக்கினார். வலது கை முன் விரலை நாசியின் ஊடாக நீட்டினார். "மூச்சு பட்டும்படாமயும் ஊடாடுறாப்பிலே எம்மனசுக்கு ஒடுது தங்கச்சி," என்று மைய வெளியிட்டார்.

"அல்லாம் ஆத்தா போடுற பிச்சையைப் பொறுத்தது!" என்று தெம்புடன் பேசிக்கொண்டே எழுந்தாள் தைலம்மை. தலைமயிர்க் கற்றையைத் தட்டிக் கோதி முடிந்து கொண் டாள். சேர்வையை மீண்டும் பார்த்துக் கண்களைத் துடைத் துக்கொண்டாள். விசும்பல் தொடராமல் சமாளித்தாள். சேலை முகத்தலைப்பை பின் முதுகுக்கு வாளிப்பாக இழுத்து விட்டுக்கொண்டாள். நீம்பல் விட்டிருந்த ரவிக்கையைச் செம்மை செய்தாள். எல்லாம் நல்லபடியாக முடிந்துவிட்ட மாதிரியே அவளுக்கு ஒரு சிந்தனை. ஆனால் அவள் மீண்டும் மண்ணை—களத்துமேட்டுப் பொட்டலைப்—பார்த்த போது, அவள் மேனி தீயிடை முல்லையாகப் பொசுங்கத்

தொடங்கி விட்டது. பதட்டம் அங்கங்களிலே கொட்டு முழக்கியது. 'சிதம்பர அண்ணாச்சி, கொஞ்சம் பரிஞ்சு நம்ம ஆசாரி ஐயாவை கையோட அழைச்சிக்குணு வாங்களேன். சேதியைப் புட்டு வச்சு சொல்லிப்பிடுங்க! அப்பத்தான் வசமா மருந்து கொண்டார வாட்டப்படும்!'' என்றாள்.

அந்த சிதம்பர அண்ணாச்சி சோற்றுக்காலை எடுத்து அடிப் பிரிப்பதற்குள் சேரிச்சாம்பான் கிழவன் ''நானு போயி கையோட கொண்டாறேன், தாயி'' என்று ஓடினான்,

மனிதாபிமானத்துக்குச் சாதி ஏது, மதம் ஏது'—ஆம்; மனிதாபிமானத்துக்குத் தெய்வம் மட்டிலும்தான் உண்டு!

வங்குபற்றிய நாயொன்று ஊளையிட்டது.

கிழவி ஒருத்தி சுக்கான்கல்லை எடுத்து அதன்பேரில் வீசினாள்.

நாய் ஓடிவிட்டது.

வயிற்றில் நெருப்பைச் சுமந்தபடி களத்துமேட்டின் நாற்புறங்களையும் பார்வையால் சாடியவாறு நின்றாள். அவளுள் தெய்வத்துக்கு ஆடுகளம் அமைத்துக் கொண்டிருந்தாள்.

கண்மூடி கண் திறந்திருப்பாள்.

சோமசுந்தர வைத்தியர் வந்தார். ''ஐயா, நீங்கதான் சாமி!'' என்று அவரது கால்களில் சரண் புகுந்தாள் தைலி.

''எந்திரு தங்கச்சி. இப்பவே மனுசங்களுக்கு கண்ணு மண்ணு திசை புரியமாட்டேங்குது. நீ வேறே மனுசனை—அல்பமான மனுசனை—சாமியாக்கிப்புடாதே! உன்னோட தகப்பனாரை பொழைக்க வைக்கிறதுக்கு பகவானை நம்பி, எனக்குப் படியிற வாகானம் வகைகளைச் செஞ்சு பார்க்கிறேன். அதுக்கு மேக்கொண்டு ஈசன்விட்ட வழி!'' என்று சுருக்கமாக முடித்துவிட்டு, சேர்வையின் நாடியைப்பற்றிச்

சோதித்தார். மிக நுணுக்கமான அழுத்தத்துடன் கூர்த்தமதி பதித்துப் பார்த்தார் கைநாடியை.

"ஐயா!" என்று குறுக்கிட்டாள் தைலம்மை.

"உஸ்!" என்று சைகை காட்டிக் கையை அமர்த்தி விட்டு, இடுப்பில் செருகியிருந்த பச்சை மூலிகை வேர் ஒன்றை எடுத்து அதைப்பற்ற வைத்து, அதைப் புகை சூழச் சேர்வையின் மூக்குக்கு நேராகப் பிடித்தார். பிடித்துக் கொண்டே இருந்தார். பிறகு உள்ளங்கால்களைச் சூடு பறக்கத் தேய்த்தார்.

வைத்தியரின் முகம் மலர முனைவதும் வாட்டம் கூட்டு வதுமான ஜீவ மரணப் போராட்டத்தை நடத்திக் காட்டிக் கொண்டிருந்தது.

வைத்தியரின் கைகள் சூன்யத்தின் அண்ட வெளியில் தாமாகவே குவிந்தன. அவர் மீண்டும் செங்காளியப்பன் சேர்வையைப்பார்த்தார். அவர் முகவிலாசம் மகிழ்வால் விசாலம் பரப்பியது. 'ம்!' என்று தன்னம்பிக்கையின் மோனத் தெளிவுடன் சேர்வையின் நெஞ்சைத் தடவிக்கொடுத்தார்,

"முதலிலே வண்டி இட்டாங்க; ஐயாவை வூட்டுக்கு கொண்டுகிட்டுப் போயிடலாம்," என்று 'துருசு' பண்ணினார்.

தைலி பரிதாபமாக வைத்தியரைப் பார்த்தாள்.

"தங்கச்சி, ஒங் கண்ணீரைத் துடைச்சுப்புடுவா ஆத்தான்னு தான் எனக்குப்படுது" என்றார்.

தைலம்மை நல்ல சிரிப்புச் சிரித்தாள்.

அதோ வந்துவிட்டது பெட்டி வண்டி!

கோடானு கோடி வினை வரினும் மனம் குறையாமல் இருப்பதே கோடி பெறும்!—இதுவே வாழ்க்கைக்கு இடப் பட்ட ஓர் ஆதர்ச உண்மையாகும்.

செங்காளியப்பன் சேர்வையை அவர் வீட்டில் கொணர்ந்து கிடத்தினார்கள்.

அவர் இன்னமும் சரியாக மூச்சுப்பறிக்கவில்லை.

தைலம்மை மனம் குறையாமல்—மனம் கேடுபடாமல் தான் நம்பி நின்ற தெய்வத்தையே உயிர்க்கழுவில் நின்று பிரார்த்தித்தாள்.

பொழுது ஏறி இறங்கத் தலைப்பட்டது. நல்லவேளை! சேர்வையின் மேனியில் அசைவு காணத் தொடங்கியது.

மறு முறை 'நாடி' பிடித்துப் பார்த்தார் வைத்தியர். அவர் முகக் குறிப்பில் நன்னம்பிக்கைச் சுடர் தெறித்தது. அந் நம்பிக்கையின் வெளிச்சத்தில் தைலம்மை மனம் தேறினாள்.

வைத்த கண் எடுக்காமல் தன் தந்தையையே பார்த்துக் கொண்டு குந்தியிருந்தாள் தைலம்மை.

அப்போது சிங்காரம் வியர்க்க விறுவிறுக்க உள்ளே நுழைந்தான். "அம்மான்!" என்று கண்ணீர் கசிய அலட்டினான். ஆதரவாகத் தைலம்மையைப் பார்த்தான்.

சற்றுக்கழித்து, அங்குச் சிலட்டூர் மாப்பிள்ளை சரவணன் வந்து நின்றான். "என்ன இவுகளுக்கு?" என்று பதறிப் போய் வினவினான். சேர்வைக்காரரின் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தான். அவன் கண்கள் குளமாயின. தைலம்மையின் பக்கமாகப் பார்வையை மாற்றினான்.

தைலம்மை தேம்பினாள்.

சுடு தண்ணீரில் செந்தூரப்பொடியைத் தூவிப் பாலாடையில் சேர்வைக்குப் புகட்டினார் வைத்தியர்.

புகட்டப்பட்ட மருந்து வெளிவாங்கித் திரும்பிவிட வில்லை. கொஞ்சம் நஞ்சம் வழிந்தாலும், உள்வசமாகச் சென்றுகொண்டு இருந்தது. நாடியை மீண்டும் பார்த்தார்.

வைத்தியரின் சோதனை பலமாகத்தான் இருந்தது.

ஆனால் தெய்வத்தின் சோதனை, யார் செய்த புண்ணியமோ, பலமாக அமைந்துவிடவில்லை.

சேர்வை முதன்முறையாக விழிகளைஉருட்டி விழித்தார்.

"ஆத்தாடி!" என்று அழகிரி அம்பலக்காரர் தம்மை மறந்து ஆனந்தக் கூச்சல் போட்டார்.

"அப்பா! அப்பாரே!" என்று மகிழ்வின் பெருக்கில் கூவி, தந்தையின் பாதங்களைப் பிடித்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள் தைலம்மை.

"ஆத்தா!" என்று மகளை சன்னக் குரலெடுத்து, பாசத்தில் அதை குழைத்து கூப்பிட்டார் செங்காளியப்பன் சேர்வை. மகளின் கதுப்புக் கன்னங்களில் வழிந்த சுடு நீரை வழித்தார். "ஆத்தா தைலி!....இனிமே ஒன்னை அந்த சிலட்டூர் மாப்புள்ளை கட்டிக்கிடறதுக்கு ஒரு தவசலும் தடையும் சொல்லமாட்டாங்க ஆத்தா! ஆமா, இனிமே நீ ராசாத்திக் கணக்குத்தான்! ஆத்தா அல்லாத்துக்கும் பாதை தொறந்து காட்டிபுட்டா, ஆமா, நான் பேசறது என்னான்னு மட்டுப்படலையா? வந்து...வந்து..." என்று பேசிக்கொண்டிருந்தவர் இருந்திருந்தாற்போல விம்மி விம்மி அழுதார். அவர் அடித்துப்போட்ட பாவனையில் மறுதரம் உணர்ச்சியற்றுப் போய்விட்டார் சேர்வை.

பச்சைத் தண்ணீர் தெளிக்கப்பட்டது சேர்வையின் முகத்தில்! "இனி எனக்கு—எம்புட்டு உசிருக்கு—யாதொரு பயமும் இல்லே!........ஆமா! ஒங்கண்ணாலந்தை முடிச்சுவைக்கிற

பரியந்தம் அந்த எமனுக்குக் கூட என்னை அண்டுறதுக்குக் கிலிதான் இனிமே!'' என்று ஓங்காரமாகச் சொன்னார்.

தைலம்மை மணம் கமழ் நாணத்தின் பதுமையாகி, அந் நிலையின் சிலிர்ப்பு அவளது மலர்விழிகளிடை ஓடிவிளை யாட, அவ்விளையாட்டின் மந்தகாசமான போதையுடன் பக்கவாட்டில் தன் நேசமச்சானைத் தேடிப்பார்த்தாள்.

அங்கே சரவணன் காணப்படவில்லை!

கைவிளக்கின் சூழலில் இருந்த அந்தக் கன்னி விளக்கு இப்போது சுடர்விளக்கானது!

# கதிர்க் கொத்து 8

## சாப்பிட அழைத்தாள்!

''எங்கிட்டாலே பறிஞ்சிட்டாங்களாம் எம்புட்டு சிலட்டூரு மச்சான் காரர்!'' என்று தனக்குத்தானே கேள்வி வலைப் பின்னிக்கொண்டு சிந்தனை வசப்பட்டு நின்ற தைலம்மா ளுக்கு, இருட்டின் கொடுமையை உணர முடிந்ததே யொழிய, வெளிச்சத்தின் உயிர்ப்பாக அவளுக்கு விடைகொடுக்க அங்கே சிலட்டூர் மாப்பிள்ளை சரவணன் தோன்றக் காணோம்! வெளி இருள் உள்ளே அவளைச் சூழ்ந்தது. மண்டை வலித்தது; மனமும் வலித்தது. வலியின் கூட்டு உறவுச் சக்தி அவளுக்கு நாவை வறளச் செய்தது. தாகம் மிஞ்சியது. அவள் முன்கட்டிலிருந்த முட்டியினைச் சாய்த்து நாலு குவளைத் தண்ணீரை வாயில் கொட்டிக் கொண்டாள். இதய தாகம் கட்டுக்கடங்கவில்லையோ? இல்லை. அவள் மனச் சிந்தனையின் காரணமாக நெஞ்சில் ஏற்பட்ட கொதிப்பை அணைக்கத்தான் அவள் கருதி அப்படித் தண் ணீரை ஊற்றிக்கொண்டாளோ?...

தைலம்மை ஏப்பம் பறித்தவளாக உள்வசமாகத் திரும்பினபோது, தன்னையே கண்காணித்துக்கொண்டிருந்த தன் தந்தையைக் கவனிக்கத் தவறவில்லை. ''என்னா ஆத்தா, இந்தப் பனி கூதலிலே இம்மாந் தொலேவுக்குத் தண்ணி குடிக்கிறே? அப்பாலே மேலுக்குச் சரிக்கட்டி வருமாக்கும்?'' என்று செல்லமாகக் கண்டித்தார்.

அவள் செல்லமாகச் சிரித்துக்கொண்டாள்.

நிலைகுப்புற விழுந்த பந்தயக் குதிரை வெட்கத்துக்கு ஆற்றமாட்டாமல் சிரிப்பது போல இருந்தது, செங்காளியப்பன் சேர்வை தலையை சிலுப்பிக்கொண்டு குந்தியவாறு மீசையை முறுக்கி விட்டுக்கொண்டு சிரித்த சிரிப்பு!

''ஆத்தா தைலி மூஞ்சியிலே இப்பக் காணுகிற இம்மாம் தெளிஞ்ச சிரிப்பை இதுக்கு முந்தின கடுத்தங்களிலே என்னாலே காணவே வாய்க்கலையே!...அதுக்கு ஒரு காரணம் காரியம் இருக்கத்தான் இருக்குது!'' அவர் அத்துடன் பேச்சைத் துண்டித்தார். பேச்சு துண்டிக்கப்பட்டதே தவிர, சிந்தனை துண்டிக்கப்படவில்லை. வாய்ப் பேச்சாக அவள் பேசிய பாவனையிலிருந்து விலகி, அவரது உள்ளகம் என்ன வெல்லாமோ எண்ணித் தொலைத்தது. 'எங்கதை எம் பொண்ணுக்கு தலைக் குடைச்சலைத் தந்துக்கிட்டு வந்த தாலேதான் இத்தனை நாளும் அது உள்ளுக்குள்ளவே மனசு குமைஞ்சு கிட்டிருந்திருக்க வேணும்!...இப்ப அல்லாம் தெளிவாயிடிச்சு. அது மனசொப்பி நேசிச்சு வந்த அந்த சிலட்டுரு மச்சான்காரரை அது இஷ்டபிரகாரமே கண்ணாலம் கட்டிக்கிடுறதுக்கு இனி இடையூறு எதுவும் இல்லேன்னு சொன்னடியும் அதுக்கு மூஞ்சி தெளிஞ்சு வந்திருச்சு; நானும் கண்ணாலே கண்டுகிட்டேனாக்கும்!... ஆமா, எல்லாம் மெய்தான்!...அவுக அவுக வாழ்க்கையிலெ அவுக அவுகளுக்கு ஒசந்த ஆசைகளும் கனாக்களும்தான்

உசிராக இருக்குது! அதுக்கு தக்கனை தான் அவுகளோட மனசும் செயல்காட்டுது!... இப்ப எம் பொண்ணுக்கு பாசத்தைக் காட்டியும் நேசம் ஒசத்தியாத்தோணிட்டிருக்கிற காலம்! ம்...நானுமட்டும் இதுக்கு முந்தின சாமம் வரைக்கும் எப்பிடி இருந்தேனாம்?''....

தம்மைப்பற்றித் தாழ்வாக எண்ணிக்கூடப் பார்க்க விழையாத 'தங்கமான மனிதர்' செங்காளியப்பன் சேர்வை. ஆனால் இப்போது, அவர் தம்மைப்பற்றிய சுய தரிசன லயிப்பில் ஆழ்ந்துபோய்த் தம்மைப்பற்றிய திருவிளையாடல்களின் அவதார மகிமையை நூலெடுத்துப் பார்க்க முனைந்த நேரம் பார்த்துத்தானா, அங்கே அப்பொழுது சிங்காரம் மறுபடியும் வந்து நிற்க வேண்டும்.

''அம்மான்!''

பாவட்டா பீடியின் நாற்றத்தை உதட்டுக்கரையில் கரை சேர்த்துவிட்டவனாக, சுருட்டை முடிகளை நீவிவிட்டபடி கூப்பிட்டான் சிங்காரம். சீமை எண்ணெய் விளக்கின் கொழுந்துகள் அவனது கண்ணின் கருமணிகளின் துள்ளலை கச்சிதமாகக் காட்டின.

''வாப்பா!'' என்றார் சேர்வை. நித்தம் நித்தம் அவனைப் பார்த்துக்கொண்டு வருகிற நினைப்பின் அசதியில் அவர் மிகவும் சர்வசாதாரணமாக வரவேற்றார். ஆனால் அவர் அவனை ஏறிட்டுப் பார்த்த பிற்பாடு விவரம் அவருக்கு மண்டையில் சூடுபிடித்தது. 'அக்கரைச் சீமையை நாடிப் போயிருந்த அக்கா மவனாச்சே, இப்பத்தான் வந்திருக்குது போலதோணுது!' என்று அவர் தமக்குள் கணக்குப்போட்டுப் பார்த்தார். ''வாப்பா சிங்காரம்!...குந்து பாயிலே! ஒன்னைப் பார்த்து அனையமாக்காலம் ஒடுப்புடுச்சே!...'' காலத்தின் சோதனைகளிலே அவர் மனம் எதை யெதையெல்லாமோ சிந்தித்தது. சிங்காரத்தின் தாய் சாவின் அரவணைப்பில்

ஐக்கியப் பட்டதை அவர் எண்ணினாரா? இல்லை, அவனது போக்கு புலனாகாமல், நிலவரமும் மட்டுப்படாமல் அக்கரைச் சீமையே சதமென்று இருந்த காரணத்தால் ஒரு புதிய சம்பந்தத்துக்கு உடன்படுத்த முடியாமல் போய்விட்ட விதியின் விநயமான விளையாட்டினை எண்ணினாரா?

சிங்காரம் தன் அம்மானையே பார்த்தவாறு பாயில் குந்தினான். 'சடை' படர்ந்த விளக்கில் ஈர்க்குச்சியை நுழைத்து நிமிண்டி, சடையை விலக்கி, ஒளியை விளக்கினான். அவன் முகத்திரையில் தீவிரமான சிந்தனைக் கோடுகள் நிழலாடின.

அடுப்படியிலிருந்து கண்டாள் தைலம்மை.

வெளியில் சிங்காரத்தைக் கண்டதும், மெல்லிய சிரிப்புடன் மேலக்கோடித் தூணில் ஒதுங்கினாள். "அயித்தை மவன்காரக நேத்திக்கும் ஒங்களைத் தேடிவந்தாக!" என்று செப்பினாள்.

சேர்வை "அப்படியா?" என்று 'உம்' கொட்டிக்கொண்டார்.

"இப்ப எப்படி இருக்குது உங்க ஒடம்புக்கு?" என்று விசாரித்தான் அவன்.

"இப்பைக்குக் குத்தமில்லே!" ஏதோ தவறு இழைத்துவிட்டவர்போல அவர் தடுமாறினார். அவனை முகம் பார்த்துப் பேசவே பயந்தார். 'சிங்காரத்தைப்பத்தின தாக்கல் அப்பவே வெளிச்சமாத் தெரிஞ்சிருந்தாக்க, எம் பொண்ணை இதுக்கே கட்டிக்கொடுத்துக்கூட இருக்கலாம்!...ஆனா, தைலிப்பொண்ணு அப்ப என்ன வக்கணை பேசியிருக்குமோ அதையும் சொல்லமுடியாது!....எதுக்கும் லவிதம்னு ஒண்ணுப் படிச்சதானே சகலமும் நடக்கும். பூலோகத்திலே!'...மீண்டும்

சிந்தனை வசப்பட்டிருந்த சேர்வைக்கு, சற்றுமுன் முகம் காட்டி நின்ற சிலட்டூர் மாப்பிள்ளை சரவணனை இப்போது காணாததைக் கண்டு மனம் கிலேசப்பட்டது. அவர் சிங்காரத்தைவிட்டு விட்டு, நேர்வசமாகத் தம் மகளின் திசைக்குப் பார்வையை திசை திருப்பினார். அப்போது தைலம்மை வாசல் பகுதியில் தன்பார்வையை மேயவிட்டவாறு இருந்த கோலத்தையும் அவர் கண்டு கொண்டார். 'அது தன்னோட சிலட்டூர் மச்சானைத் தேடிக்கிட்டுதான் இருக்குது!' என்ற உண்மையும் அவருள் பரவியது.

"ஒங்களுக்கு ராச்சோறு எங்க வீட்டிலேயுங்க!" என்றாள் தைலம்மை. அவள் சிங்காரத்திடம் சொன்னாள்.

"ஆமாம்பா! சாப்பிடு!" என்று ஒத்தூப் பாடினார் பெரியவர்.

"அதுக்கென்ன!" என்று பட்டும் படாமலும் சொன்னான் சிங்காரம், பிறகு எதையோ யோசித்தவன்போல, விருட்டென்று எழுந்தான், "கொஞ்சம் சோலி ஊருக்குள்ள இருக்குது; போயிட்டு வாரேன்!" என்று எழுந்தான்.

"நீ வந்துதான் நான் சாப்பிடுவேனாக்கும்!" என்றார் சேர்வை.

"அதுக்கென்ன!" என்று மீண்டும் அதே பல்லவியைப் பாடிவிட்டுப் பாட்டு முடியுமுன்னே நழுவிவிட்டான் சிங்காரம்.

சேர்வை மட்டும்தான் பெருமூச்செறிந்தாரென்று சொல்லுவதற்கில்லை!

"ஆமா, தைலி! சிலட்டூரு மாப்புள்ளே வந்ததாட்டம் எங்கண்கள் சொன்னுச்சே, எங்கே அவுகளை கண்ணுப் பொறத்தாலவே காணமே?" என்று கேட்கலானார்.

"அதான் புரியலைங்க அப்பா! வந்து உங்களைப் பார்த்திட்டு கொஞ்சம் பொழுதுக்கு நின்னாங்க. மறுகா,

போயிட்டாங்களே! அவுகளுக்கும் சேர்த்துத்தான் உலையிலே அரிசி போட்டிருக்கேன்! ஆம்பளையைக் காணலையே!....''

பிரிவின் துயரமும், ஏக்கத்தின் பளுவும் அவளுடைய கண்டத்தை அடைத்தன.

சேர்வைக்காரர் திண்டில் தலையை வாகாகப்பொருத்திக் கொண்டு சுவருடன் சாய்ந்து கிடந்தார். ''வந்திடுவாங்க மாப்பிள்ளை! எங்கிட்டானும் காலாற போயிருப்பாக!'' என்று ஆறுதல் படுத்தினார். பிறகு, ''ஆத்தா...!'' வந்து ஒன் சித்தப்பன் காரனோ, அவன் பொண்ணு பூங்காவனமோ இங்கிட்டு மூஞ்சியைக் காட்டலையே?'' என்று பதட்டம் மாறாமல் கேட்டார்.

அவள் ''ஊக்கும்!'' என்று தலையை உலுக்கினாள்.

வாசலில் உலுக்கிக்கொண்டு வந்து நின்றிருந்த காளை களின் மணியோசை கேட்டது.

தைலம்மை வெளியே சென்றாள். வயற்காட்டிலிருந்து வந்திருந்தது வண்டி.

விஷயத்தை அறிந்தார் செங்காளியப்பன். ''பெருங்கார மூண்டருக்கு நேந்துக்கிட்டு உண்டியல் போட்டது வீணில் லேம்மா!......'' என்று தொடங்கினார். ''அறுபதாம் பட்டம் மகசூல் தொடங்குறதுக்குள்ள ஒங்கண்ணாலம் காட்சியை முடிச்சுப்புடலாம்னு பார்க்றேன் ஆத்தா! நாளைக்கே மாப் பிள்ளையை வச்சிக்கிட்டு பரிசம்போட்டு பாக்கு வெத்தலை மாத்திக்கிடறதுக்கும் நாள் நட்சத்திரம் எழுதிப்புட வேணும்!'' என்றார்.

தன் திருமண நிமித்தம் தன் தந்தை தெய்வத்திடம் வேண்டுதலை செய்துகொண்ட விவரத்தையும் அவரது பேச்சு கோடி காட்டிற்று. அவளுக்கு அப்பேச்சு மிகுந்த அமைதியைக் கொடுத்தது.

“நானு செலட்டூர் மருமகப் பொண்ணாகப் போறனே, அக்கா” என்று குதித்துக் கும்மாளமிட்டாளே பூங்காவனம்!...அவளாவது தன் பெரியப்பனின் உடல் நலம்காணவந்து போகக்கூடாதா? அப்பன் ஒரு தடத்தில் போனால் அதே தடம்தான் மகளுக்கும் சொந்தமா?

செங்காளியப்பன் இருட்டை அளந்துகொண்டிருந்தார். அயர்வு முகத்தில் குடிகொண்டிருந்தது. மேலும் மேலும் சிந்தனை அவரது நெற்றிக்குச் சுருக்கங்களைக் கூட்டின. ஆனால் உடல்வலு ஒத்துழைப்புத் தந்தால்தானே! “ஆத்தா, ரவைப் பொழுது தலையைச் சாய்க்கிறேன்! மாப்பிள்ளையும் அக்கா மவனும் வந்தாக்க, என்னைத் தட்டு!” என்று சொல்லி, தலையைத் தரையில் சாய்த்தார். குறட்டை பீறிட்டது.

தைலம்மை அடுப்படியைச் சரணடைந்தாள்.

அவளைச் சரணடைந்தன காலத்தின் நினைவுகள்

காலத்தின் நினைவுகளைச் சரணடைந்தது விதி எனும் சக்தியின் உருத்தெரியா சிரிப்பு. அச்சிரிப்பின் அலைகள் அடங்கி முடியுமுன், சோற்றைக் கஞ்சிவடித்துக் கவிழ்த்துச் சோற்றுக் கலயத்தைக் கலவடையில் வைத்தாள். வெண்டிப் பிஞ்சுச் சாம்பாருக்கு சரக்குக் கரைத்து ஊற்றிக் கொதிக்க வைத்தாள். அகப்பையால் ஒருமுறை கிண்டினாள். இடது கை உள்ளங்கையில் துளி ஊற்றிப் ‘பதம்’ பார்த்தாள். நாக்கைச் சப்புக்கொட்டினாள். ஒரு பொட்டு உப்புக்கல்லைத் தூவினாள். கழுத்துப்பட்டையில் வேர்த்திருந்தது, துடைத்தாள். உசும்பி எழுந்தாள். வெளிக்கூடத்தைத் தாண்டினாள். தந்தையின் குறட்டை ஒலியை மிதித்தவாறு வெளித் திண்ணைக்கு வந்தாள். வந்தவளின் செவிகளில் பலத்த பேச்சுக் குரல்கள் பலமாகக் கேட்கத்தொடங்கின.

அவள் பரணில் இருந்து சிலம்புக் கழியை லாகவமாக எடுத்துக்கொண்டு இருட்டைத் துழாவி நடந்தாள். உடன் நடந்த வடக்குத் தெரு வங்குநாய்க்கு ஒரு கல்வீச்சுக் கொடுத்துவிட்டு விரைவுபாய்ச்சி நடந்தாள். அவள் மனத்தின் அடித்தளத்தில் இருவேறு ஓங்காரக் குரல்கள் எதிரொலிக்கத் தொடங்கின.

மடத்துக் குளத்தின் மேல் ஒண்டலில் ஆசாரி சோளக் கொல்லைக்கருகில் இருந்த புளிக கடியில் சரவணனும் சிங்காரமும் சத்தமிட்டுப் பேசிக்கொண்டிருந்ததை அவள் அறிந்தாள். காரைப்பத்தைக்கு உட்பக்கமாக நெளிந்து, பின்தங்கினாள் தைலம்மை.

"உன்னை நல்லாப் புரிஞ்சுகிட்டேன், சரவணா!... நீ உன் இஷ்டப்படி எது வேணுமானாலும் செஞ்சிக்கிடு!.... அப்ப லே, முடிவைப் பார்த்துக்கிடவும் தயாராயிரு!"என்று பெருங்குரலில் எச்சரித்தான் சிங்காரம்.

பதில் குரல் எழுப்பவில்லை சரவணன்.

தைலம்மைக்கு அடியும் புரியவில்லை; நுனியும் புரியவில்லை. பத்தையில் ஏதோ ஊறுவதுபோல சத்தம் கேட்டது. கழியால் பத்தையைத் தட்டிவிட்டவளாக விரைந்து அங்கிருந்து புறப்பட்டுப் புளியமரத்தடியில் போய் நின்றாள்.

தைலம்மையை அப்போது அவர்கள் இருவரும் எதிர் பார்க்கவில்லையோ, என்னவோ?

இருவருமே அயர்ந்துபோய்விட்டார்கள்!

"எனக்கு அலையிற வேலை மிச்சம்!.... வாங்க ரெண்டு பேரும் சாப்பிட!" என்றாள் தைலம்மை. "நீங்க ரெண்டு பேரும் முன்னாடியே சிநேகிதமா? ஆத்தாடியோ! ஆமா கொஞ்சமுந்தி பலத்த சத்தமாப் போட்டுப் பேசிக்கிட்டிருந்

தீங்களே! சரி, சரி! அதெல்லாம் எனக்கு எதுக்கு? நீங்க வாங்க சாப்பிட!'' என்றாள்.

என்ன ஆச்சரியம்!

சற்றுமுன் கீரியும் பாம்புமாகப் பொரிந்து கொட்டிக் கொண்டிருந்தார்களே சரவணனும் சிங்காரமும்? அவர்கள் இருவரும் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் போல அப் பொழுது எப்படித் தைலம்மையைப் பின்தொடர முடிந்தது?...

# கதிர்க் கொத்து 9

## விளக்கிலே ஈ!

எச்சில் பணிக்கத்தைக் கைகளைத் தடவியபடி எடுத்த செங்காளியப்பன் சேர்வை, ஒருகணம் இருட்டிலே தடமாடியவராக நடுநடுங்கி, மறுகணம் விளக்கின் தடத்தைக் கண்டு கொண்டவர் போன்று நிலை தெளிந்து, அந்த அமை தியுடன் வாய் எச்சிலைத் துப்பினார். கணநேரப்பொழுதுக் குள்ளாகத் தமது சித்தத்தில் ஏற்பட்டிருந்த மனத்தடுமாற்றம் தம்மை எப்படி எப்படியெல்லாம் நிலை தடுமாறச்செய்து விட்டது என்ற உண்மை நடப்பையும் அவரால் உணர்ந்து கொள்ளமுடிந்தது. வேதனையும் பெருமூச்சும் அவரை வாட்டி விட்டன. காலத்தின் கழிந்த தினங்கள் இப்போது அவரது மன அரங்கத்தில் நிழல் விரித்தன. அந்நிழலில் ஒதுங்கிய வண்ணம் கண்களை மூடிக்கொண்டார். அக்கரைச் சீமை அவருள் திரும்பியது. சுகபோகத்துடன் வாழ்ந்த அந்நாட் களில் அவர் செய்த லீலைகளின் அவதாரங்கள் சிலவற்றை எண்ணமிட்டார். அழகுப் பெண்கள் சிலரின் அழகு முகங்கள் தோன்றி மறைந்தன. தாய் மண்ணும் அவருக்கு நினைவின் விழிப்பாயிற்று. இந்த மண்ணிலும் அவர் ஆடிய ஆட்டம் கொஞ்சமா, நஞ்சமா? கண்களைத் திறந்தார். இமைகளின்

நுனிகளில் கண்ணீர் துளிர்த்தது. அவருக்கும் அழுகை வருமா, என்ன?

ஆம்; பல ஊர்த் தண்ணீர் குடித்த செங்காளியப்பன் சேர்வைக்கும் கண்ணீர் வழிந்தது; பல பேர்களுக்குத் தண்ணீர் காட்டிய செங்காளியப்பன் சேர்வைக்கும் அழுகை வந்தது. சாவின் திருச்சபையின் சந்நிதானத்தை எட்டித்திரும்பி வந்தாரே அவர், அந்தப் புண்ணியத்தின் பலனா இம்மாற்றம்?

'செல்லாயி!...'

தமக்குள் வாய்விட்டு இந்தப் பெயரை உச்சரித்துக் கொண்டார். அதே மன உணர்வில், வேறு சில பெண்களின் வதனங்களும் இரண்டறக்கலக்கத் தொடங்கின 'என்னோட' அந்தரங்க நாடகமெல்லாம் என்னோட பொண்ணு தைலம்மைக்குத் தெரிஞ்சிருக்குமோ? தெரிஞ்சாக்க, அது தரை மீனாட்டம் தத்தளிச்சுப் போயிடாதா? ஐயோ, அந்தத் துப்பெல்லாம் எப்படியும் எம் மவளுக்குத் தெரியாமத் தப்பாதே?... அந்தச் சிலட்டூர் மாப்பிள்ளைக்கு என் கதை எட்டப்புடாதின்னு பயந்துக்கிட்டு இருந்தேனே? கடோசீயிலே அவுகளுக்கும் சங்கதி தெரிஞ்சிருக்கும் போலத் தானே தோணுது? அதுக்காகத்தானே அவுகளைத் தனியா அழைச்சுக்கிட்டுப் போனேன்! அதுக்குள்ளாற, எஞ் செல்லாயிக் குட்டிக்கு எப்படிப்பட்ட வினை விதிச்சிருச்சு?... ஐயோ, செல்லாயி! ஒன்னை இனிமே எப்பொறப்பிலே நான் காணப்போறேன்? பாவி நான்!... ஐயையோ, பெருங்காறை முண்டர் சாமியே!'

மீண்டும் அந்தப் 'பெரியவர்' கண்களை மூடி மூடித் திறந்தார்; மீண்டும் பெண்கள் சிலரது முகங்கள் தரிசனம் கொடுத்தன. செல்லாயியை முந்திக்கொண்டு, வேறொரு பிம்பம் அவரது உள்மனத்திலிருந்தும் மெல்ல மெல்ல எழுந்தது. 'ஆ...! முத்தாயி!...' என்று நடுக்கத்துடன் சொல்லிச் சிலிர்த்தார் அவர். 'கொண்டவள் நீ சிவலோகம் போனதி

லேருந்து எம் பொழைப்பு எப்படி எப்படி கமுக்கமாய் நாறிப் போயிருச்சு? '...தாரை தாரையாக வழிந்தது விழிவெள்ளம். கொட்டுமேளம் முழங்க, தாரை தம்பட்டம், கொம்பு முழக்கத் தாம் முத்தாயியின் தங்கக்கழுத்தில் தங்கத்தாலி கட்டித் திருப்பூட்டிய அந்தச் சுபயோக சுபதினத்தை எப்படி விழுங்கி ஏப்பமிட்டுவிட்டன இந்த முப்பத்தாறு வருஷங்கள்! 'முத்தாயி! நீ உசிரோட இருந்திருந்தாக்க, நமக்கு—எனக்கு அறுபதாம் கண்ணாலமும் எப்பவோ நடந்திருக்குமே!' நெஞ்சைத் தொட்டு உலுக்கிய சுடுநீரின் மென்னுணர்வு அவரைச் சுய சிந்தனைக்கு உள்ளாக்கியது போலும்! கண்ணீரைத் துடைத்துக் கொள்ளச் சிந்தை மறந்தது; ஆனால் குடுமியைத் தட்டி முடிந்து கொள்ள மட்டும் மறக்கவில்லை. கற்றாழை நார் இழைகளாக முடிகள் சிதறிப் பிசிறுதட்டியிருந் தன.

வாசலில் காலடியோசை கேட்டது.

'விசுக்' கென்று கண்களை லேஞ்சினால் துடைத்துக் கொண்டார் செங்காளியப்பன் சேர்வை. கை விளக்கை நிலைப்படிக்கு வசமாகத் தள்ளி நகர்த்திவிட்டு, திண்டில் சாய்ந்தார். வெற்றிலைக் குட்டான் பாய் இடுக்கில் பதுங்கி யது. சாய்ந்தபடி, பார்வையைத் திசை மலர்த்திய அவர், தைலம்மையைக் கண்டதும், எழுந்து உட்கார்ந்து கொண் டார். செல்லாயியின் முடிவு தம்முள் உண்டாக்கிய அந்த அதிசய மயக்க நிலையை எண்ணமிட்டவராக, அவர் முதுகை வளைத்து நெட்டி பறித்துக் கொண்டார்; நீட்டியி ருந்த கால்களை மடக்கிக் கொண்டார்.

அதோ, வந்துவிட்டாள் தைலம்மை.

"ஆத்தா!" என்று மகளை வரவேற்றார் சேர்வை. அவரது சுருங்கியிருந்த முகத்திரையில், சுருக்கங்கள் தோன்றாத அளவுக்குச் சந்தோஷம் தோன்றத் தொடங்கியது.

"அப்பா, தூங்கி முழிச்சிட்டீங்களா?"

"முழிச்சிட்டேன், ஆத்தா! ஆனா, தூங்கத்தான் முடியலை!"

"ஏம்பா அப்பிடி?"

"மண்டை உள்ளமட்டுக்கும் சளி இருக்குமின்னு சொல்லுவாங்க எங்க அப்பன்காரர்—அதான், உங்க ஐயா!... அது கணக்கிலே, மனசு உள்ள பரியந்தம் கவலையும் இருக்கும். இல்லையாம்மா?..."

"நீங்க எதுக்கும் கவலைப் படவேண்டிய தேவை இல்லீங்களே, அப்பா?"

"நீ விதரணை புரிஞ்ச பொண்ணு. ஆனாலும், எங்கவலை எனக்குத்தான் ஆத்தா புரியமுடியும்!"

"ரொம்ப அதிசயமா இருக்குங்களே ஒங்க பேச்சு?...... சொத்து, சுகம், நிலம், நீச்சு இப்படி எல்லாவகையிலேயும் நீங்க புத்திசத்தியோடதான் இருக்கீங்களே, அப்பாலே எப்படியுங்க ஒங்களுக்குக் கவலை அண்ட ஏலும்?......"

"ஒன் அப்பனைப்பத்தின நடப்புகளை நீ அறிஞ்சிருந்தாக்க, நீ இப்படி அதிசயப்பட்டிருக்கமாட்டே, ஆத்தா!" என்றுதான் அருமைப்புதல்வியிடம் வெள்ளையாகச் சொல்லி விடத் துடித்தது அவரது மனச்சாட்சி. ஆனால், அவரது வழக்கமான மனிதமனம் அக் கொள்கைக்குப் பிடிப்புக் கொடுக்க ஒப்ப மறுத்தது. மீளவும் திரை மறைவில் ஒண்டி ஒடுங்க அவர் விரும்பினார். ஆகவே மகளின் அதிசயத்தை அடைக்கும் வகையில் அவர் பேச்சை மடைதிருப்பி விட்டு

விட்டார். "அதெல்லாம் மெய்தான், ஆத்தா! எனக்குக் கவலை ஏது?... ஒங்கண்ணாலத்தை ஒன்னோட மனசுப் பிர காரம் நடத்தி வச்சுப்புட்டாக்க, எனக்கு அப்பறம் ஏது கவலை?..." என்று தெரிவித்தார்.

"இது நூத்திலே ஒரு சேதியுங்க, அப்பா!" என்றாள் தைலம்மை. ஆனால், அவளுடைய மனம் தன் தந்தையைப் பற்றிய ரகசிய நாடகத்தில் ஒட்டிக்கொண்டுதான் இருந்தது. அந்த வேதனையுடன் தான் அவள் வெளிப்பாவனைக்குச் சிரிப்பைக் காட்டிய வண்ணம் பதில் சொன்னாள். 'அப்பன்காரர் சிநேகிதம் கொண்டிருந்த அந்தப் பொண்ணு யாரு? அவ இப்ப எங்கிட்டு இருக்கிறா?' என்ற கேள்விகளை நெஞ்சில் சுமந்து குமைந்து கொண்டிருந்த பழைய நெட்டுயிர்ப்பும் அவளை அரவணைக்கத் தவறவில்லை. 'ஒன் ஆத்தா முத்தாயிஇருந்திருந்தால், ஒன் நிலையையே அலாதிதாண்டி, தைலி!' என்று அடிக்கொருவாட்டி தன் சிநேகிதி பொன்னாயி சொல்லி வந்ததை அவள் எவ்விதம் மறப்பாள்?

கைவிளக்கைத் தூண்டி விட்டார் சேர்வை. கைவிரல்கள் ஏனோ நடுங்கின. வாசல் திடலில் கிடந்த சரவணனின் ரேக்ளா அவர் பார்வையில் தட்டுப்பட்டது. காளை கத்தியது. எஜமானைக் காணாத தவிப்பில் அப்படிக் கத்தியது போலும்!

"ரெண்டு வைக்கப்பிறி பிடுங்கிப் போட்டுப்புட்டு வந்திடுறீயா?" என்றார் தைலம்மையின் தந்தை.

"வாரப்பவே போட்டுப்புட்டுத்தான் வந்தேனுங்க. அது மொதலாளியை ரொம்பப் பொழுதாக் காணலையில்ல, அதான் இப்பிடிக் கத்துது! வாயில்லாச் சீவனின்னாலும், அதுக்குள்ள பாசம் நம்ம மனுச சாதிக்குக்கூட வரமாட்டாதுங்களே!" என்றாள் அவள்.

"ஆமா, மாப்புள்ளையும் ஒன் அயித்தை மகனும் இன்னமும் வரலையே?... எட்டு, ஒம்பது நாழிப்பொழுது ஆகியிருக்குமே?" என்று சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தார் செங்காளியப்பன். அப்போது, வாசலில் காலடி அரவம் கேட்டது

"ரெண்டு பேரும் அந்தாலே வந்திட்டாகளே!— மச்சானையும் அயித்தை மவனையும் கண்டு அவகளெ வரச் சொல்லிபுட்டுத்தான் நான் வந்தேனுங்க!" என்றாள் தைலம்மை. அவசரம் அவரசரமாக, உள்ளே இரண்டாம் கட்டுக்கு நடந்தாள் அவள்.

"அரிக்கன் லாந்தருக்கு விலாம் பெண்ணை ஊத்திப் பொருதிப்பிடு, தைலி!" என்றார் அப்பன்காரரர்.

'ஊம்' கொட்டிக்கொண்டே, எரிந்து 'அரிக்கன்' விளக்குடன் வந்து நடையில் பிள்ளைச்சுவரில் வைத்தாள் தைலம்மை. வெளிச்சத்தின் தடத்தில், சரவணனும் சிங்காரமும் வந்து நின்றார்கள்!

நிலவும் வந்து நின்று எட்டிப்பார்த்தது.

நிலவொளியில் தெரிந்த அவ்விரண்டு முகங்களிலும் காணப்பட்ட சலனம் சேர்வைக்குத் திகிலை ஊட்டியிருக்க வேண்டும். அவர் உள்ளம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணித் தொலைத்தது. வெளிக்காட்டிய வண்ணம் இருந்த சிரிப்பை மல்லுக்கட்டிப் பிடித்து வைத்துக்கொண்டார் அவர். "வாங்க மாப்புள்ளே! வாப்பா, சிங்காரம்!" என்று வரவேற்புச் சொன்னார்.

'ஊம்' என்று சரவணனும் சிங்காரமும் பேசிவைத்துக் கொண்ட மாதிரி ஒரே குரலெடுத்து 'உம்' கொட்டிய வண்ணம், அரிக்கண் விளக்கை மையமாக்கி, அதன் இருபுறங்களிலும் விருந்தாளிகள் இருவரும் நின்றார்கள். தைலம்மை ஒதுங்கிக் கொண்டாள்!

இப்போது சேர்வை மூச்சைப் பிடித்துக் கொண்டு எழும்பினார். "கை கழுவுங்க ரெண்டு பேரும்! ..." என்று அவர்களைப் பார்த்துச் சொல்லிய கையோடு, மகளை நோக்கி, "ஆத்தா, இவுகளுக்குச் சோறு போடு," என்றும் தெரிவித்தார். குற்ற வாளியானவன் நீதிபதியின் தீர்ப்பை எதிர் நோக்கித் தத்தளிக்கும் பாவனையில் அவர் மனம் அடித்துக் கொண்டது. சரவணனைப் புதிய பார்வையோடு பார்க்கலானான் சிங்காரம்.

"நான் ஊருக்குப் போகவேணும். நேத்து மாதிரி இண்ணைக்கும் நேரம் தப்பிப்போனா, வீட்டிலே கோவிச்சுப் பாங்க," என்றான் சரவணன்.

சேர்வைக்குத் 'திக்' கென்றது, சரவணனின் இம்முடிவைக் கேட்டு.

"சரவணன் சாப்பிடாட்டி நானும் சாப்பிடுறது அம்புட்டு உசிதமாயிருக்காதுங்க," என்று கூறினான் சிங்காரம்.

சிங்காரத்தின் பேச்சும் சேர்வைக்கு மலைப்பைத் தந்தது.

தூணுக்கு அணையாக நின்ற தைலம்மை தொண்டையைக் கனைத்துக் கொண்டாள். "விருந்தாடிங்க ரெண்டு பேரும் இப்பைக்குச் சாப்பிடாட்டி, நாங்களும் சாப்பிடப் போறதில்லே!" என்று தெரிவித்தாள். அவள் குரலில் ஓர் அழுத்தம் இருந்தது.

தைலம்மையின் முடிவைக் கேட்டதும், சரவணனும் சிங்காரமும் ஒருவரையொருவர் திகைப்போடு நோக்கிக் கொண்டார்கள்.

"நீ சாப்பிட்டுப் போகலாம், சரவணா! நம்ம தவசல் நம்மோடே இருக்கட்டும்; இப்போதுள்ள நிலைமையிலே நீதான் முதல் விருந்தாடி. ஆனதாலேதான், நானும்

உன்னைச் சாப்பாட்டுக்குக் கூப்பிடுகிறேன். வா, சாப்பி டலாம். நீங்களும் கைகழுவுங்க அம்மான்! அம்மான் மகளே தைலிப் பொண்ணு! சோறு வை. ஆமா, இலையைப் போட் டுச் சோறு வை!'' என்று சொன்னான் சிங்காரம்.

தன் அத்தை மகனின் அழகான நகைச் சுவையை அனுபவித்துப் புன்னகை செய்த வண்ணம், புதுத்தெம்புடன் இலைகளைப் போட்டுப் பரிமாறத் தொடங்கினாள். நல் லெண்ணெயில் வறுத்த சுறாகருவாட்டுத் துண்டங்கள் அற்பு தமாக மணத்தன. சீமைக் கத்திரிக்காய்ச் சாம்பாரின் வாசம் கமழ்ந்தது. அரைக்கீரைக் கூட்டு வேறு.

தண்ணீர்ச் செம்பை எடுத்துச் சரவணனிடம் கொடுத் தான் சிங்காரம். அவன் கையலம்பி முடித்ததும், செம்பைத் தன் அம்மானிடம் நீட்டினான். கடைசியாக சிங்காரம் கைகளைச் சுத்தப்படுத்திக் கொண்டான்.

மூன்று இலைகள் காத்திருந்தன.

''உட்காருங்க மாப்பிள்ளே! குந்து சிங்காரம்!'' என்று வேண்டினார் சேர்வை. இருவரையும் இருபக்கத்தில் வைத் துக்கொண்டு சேர்வை நடுவில் அமர்ந்தார். ''வெக்கம் காட்டாமச் சாப்பிடுங்க ரெண்டு பேரும்!'' என்று கேட்டுக் கொண்டு சோற்றைப் பிசையத் தொடங்கினார் அவர்.

குனிந்த தலையை நிமிர்த்தித் தைலம்மையை 'நோட் டம்' இட்டவண்ணம் சாப்பிட்டான் சரவணன்.

குனிந்த தலையை நிமிர்த்தாமல் சிந்தனை வசப்பட்ட நிலையில் சாப்பிட்டான் சிங்காரம்.

வடக்கு முடுக்கில் இருந்த கைவிளக்கில் ஈ விழுந்தது; அணைந்து விட்டதே விளக்கு!........

மறு சோறு போட்டாள் தைலம்மை.

கையை அமர்த்தினான் சரவணன்.

கையை அமர்த்தவில்லை சிங்காரம்.

"நீங்க இன்னம் துளி வாங்கிக்கிடுங்க," என்று சரவணன் இலைமுன் நின்று கூறினாள் அவள்.

அவன் எழுந்து விட்டான்.

"நீங்க அஞ்சாறு வாங்கிக்கங்க," என்று சிங்காரத்தை வேண்டினாள் அவள்.

'ஓ!' என்று சொல்லி, வாங்கிக் கொண்டான் சிங்காரம்.

சேர்வை வெறும் மிளகுரசச் சோறுதான் உண்டார். அதுதான் அவருக்குப் பத்தியம்! எலுமிச்சை ஊறுகாய் உதவிற்று.

கைகளைக் கழுவித் துடைத்தவண்ணம் நின்றான் சரவணன். தார்க்குச்சி அவன் கரங்களுக்குத் தாவியிருந்தது.

"நான் பறியிறேன். நேரம் ஊர்ப்பட்டது ஆகிடுச்சு. நாளைக்கு இங்கிட்டாலே மறுதப்படி வாரேன். வந்து நாம பேசிக்கிடலாமுங்க," என்று சொன்னான் சரவணன்.

உயிர்காத்த நண்பனை வாசல்வரைக்கும் சென்று வழி யனுப்பித் திரும்பினான் சிங்காரம். அவனுடன் சேர்வையும் சென்று மீண்டார்.

ரேக்ளா காட்டாமணக்குச் செடிகளை மிதித்துப் போட்டுவிட்டுப் பறந்தது.

சிந்தனைத் தேக்கம் கண்டவளாக தூணுடன் தூணாக நின்றாள் தைலம்மை. கைவிளக்கு அவிந்து விட்டிருந்ததை அவள் அப்போதுதான் கண்டாள். அவள் நெஞ்சம் துடித்தது.

"நான் இங்கிட்டு வெளித் திண்ணையிலேயே படுத்துக் கிடப்போறேனுங்க, அம்மான்!" என்று சிங்காரம் சொன்னதையும், அதற்கு "இது எப்பவும் ஒன் வூடு, சிங்காரம். என்னைக் கேட்கிறதுக்கு நீ அந்நியமோ அசலோ இல்லையே?... நல்லாப் படுத்துக்க. குளிருக்குப் போத்திக்கிடுறதுக்கு கெட்டித் துணி கொண்டாரேன்," என்று தன் தகப்பன் ஆமோதித்ததையும் காதுகளில் வாங்கிக் கொள்ள தைலம்மை தவறவில்லை!

கூதல் காற்று அடிக்கத் தலைப்பட்டது.

# கதிர்க் கொத்து 10

## காவடி

அலஞ்சிரான் காட்டுப் புண்ணிய பூமியிலிருந்து ஆந்தையொன்று காட்டுக் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தது.

அந்தச் சத்தம் தைலம்மையின் அடிமனத்தில் எதிரொலித்தது.

அரிக்கன் விளக்கை அமர்த்தி விட்டு, சுவர் விளக்கைக் கொளுத்தி வைத்துக்கொண்டு, அதன் முன்னே சோற்று வட்டியையும் நகர்த்திக் கொண்டு கால்களை மடக்கிப் போட்டு உட்கார்ந்திருந்தாள் அவள்; சோற்றைப் பிசைந்து கொண்டிருந்தாளேயொழிய, சோற்றுக் கவளத்தை எடுத்து வாயில் போட்டுக் கொள்ளவில்லை. தீவிரமான யோசனைக்கு ஆட்பட்டவள் போன்று அவள் முகம் விளங்கியது. மன உளைச்சலின் பிரதிபலிப்பாக அவள் வதனத்தில் சிந்தனைக் கோடுகள் உப்பு மறித்து விளையாடிக் கொண்டிருந்தன. கைவிளக்கைப் பொருத்தி வைத்துவிட்டு, பெரிய தீபத்தை மலையேற்றாமல் இருந்த தவறு அப்போது அவளது தவிப்பை நினைவுறுத்தியது. உறுத்திய மனத்தில், தன் தந்தையைக் குறித்து ஊர்வாய் முணமுணத்த தன்மை

யும் ஊடாடியது. 'கண்ணாலத்துக்கு நிக்கிற ஒரு பொண்ணை ஆட்டிலே வச்சிட்டு, அப்பன்காரர் எம்புட்டுக் காலமா இந்தக் கமுக்கமான கூத்தை நடத்திக்கிட்டு இருந்திருக்காங்களோ, தெரியலையே? ஒரொரு தக்கம் எப்பவாச்சும் வேளை தப்பி ஆட்டுக்கு வாரதைத் தவிர, மத்தப்படி அப்பன்காரக ஒரு ராத்திரி கூட அயலிடத்திலேயோ, அசலூர்லேயோ ராத்தங்கினதே கிடையாதே?... என்னைப் பெத்த மகராசி உசிரோட இருந்திருந்தா, இந்தமாதிரித் தீவினையும் இடுசாமமும் நேர்ந்திருக்க ஏலுமா?... அப்பனைக் கைக்குள்ளாற போட்டுக்கிட்டு சொக்குப் பொடி தூவி மசக்கி வச்சிருக்கிற புண்ணியவதி இன்னம் என்னென்ன கூத்து ஆடக்காத்திருக்காளோ, அதுவும் அந்த ஆத்தா காட்டேறிக்குத்தான் வெளிச்சம்!...' என்ற நினைவுகளை முறுக்கேற்றிக் கொண்டே வட்டிச் சோற்றைப் பிசைந்து கொண்டிருந்தாள் தைலம்மை.

அந்நேரத்தில் சேர்வை உள்ளே நுழைந்தார். அவரை முந்திக்கொண்டு சுருட்டுப்புகை உள்ளே நுழைந்தது. 'சிவன்மார்க்' சுருட்டு அவரது உதடுகளில் பற்றி எரிந்தது என்றால், சேர்வைக்கு எக்கச்சக்கமான மனக்குழப்பம் என்று அர்த்தம். ஒரு பக்கம், அவருக்கும் அவரது உடன் பிறப்பான வெள்ளையப்பன் சேர்வைக்கும் பங்காளிக் காய்ச்சல் வலுத்து, ஊர்ப்பஞ்சாயம் செல்லாமல், அடிபிடி ஏற்பட்டு கடைசியில் சட்டத்தின் வாசலை எட்டிப் பிடித்த நேரத்தில், அவருக்கு இந்தச் சுருட்டுத்தான் ஆறுதல் தந்தது. ஊர் உதவவில்லை; உறவு உதவவில்லை. "உங்க ரத்தத்திலே ஊறின பாசத்தை ஏய்ச்சுப்போடாதீங்க. உங்க தம்பிக்கு உண்டான சமபங்கு மண்ணைத் தர்மத்துக்குக் கட்டுப்பட்டுப் பிரிச்சுக் கொடுத்திடுங்க. பிறத்தியார் சொத்துக்கு நீங்க ஆசைப்படுறது தெய்வம் திருவுளத்துக்கு அடுக்காது!.... நீங்க அக்கரைச் சீமையிலே சம்பாரிச்ச சொத்தை ஆளுறத்துக்கே ஒரு ஆண்வாரிசு கூட இல்லாம இருக்கையிலே, நீங்க இப்பிடி அடாவடி அடிக்கிறது சுத்தத்

தப்பு!'' என்று மண்ணகுடி 'ராவன்னா மானா' வந்து கறாறாக 'மத்திசம்' செய்தும்கூட செங்காளியப்பன் சேர் வைக்கு மனசு இளகவில்லையே!—கடைசியில், நீதிதான் அண்ணன் தம்பிக்குரிய சொத்துச்சுகத்தைப் பாகம் பிரித்தது. அந்த ஒரு கட்டத்தில் இருந்த மனக்குழப்பம் இப்பொழுதும் அவரை முற்றுகையிட்டிருந்ததென்பதை அவர் புகைத்த அந்த மூன்றாவது சுருட்டு சொல்லிக் காட்டியது.

''ஆத்தா!'' என்று விளித்தபடி வந்தார் அவர். சுருட்டின் புகையைக் கடைசியாக இழுத்து வீசிவிட்டு நின்றார்.

மௌனமான சோகத்துடன் தலையை நிமிர்த்தினாள் தைலம்மை.

''என்ன ஆத்தா, ரொம்ப ரொம்ப யோசனை செஞ்சுக்கிட்டு சாப்பிடாம இருக்கே?'' என்று வினவினார் அவர்.

''அல்லாம் ஒங்களைப்பத்தித்தான் ரோசிச்சுக்கினு இருந்தேனுங்க,'' என்றாள் அவள்.

மகளின் விடையைக் கேட்டதும் சுருக்கென்று தைத்தது சேர்வைக்கு, உடனே, சரவணனின் ஞாபகம்தான் அவருக்குத் தோன்றியது. அவர் மகளையே உறுத்துப் பார்த்தார். உத்தரப்பகுதியில் ஓட்டை விழுந்திருந்த சீமையோட்டின் வழியே வெட்டிப்பாய்ந்த சீதளக்கதிர்களின் ஒளியில் மகளின் கண்கள் பளபளத்ததைக் காணமுடிந்தது, அவரால். தாம் தனித்திருக்கையில் அடைந்த வேதனையும் அவரை மெள்ள மெள்ள ஒட்டியது. தம் தவற்றை மகளிடம் சொல்லி மனம் தேறவேண்டும் என்று கொண்டிருந்த அந்த மனம் இடையில் மாறிய விசித்திரத்தையும் அவரால் மறந்து விட முடியவில்லை. தொண்டையைக் கனைத்துக் கொண்டார். பனியின் சாரலையும் மீறி முகத்தில் வேர்வை துளிர்த்தது. ''ஆத்தாளுக்குக் கண்ணு கசியுதே? ஏன்?'' என்று தாழ்குரலெடுத்துக் கேட்டார்.

"ஆமாங்க, எங்கண்ணு கலங்கிக்கிட்டுத்தான் இருக்கு. வேறே என்னாலே என்னா செய்யு ஏலும்?... உங்க காரியங்க தான் என்னையும் மிஞ்சிப் போயிட்டிருக்குதுங்களே?........ இம்பிட்டு காலத்துக்கு அப்பறமும் கள்ளத் தனமா ஒரு பொண்ணோடே நேசம் கொண்டுக்கிட்டு இருந்து வார அந்தப் பாவத்துக் கோசரம்தானே, இப்ப சிலட்டூர் மச்சான் காரர் என்னைக்கட்டிக்கிறதுக்கே கிழக்கேயும் மேற்கேயும் பார்த்துக்கிட்டு இருக்காக?.. " என்றாள் தைலம்மை. அவள் பேச்சில்தான் எந்தனை கண்டிப்பு! .....

உயிர்ப்பொறியில் அடிபட்ட மாதிரியாகத் துடிதுடித்தார் சேர்வை. அவர் கண்கள் சிவந்துவந்தன. அந்தச் சிவப்பில் கசிவும் தட்டுப்படத் தொடங்கியது. 'பெத்த அப்பன்னு கூடப் பார்க்காமல் எம்மாம் துணிச்சலோடே கேட்டிடுச்சி மகள்!' என்று ஒருபக்கம் ஆத்திரமும், 'நான் செஞ்ச தப்பு இப்பத்தான் அதுக்குப் புரிஞ்சிருக்கு; உடனேயே கேட்டுப் புடிச்சு தைலி. இதிலே நான் நெஞ்சு கொதிக்கிறதுக்கு ஏது முகாந்திரம்?' என்று மறுபுறம் ஆற்றாமையும் எழுந்தன. மீண்டும் கனைத்துக் கொண்டார்; மகளின் எதிர்வசத்தில் உட்கார்ந்தார்.

"ஆத்தா, பெத்த அப்பன்கிட்டவே நீ விசாரணை நடத்திற அளவுக்குக் காரியம் எக்குத் தப்பாப் போயிருச்சு என்கிறது மெய்தான். சமய சந்தர்ப்பங்க எப்படி எப்படியோ என்னைக் காடுமாத்திப்பிடுச்சு. இந்த ஒரு தாக்கலை எப்படி ஆத்தா நான் உங்கிட்டே பெத்த பொண்ணு உங்கிட்டே மூச்சுக் காட்டியிருக்க முடியும்?... நடந்தது நடந்திருச்சி!... இதைத்தவிர, வேறே எப்படி உங்கிட்டே நான் சமாதானம் சொல்லிறதின்னு எனக்கு மட்டுப்படக் காணோம். நடந்ததைக் கனவாட்டம் நினைச்சுக்க, தைலி. ஆனா இந்த ஒரு சர்வசாதாரணமான நடப்பைப்பெரிசுபடுத்தி, இதுக் கோசரம் முடிஞ்ச ஒரு சம்பந்தம் சாடிக்கைப் பேச்சைத்தண்டு முறிக்கப் பார்க்கிற ஒரு சங்கதிதான் எனக்குச் சிலட்டுர் மாப்

பிள்ளை தாக்கலிலே தீராத மலைப்பையும் மாளாத மனச்சங்கடத்தையும் தருது!... மாப்பிள்ளைகாரகளே என்னோட ரகசியத்தைத் துப்புக்கண்டுதான் எங்கிட்டே கேட்கிறத்துக்கு நினைச்சிருந்தாங்கபோலே! அவுக எங்கிட்டே எதுவும் பேசதுக்கு முந்தியே, அந்தத்தகவல் உங்காதுக்கு எட்டி, இப்ப நீயே என்னை நேருத்திரமாக் கேட்டுப்புட்டே!.... விசயம் இம்மட்டோடே போயிடலை. விடிஞ்சதும் மாப்பிள்ளைகாரக வந்தும் என் வாயைக் கிண்டிக் கிளறத்தான் செய்வாங்க! ... அவுக பேச்சு சரளமா இருந்தாச் சரி. இல்லே, அவுங்க வார்த்தை சூட்சுமமாய் இருந்ததின்னா, அப்பாலே எனக்கும் ரோசம் புட்டுக்கிட்டுத்தான் வரும்!... இல்லியா, ஆத்தா?....''

செங்காளியப்பனுக்கு மேற்கொண்டு பேசக்கூடவில்லை. அவர்தம் புத்திரியைக் கூர்ந்து கவனித்தார்.

அவளோ வாய்மூடி மௌனியாக வீற்றிருந்தாள். சோற்றுக்கை இன்னமும் சோற்றைப் பிசைந்து கொண்டுதான் இருந்தது. இடதுகை, கழுத்துச் சங்கிலியை நெருடிவிட்டுக் கொண்டிருந்தது. அடி இமைகளின் கீழ் வளையில் கண்ணுக்கு ஒரு துளியாகத் தேங்கியிருந்தது.

இரவின் நிலவும், நிலவின் மோனமும் தந்தையையும் மகளையும் தாயக் காய்களாக்கி வேடிக்கை காட்டினவா?- இல்லை, வேடிக்கை பார்த்தனவா?

''ஆத்தா, நீ மூச்சுவிடாம இருந்தாக்க, என்ன புரியும் இந்தக் கிழவனுக்கு?..'' என்று கேட்டார் அவர்.

தன் தந்தை தம்மைக் கிழவனாக ஆக்கிக் கொண்ட விந்தை தைலம்மையை வியப்புக்குள்ளாக்கியது. ஆனாலும், அந்த விந்தையைப் பற்றி அவள் பொருட்படுத்தி எண்ண முயலவில்லை. '‘நீங்கதான் உங்க முடிவை சாடை காட்டிட்டீங்களே, அப்பா?.... சிலட்டூர் மச்சான் வசம் தப்பிக் கேள்வி கேட்டாக்க, நீங்களும் வசக்கெட்டுப் பேசப் போற விசயத்தையும் புட்டுவச்சுச் சொல்லிபிட்டிங்களே?... அப்பாலே,

நான் என்னத்தைச் சொல்ல இருக்குது?... அப்படின்னா "நீங்க உங்க கூத்தைத் தொடர்ச்சியா நடத்திக்கிட்டுத்தான் இருக்கப்போறீங்களா? அப்படிப்பட்ட முடிவோட நீங்க இருக்கையிலே, இந்தச் சிலட்டுருச் சம்பந்தம் தெகையிறத்துக்கு எப்படிங்க வாய்க்க முடியும்?.... உங்களுக்கு உங்களைப்பத்தித்தான் அக்கறை? என்னைப்பத்தி உங்களுக்கு லவலேசமும் கவலை இல்லேயிங்கிறதுந்தான் வெட்ட வெளிச்சமாயிடுச்சே...சிலட்டூர்ச் சம்பந்தம் முடிஞ்சிட்டதாக நீங்க தலைப்பிலே எங்கிட்டே சேதியை வெளிக்காட்டினதுமே, நான் உங்கிட்டே 'இந்த முடிவிலே பின்னாடி எந்த ஒரு மாறுதலும் செஞ்சிட மாட்டீங்களேன்னு கேட்டேன். நீங்க பேசி வந்திருக்கிற அந்தச் சிலட்டூர் மாப்புள்ளைக்காரகளைப் பத்தி ஓங்க மனசு நாளைப்பின்னாக்கி எப்பவுமே தடம் புரளாதுங்களே?' அப்படின்னும் கேட்டேன். "ஊஹூம், சத்தியம் இது!' அப்படின்னு நீங்கவாக்குக் குடுத்தீங்களே, அப்பாரே?" என்று கேட்டாள் அவள்.

"அதெல்லாம் நெசம் தான் பொண்ணே! அதுக்காக, எம்புட்டு கௌரவத்தை விட்டுக் குடுக்க ஒப்புமா எம்மனசு?— அதுவும் அசல் நாட்டுப் புள்ளேகிட்டே நான் படிஞ்சு பேச கட்டுமானப்படுமா என் நெஞ்சு?...... "அவர் பேச்சில் ஓர் அழுத்தம் இருந்தது. கறுவல் எடுப்பாக மிளிர்ந்த மீசை துடித்தது.

"அப்படின்னா, உங்க நட்பு உங்களுக்கே நாயமாப் படுதா?" என்று கோபாவேசத்தோடு கேட்டாள் அவள்.

"ஆத்தா, பெத்த மகள் உன் முன்னாடிநான் குற்றவாளியாய் நிக்கிறேனே, அந்த உண்மை நடப்பைப்புரிஞ்சுக்கிடாமல், வாய்க்கு வந்தபடி என்னைக் கிண்டிக்கிளறிட்டே இருக்கியே, ஆத்தா? புட்டுவச்சுச் சொல்லிப்போடுறேன். நான் சிநேகிதம் வச்சிருந்த செல்லாயி செத்துச் சிவலோகம் பறிஞ்சிட்டாள். அந்த ஏக்கத்திலேதான் எனக்கு நெஞ்ச

டைப்பும் மயக்கமும் வந்திச்சுது!... என்னோட மயக்கம் தெளிஞ்சதுமே, உங்கிட்டே இந்த நடப்பு சகலத்தையும் வெள்ளையாய்ச் சொல்லிடப்புடத்தான் துடிச்சேன். அதை நெனைச்சுத்தான், 'ஆத்தா அல்லாத்துக்கும் பாதை தொறந்து காட்டிப்புட்டா!'ன்னு பேச்சைத் தொடங்கினேன். இதை ஒட்டியே தான், 'இனிமே ஒன்னை அந்தச் செலட்டூர் மாப்புள்ளை கட்டிக்கிறதுக்கு ஒரு தவசலும் தடையும் சொல்லமாட்டாகன்னும்! பூடகமாச் சொன்னேன்!...'' என்று பேசினார் சேர்வை.

இடையிட்டுப் பேச இப்போது தான் அவளுக்கு வாய்ப்புக் கிட்டியது. ''அப்படீங்களா, அப்பா?... அந்தப் பொம்பளை காலம் முடிஞ்சா போச்சு?...'' என்றாள். நா தழுதழுத்தது.

''ஆமா, ஆத்தா!

மகளின் கண்ணீர் அவருக்கு ஆறுதலை அளித்தது போலும்!

''அப்பா!...'' என்று கூப்பிட்டாள் தைலி.

''சொல்லு, ஆத்தா!''

''உங்க செல்லாயி கதை முடிஞ்சுப்புட்டாலும், அந்த நடப்பு நம்ம குடும்பத்துக்கு ஒரு ஒச்சம்னுகாட்டி, நம்ம சம்பந்தத்தை சிலட்டூர் மச்சான் முறிச்சிக்கிட மாட்டாக என்கிறது என்ன நிச்சயம்? இதுக்கு மாத்திரம் எனக்கு வகை சொல்லிப் புடுங்க, போதும்! இனிமே, இது பத்தி ஒரு வாக்கிணையும் பேசலை, நான்!.. '' என்று தெரிவித்தாள் குமரிப்பெண்.

சேர்வை நிமிர்ந்து உட்கார்ந்தார்; குடுமி அவிழ்ந்து கிடந்தது. ''ஒன் தலையெழுத்து எப்படிப் போட்டிருக்குதோ, அப்பிடித்தான் எதுவும் நடக்கும்!... இப்ப என்ன பரிசமா போட்டிருக்குது?... அப்பிடியே பரிசம் போட்டிருந்தாக்கூட,

முகூர்த்த நேரத்திலே எம்புட்டோ சம்பந்தம் மாறிடுறது இல்லையா? நம்ம பெரியாயி மகனுக்குப் பேசின வல்லவாரிப் பொண்ணு திருப்பூட்டுற சமயத்திலே மாறிடலையா? சிலட்டூர் மாப்புள்ளை எதுக்கும் மசியலையின்னாக்க, இருக்கவே இருக்கான் எங்க அக்கா மவன் சிங்காரம்! ஆத்தா காட்டேறி என்ன முடிச்சிருக்காளோ? இல்லாங்காட்டி, இப்ப நம் சிங்காரம் இங்கிட்டு இப்படி மாயமாய் வந்து குதிச்சிருப்பானா?'' என்றார் அவர்.

''அப்படீங்களா சமாச்சாரம்? என்று நிறுத்தினாள் தைலம்மை. அவள் கண்கள் ஏன் அப்படித் துடித்தன?

''ஒனக்கு எம் பேச்சு சரியின்னுதானே படுது, தைலி?''

''அதைப்பத்தி இப்பைக்கு என்னாலே ஒரு முடிவும் சொல்ல ஏலாதுங்க. அதுக்கு உண்டான காலம் வந்ததும், தன்னாலே அதைப்பத்தி நீங்க தெறிஞ்சுக்கிடுவீங்க! .. சரி, நீங்க போய்ப்படுத்துக்கிடுங்க!...'' என்று புதிர் போட்டாள் தைலி.

''சரி ஆத்தா! உன்னைப்புரிஞ்சுக்கிடுறதுக்கு நான் குன்னக்குடிக்குக் காவடி தூக்கவேணும் போலிருக்குதே!.... ம்.... நான் போறேன்!''

தந்தையின் தலை மறைந்ததும். சோற்றுவட்டியை அப்படியே மூடிவைத்துவிட்டு, கைகளைக் கழுவினாள். அடுப்பங்கரையிலேயே தலையைச் சாய்த்தாள் தைலம்மை.

# கதிர்க் கொத்து 11

## அம்மான் மகள் தைலி !

புலரிப் பொழுதில் அருமையான உழவுமழை அருமையாகப் பெய்து ஓய்ந்தது. அதன் சாயலை மண் கட்டிக் காத்துக்கொண்டிருந்தது. இம் மகிமையில் பங்கு கொண்டான் உதய சூரியன்.

தைலம்மை தன்னைச் சரிசெய்து கொண்டு நடைவழியாக வாசலை அடைந்தாள். இரவு பூராவும் பற்பல குழப்பங்களோடு தூக்கம்பிடிக்காமல் புரண்டு கொண்டிருந்த காரணத்தால், அவளுக்கு அசதி மிஞ்சியிருந்தது. விடிசாமத்தில் தன்னையும் அறியாமல் சிறுபொழுது அசந்து உறங்கி விட்டாள். அதனால்தான் அவள் துயில்கலைந்து எழ சற்றே நேரம் ஆகிவிட்டது. இல்லையென்றால், வாணியச் சுப்பையா வீட்டுக் கோழி கூப்பிட அவள் கச்சிதமாக எழுந்து விடுவாளே!

வாசலுக்கு வந்த அவள் உள்ளே தன் தந்தையைக் காணாததைப் போலவே வெளியேயும் காணமுடியவில்லை. 'என்ன விதி இது?' என்பதாக ஒரு பொட்டுப் பொழுது திசை கெட்டுநின்றாள். வெளிப்பக்கத் தாழ்வாரத்தில் எட்டிப் பார்த்தாள். ஏர்க்கலப்பையைக் காணவில்லை. திண்ணை மாடக் குழியை நோக்கினாள். மாமூல்மாறாது காணப்பட்டு சேர்வையின் இருப்பிடத்தைச்சுட்டும் நெருப்புப் பெட்டி, சுருட்டையும் காணவில்லை. உழவு மழையின் அடிச்சுவட்டைக் கண்டாள். 'ஆமா, அப்பாரு வெள்ளாமை வெளைச்சலுக்காக வயல்காட்டை நாடித்தான் ஏகியிருப்பாங்க. நாளைக்கு முக்காலும் நடவு தொடங்கியிருவாகண்ணுதான் பேசிக்கிணாங்களே!'... என்று ஆறுதல் அடைந்தாள். மறுகணம் அவள் வெளித்திண்ணையைநினைவுபதித்துப் பார்த்தபோது அங்கு சிங்காரமும் காணப்படாததை அறிந்தாள். விடிகாலையில் மழை அடித்ததும், எழுந்துபோய் சிங்காரத்தை உசுப்பிவிட்டு உள்ளே நடையில் படுத்துக் கொள்ளச் சொல்ல வேண்டுமென்றுதான் பதறினாள். ஆனால், ஏனோ அவள் அவ்வாறு செய்யவில்லை; செய்யத்தவறிய குற்றத்துக்காகக் கழிவிரக்கம் கொள்ளமட்டுமே அவள் தயாரானாள். வாசலை விட்டு, நிலைப்படியைத் தாண்டிக் கூடத்தில் வந்து நின்றாள். நானும் எங்க அயித்தை மவனும் பொடிசா இருக்குந்தொட்டியும் இங்கிட்டுத்தானே ஒண்ணடிமண்ணடியாப்படுத்துக் கெடப்போம்?.... அப்பாலேதான் அவுக செலட்டுருக்குப் பறிஞ்சாங்க; மறுகாத்தான் அக்கரைத்

தண்ணியைக் குடிச்சுக் கெடந் தாங்க!...' பெருமூச்சு மண்ணுளிப் பாம்பாக 'புஸ்' என்று வெளியேறிற்று.

அதற்குள் இன்னொரு கவலைக்கு ஆளானாள், ஆளான தைலம்மை. 'ஆமா; வூட்டைவுட்டுப் புறப்பட்டடியும் வளமையாய் என்னை ஆத்தான்னு அழைச்சுச் செப்பிட்டுத் தான் கிளம்புவாங்க. போற இடம் வார இடத்தைச்சொல்லிப் பிடுறது அவுககிட்டே வழக்கம் இல்லே! இண்ணைக்கி ஏன் இப்படி அப்பன்காரக என்னைப்பத்தி அக்கறைப்படாமப் போயிட்டாக? நானு ராத்திரி அவுகளை விசாரணை செஞ்சதினாலே எம்பேரிலே கெட்ட கோபம் கொண்டிருப்பாக போலே!... உள்ளதைச் சொன்னா உடம்பு எரிச்சல்தான் வரும்!...' என்று தன்னுள் நினைத்துக் கொண்டாள். 'அப்பனை எதிர்த்துக் கேட்கிறதுக்கு எப்படி எனக்கு வல்லமை வந்திச்சு?' என்று அதிசயப்பட்ட அவள் அதே நேரத்தில், ஆனானப்பட்ட அப்பன்காரர் எம் பேச்சைக் கேட்டு எப்படிக் காட்டப்படாமப் பொறுமையா இருந்தாரு?' என்று வியப்படைந்தாள்.

உள்ளே நடந்தாள் தைலம்மை.

மாந்தளை மரப்பெட்டகம் திறந்தது திறந்தபடியே இருந்தது.

செங்காளியப்பன் சேர்வையா இப்படி மறந்து பெட்டியைப் பூட்டாமல் போய்விட்டிருக்கிறார்? இடுப்புப்பட்டுக் கயிற்றில் தொங்கிக்கொண்டிருக்கும் சாவிக் கொத்தைக் கழற்றி வைத்து ஒரு நாள் கூட தைலி பார்த்ததில்லையே?

தைலி ஓர் ஆர்வத்துடிப்புடன் குனிந்தாள். சுங்கடியின் மாராப்புச் சேலை, நழுவியது. எடுத்துப் போட்டுக் கொண்டு அதன் முன்றானையின் ஒரு தலைப்பை இடுப்பில் செருகியும் கொண்டாள். கழுத்துச் சங்கிலி ஊசலாடியது. அவள் பார்வை அழுந்தியது 'பிராமிசரி நோட்டுக்கள்,' சில மேல் மட்டத்தில் காணப்பட்டன. இடது முடுக்கில் ஒரு முடிச்சு

தெரிந்தது. ஒரு முறை சிலட்டூர்ச் சம்பந்தத்தை முடித்து வந்த விவரம் சொன்னதும் தாமே உள்ளே கொண்டு போய் வைத்த முடிச்சு அல்லவா அது?

இவ்விஷயம் அவளுக்கு நினைவு வந்துவிட்டது. புத்தார்வம் துலங்க, அம் முடிச்சை அவள் அவசரத்தோடு அவிழ்த்தாள். நகை நட்டுக்கள் பளிச்சிட்டன. அவற்றைக் கூர்மையாகப் பார்வையிட்டாள். அம்புட்டும் என்னைப் பெத்த புண்ணியவதியின் நகைகளாச்சே? இதுகளை எதுக்கு இப்படி மூட்டைகட்டி வச்சிருக்காரு 'அப்பாரு'? என்ற கேள்வி அவளுள் எழும்பி, அக்கேள்வியே பெரியதொரு மர்மமாகவும் பட்டது அவளுக்கு. 'இத்தனை நகைகளையும் அப்பன்காரர் அவரோடு காதலிப் பொண்ணுக்குக் கூடுத்துப் போட்டுக்கிடச் சொல்லியிருப்பாரோ?... ஆமா, அப்படித்தான் இருக்கவேணும்!.... செல்லாயி ஊட்டிலேயிருந்துதான் இதுகளை அண்ணக்கிக் கொண்டாந்திருக்கவும் வேணும். அந்தப் பொம்பளை இனித் தேறமாட்டாளின்னு புரிஞ்சிக்கிட்டுத்தான் இங்கிட்டுக் கொண்டாந்திருப்பாரு அப்பாரு!.... என்று எண்ணம் பின்னிக்கொண்டிருக்கையில், அவளுக்கு இன்னொரு தாக்கலும் நினைவோடியது.

ஒருநாள்!

களத்துமேட்டில் 'போரடி அலுவல் முடிந்து, நெல் தூற்றி அளந்து மூட்டைக் கட்டி வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்துக் கொண்டிருந்தார் தையலின் தந்தை. விடிந்தால் பொங்கல் திருநாள். பொங்கலுக்கு பூசி மெழுகி, மாக் கோலமிட்டு, நல்ல விளக்கு ஏற்றி, தாய் வீட்டில் வைத்துப் படைப்பதற்காக தன் ஆத்தாளின் ஆபரணங்களைப்பற்றி விசாரித்தாள் அவள். 'ஆயிங்குடியிலே நம்ம பெரியாயி வீட்டுக் கண்ணாலத்துக்காக அதுகளை கொடுத்திருக்கேன். தை

கழிஞ்சடியும் வந்துப்புடும்!' என்றார் அவர். வழக்கமாக அந் நகைகளைப் பொங்கலுக்குப் படைக்கும் அதுவரை தடைப் பட்டதில்லை. தந்தையின் பேச்சை நம்பினாள் அவள் நம்பி யதோடு, அப்புறம் அது பற்றியும் அவள் மறந்து விட்டாள். பிறகு ஒரு நாள் அவளிடம் அவளது திருமணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார் அவள் தந்தை.

"எப்பிடியும் தை மாசத்திலோ இல்லை, பங்குனியிலோ உங்கண்ணாலத்தை முடிச்சுப்பிட வேணும் ஆத்தா. உன் ஆத்தாளோட நகைங்கதான் கைக்கு மெய்யாய் பொட் டியிலே இருக்கு. அதுகளுக்குக் காலம் இன்னமும் தப்பல்லே. ஒனக்கு ஆசையின்னா, அட்டியல் கல்லு வச்சுச் செஞ்சுப் பிடுறேன். பரிசம் போட்ட கையோட, ஆண்டபெருமாள் ஆசாரி கிட்டே தங்கத்தை நிறுத்துக் குடுத்துப்புட்டா, ஒரு வாரத்துக்கு மேம்படாமத் தந்திடுவார். அவரு நம்ம பத்து வரவுக்காரர். கூலிப்பணத்தை வட்டியிலே கூட அண்டல் பண்ணிக்கிடுறதுக்கும் தோதுதான்!" என்றார். அவளும் 'ஊம்' கொட்டினாள், தோடு, தொங்கட்டான், கொலுசு, நெளிமோதிரம், பூச்சரம் என்று ஒவ்வொன்றாக ஞாகப்படுத்திப் பார்த்தாள். 'இரட்டைவடச் சங்கிலி!' என்று ஓர் அரைக் கணம் யோசித்தாள். மறுகணம், 'அதான் எங்கழுத்திலேயே இருக்குதே?' என்று சமாதானப் படுத்திக் கொண்டாள். இப்போது ஒரு கவலை தீர்ந்தது என்ற பாங்கிலே அவள் நகை முடிச்சை அச்சுக் குலையாமல் இறுக்கிக் கட்டினாள்; இருந்த இடத்தில் வைத்தாள். கதவை இருந்தது இருந்தவாக்கிலேயே வைத்துவிட்டுத் திரும்பினாள். பெற்றவன் சொன்ன பொய் அவளைவிட்டுப் பிரிந்துவிட ஒப்பினால்தானே? காதல் என்றாலும் சரி, கத்தரிக்காய் என்றாலும் சரி, எதிலுமே லாப நஷ்டக் கணக்கு பார்க்கும் சூரர் ஆயிற்றே அவர்?

வாசலுக்கு விரைந்ததும் முதல் கடனான நல்ல மூச்சைப் பிரித்தாள் தைலம்மை. அன்னையின் இன்ப

நினைவில் அவளுக்கு ஓர் அமைதியும் ஏற்பட்டிருந்தது. 'இந்தத் தருணத்துக்கு ஆத்தா இருந்திருந்தாக்க, சிலட்டூர் மச்சான்காரக எண்ணைக்கோ எங்கழுத்திலே மஞ்சள் கயிற்றைக் கட்டியிருப்பாகளே, மேள தாளத்தோட!... ஆத்தா இல்லாப் பொட்டைக்கு அதிர்ஷ்டம் அரைமுழம் கட்டைன்னு சொல்லிக்கிடுறது எம்மாம் நெசமான சங்கதி!' என்றும் அவள் நினைத்தாள். வீடு வாசல் பெருக்கி, சாணம் எடுத்து எருக்குழியில் போட்டு, மாடுகளுக்குத் தீவனம் வைத்து, பால் கறந்து முடித்து விட்டு, மடத்துக் குளத்திலே போய் விழுந்து வரவேண்டுமென்று சுருக்காகத் திட்டம் புனைந்தாள். ஆக வேண்டிய கைவேலைகளை யும் கவனிக்கத் தலைப்பட்டாள்.

அந்நேரத்தில், தன் அத்தை மகன் சிங்காரத்தைக் காணவில்லையே என்ற தவிப்பும் அவளுள் ஏற்பட்டது. பல வருஷங்களைத் தாண்டி அன்று தினம் அவனைக் கண்டதும் இனம் காண முடியாமல் தவித்த வேளையில், அவன் தவித்த தவிப்பையும் அவள் அவ்வளவு சுளுவாக மறந்து விடக் கூடவில்லை. "அடியோடவே நீ என்னை மறந்துப்புட்டியா, தைலி?" என்று கேட்டு, செய்வகை புரியாமல் பிரமை தட்டி நின்ற அப்போக்கையும் அவள் இத்தோடு எத்தனையோ தக்கம் எண்ணிவிட்டாளே? "நீங்க எங்க மீனாச்சி அயித்தைமவன் சிங்காரம்தானே?" என்று தான் ஒய்யாரப்பாவனை ஒயில் கூட்டிக் கேட்டதும், அவன் அப்படியே மெய்ம்மறந்து நின்ற அக்காட்சியும் அவள் மறந்து விடக் கூடியதா, என்ன?

நினைவின் மனநிழலில் ஒண்டியவளுக்கு, வெய்யிலின் சுள்ளாப்பு உறைக்க வில்லை. பாவம் அயித்தைமகன்!... அவுக ரொம்ப ஏமாந்து போயிருப்பாங்க!... அதுக்கு அட்டி யில்லே!... என்னைச் சிலட்டூர் மச்சான்காரக கொண்டு கப்போற விசயம் அவுகளுக்குத் தெரிஞ்சுருக்கும் கட்டாயம்?

இல்லாங்காட்டி ''உன்னை நல்லாப் புரிஞ்சுக்கிட்டேன், சரவணா!.... நீ உன் இஷ்டப்படி எதுவேணுமானாலும் செஞ்சுக்கிடு. அப்பாலே, முடிவைப்பார்த்துக்கிடவும் தயாரா யிரு!'' என்று அவுக சவால் விட்டிருப்பாங்களா? ஐயோ! என்ன. நடக்கப்போவுதோ, ஒண்ணுமே மட்டுப்பட லையே?... அதற்குமேல் அவள் சித்தம் இயங்க மறுத்து விட்டதுபோல ஓர் உணர்வு எழுந்து பரவியது.

மனம் இயங்க மறுத்தாலும், மனச்சாட்சி இயங்க மறுத்து விடமுடியாதல்லவா? அது இயங்கியது. 'ஒனக்கு மொதல் உரிமை கொண்டவன் உண்னோட அயித்தைமவன் தானே?.... நீ கொண்டாடிட்டு இருக்கிற இந்தச்சரவணன் நேத்து முளைச்ச மச்சான்தானே?... இந்த மச்சானைக் காட்டிலும், அந்த முறை மச்சான்தானே ஒனக்கு முதலிலே முளைச்சவன்?... அவன் பொறந்து, நீயும் பொறந்தடியும், ஒனக்கு அவன், அவனுக்கு நீயின்னுதானே ஒங்க ரெண்டு தரப்பு அப்பன் ஆத்தாளும் ஒப்பந்தம் செஞ்சுக்கிட்டுக் கையடிச்சுக்கிட்டாங்க?...' என்று வினாச் சொடுக்கியது அவளது அந்தரங்கம்.

அவளுக்கு வேர்த்து விறுவிறுத்துவிட்டது; செய்வகை புரியாமல் தத்தளித்தாள். தாங்க முடியாத ஒரு முடிவைச் சொல்லிவிட 'விதி' என்னும் மாயப்பெருஞ் சக்தி ஒன்று எங்கோ தயாராகக்காத்துக் கொண்டிருப்பதுபோல அவளது உள்மனம் குத்திக்காட்டியது. அவளுடைய மேனி நடுங் கியது. கண்கள் குளமாயின, ''ஆத்தா!'' என்று உள்ளோலம் பரப்பினாள் தைலம்மை.

பெற்ற முத்தாயியும், பெறாத காட்டேறியும் எங்கே போய் ஒளிந்து கொண்டார்கள்?

அவள் தவித்தாள். கையிலிருந்த எரு கனக்கத் தொடங்கவே, அவள் சுயப்பிரக்ஞை எய்தினாள். அரித்த

வெய்யிலின் வெக்கை அவள் மண்டையை அரித்தது. சாணத்தைத் தூக்கி வீசி எறிந்துவிட்டு, நகர்ந்தாள்.

"அடியே தைலி! வாரீயாடி தலைமுழுக?" என்று கேட்டவண்ணம் கோடிவீட்டுக் குணமாலை வந்தாள். அவள் ஏன் அப்படி 'திக்கினவார்த்தை' செப்பினாள் என்று உடனே தைலம்மை நொந்தாள். அவள் அழைத்தது தலை முழுகத்தானே?... தலையை முழுக அல்லவே?...

"நானு வல்லே. நீ போடி!"

"சரீடி! ஒனக்கு எம்புட்டோ சோலி இருக்கும். ஒண்ணுக்கு ரெண்டாய் விருந்துக்கு ஆளுங்க வந்திட்டா, நீ என்னதான் பண்ணுவே, பாவம்! நான் போறேண்டியம்மா! நான் தீட்டுக்காரியாக்கும்!" என்று உண்மை விளம்பிப் பிரிந்தாள் குணமாலை.

கடலை ஆய்வதற்கென்று குடியிருப்புப் பிள்ளைகள் வந்தார்கள், கைகளில் ஏந்திய குட்டான்கள் சகிதம்!— பற்றாததற்கு, பூவத்தக்குடிச் செட்டித்தெரு நண்டுசுண்டுகளும் வந்து விட்டன. நண்டுக்குக் கடலை ஆய்வதற்குத் தெரியாது. யாரும் சொல்லிக் கொடுத்தால்தானே? வந்தவர்கள் சின்னப் பிள்ளைகளும் சின்னப் பெண்களுமே! குறுணிக் கடலை ஆய்வதற்குக் கூலி பத்துக்காசு என்றால், அது இளைப்பமாக்கும்?" இதைத்தவிர, நாலு இரண்டு உடைத்து உள்ளே போட்டுக்கொண்டது மிச்சம்! வயிற்றை வாயை வலித்தால், இருக்கவே இருக்கிறது சர்க்கார் ஆஸ்பத்திரி!...

கடலை ஆயவந்த கூட்டத்துக்குக் கொல்லைப் புறத்தைக் காட்டினாள் தைலம்மை. அவளுக்குக் கண்களைக் கட்டிக் காட்டில்விட்ட மாதிரி இருந்தது. இனம் புரியாத அச்சமும், இனம் புரிந்த தவிப்பும் அவளை வறுத்தெடுத்தன.

அப்போது ''அம்மான் பொண்ணே தைலி!'' என்று குரல் கொடுத்தவண்ணம் சிரிப்பின் சிருங்காரத் தோடு, தனிக்காட்டு ராஜா போல அங்கு வந்து நின்றான் சிங்காரம்!

''வாங்க, வாங்க'' என்றாள் தைலம்மை.

''இப்ப நான் வரப்போறதில்லே. போயிட்டுத்தான் நொடியிலே திரும்பப்போறேனாக்கும்! என்னைக் காணாமல் நீ தவிப்பியேன்னு ஒன்னைத்தொட்டுத்திரும்பி, உங்கிட்டே ஒரு வார்த்தை சொல்லிக்கிட்டுப் போவத்தான் வந்தேன்!..'' என்றான் இளவட்டம்.

''மெய்தானுங்க. ஒங்களைக்காணாம தவிச்சுப் போயிட்டேனுங்க!'' என்றாள் இளங்கிளி.

''போடு சவாசுன்னானாம்! பலே, அம்மான்மகளே!.... இது போதும் எனக்கு! ராத்திரி முச்சூடும் நான் தூக்கம் பிடிக்காமத் தவிச்சுப்புரண்டதுக்கு இந்த ஒன்னோட ஆறுதல் பேச்சு ஒண்ணுபோதும்! இதுவே எனக்கு ஒன்னைத் தத்ரூபமாய்க் காட்டிக் குடுத்திருச்சு!... அல்லாம் ஆத்தா காட்டேறியோட தயவுதான்! சரி, நான்போயிட்டு வாரேன்! இந்த ஒரு தாக்கலை அந்தச் சிங்கத்துக்கிட்டே வீசி யெறிஞ்சுப்புட்டு ஓடியாந்திடுகிறேன் சிட்டாட்டம்! நீ தைரியமா இரு!... அம்மான்காரக வந்தாலும் சொல்லிப் போடு]... மறந்துபுட்டேன்!.... வந்தடியும் ஒன்தங்கக் கையாலேதான் கஞ்சி குடிக்கவேணும்!... வரட்டுமா?'' என்று ஓங்காரக் குதூகலத்துடன் வார்த்தைகளைச் சரமாரியாகக் கொட்டித் தள்ளிவிட்டு, ஆண் சிங்கமென கம்பீரம் பாய்ச்சிப் பிரிந்தான் சிங்காரம். பட்டுச் சொக்காயின் பளபளப்பு மின்னி மறைந்தது.

தைலம்மை திக்குப் புரியாமல் மலைத்து நின்றாள்.

அவள் மனத்தில், சரவணனும் சிங்காரமும் தட்டாமாலை சுற்றிக் கொண்டேயிருந்தார்கள்!

# கதிர்க் கொத்து 12

## மாம்பழம் ஒன்று!... அணில்கள் இரண்டு!

பெருங்காயம் வைத்த டப்பாவாக அந்தக் களத்துமேடு, அதற்குகந்த மணத்தை உள்ளடக்கித் திகழ்ந்து கொண்டிருந்தது!

மார்கழி கடைசியிலும் தை முடியவும் அந்தக் களத்து மேட்டில் புண்ணியம் விளைந்து கொண்டிருக்கும். உழைப்பு சம்பாதித்துக் கொடுத்த புண்ணியம் அது. மேல்வாரத் துக்கு உழுபவர்கள், குடிக்காணியாட்சி பாத்தியதை கொண்டு உழைப்பவர்கள், சொந்த வெள்ளாமை வைத்துக் கொண்டவர்கள். அன்றாடக் கூலிகள், நெல் தூற்றும் பள்ளர்கள் என்று இப்படி யொரு புனிதம் மண்டிய புதிய உலகமே அங்கு உருப்பெற்றுத் திகழும். நெற்களஞ்சியமாகப் பொலியும் அந்தக் களத்துமேடு இப்போது பாரம்பரியப் பெருமை பூண்டு விளங்கியது. குலத்தோடு ஒட்டி விட்ட குணநலம் அதன் சுற்றுச்சார்பில் ஆரோகணித்து விட்டிருந்ததில் வியப்பேது?

சுற்றுவட்டமாகக் கொண்டிருந்த புளியமரங்களுக்கு நடுவில் இருந்த பொட்டல் வெளியில்—கட்டாந்தரையில்—பனி மூட்டத்தின் முத்திரையும், மூட்டம் களைந்த பின் படர்ந்து கிடந்த கதிரொளிப்பாய்ச்சலின் கோலமும் காணப் பட்டன. ஊர்க்கூட்டம், ஊர்ப்பஞ்சாயம் போன்ற பொதுக் காரியங்களுக்கும் கைகொடுத்த இடம் ஆயிற்றே அது!

நிழல் கவிழ்ந்திருந்த களத்து மேட்டில் ராஜகம்பீரத் துடனும் தன்னம்பிக்கைத் தெளிவுடனும் வந்து நின்றான் சிங்காரம், சுருட்டை முடிகள் நெற்றியில் வந்து விளையாடிக் கொண்டிருந்தன. அப்பியிருந்த விபூதி அவனுடைய முகத் துக்கு ஒரு களையையும், பத்தாம்நாள் நிலக்கடலைப்

பயிரைப்போன்ற இளமீசை அவன் முகத்துக்கு ஓர் ஆண்மையையும் நல்கின. தன் நெஞ்சரங்கிலே ஒயில் கூட்டி ஒய்யாரம் காட்டி நடனமாடிக் கொண்டிருந்த தன்னுடைய அம்மான் மகளின் அழகுமுகத்தைத் தனக்குத்தானே ரசித்த வனாக அவன் நாற்புறமும் பார்வையைச் சாடி விட்டான். "இங்கணவே குத்துக்கல்லுகணக்கிலே நிக்கிறேன்' அப்படி இன்னு வாக்குக் குடுத்த சேக்காளி சரவணன் எங்கிட்டு மறுகிப்போயிட்டானோ. புரியலையே?.... எங்கே சுத்தினாலும் தேரு நிலைக்குவந்துதானே தீரவேணும்? வரட்டும், வரட்டும்! இண்ணக்கி ரெண்டிலே ஒண்ணு புரிஞ்சுப்புடும். சேக்காளிக்கு சேக்காளி சேடையின்னு வந்தப்புறம், ரெண்டிலே ஒண்ணு முடிய வேண்டியதுதானே! பணம் வெல்லுதா, இல்லே, மனம் வெல்லுதா என்கிறதைத்தான் பார்த்துக்கிடு றேனே?"... என்று சிந்தித்த அவன் இராப்பொழுதில் தன் அம்மான் வீட்டினுள்ளே நடந்த பேச்சுவார்த்தை களையும் நினைவிற் கொண்டான். அதன் விளைவாக, தான் இரவு முழுவதும் அமளிப்பட்ட மனத்துடன் கொட்டக் கொட்டவிழித்து அவதிப்பட்ட நிலையையும் அவன் ஞாபகப் படுத்திக் கொண்டான். அப்போது, "மெய்தானுங்க; உங் களைக் காணாமத் தவிச்சுப்போயிட்டேனுங்க!" என்று தைலம்மை கூறிய அந்த ஆறுதல் மொழியே அவனுக்கு வாய்த்திட்ட ஓர் உலகமாகவே தோன்றியது. அந்த அமை தியின் தேறுதலில் அவன் மேலும் கம்பீரமடைந்தான். 'நான் எம்புட்டு ஆசையோட இங்கிட்டு வந்தேன். ஆத்தாளும் அம் மானும் சத்தியம் பரிமாறிக்கிட்டதை யொட்டி. எனக்கின்னு தைலி காத்துக்கிட்டு இருக்கும்னுதான் நான் ஓடோடி வந்தேன். காத்துக்கிட்டிருக்கிற இம்மாம் பெரிய சோத னையை நான் எப்படி ரோசிச்சிருக்க ஏலும்?...' மீண்டும் சிந்தனை விரிசல் கண்டது; கண்துளிகள் சிந்தின.

காலடியில் பாம்பரணை நழுவி ஓடியது.

செம்மறிக் கூட்டம் மேய்ச்சலுக்குப் புறப்பட்டது.

எண்ணங்களும் செம்மறிக்குழுவுக்கு ஒப்புதான். கூடிச் சேர்ந்தால் எல்லாம் ஓரேடியாகக் கூடும்.

மேலும் ஏதேதோ நினைவுகள் சிங்காரத்தை ஆட்கொண்டன.. நின்ற நிலைப்பிலிருந்து அண்ணாந்து நோக்கினான். காய்களும் பழங்களுமாகத் தொங்கின. எம்பினான். பழமொன்று அவன் கைக்கு வந்தது. ஒருமுறை சிறுமி தைலி புளியம்பழம் வேண்டுமென்று அடம் பிடிக்க, அவன் மரம் ஏறி ஒரே ஒரு பழம் பறித்துக்கொடுத்த காட்சியை ஒளிப் பதிவு செய்து காட்டியது மனம். "சொந்தம் சோவாரி வேணுமின்னு தவம் கிடக்கிறது இதுக்குத்தான்!" என்று அவள் பிஞ்சு நெஞ்சம் செப்பவில்லையா?

கண்ணீரை விரல் நுனியால் எடுத்து அழகு பார்த்து விட்டு, அமைதியின் நம்பிக்கையோடு வீசினான் சிங்காரம். 'தைலி! உன்னோட நினைப்பு ஒண்ணேதான் என் வரைக்கும் வாழ்க்கையாக இருந்து வந்திருக்குது; இனிமேயும் அப்படியே இருந்து வரும்!... இதை நீ புரிஞ்சுக்கிட்டிருப்பியா, தைலி?' நெஞ்சு தளும்பிற்று.

குணதிசையிலிருந்த சீரங்கத்தம்மா மனையிலிருந்து பள்ளிக்குச் சென்ற பிள்ளைகள் அவ்வழியே சென்றதை வேடிக்கை பார்த்தான் சிங்காரம். ஏக்கப் பெருமூச்சுடன் நின்ற அவனைக் கூப்பிடு தொலைவிலிருந்த சீரங்கத்தம்மாள் கூப்பிட்டாள். "மீனாச்சி அக்காமவனே, சொகமா?.... நீ வந்திருக்கிற தாக்கலை தைலி சந்தோசத்தோட சொன்னிச்சப்பா!" என்றாள். அதற்கு அவன் "ஆமாங்க, நல்ல சொகந்தானுங்க!" என்று பதிலிறுத்தான்.

சிங்காரம் பேசி வாயை மூடியிருந்தான்!

அப்பொழுது சரவணன் துள்ளல் நடைபோட்டுக் கொண்டு வந்து நின்ற ரேக்ளாவிலிருந்து இறங்கிக் குதித்தான். வண்டியை அவிழ்த்து விட்டு, தார்க்குச்சியை 'வரிச்சிக்கழி'யில் வாகு பார்த்துச் செருகினான். "கூட்டாளி சிங்காரம், ஒன்னை உண்டனப் பொழுதுக்கு நான் காக்க வச்சுப்புட்டேன். கோவிச்சுக்காதே!" என்று சொன்னான் சரவணன்.

"அதாலே குத்தமில்லேப்பா, சரவணா! ரொம்பத் தொலைவு போயிட்டாப்பிலே தோணுது!" என்றான் சிங்காரம்.

"எங்கேயும் போயிடலை. தைலிப்பொண்ணை ஒரு கடுத்தம் கண்டுதண்டிக்கிணு வரவேணும்னு ஒரு ரோசனை வந்திச்சு. அதான் பறிஞ்சிட்டேன்!" என்று அறிவித்தான் சரவணன்.

"அப்பிடியா? பலே!..."

ஆமாப்பா!... உங்க அம்மான்காரர் விசயமா இருந்த தடங்கலும் தெய்வாதீனமாய் தீர்ந்திடுச்சு! அவரு கள்ளச் சிநேகம் வச்சுக்கிட்டு இருந்த அந்தப் பொம்பளை காலமாயிடுச்சாம்!...இதொட்டித்தான், எங்க அப்பன் ஆயிக்கு கொஞ்சம் சடனை மனசுக்குள்ளாற இருந்திடுச்சு! இப்ப அந்த வில்லங்கமும் பனியாட்டம் கலைஞ்சிருச்சு!.. சரி, இனிமே நாம ரெண்டு பேருந்தான் ஒரு முடிவுக்கு வந்தாகணும்!.. ஊம், சொல்லு சிங்காரம் உன்னோட முடிவை!" என்று சொல்லி, தன் தோழனான சிங்காரத்தை ஊடுருவி நோக்கினான் சரவணன்-அவன் விழிகள் ஏனோ துடித்தன!

சிங்காரமும் முன்முடியைக் கைகளால்கோதி விட்டவனாக, சரவணனைப் பதிலுக்கு ஊடுருவிப் பார்த்தான். பிறகு மௌனப்பிள்ளையார் போலப் புன்னகை செய்தான்.

சரவணா! நேத்தைக்கு சண்டையிலே நீ என் முன்னரிக்கே பேசின வீறாப்பும் சுரத்தும் இப்ப வடிஞ்சிருக்கிற தாட்டம் எனக்குத்தோணுதே!'' என்று கேட்டான் சிங்காரம்.

''அப்படித் தப்புப்புள்ளி போட்டுப் புடாதே சிங்காரம்! ஒரு காலத்திலே நீ என் உசிரை கட்டிக் காப்பாத்திக் குடுத்த புண்ணியவானாச்சே என்கிற நன்றியோடே இப்ப நான் பேசுறேன். அம்புட்டுத்தான் விசயம்!''

''சபாசு!.. அந்த நாளையிலே நான் செஞ்சது என் னோட கடமை! மனுசனாய் மண்ணிலே பொறந்த யாராயி ருந்தாலும் செஞ்சிருக்க கூடியதைத்தான் நான் செஞ்சேன்! இப்ப அது இங்கிட்டு நம்ம பேச்சுக்குக் குறுக்குச் சாலோட்டத் தேவையில்லே! நீயோ செமந்த பணம் படைச்ச புள்ளை! ஆகச்சே, ஒனக்கிண்ணு ஒரு உபாயமும் முடிவும் இருக்கும். அதைச் சொல்லிப்புடு, சரவணா!'' என்றான் சிங்காரம். நெஞ்சுக்குழி உள்ளூற பதைத்ததை அவன் மட்டுமே உணர முடியும்!

''அப்படியா? சரி, சொல்லிப்பிடுறேன். நேத்தைக்குச் சொன்னதுதான் எம்முடிவு! என்னோட உசிரு இந்த உடம் பிலே இருந்தாக்க, பங்குனி பிறந்தடியும் நானு ஒன் அம்மான் மகள் தைலம்மையைக் கண்ணாலம் கட்டியே தீருவேன்!.... இதுதான் எம்மனசிலே உள்ள வைராக்கிய முடிவாக்கும்!'' என்று வீராவேச உணர்ச்சி கொப்புளிக்கக் கூறினான் சிலட்டூர்க்கங்காணி வீட்டுத் தலைமகன் சரவணன்.

''பலே! இதானே ஒன்னோட சவால்?... சரி. இப்ப என் சவாலையும் நீ மறந்துபுடாதே!.... இந்த ஏழைச்சிங்காரம் நீ வச்சிருக்கிற கெடுவுக்குள்ளேவே என்னோட மொறைப் பொண்ணு தைலியை நான் கண்ணாலம் கட்டிக் கிடைலைன்னா, எம்பேரு சிங்காரம் இல்லே!... ஆமா!''... என்று தெரிவித்தான் சிங்காரம். அவன் விழிகளில் ரத்தம் கட்டிவிட்டது.

"நெசமாவா?"

"ஆமா! ஏழை எனக்குப் பொய்யின்னா ஏழாம்பொருத்தம்! நான் சொன்னது சொன்னதுதான்!"

"பேஷ்! அம்படின்னா, நம்ம ரெண்டு பேரோட சவாலுக்கும் கண்ணுக்குத் தெரியா கடவுளும், கண்ணுக்குத் தெரியிற இந்தக் களத்து மேடுந்தான் சாட்சி! .. என்றான் சரவணன்.

"அத்தோட, நம்ம ரெண்டு பேர் மனச்சாட்சியும் நம்ம ரெண்டு பேர் சவாலுக்கு சாட்சியாய் இருக்கட்டும்!... என்னோட சூள் பேச்சை நீ மண்ணு காண்பிச்சுப்புட்டாக்க, அப்பவே நான் ஒன் காலுக்குச் செருப்பாய் ஆயிடுறேன்! நீ என்ன சொல்லுறே?" என்று வினவினான் சிங்காரம் ஓங்காரத் தொனியில்.

"எஞ்சவாலை நீ தோற்கடிச்சுப்பிட்டாக்க, அப்பவே நான் ஒனக்குக் கொத்தடிமையாய் ஆகிப்புடுறேன், சிங்காரம்!" என்று முழக்கமிட்டான் சரவணன்.

"சரி;... நம்ம பேச்சு இனிமே இத்தோட நின்னுக்கிடட்டும்!... சரி, வா... சாயாக்குடிக்கப் போவோம். வண்டியைப் பூட்டு, சேக்காளி!" என்றான் சிங்காரம்.

"நான்தான் காசு குடுப்பேன்!" என்று அடித்துச் சொன்னான் சரவணன்.

"அதான் நடக்காது. நீ தான் அண்ணைக்கு வாங்கிக் குடுத்திட்டியே? இப்பைக்கு ஒனக்குக் கடன்பட்டிருக்கிற ஆளு நான்தானே? மறுதளிக்காமல் கிளம்பு, சரவணா!"

"ஊம், உன் ஆசையை ஏன் மாற வைக்கோணும்? இரு, வண்டியைப்பூட்டுறேன்," என்றான் சரவணன், சிரிப்

புடன், துரிதமுடன் காளையைப் பூட்டினான். "ஊம், ஏறிக்க" என்று சொல்லித் தார்க்குச்சியைப் பாய்ச்சினான் சரவணன்.

ரேக்ளா தென்திசை நோக்கிப் பறந்தது.

தோழனுக்குத் தேநீர் வாங்கிக் கொடுத்தான் சிங்காரம். அவனும் பருகினான்.

"சரி, நான் எங்க வூட்டுக்குப் போறேன். நீ எப்ப எங்க ஊருக்கு வரப் போறே கோழி விருந்து சாப்பிட?..." என்று கேட்டான் சரவணன்.

"நம்ம சவாலோட முடிவு தெளியட்டும். அப்பாலே, அதைப்பத்திப் பேசிக்குவோம்! உன் வூட்டுச் சோத்தை இனிமேல்தானா நான் புதுசாச்சாப்பிடப் போறேன்?..." என்றான் சிங்காரம்.

"பழசுபட்டது சகலத்தையும் மறந்துப்புடாம இருக்கீயே சிங்காரம்?.., உன் போக்கு ரொம்பவும் சிலாகிக்கக் கூடிய தாக்கும்!" சரவணன் பேசினான்.

"காலம் நம்ம கைக்குள்ளவா இருக்குது? ஊஹூம். ஒருக்காலும் இல்லே! ஆனா, நம்ம மனசு மட்டும் நம்ம கைக் குள்ளேதான் இருக்குது! அதை மறந்துப்புடலாமா? சரவணா?" சிங்காரம் பேசினான்.

"நூத்திலே ஒரு சேதிதான், சிங்காரம்!"

"நல்லது. நீ புறப்படு. வெய்யில் உச்சிக்குத் தாவுறதுக் குள்ளாற நீ வூட்டுக்குப் போய்ச் சேர்ந்திடலாம்!"

"ஆமா; நான் போயிட்டு வாரேன் சிங்காரம்!"

"போயிட்டு வா, சரவணா! நாம் ரெண்டு பேரும் அடி நாள் தொட்டு உசிருக்கு உசிரான சேக்காளிங்க என்கிறதை மட்டும் எப்பவும் யாபகத்திலே இறுக்கி வச்சுக்கிடு, சரவணா!"

"ஒன்னை நான் மறக்க ஏலுமா? அப்படி மறந்தாக்க, நான் மனுசனாக நடமாட வாய்க்குமா?"

"சரி' சரி! போயிட்டுவா!....ஆமா, சரவணா! போயிட்டு வா!" என்று சிரித்தான் சிங்காரம்.

சரவணனும் சிரித்துக் கொண்டு தார்க்குச்சியைக் கையில் எடுத்துச் சொடுக்கி வீசினான்.

காளையின் சலங்கைகள் குலுங்கி மறைந்தன!

கண்களைத் துடைத்துக் கொண்டு விழி மீட்டி, வழி மீண்டான் சிங்காரம்.

தரையில் விழுந்து கிடந்த மாம்பழத்தைச் சுவைக்க இரண்டு அணில்கள் போட்டியிட்டுப் போராடிக் கொண்டிருந்த காட்சியை அவன் வழிமறித்துச் சென்று விட ஒப்பவில்லை. துளிப்பொழுது நின்றான்.

என்ன அதிசயம்!

அந்த மாம்பழத்தை அந்த அணில்கள் இரண்டுமே சுமுகமான உறவுடன் சுவைக்கத் தொடங்கின!

நடந்தான்.

வரும் விதி ராத் தங்காதாம்!

# கதிர்க் கொத்து 13

## மாய விதி

ஆம்; வரும் விதி ராத்தங்காது என்பதுதான் மூத்தோர் முன்மொழியாகும். ஆனால், இப்போது அந்த விதி பகலில் கூட தங்கவில்லை. அது மாயமாக மடத்துக்குளத்தைச் சுற்றி மாயமாகச் சிரித்துக் கொண்டேயிருந்தது. சிரிப்பு என்றால், அற்ப சொற்பமான சிரிப்பா, என்ன? ரொம்பவும் விஷம் நிரம்பிய சிரிப்பு; வினயமான சிரிப்புங்கூட!

இந்தத் துப்பும் மர்மமும் அந்தக் குளத்துக்கே புரியா மலிருக்கையில், அங்குக் குளிக்க வந்த பெண்டுகளுக்கு மட்டும் புரிந்துவிடுமா?

போனதும் வந்ததுமாகத் திரும்பி விட வேண்டுமென்ற நோக்கத்துடன் தான் தைலம்மை குளிக்க வந்தாள். மேல் சவுக்காரப் பெட்டியும் கொணர்ந்திருந்தாள். 'அப்பன்காரவுக பசி பொறுக்கமாட்டாக, வயல் காட்டிலேருந்து திரும்பினதும், என்னைக் காணாட்டி, அவுகளுக்கு மூக்குமேல் கோபம் பொத்துக்கிட்டு ஓடியாரும். அயித்தை மகனுக்கும் கஞ்சி வார்க்கணும். அவுகளே காலம்பறச் சொல்லிப் புட்டாங்க எங்கையாலே கஞ்சிகுடிக்க வேணும்னு!... ஆனபடியினாலே, சுருக்கணத் திரும்பிப்புடணும்,' என்ற கட்டுப்பாட்டுடன் குளத்தில் இறங்கினாள். உடன் வந்தாள் பொன்னாத்தா. அவள் பிள்ளைக்குட்டிக்காரி. அபூர்வமாகக் குளிப்பவள் அவள். அவள் வெய்யிலைக் கண்டுதான் தலையைக் கொடுப்பாள், தண்ணீரிடம். சளசளவென்ற பேச்சுக்காரி அவள். ஆனாலும் தைலம்மையோடு துணைவந்ததால், இதம் பதமாக அனுசரித்து நடப்பதில் கருத்துக்கொண்டவள் அவள். அவளும் பிள்ளையின் சட்டையைக் கசக்க ஆரம்பித்து விட்டாள்.

தைலி ரவிக்கையை அவிழ்த்து, உள்பாவாடையை மார்புக்குமேலாக உயர்த்தி இறுக்கமாகக் கட்டிக் கொண்டு, புடவையை நனைத்தாள்.

அது தருணம், "சொகமா தைலி?" என்று குசலம் விசாரித்தாள் காத்தாயி. பட்டணக்கரையிலிருந்து மாசிமகத் திருநாளைக்காகத் தாய்வீட்டுக்கு 'விருந்தாடி' வந்திருந் தாள் அவள்.

"ஆமா, அக்கா. நீ, உம் புருசன் எல்லாம் சொகந் தானே?" என்று பதிலுக்கு க்ஷேமலாபம் கோரினாள் தைலம்மை.

"ஊம்."

"முழுகாம இருக்கிறதாய் ஒங்க செட்டிய வூட்டிலே யிருந்து ஒரு பேச்சு வந்திச்சே?"

"இந்தாலே முழுகப் போறேனே, தைலி?" என்று சிரித்தாள் காத்தாயி.

"குறும்புத்தனம் எப்பவும் உன்னை விட்டுப் போகாதே?" என்று தைலியும் சிரித்தாள்.

"அடி ஆத்தே! கோவுச்சுக்கிடாதே. சும்மா கேலிக்குச் சொன்னேன் என்னமோ, சாமி தயவிலே அந்தப் பேச்சு சுத்தம்தான்!"

"நல்லா இரு!"

தைலி சேலைக்குச் சவுக்காரம் போட்டுக் கொண்டிருந் தாள்.

அப்பொழுது இன்னொருத்தி தைலியை அண்டினாள். அவளுக்கும் பெயர் உண்டு. சொக்கி என்று பெயர்—வெண்டிக்காய்ப் பேச்சுக்காரி அவள்.

அவளைக் கண்டும் காணாததுபோல தைலி தலையைக் குனிந்து கொண்டாள். அவள் மனத்தில் போராட்டம் நடத் திக்கொண்டிருந்த அந்தக் களத்துமேட்டுச் சங்கதி அவளுக் கல்லவா தெரியும்!

"தைலி!"...

"என்னா சேதி, சொக்கி?"

"நம்ம குடியிருப்புக்குள்ளாற ஒரே, சத்தமா இருக்குதே?"

"என்னா சங்கதி?.... வேட்டுகீட்டு வெடிக்கிறாங்களாங் காட்டி?"

"அதெல்லாம் இல்லேடி. அல்லாம் உன்னைப்பத்தித் தான் பேச்சாயிருக்குது!"

"தட்டுக்கெட்டவுங்களைப்பத்தியும் தில்லுமல்லுக் காரங் களைப்பத்தியும்தான் பேசுவாங்க. நான் ஒன்னைமாதிரிப் பட்டவள் இல்லையே?... என்னைப்பத்தி எவடி பல்லுமேலே பல்லுப்போட்டுப்பேசுவா? என்னைப்பத்தி பேசுறத்துக்கு அவுளுகளுக்கு ஈரலிலே பித்தா, இல்லே, எலும்பிலே பித்தாடி?..." என்று கல்லடியிலிருந்து எழும்பினாள் தைலம்மை. அவளது மாநிற முகத்தில் ரத்தம் இழைகட்டி யிருந்தது.

"என்னடி தைலி! நானு சாதாரணமாப் பேசினா, அதுக் காக துரும்பைத்தூணா வளர்க்கிறீயே? என்னமோ ஒரு சமயத்திலே எக்குத் தப்பா தடம்மாறி நடந்ததுக்கு என்னைக் குத்திக்காட்டி ஏசுறீயே?" என்று அச்சத்துடன் பயமாகக் கேட்டாள் சொக்கி.

"பின்னே என்னவாம்? வாயைக்கொடுக்கிறதிலே வகை இருக்கோணும்டி, சொக்கி!" இன்னமும் அவள் கோபம் ஆறவில்லை. கோபம் உள்ள இடம்தான் குணத்துக்கும் இடம்!

"நானு சொன்னதானது ஒன்னோட கண்ணாலத்தைப் பத்தி! கொஞ்சம் முந்தி களத்துமேட்டிலே உங்க அயித்தை மவனும் சிலட்டூர்க்காரரும் தடிப்பாப் பேசிக்கிட்டதாய் எங்க அத்தாச்சி சீரங்கத்தம்மா சொன்னாங்களாம்."

மறுபடி குந்தினாள் தைலம்மை. அழகுபரக்கச்சிரித்தாள். "ஊருக்கு என்னடி சொக்கி வேலை? ஒண்ணை ஒன்பதாத் திரிக்கும்! அந்த ரெண்டு பேர் பேச்சும் ரொம்ப நாயமாய் இருந்திச்சு!.... நானே சீரங்கத்தம்மா வூட்டிலே இருந்து கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேனாக்கும்! என்னைக் கொண்டுக்கிடுறத்துக்கு ரெண்டு பேரும் சவால் போட்டுக் கிட்டாங்க! அம்புட்டுத்தான் நடப்பு!" என்று அமைதி

யுடன் சொன்னாள் அவள். உள்வட்டத்தில் சுழன்றடித்த வேதனைக் குமைச்சலை இம்மியும் வெளிக் காட்டவில்லை அவள்.

“அப்பன்னா ஒன் முடிவு என்ன தங்கச்சியோ?” என்றாள் ஏகாலி வீட்டுக் கிழவி.

“எனக்காகச் சவால் விட்டிருக்கிற அந்த ஆம்பளைங்க ளோட முடிவு என்ன ஆகுதின்னு வேடிக்கை பார்க்கிறது தான் எம்முடிவு, ஆயா!” என்றாள் தைலம்மை.

“ரொம்ப ரொம்ப அதிசயமான பொண்ணா இருக்கியே நீ?” என்றாள் சொக்கி.

“நல்ல செய்கை மூலமாய் பொண்ணு அதிசயமாத்தான் இருக்கவேணும். சொக்கி, ஒனக்கு இதோட உள்ளார்த்தம் தட்டுப்படாது!” என்று ‘பொடி’ தூவிப்பேசினாள் தைலம்மை. எக்காளம் நிறைந்த தத்துவம் ஆயிற்றே அது!

“இருக்கிற நேசரைப்பார்த்தா, அவங்க ரெண்டு பேருக் குள்ளவும் வெத்துப்பழி—குத்துப்பழி கூட நடக்குமோ, என்னமோ?” என்றாள் அலஞ்சிரான்காட்டு பெத்தாச்சிக்கு வாழ்க்கைப்பட்ட பேச்சி.

“அப்படி நடந்தா, அது அவுக அவுக விதியைப் பொறுத்தது. வார விதி ராத்தங்கவா போகுது?...” என்று தாழ் குரலில் தீர்ப்புப் படித்தாள் தைலம்மை.

“இந்த மாதிரி ஒரு அதிசயம் நம்ம பதினாறு வட்டத்து நாட்டிலே நடந்ததே கிடையாதின்னு பேசிக்கிறாங்கடி, தைலி!” என்றாள் பூவாயி.

“ஆமா, இதிலே ஒன் முடிவுதான் என்னடி, தைலி?” என்று ஆர்வம் பொங்கக் கேட்டாள் சொக்கி.

"அந்த முடிவு என் சொந்த விசயமடி, சொக்கி. அதைச் சொல்லுறதுக்கு இந்தக் குளத்தங்கரையா தோது?... அப்பாலே வாடி என்னூட்டுக்கு! போடி, போக்கத்த குட்டி!... எம்முடிவான முடிவைப் பத்தி நம்ம சங்கரன் குடியிருப்பு கூடிய சீக்கிரத்திலே புரிஞ்சுக்கத்தான் போகுதுடி. அப்ப நீயும் புரிஞ்சுக்குவே!..." என்று பட்டுக் கத்தறித்த பாங்கினில் முடிவு சொன்னாள் தைலி.

"எங்க தைலி மரக்கொடி கட்டி ஆளப் போறவளாக்கும்! அவ போக்கு அவளைப்படைச்ச மகேசனுக்குக் கூட புரியா தாக்கும்!" என்றாள் பொன்னாயி. தலைமுழுகிக் கரைக்கு வந்து நின்றாள் அவள்.

"ஆமா, ஆமா!" என்ற குரல்கள் ஒரு சேர எதிரொலித்தன. மௌன பிம்பமாகக் காணப்பட்டாள் குமரிப்பெண் தைலி,

"ரெண்டு மாப்பிள்ளையிலே யாரோ ஒருத்தருக்குத்தான் தைலி மாலை போடப்போறா!" என்று இடை வெட்டினாள் சொக்கி.

"ரெண்டு பேருக்கு மாலைபோட்டு முந்தானை போட்ட தட்டுவாணி நீ. அதான் அந்தத் தட்டுக் கெட்ட தில்லுமல் லுப்புத்தி ஒனக்கு வருது! ஒம் புதுப்பணம் எங்கிட்டேயாடி செல்லும்?... போடி, போக்கணம் கெட்டவளே?" என்று கோபக்கனல் தெறிக்கப் பேசிய தைலம்மை எழுந்து சொக் கியை மொத்தினாள்.

"போறாடி சொக்கி. விடுடி அவளை!" என்று தைலி யைத் தடுத்தார்கள் பெண்டுகள்.

"அக்கா, அக்கா!" என்று ஓடோடி வந்தாள் பூங்கா வனம். மேனி குலுங்க வந்து நின்றாள். அக்காளின் கைகளைக் கெட்டியாகப் பற்றினாள்.

"அக்கா, கோவிச்சுக்காதே! ..

ஒரு புதுச்சங்கதி தெரியுமா ஒனக்கு?"... என்று வினா விடுத்தாள் பூங்காவனம்.

'என்ன?' என்ற பாவனையில் சமிக்ஞை பதித்தாள் தைலம்மை

"நானு சிலட்டூர் மருமகப் பொண்ணாய் ஆகப் போறேன்னு பொத்தாம் பொதுவாகச் சொன்னாக எங்க அப்பாரு! இப்ப, சிலட்டூரிலே பொறந்த அந்த ஆம்பளையும் சிலட்டூரிலே வளர்ந்த நம்ம அயித்தை மவனும் பொதுப் படையாய் நிற்கிறாங்களாம்! இதையும் அப்பாரு சத்த முந்தி புட்டுச் சொன்னாரு!... இவுக ரெண்டு பேரிலே நீ விரும்பாத மாப்புள்ளை-அதாகப்பட்டது, ஒன்னை அடைய முடியாத மாப்புள்ளை எனக்கு மாப்பிள்ளையாம்! இதையும் எங்க அப்பாரே புட்டுவச்சாரு, அக்கா! ஆமா, நீ அவுக ரெண்டு பேரிலே யாரைக் கண்ணாலம் கட்டிக்கிடப்போறே?... அது தெரிஞ்சா, நானு இப்பவே யாரானும் ஒருத்தரையே சதமின்னு நெனைக்கிறத்துக்கு லாயக்குப்படுமில்லே?...." என்று வெகுளித் தனமாகக் கேட்டாள் பூங்காவனம். காற்று விலக்கிய மேலாக்கைப்பற்றிக் கூட அவள் கருத்துக் கொள்ளவில்லை!

"அடி தங்கச்சி!....குளிச்சிட்டுவா, மலையாளத்து ஐயரு கிட்டே ஜோசியம் கேட்டுச் சொல்லுறேன்!... நீ குளி!... உனக்கிண்ணு ஒரு ஆம்பளையைச் சாமி புடிச்சுப் போடாம இருந்திருக்க மாட்டாருடி, பூங்காவனம்!' என்று நிதானமாக, சிரிக்காமல் செப்பினாள் தைலி.

ஏனோ, ஏனைய பெண்கள் 'கொல்' லென்று நகைத்தனர்.

பசுக்கூட்டம் தண்ணீர் குடித்தது.

காக்கை குளியல் குளித்துவிட்டுக் கரையேறினாள் தைலம்மை. ''அல்லாரும் இருங்க. நான் போயிட்டு வாரேன்! நான் சொன்னேனின்னு இங்கணேய இருந்திடாதீங்க!...'' என்று எந்தக் கவலையும் அற்றவள் போன்று சொல்லிவிட்டு நடையைக் கட்டினாள் தைலம்மை. உடன் தொடர்ந்தாள் பொன்னாயி.

''மெய்யாலுமே நம்ம தைலி ஒரு தனிப் பொறப்புத் தாண்டி! பாவம்,இந்தச் சொக்கிதான் வசமாத்திட்டு வாங்கிக் கட்டிக்கிட்டா!...தைலி நெருப்பு என்கிறது இவளுக்கு இன்னம் விளங்கலையே!'' என்ற பூவாயியின் பேச்சைத் தைலி காதுகளில் வாங்கிக் கொண்டே மடங்கினாள். வலதுகால்பாதத்தில் குத்திவிட்ட நெருஞ்சி முள்ளை லாகவமாக எடுத்து வீசிவிட்டுத் தன்பாட்டில் நடந்தாள் தைலம்மை! 'ஆத்தா மூத்தவளே! என்னை ஏதுக்கு இப்படிச் சோதிக்கிறே?... எனக்கு ஒரு விடிவைக்காட்டப்புடாதா தாயே?'— என்று அவள் உள் மனம் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்ததை அவள்தான் அறிவாள்!

வெய்யில் சுட்டுப் பொசுக்கியது.

# கதிர்க் கொத்து 14

## ரங்கூன் பட்டு வந்தது

''அயித்தைமவன் வந்துஅனைய நேரமாச்சுப்போலே!' என்று நிதானமான குரலில் விசாரித்தவண்ணம், மலர்ச் சிரிப்பை இதழ்களில் ஏந்தி நயமான நாணத்தைக் கண்களில் தாங்கி வாசலில் நடந்துவந்த தைலம்மை, ஈரப் புடவையின் முகதலைவை நன்றாக இழுத்துவிட்டுக் கொண்டு குனிந்த தலை நிமிராமல் முகப்புத் திண்ணையில் சற்றே ஒதுங்கினாள்.

ஏதோ சிந்தனை வசப்பட்டிருந்த சிங்காரம் குரல் கேட்டுத் திரும்பி, விழிகளைத் திருப்பித் தைலம்மையை ஏறிட்டுப் பார்த்தான்; பார்த்த சடுதியிலேயே பார்வையைத் தாழ்த்திக் கொண்டான். ''நான் வந்து குந்தி வீசம் நாழி கூட ஆகியிருக்காது, அம்மான் மவளே!'' என்றான்.

''நல்லவேளை,'' என்று சொல்லிக் கொண்டு அவள் நிலைப்படியைத் தாண்டி உட்புறம் சென்றாள். உள்ளே சென்றவள் வெளிப்புறம் மீண்டபோது, சின்னாளம்பட்டிப் பச்சைச் சேலையும் தட்டுமறித்த ஊதா ரவிக்கையும் அவள் மேனியை அலங்கரித்திருந்தன. நெற்றித் திட்டில் பொட்டு ஒளிர்ந்தது. காதுச் சிமிக்கிகளைத் துடைத்த வண்ணம் வந்து நின்றாள் அக்கன்னி. அவளுக்குச் சடங்கு சுற்றிய விசேஷத்துக்கு எடுத்திருந்தது அந்தப் பட்டும் ரவிக்கையும் 'இந்த அயித்தை மவன் அண்ணிக்கு இருந்திருந்தாக்க, அவுக அயித்தை வீட்டு உலுப்பை வச்சிருக்க வேண்டியது. எப்படியோ அல்லாம் மாறியிருச்சு!' என்றும் அவள் எண்ணிக் கொண்டாள்.

''பழையது சாப்பிட வாங்க, அயித்தை மகனே!'' என்று கூப்பிட்டாள் தைலி.

அருகிலிருந்த பையை நோட்டம் பதித்தவாறு இருந்த சிங்காரம், ''இந்தாலே வாரேன்,'' என்று கூறினான்.

அவள் விரைவுடன் உள்ளே சென்றாள். கொல்லையி லிருந்த ஆடுதுறை வாழை மரத்தில் ஓர் இலையைக் கிள்ளி வந்தாள்; கழுவினாள். நடையில் இலையைப் போட்டாள். கஞ்சியைப் பிழிந்து வைத்தாள். ஈயக் குவளையில் பசு மோரைக் கொணர்ந்தாள். உப்புக்கல் வந்தது; 'சுண்டல் சாகம்' வைத்தாள். வறுத்த குடமிளகாய்களைப் பரப்பி னாள். குளியலுக்குப் போகுமுன் பொரித்து வைத்திருந்த நித்திலிப் பொடிகளையும் இட்டாள். பிறகு, மீண்டும் வெளியே வந்தாள்; அழைத்தாள்.

யையும் கையுமாக அவளைத் தொடர்ந்து உள்ளே சென்றான் சிங்காரம். ‘‘அம்மான் வரலையே இன்னம்?’’ என்று கேட்டான்.

‘‘அவுக வாரதுக்கு நேரமாகும் போலத் தோணுது வயலிலே நடவு நடக்குதாம். தண்ணிப்பாட்டுக்குக் கவலை இல்லை. ஆனதாலே, இந்தக் கருத்தம் வெள்ளாமையை இரண்டாம் போகமாய் நடத்துருங்க. இந்தக் கங்காணமும் மகசூலும் முடிஞ்சா அறுபதாம் பட்டம் விளைச்சல் தீர்ந்த கதைதான். அப்பாலே, கொஞ்சம் இடைவெளி விட்டுப் புட்டு, ஆடிப்பட்டத்தைக் கவனிப்பாங்க. அக்கரைச்சீமை லாவாரம் கை இறங்கிப் போனதிலேருந்து அப்பன்காரவு களுக்கு வெள்ளாமையிலே தான் கண்ணு பாஞ்சிருக்குது!.... கடலைக்காய், எள்ளு இதுகளிலேயும் உபரியாய்க் கிடைக்குது. அப்பன்காரக எனக்கு வேண்டியதைச் சேர்த்துத்தான் வச்சுக்கிட்டு இருக்காரு. பணங்காசிலே கறாராயிருப்பாங்க; வம்பு சண்டையிலவும் கடுமை காட்டு வாங்க. இடைநட்டிலே பொம்பளை ஒருத்தி சவகாசத்திலே ஒரு மாதிரி நடந்துகிட்டு இருந்தாங்க. அந்தச் சனியனும் விலகிடுச்சு. அந்தப் பொம்பளையும் காலாவதி ஆயிடுச்சு. மத்தப்படி, அப்பன் காரகளுக்கு நானின்னா ஒரு கவலை தான்; அக்கறைதான்; பாசம்தான்!...’’ என்று சொல்லி நிறுத்தினாள் தைலம்மை.

‘‘வீட்டு விவகாரம், வயல்நிலவரம் அல்லாத்தையுமே கரைதலைப் பாடமாய் வச்சிருக்கியே நீ?’’ என்று அதிசயப் படலானான் சிங்காரம்.

‘‘தானாப்பளியா இருந்தாக்க, இந்தக் காலத்திலே காலந்தள்ள முடியுங்களா? மானமா வாழவேணுமின்னா, அல்லாத் தாக்கல் தகவலிலேயுந்தானுங்களே பொறுப்போட இருக்க வேணும்! சரி, குந்துங்க. அப்பன் வாரதுக்குத் தாமசம் ஆகிம்னுதான் பண்ணைக்கார காத்தான் மகன் நான் குளிச்சுத் திரும்பையிலே சொல்லிட்டுப் போனான்!’’

சிங்காரம் சாப்பிட அமர்ந்தான். "விருந்துச் சாப்பாட்டுக்கு ஒப்ப இருக்குதே வெஞ்சனங்க?" என்றான்.

"விருந்தாடிக்குக் கொஞ்சம் கூடுதலாத்தானே செய்ய வேணுமுங்க?"

"நான் விருந்தாடியாவா ஒனக்குத் தோணுறேன்?"

"நீங்க எப்பவும் எனக்கு அயித்தை மவனாத்தான் தோணுவீங்க!"

"பின்னே ஏதுக்கு இம்புட்டு சாகமெல்லாம்?..."

"ஒண்ணும் பிரமாதமா வைக்கல்லை. இன்னம் எம்புட்டோ சீரச் செய்ய வேணும்னுதான் நெனைச்சேன். அப்பாலே மதியத்துக்கு ஆக்கிப்புடுறேன்."

"ஆத்தாடியோ! விருந்தும் மருந்தும் மூணு வேளை யின்னு ஒரு பேச்சு உண்டே?"

"அதெல்லாம் ஒங்கமட்டுக்கு விலக்கு. நீங்க எப்பவும் இங்கிட்டே சாப்பிடவேணும்."

"நெசமாவா?"

"பொய் பேச மாட்டேன் நான்!"

"எப்படி இருந்தாலும், ஒங்கண்ணாலம் மட்டுக்கும் தானே இந்த உபசாரம் அல்லாம்!"

அவள் ஏனோ சிறுபொழுது தயங்கினாள். பிறகு சித்தம் தெளிந்தவளாகச் சுதாரித்துக் கொண்டாள். "அதுக்குள்ளாற நீங்களும்தான் கண்ணாலம் காட்சி கொண்டாடிப்பிடுவீங்களே?" என்றாள் அவள்.

இப்போது சிறுபொழுதுக்கு சிங்காரம் தயங்கினான் "ஆமா, ஆமா!" என்றான்.

"சரி, சாப்பிடுங்க!"

"ஊம்!"

அவன் உப்புக்கல்லைத் தூவிப் பிசைந்தான். சாப்பிடத் தொடங்கினான்.

"நீ சாப்பிடலையா?"

"நீங்க சாப்பிடுங்க. அப்புறம் நான் சாப்புடுறேன். சுடுசோறு உங்களுக்கு ஆக்கவேணுமே!" என்று கூறியபடி, அடுப்படியை அடைந்தாள்.

எலிகள் முண்டியடித்து ஓடின.

'மூசுமூசு' என்று அவன் சாப்பிட்டு முடித்தான். கையலம்புவதற்கு எழும்ப மறந்து, பலத்த ஆலோசனையின் வசப்பட்டான். பராக்கு பார்த்தபடி இருந்தான். சிந்தனை தெளிந்ததும் எழுந்து கை கழுவினான் சிங்காரம். கைகளைத் துவாலையால் துடைத்துக் கொண்டு தோளில் போட்டுக் கொண்டு, பொட்டலத்தைப் பிரித்து இத்தி புகையிலையை எடுத்துக் கடைவாயில் அடக்கிக் கொண்டான். தன்னைத்தானே ஒருதரம் பார்த்தான். தன்னைத் தானே சுயப்பரிசோதனை ரீதியில் பார்த்தான். சில நாழிப் பொழுதுக்கு முந்தி களத்துமேட்டில் நடந்த சம்பிரதாயப் பேச்சு வார்த்தைகள் அவன் மனத்துள் எதிரொலித்தன. பிறகு அவன் தன் பையைத் தொட்டான். அது அவன் உள்ளத்தைத் தொட்டதுபோலும்! ஆழ்ந்த பெருமூச்சு வெட்டிப் பாய்ந்தது. 'தைலி!' என்று ஒரு முறை விசையுடன் அந்தப் பெயரை உச்சரித்தான். இன்பச் சிரிப்பு அவனது உதடுகளில் கரை சேர்ந்தது. வெக்கை தாளவில்லை. சொக்காயைத் தளர்த்திவிட்டுக் கொண்டான்.

தைலம்மை வந்தாள். அவளுடன் அவளது லக்ஷ்மீகரமும் வந்தது.

"தைலி, மதியத்துக்கு எனக்கும் சேர்த்து உலையிலே அரிசி போடவேணாம். நான் சிலட்டூர்வரைக்கும் போய்த் திரும்பலாம்னு ரோசிச்சிருக்கேன்!" என்று தெரிவிப்புக் கொடுத்தான் சிங்காரம்.

"போறதை சாப்பிட்டுப்புட்டுப் போங்கங்கிறேன். அயித்தைமவனே! இது எப்பவும் ஒங்க ஊடுதான். திரும்பத் திரும்ப நான் ஒங்களுக்கு யாபகப்படுத்துறது அவ்வளவு உசிதமாயிருக்காதுங்க!" என்றாள் தைலம்மை, மென் குரலில்.

"இந்த மட்டுக்கும் நீ எம்பேரிலே பாசம் வச்சிருக்கிறது நான் செஞ்ச பூசா பலன்தான்!...சரி, நான் விசயத்துக்கு வாரேன்!"

"சொல்லுங்க நெஞ்சிலே குந்தியிருக்கிறதை!"

"ஒனக்கு காலைப் பொழுதிலே களத்துமேட்டுப் பக்கமா நடந்த சங்கதி ஏதுனாச்சும் காதுக்கு எட்டுச்சா? ஊர்க்காட்டிலே யாரானும் ஓடியாந்து ஒங்காதைக் கடிச்சிருப் பாங்களே?" என்று விசாரிப்புச் செய்தான் தைலியின் அத்தை பிள்ளை.

"சேதி விழல்லீங்க!"

"அதிசயக் கூத்தாயிருக்குதே?"

"சேதியையும் நடப்பையும் நானே நேருக்குநேராக் கண்டறிஞ்சேனுங்க. களத்துமேட்டுப் பக்கத்திலே உள்ள சீரங்கத்தம்மா ஊட்டிலே குந்திக்கிணு அல்லாத்தையும் கேட்டுக் கிட்டேனுங்க!..."

"அப்படியா?"

"ஊம்! ஒரு பொண்ணு உசிருக்குசிரான சேக்காளிங்க ரெண்டு பேருக்குள்ளேயும் ஒருதவசலை உண்டாக்கி வேடிக்கை பார்த்த கதையை—வேடிக்கை காட்டின நடப்பைப்—பார்த்தேனுங்க!"

"நான் சிநேகிதத்தை உசிராய் மதிக்கிறவன்; அதே நேரத்திலே என்னோட மனசிலே வளர்த்து வாழ்த்திக்கிட்டு இருக்கிற நேசத்தையும் உசிராய் மதிக்கிறவன், அம்மான் பெத்த தவமே!" என்றான் சிங்காரம்.

"ஊம்!"

"நானே ஒன்னைக் கொண்டுக்கிடுறதாய் நான் சம்பிராயம் கட்டியிருக்கேன்...! சேக்காளி சரவணனோ, தானே ஒன்னைக் கட்டிக்கிறதாய் சபதம் வச்சிருக்கான்!"

"கேட்ட தாக்கல் தானுங்க இதுக!"

"ஆமா! ஆமா!"

"இதிலே ஒங்க முடிவு என்னாங்க?"

"வாழ்ந்தா ஒன்னோடே வாழுறது; இல்லாங்காட்டி எனக்கு இந்த லோகமே தேவை இல்லை என்கிறதுதான் எம் முடிவு!" என்று தீர்மானத்தின் கம்பீரம் குலுங்கத் தெரியப்படுத்திச் சிரித்தான் சிங்காரம். அவன் அவளை ஏறிட்டு நோக்கி ஊடுருவிப் பார்வையிட்டான்.

"ஒங்க மனசு புரியுதுங்க!..." திகைப்புடன் பேசினாள் தைலி.

"இனிமே ஒம்மனசுதான் புரிய வேணும்!..." என்று தடுமாறிய வண்ணம் சொன்னான் சிங்காரம்.

"ஆத்தா மூத்தவ எனக்கு என்ன முடிவு எழுதி வச்சிருக்காளோ?" என்று உருக்கமாக மொழிந்தாள் வாலைக்குமரி.

"ஒம் முடிவைத்தான் ஆத்தா காட்டேறியும் எழுதிக் காட்டப் போறா!"

"அயித்தை பெத்த நவரத்தினத்துக்கு பேசவா தெரியாது?"

"எம்பேச்சு இப்ப சோறு போடாது, தைலி! ஓம் பேச்சுத் தான் இப்ப ஊருக்கு விருந்து வைக்கப் போவுது!"

"அப்பிடிங்களா?"

"பின்னே?"

"பார்க்கலாமுங்க!...எனக்கும் கொஞ்சம் தவணை வேணும். ரோசனை பண்ணிச் சொல்லிப்பிடுறேனுங்க!"

"தாராளமாய்ச் செய், தைலி!" என்று சொல்லிக் கொண்டே பையைப் பிரித்தான் இளவட்டம். "தைலி, நாளான்னிக்கு பெருங்காறை முண்டர் கோயில் திருநாளுக் காக ஒனக்கு இந்த ஏழைக்குத் தக்கனை ஒரு எள்ளுருண்டை கொண்டாந் திருக்கேன். அதை ஏத்துக்கிடு. ஒன் முடிவுக்கும் நான் இப்ப தார பரிசுக்கும் ஒக்குமத்து இல்லே. ஆனபடி யினாலே, நீ இதை வாங்கிக்க!" என்று சொல்லி, அவளிடம் பரிசை நீட்டினான் அவன்.

பரிசாரித்தது எள் உருண்டையல்ல.

அழகு கொழித்த ரங்கூன் பட்டுச் சேலையும் ரவிக்கை யும் இருந்தன!

"நீங்க என் அயித்தைமவன். நீங்க தாரதை மறுதளிக் கிறதுக்கு எனக்குச் சட்டமே கிடையாதுங்க!... அடி நாள் தொட்டு எம்மனசைத் தொட்ட சீலர் நீங்க! இடையிலே ஓங்க கதை எதுவும் எங்களுக்கு மட்டுப்படாமப் போனதாலேதான், நம்ம ரெண்டுவீட்டுப் பெரியவுங்களும் கையடிச்சுச் சத்தியம் பரிமாறிக்கிட்டதையும் செயல்படுத்த ஏலாமப் பூடுச்சு!... ஆனதாலேதான், எனக்கு அசலிலே மாப்புள்ளை தேட வேண்டிய கட்டாயம் வாய்ச்சுது! இப்ப எம்பாடு சோதனை யாய்ப் போச்சு! சிலட்டூர்க்காரரு என் நெஞ்சிலே விளை யாடிக்கினு இருக்கிற காலத்திலே ஆத்தா ஓங்களைக் கொண்டாந்து காட்டி வேடிக்கை காட்டுற நேரம் இது!...

இதைப்பத்தி இனியும் வளர்த்தி நான் பேசுறது உசிதமாப் படாது! .. கொடுங்க, ஒங்க மனசுக் கோசரம் மனம் ஒப்பி இதுகளை வாங்கிக்கிடுறேனுங்க; வாங்கிக்கக் கடமைப் பட்டவள் நான்!.... முறைமைக்காரங்க ஒங்க மனசுக்கு இதாலே அமைதி கிடைக்குமின்னாக்க, நான் தட்டி நடக்க ஏலுமா?... மத்தப்படி, எம் முடிவுக்கும் இப்ப ஒங்க பரிசை வாங்கிக் கிட்ட நடப்புக்கும் ஒக்குமத்து இல்லேன்னுதான் ஒங்களுக்கே புரிஞ்சிருக்குமே!"

"அதைத்தான் நானே செப்பிட்டேனே! தைலி?"

அவள் பரிசுப் பொருள்களை ஏற்றுக் கொண்டாள்.

அப்போது, பொன்னாயி வந்து ஓரமாக நின்றாள்.

"என்னாடி பொன்னாயி?" என்றாள் தைலி.

"நம்ம குடியிருப்பு குணவதியை அதோட முறை அயித்தை மவன் வந்து சிறை யெடுத்துக்கிணு பறிஞ்சிட்டா ராம்! ஊரே திமிலோகப்படுது!" என்றாள் பொன்னாயி.

"ஆத்தாடி! அப்படின்னா, அந்தப் பனங்குளம் பணக்காரப்புள்ளை ஏமாந்திட்டானாக்கும்!..."

"ஆமா!"

"ஊம், இது குணவதியோட இஷ்டத்தைப் பொறுத்த விசயம்!" என்றாள் தைலம்மை.

"முறைக்காரனின்னா, அதுக்கு ஒரு தனி மவுஸ் தானே?" என்றாள் பொன்னாயி.

"நேசம் விளையாடுற விளையாட்டு ரொம்ப ரொம்ப அதிசயமாத்தான் இருக்குது!... இல்லையாடி, பொன்னாயி?"

"மறுகா?" என்று சொல்லிவிட்டு வந்து வழியே நடையைக் கட்டலானாள் பொன்னாயி. அவள் அவசரக் காரியல்லவா? தங்குவாளா, தரிப்பாளா?

தீர்ந்த புன்னகையுடன் காணப்பட்டான் சிங்காரம்.

மௌனம் கோலோச்சியது

"அம்மான் மவளே! நான் கிளம்பட்டுமா?"

"சரி. ஆனா, சாப்பாட்டுக்கு வந்துப்புடனுமுங்க!..." என்று வேண்டுதல் விடுத்தாள் தைலம்மை.

"ஒம் பேச்சைத் தட்டமுடியுமா?" என்று அன்பின் பரவசத்துடன் இணக்கம் சொன்னான் சிங்காரம். எழும்பினான்.

"இப்ப எங்காலே போறீங்க?"

"எங்க ஒண்ணுவிட்ட சின்னாத்தா வூட்டை வாடகைக்குக் கேட்டிருந்தேன். துரவச்சி வாங்கியாரப் போகிறனாக்கும்!..."

"அப்படிங்களா? செய்யுங்க!"

தைலம்மை பேசிமுடிக்கவில்லை.

அப்போது அங்கே செங்காளியப்பன் சேர்வை வந்து நின்றார், 'ஆத்தா' என்று விளித்த வண்ணம்.

"வாங்க அம்மான். மூஞ்சி கிறக்கம் தட்டியிருக்கே! சாப்பிடுங்க! இந்தா ஒரு நொடியிலே திரும்புறேன்," என்று சொல்லிப்பிரிந்தான் சிங்காரம்.

"நல்லதுப்பா!" என்று ஆமோதித்தார் சேர்வை. பிறகு, மகளைப்பார்த்து, "ஆத்தா, கஞ்சிபோடு. செமந்த பசியாய் இருக்கு!" என்றார் பெரியவர்.

"சரிங்க, அப்பா!"

# கதிர்க் கொத்து 15

## தாலிப் பிரச்சினை

ஏப்பம் பறித்த வண்ணம், செங்காளியப்பன் சேர்வை நடைக்குவந்து, அங்குக்கிடந்த கயிற்றுக்கட்டிலில் உட்கார்ந்தார். அவரிடம் வெற்றிலைப் பெட்டியைக் கொண்டு வந்து வைத்தாள் சேர்வை மகள் தைலம்மை. "சாப்பிட்டியா ஆத்தா?" என்றார் தந்தை. மகள் 'ஊம்' கொட்டினாள்.

"ஆத்தா, பங்குனி நாலிலே ஒரு முகூர்த்த நாள் இருக்காம், நகரத்து ஐயர்சாமி சொன்னாரு. அப்பவே ஒங் கண்ணாலத்தை முடிச்சப்புட வேண்டியதுதான். இன்னம் பதினைஞ்சு நாள் இருக்கு. ஒனக்கு அட்டிகை செய்யிறத்துக்கு தையிலேயே தங்கம் கொடுத்தாச்சு. அட்டிகையாவே ஒங்கண்ணிலே காண்பிச்சு உன்னைப் பிரமிக்க வைக்கணுமின்னுதான் இந்த விசயத்தைக் கமுக்கமா வச்சிருந்தேன். மத்தப்படி, ஒன் ஆத்தாளோட எல்லா நகை நட்டுந்தான் பெட்டகத்திலே பத்திரமாயிருக்கு. நெல்லுக் கவலைதான் எப்பவும் நமக்கு இல்லே!... மற்ற அலுவலுக்கு பண்ணைக் காரனுகதான் கைகட்டிச் சேவகம் பண்ண காத்துக்கிட்டு இருக்கானுகளே?..." என்று தம் பேச்சைத் தொடங்கினார் சேர்வை. "இன்னொரு சங்கதியும் காதுக்கு எட்டுச்சு. உங்க சித்தப்பன் ஊட்டிலெய்யும் அன்னையத் தேதியிலே கொட்டு மேளம் கொட்டுமாம்!" என்றும் தெரிவித்தார் அவர்.

"அப்படிங்களா? பிறத்தியார் சங்கதி இருக்கட்டும் முதலிலே நம்ம ஊட்டுத் தாக்கலுக்கு வருவோம்!...ஆமா, கண்ணாலத்துக்குத் தேதி எல்லாம் வச்சுப்புட்டீங்களே! மாப்பிள்ளை யாருன்னு சொல்லலீங்களே, அப்பாரே," என்று கேள்வி விடுத்தாள் தைலம்மை.

"இதிலே என்ன சம்சயம்?... சிலட்டூர் மாப்புள்ளை சரவணன்தான் உனக்குப் புருசன்!.... ஏதுக்கு இப்பிடிக் கேட்கிறே?... ஓஹோ! இப்பத்தான் யாபகம் வருது. எம் பேரிலே உண்டாகியிருந்த களங்கத்தைப் பத்தி துண்டுமுறிச் சாப்பிலே அவுக பேசினாங்களே, அது சம்பந்தமாப் பேசுறீயா?... அதெல்லாம்தான் தீர்ந்து பூடுச்சே?...நான் கொண்டுவச்சிருந்த செல்லாயி காலமானசங்கதியோட எல்லாத் தொல்லையும் கழிஞ்சிருச்சுதின்னு செப்பிட்டாங் களே சரவணன் மாப்பிள்ளே?... இதுபத்தி ஒங்கிட்டவும் காலம்பற ஓடியாந்து விளக்கிப்பிட்டாங்களாமே?...வயல் வரப்பிலே அவுகளே நேருக்கு வந்தும் எங்கிட்டே சமாதானம் சொல்லி, தேதி வைக்கச் சொல்லிட்டாங்களே?..." சேர்வை பேசினார்.

"அல்லாம் சுத்தம் தானுங்க, அப்பா, அது குறிச்சு உங்க காதிலேயும் ஓதிட்டாங்களா? எங்கிட்டவும் மூச்சுக் காட்டினது ஒட்டுக்கு மெய்தானுங்க!" என்று ஒப்புதல் மொழிந்தாள் தைலம்மை.

"பின்னே இதிலே என்ன சங்கடம்?

"இருக்குங்க சங்கடம்!... அந்தச் சிலட்டூர் மச்சான் காரக என்னையே கட்டிக்கிட துடிக்கிறாக! நம்ம அயித்தை மவனும் என்னையே கொண்டுக்கிட வேணும்னு தவம் இருக்காகளே?"

"இதென்ன புதுக் கதை?"

"புதுக் கதைதான், ஆனா, பழங்கதை புது உயிர் கொண்டிருக்குது. சங்கதி அம்புட்டுத்தான்!...."

"சிங்காரம் நம்மவீட்டுக்கு முறை மாப்பிள்ளையா வர வேண்டியவன்தான். ஆனா, அதுக்குத்தான் ஆத்தா ஒப்புதல் இல்லாம, அவனைக் கண்ணுப் புறத்தாலவே இம் புட்டுக் காலமாய்க் காட்டலயே சாமி?"

"ஆனா, இப்ப அது வந்திருச்சுங்களே? காலம்பற களத்துமேட்டுப் பொட்டலிலே இந்த ரெண்டு பேரும் கூடி ஆளுக்கு ஆளு சவால் விட்டுச் சபதம் வச்சிருக்கிறாங்களே?... நானே ஒளிஞ்சிருந்து இதையெல்லாம் ஒட்டுக் கேட்டேனுங்களே? சிலட்டூர்க்காரரு என்னைக் கண்ணாலம் பண்ணிக் காட்டுறதாய்ச் சம்பிராயம் வச்சாரு; நம்ம அயித்தை மவன் அவருக்கு என்னையே வாழ்க்கைப்பட வைக்கிறதாய்ச் சபதம் வச்சிருக்கிறாருங்களே?...."

பொறி தட்டினாற் போலத் தடுமாறினார் சேர்வை. பாக்கை வெட்ட முனைந்தவர், பற்களைக் கடித்துக் கொண்டார். "செல்லாயி விசயம் குறிக்கிடாட்டி, அப்பவே பரிசம் போட்டிருந்தா, இந்தத் தர்ம சங்கடமெல்லாம் விளைஞ்சிருக்குமா?" என்று வருந்தினார்.

"அப்பாரு பேச்சைப் பார்த்தாக்க, அயித்தை மவனைப் பிடிக்கலையின்னு தோணுதே?" என்று மென்று விழுங்கினாள், தைலி.

"சிலட்டூர்ச் சம்பந்தப் பேச்சு அடிபடுறத்துக்கு முந்தியே சிங்காரம் வந்திருந்தா, நானும் என் அக்காளும் கையடிச்சுக்கினமாதிரி, அவன்தான் எனக்கு ஆசைமச்சானா ஆகியிருப்பான்! இப்ப காரியம் மிஞ்சியிருச்சே? பெரிய இடத்துக்கு வாக்குக் கொடுத்துப்புட்டேனே, பெண்ணே?"

"நிசந்தான், அவுக வந்து எங்கிட்டே என்னென்னமோ சொல்லிட்டுப் போனாங்க. இருக்கிற நேசரைப் பார்த்தா, நான் இல்லாட்டி, நம்ம அயித்தை மவன் உசிர் தரிச்சிருக்கக் கூட மாட்டாங்க போலத் தோணுது!"

"என்ன ஆத்தா, உம் பேச்சு புதுத் தடத்திலே இப்ப போகுது?"

"தடம் ஒன்னும் புதிசு இல்லீங்க. நடந்த நடப்பை. செப்புறேன்; நடக்க வேண்டியதுக்குக் கேட்கிறேன் அவ்வளவுதான்!"

"ஆனா, சிலட்டூர்ப் புள்ளி விவகாரம் என்ன ஆகிறதாம்?"

"அவுகளும் வந்துதான் எங்கிட்டேகிளிக்குப் படிக்கனை யடிச்சிப்பிட்டுப் போனாங்க!"

"அப்புறம் என்ன தைலி, ரோசனை?"

"அந்த ரோசனையைத் தானுங்களே அப்பாரே, ஒங்க கிட்டே கேட்கிறாள் ஒங்க பொண்ணு."

சிறிது நாழிகை மௌனத்தையும் எச்சிலையும் விழுங்கி னார் சேர்வை.

"நான் பெரிய இடத்துப் பொல்லாப்புக்கு ஆளாக ஒப்ப மாட்டேன், தைலி!"

"பொல்லாப்பு கெடக்கட்டும். சிலட்டூர்ச் சம்பந்தம் நடந்து முடிஞ்ச கதையையும் அயித்தை மகன்கிட்டே புட்டு வச்சுச் சொல்லிப்புட்டேனுங்க கச்சிதமாய்!"

"ஒனக்கு யாரை ஆத்தா புடிக்குது?"

"என்னோட நெஞ்சிலே விளையாடுறவுங்க சிலட்டூரு மச்சான்.... ஆமாங்க, சிலட்டூர் மாப்பிள்ளை! இப்படித்தான் இனிமே சொல்லியாக வேணும்! ஆனா, என் நினைவிலே விளையாடுறவுங்க என் அயித்தை மவனுங்க!" என்று நிதானம் பிறழாமல் குறிப்பிட்டாள் தைலம்மை. அவள் குரல் தாழ்ந்திருந்தது. "நிலைமையை வஞ்சனை இல்லாமப் புட்டுக்காட்டிச் சொல்லிப்புட்டேன்!... எனக்கு சிலட்டூர்ச் சம்பந்தம் தான் புடிக்குது, அது ஒசந்த இடம். இந்தக் கண்ணாலம் காட்சி நல்லபடியா நடந்திட்டா, நம்ம குடும்பத் துக்கும் ஏராளம் நல்லது கெடைக்கும்!...ஆனா, சிங்காரம் நம்ம வூட்டுக்கு வந்தா, நம்மளுக்குக் கயிஷ்டம்தான் ஒட்டிக்கு ரெட்டி ஆகும்!... சரி, ஓம் முடிவு என்னான்னு தராசு முள் கணக்கிலே சொல்லிப்புடு!" என்றார் அவர்.

"எம் முடிவைக் கேட்கிறவரைக்கும் எனக்குச் சந்தோசம் தாங்க. பணம் காசை இப்ப விளையாட விடாதீங்க ஒங்களுக்கு அது முக்கியம். எனக்கு மனசுதான் முக்கியம். நான் ஒரு சோதனை வைச்சு, இந்த மாப்புள்ளைங்க ரெண்டு பேரிலே யாரு எஞ் சோதிப்பிலே கெலிக்கிறாங்களோ, அவுகளுக்குத்தான் நான் முந்தானை போடுவேணுங்க! அல்லாக் கதைக்கும் கூடிய சீக்கிரத்திலேயே ஒரு முடிவு காட்டிப்புடுவாளுங்க மூத்தவள்!..." என்றாள் தைலி. எதையோ நினைத்துக் கொண்டு உள்ளே போய்த் திரும்பினாள். இரண்டு பைகளைக் கொண்டு வந்து வைத்தாள். "இதுக ரெண்டும் ரெண்டு மாப்புள்ளைக்காரக எனக்குக் குடுத்திட்டுப் போயிருக்கிற பரிசுகள்!... அல்லாம் ஒவ்வொரு விதத்திலே ஒசந்த சேலை, ரவிக்கைங்க!..." என்று விவரம் கூறி அவற்றை உடைத்துக் காட்டினாள் அவள்.

அவற்றைப் பார்த்த சேர்வைக்கு வாயெல்லாம் பல்லாகி விட்டது. மறு கணத்தில் அவர் முகம் 'சூ' மந்திரக்காளி' போட்ட மாதிரியாகச் சலனம் கண்டு களை ஒடுங்கியது. "எல்லாம் ஒரே குழப்பமாயில்ல இப்ப எனக்குத் தோணுது!" என்று அவர் ஆற்றாமையுடன் சொல்லிக் கொண்டிருக்கையில், வெய்யிலில் வேர்க்க விறுவிறுக்கக் குடியானவன் ஒருவன் ஓடோடி வந்து நின்றான்.

உள்ளே போய்விட்டாள் கன்னி.

"ஏன்னடா, உடையப்பா!" என்று கேட்டார் சேர்வை.

"ஐயாவைத்தான் பார்க்க வந்தேன்!"

"என்னைத் தேடி வந்திச்சாக்கும்? அதுக்காகவா மாங்குடியிலேயிருந்து நாலு கல் தொலைவுக்கு இப்படி ஓட்டம் பிடிச்சு வந்திருக்கிறே?"

"நீங்க ஒண்ணுங்க, எசமான்!..."

"நானு இப்ப ஒண்ணுதானே? அதான் எங்கூடப் பொறந்தவன் வெட்டிக்கிட்டு ஒதுங்கிட்டானே? சரி, விசயத்துக்கு வா!"

"வந்துங்க உங்ககிட்டே அடகு வச்ச எம் பெஞ்சாதி வீட்டு தாலியைத் திருப்பிக்கிட்டுப் போக வந்திருக்கேனுங்க!" என்று வருத்தம் தொனிக்க உரைத்தான் உடையப்பன்.

"ஒரு வருஷக் கெடு கேட்டிருந்தியே?"

"உள்ளதுதானுங்க, ஐயா. ஆனா, இப்ப என் சம்சாரம் கெடு தப்பியிடும்போல ஒரு இக் கட்டு வந்திருச்சிங்க. அவளுக்கு ரொம்ப தக்கா முக்கியா இருக்குது. அவ பூவும் மஞ்சளுமாப் போக ஆசைப்படுறா. கட்டின தாலி கழுத்திலே இருக்கவேணும்னு துடிக்கிறா. அவ கடைசி விருப்பத்தை நிறைவேத்த வேண்டாமுங்களா?"

"அப்படின்னா, என் வட்டி தண்ணியிலே போயிடுறதா?"

"கணக்குப் போட்டு எடுத்துக்கிடுங்களேன்!"

"அப்படி வா வழிக்கு!" என்று அட்டகாசமாகச் சிரித்தபடி உள்ளே சென்றார்.

திரும்புகையில் அவர் கையில் தாலிப் பொட்டும் சிறிய சிட்டைக் குறிப்பும் இருந்தது. விரல்களை மடக்கிப்புள்ளி போட்டார். மனக்கணக்குப் போடும் நிலை. "நீ அடகுவச்சு மாசம் வள்ளிசா நாலு முடிஞ்சுது. ஆனா, நம்ப பேச்சுப் படிக்கு ஒரு வருஷத்து வட்டி 'கணக்குப் போட்டு, எல்லாம் சேர்த்தால் எம்பது ரூபாயும் அரையே அரைக்கா ரூபாயும் வருது. காசுப்படி, அரையே அரைக்காலுக்கு அறுபத்தி மூணு காசு ஆகுது. சில்லறை ரெண்டு காசு தேட வாய்க்காது. அறுபத்தஞ்சு காசாத்தான் குடுத்துப்புடு, உடையா!" என்று குளிப்பாட்டிப் பேசினார் பெரியவர்.

"வந்துங்க...இப்ப எங்கையிலே எழுபத்தஞ்சுதான் இருக்குது. நான் நடப்பு வட்டிப்படி போட்டுக் கொண்டாந் தேன். நீங்க எதிர்பார்க்கிற சொச்சம் எட்டுமாசத்துக்கும் வட்டி கொண்டாரலை. அதனாலென்ன? சொன்ன சொல் லுக்கு மாத்துப் பேச மாட்டேனுங்க இந்த ஏழை. உள்ளதை வாங்கிட்டு தாலியைச் சுருக்கண நீட்டுங்க. மிச்சத்தை வார விசாழச் சந்தைக் கெடுவுக்குக் கொண்டாந்துப்புடுறேன்!" என்று தலையைச் சொரியலானான் உடையப்பன்.

சேர்வை சிரித்தார். "தாலிக்கு ஒண்ணும் குந்தகம் வந்திடாதுடா. போயி சாடா பணத்தையும் பைசாப்படி எண்ணி வச்சுப்புட்டு ஒன் தாலியை மகாராசனா திருப்பி மீட்டுக் கிட்டுப் போ! இதிலே வேறே ஒண்ணும் கசகல் தேவையில்லை!"

"இதையே உங்க தம்பிகாரர் கையிலே தானுங்க மால் பண்ணிக் கொண்டாந்திருக்கேன்!"

"இப்ப அவன்கிட்டவே சொச்சத்தையும் தண்டு பண்ணிக்கிட்டுவா. ஓடு!...சேரிச் சாம்பான் குத்தகை நெல் தாரதுக்கு மேலேயும் கீழேயும் பார்த்தான். கூழைக் கும்பிடு போட்டான். இன்னிக்கு வயல் பக்கத்திலேயிருந்து திரும் புறப்ப அவன் குடிசைகிட்டே எட்டி நின்னு கோபிச்சுக் கிட்டேன். அந்திக்கு நெல்லைக் கொண்டாந்து போட்டுப் புடுறதாய்ச் சொன்னான். காசு சும்மாவா கிடைக்குது?... பைசா, பைசாவாச் சேர்த்த பணம் இது! நீ ஓடு. உனக்குக் கடன் தர காத்துக்கிட்டு இருக்கிற அந்தக் கர்ண மகாராசன் கிட்டவே போயி வாங்கிட்டு வா!" என்று மூர்த்தன்யமாகச் சொல்லிவிட்டார் செங்காளியப்பன்.

"கொஞ்சம் தயவு பண்ணுங்க!.... உங்க குடி விளங்குமுங்க!"

“இப்ப விளங்குறது போதும். இதுக்கு ஒன் வாழ்த்து தேவையில்லே எனக்கு!”

உடையப்பன் போனதும் வந்ததுமாகத் திரும்பி, பாக்கிப் பணத்தை பைசாப்படி கொண்டு வந்தான். நீட்டினான். தாலியை வாங்கிக் கொண்டான். “ஒங்களை விட ஒங்க தம்பி எம்புட்டோ தங்கமான ஆளுங்க!” என்று வியாக்கியானம் செய்தான் உடையப்பன்.

“அவனுக்கு புதையல் கிதையல் கிடைச்சிருக்கும். அதான் அவன் தங்கமாவும் வெள்ளியாவும் இருக்கான் போல!” என்று ஏகத்தாளமாக வார்த்தைகளை அடுக்கினார் சேர்வை.

“ஆமாங்க, அவரோட குணத்துக்கு அவருக்குக் காலம் பற அவர் உழுத நிலத்து மண்ணிலே புதையல்தானுங்க கிடைச்சுதாம்!” என்றான் உடையப்பன்.

“அப்படியா?” என்று வாயில் ஈ புகுந்தது கூடத் தெரியாமல் மலைத்துப் போனார் ‘வேனா’!....

உடையப்பன் அவரது அத்துமீறிய திகைப்பை அளக்கும் நிலையில் இல்லை. ஆகவே அவன் தலை மறைந்தது.

“அப்பா!” என்று அலட்டிய தைலி தன் தந்தையை இம் மண்ணுக்குக் கொணர்ந்து நிறுத்தினாள்.

அவர் விழித்துப் பார்த்தார். மகள் வைத்திருந்த பைகள் இரண்டும் குடைராட்டினம் சுற்றின. மனம் ‘சடுகுடு’ ஆடியது. “ஆத்தா, இதுக ரெண்டிலே எதைத் திரு நாளைக்கு உடுத்திக்கிடப்போறே?” என்று வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுகிற அமைப்புடன் துருவினார் முதியவர்

"இப்பைக்கு இதுகளிலே எதையும் நான் கட்டிக்கப் போறதில்லை. எல்லாம் ஒரு முடிவு கண்டுதான் இனி!..."

"ஓம் மனசான மனசை பெத்த அப்பனாலே கூட படிக்க ஏலலையே, தைலி?"

"உள்ளதுதாங்க. நானு மாப்புள்ளைங்க ரெண்டுபேர் மனசைப் புரிஞ்சுக்கிடாம அவுக தந்திருக்கிற இந்த லஞ்சத்தை எப்பிடிங்க ஏத்துக்கிட முடியும்?" என்று கோபக் குரல் தூவினாள் முத்தாயி பெற்ற மகள்.

"அதுவும் சரிதான்!....கோபத்தை ஆத்திக்க, ஆத்தா!"

தைலம்மை மனச்சாந்தி பெற்றுத் திகழ்ந்தாள். "அயித்தை மவன் வாரமின்னு சொன்னாங்க. இன்னம் காணலையே?" என்று கவலைப்பட்டாள் அவள்.

ஆனால், அவள் அத்தை மகன் வாசல் திண்ணையில் அமர்ந்து கொண்டு உள்ளே நடந்த வாதப் பிரதிவாதங் களைச் செவி மடுத்துக் கொண்டிருந்த துப்பு அவளுக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை!

# கதிர்க் கொத்து 16

## தைலம்மையின் அரசியல்

பெருங்காரை மிண்டர் திருநாளுக்கு போய்த் திரும்பிய வில்வண்டியிலிருந்து இறங்கிய தைலம்மை திருப்பூட்டிய திருமகள் போன்று பொலிவு பெற்று விளங்கிய கோலத்துடன் வாசலில் நடந்து வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தாள் அந்திச் சிந்தூரம் அவளுக்குத் துணை சென்றது.

சுவரில் தொங்கிய கண்ணாடி அவளை வருந்திக் கூப் பிட்டது. அவள் ஒன்று சேர்ந்து நடந்தாள். சீதளத் தென்றல் மெல்ல வீசியது. ஆடியைப் பார்த்தாள் பாவை. நட்டுக்கள் துலாம்பரமான கவர்ச்சியுடன் விளங்கின. தனக்குத் தானே

பரவசமான நிலையை மீளவும் எய்தினாள். "ஒன்ன பெத்த முத்தாயியே மறு பொறப்புக் கொண்டு வந்திருக்கனை தோணுது, தைலி!" என்று பொன்னாயி சொன்னதுதான் எத்தனை உண்மை!....

பூச்சரத்தைக் கழற்றி பேழையில் வைத்துத் திரும்பினாள் தைலம்மை.

"ஆத்தா, வந்திட்டியா?" என்று கேட்டவாறு வந்தார் தைலியின் தந்தை.

"ஆமாங்க," என்று பதில்மொழிந்தாள் சேர்வையின் புத்திரி. அவள் சிம்மினி விளக்கைக் கொளுத்தினாள். அடுப்படியை அடைந்தாள். சவுக்குமார் இரண்டைக் கையில் பற்றியவளாக, அடுப்பின் முன் குந்தி தீப்பற்ற வைத்தாள். இருட்டின் தடிப்பு உட்புறம் கனத்து வந்தது.

"ஆத்தாளுக்கு நாள் முச்சூடும் அடுப்படியிலே வேகிறதுதான் அலுவலாப் போச்சு. ஆனா, பங்குனி வந்திட்டா இந்த வேலை வெட்டி குறைஞ்சிரும்," என்றார் சேர்வை.

"அப்பவும் நான்தானுங்களே சோறு ஆக்க வேணும்?"

"வேலை செமந்து இருந்தாக் கூட, அப்ப ஒரு புது உற்சாகம் ஓடுமில்ல உன் மனசிலே!"

"அதெல்லாம் இல்லைங்க. பெத்தவுகளுக்கு எங்க கடமையைச் செய்யிறதுதானுங்களே, எனக்குச் சந்தோசம் குடுக்கும்!"

"ஒனக்கு வக்கணையாப் பேசுறதுக்கா சொல்லித்தரணும்?... ஊம், இந்தக் கெழட்டுக்குத்தான் இனிமே சோத்துக்குத் திண்டாட்டம் வரப் போவுது!"

"ஊஹூம், அப்பிடியொண்ணும் நடக்கமாட்டா தாக்கும்."

"வார மாப்புள்ளைக்கு நான் ஒரு சுமையா இருந் தேன்னா?..."

"அப்பிடிச் சுமையின்னு ஒங்களை நெனைக்கிற ஆம்பளை எனக்குத் தேவையில்லேங்க!..."

"தங்கமே! உம் மனசு இந்த விசயத்திலே புரியாதா எனக்கு?"

"எந்த விசயத்திலவும் எம்மனசு ஒங்களுக்குப் புரிஞ்சது தானுங்களே, அப்பாரே?"

"ஒங்கண்ணால விசயத்திலே மட்டுக்கும் என்னாலே ஒன்மனசைத் தடம் கண்டுக்கிட ஏலலையே, தைலி?"

"அல்லாம் தன்னாலே புரிஞ்சுடுமுங்க. அததுக்கு வேளை வரவேணுமே?"

"ஆனா, கோயிலிலே நடந்துக்கிட்ட ஓம் போக்கு எனக்கு அச்சத்தை ஊட்டுது தைலி!"

"இதிலே அச்சத்துக்கு மார்க்கமில்லீங்களே!... சிலட்டூர் காரகளும் நம்ம அயித்தை மவன்காரகளும் போட்டி போட்டுக்கிட்டு ஒட்டுப்பழமும் பலாச்சுளையும் வாங்கித் தந்ததை நானு வாங்கிக்கமாட்டேன்னு சட்டம் படிச்சது தானுங்களே தர்மநாயம்?" ஒருத்தர் தந்ததை வாங்கிக் கிட்டா, இன்னொருத்தருக்குச் சள்ளை. ரெண்டுபேர் வீட்டுதையும் வாங்கிக்கிட்டா, அது வெக்கம் கெட்ட பொழைப்பு. ஆனதாலேதான், அவுக ரெண்டுபேர் தந்ததை யுமே ஏத்துக்கிடலை!... அவுக ரெண்டு ஆளுங்களுக்குமே எம்மேலே ஊர்ப்பட்ட சடனை இருக்கும். அதுக்கு நான் என்ன செய்யிறதாம்?.... விதி ஆட்டம் போடுது. அது போடுற ஆட்டத்துக்கு சாமிதான் முடிவு காட்டவேணும்!..." என்று நிறுத்தினாள் தைலி; நெடுமூச் செறிந்தாள். மார்பகம் எம்பித் தணிந்தது.

'ஊம்' கொட்டிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார் சேர்வை. குடுமி அவிழ்ந்து விழுந்ததுகூட அவருக்குப் புலனாகக் காணோம்.

தைலி புடவையைக் களைந்து மாற்றிக் கொண்டு, உலை வைக்கலானாள்.

கோயில் நடப்பு நடந்து காட்டியது.

சுவாமிக்கு மாவிளக்குப் போட்டு, தேங்காய் உடைத்து சாமிகும்பிட்டுவிட்டுத் தந்தையுடன் கோயிலை வலம் வந்தாள் தைலம்மை. குனிந்த தலை நிமிரவில்லை.

அப்போது, கரக ஆட்டம் நடந்த இடத்திலிருந்து வந்தான் சரவணன். தைலியை அண்டினான். ஐந்துரூபாய் நோட்டு, பழவகைகள், பூச்சரம் ஆகியவற்றை அவளிடம் நீட்டினான் அவன்.

சற்று நேரத்திற்குள், சிங்காரம் அங்கு தோன்றினான். அம்மாதிரியே அவனும் ஐந்து ரூபாய், பூ, பழதினசுகளை அவளிடம் நீட்டினான்.

அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள் தைலி. பிறகு, சோகப்புன்னகை பூத்து, "நீங்கரெண்டு பேரும் என்னைச் சமிச்சுப்புடுங்க!.... என்னைத் 'தனது' பண்ணுற திலே உங்களிலே யாரும் இனிமே எண்ணம் கொள்ளப் புடாதுங்க!.... நான் கன்னிகழியாப் பொண்ணு! இந்த மாதிரி நடப்பு எனக்குக் கட்டோடு புடிக்கலை!... இந்தப் போட்டா போட்டி எதுக்கு? ஆத்தா சொல்லுற முடிவு ஒருநாளைக்குப் புரிஞ்சிடத்தானே போகுது!... அப்பாலே ஆகட்டும் அல்லாம்!" என்று தீர்ப்பு வழங்கிவிட்டு நகர்ந்தாள் தைலம்மை. மகள் பேச்சு செங்காளியப்பஞ் சேர்வையின் வாயைக் கட்டிவிட்டதோ?

கண்களைத் துடைத்துக் கொண்டு அடுப்பை மேலும் ஊதினாள் அவள். உலைத் தண்ணீர் கொதித்தது. சீரகச் சம்பா அரிசியைக் குண்டானில் களைந்து உலையில் போட்டாள். நெருப்பைத் தள்ளிவிட்டாள். உசிலைச்சுள்ளியைத் திணித்தாள். விட்டத்தில் பறந்த வௌவால்களின் கூச்சல் மிதந்து பரவியது.

விளக்கைப் பழமென நம்பி வட்டமிட்டன இரண்டு விட்டில்கள்.

“ஐயா இல்லீங்களா?” என்றொரு குரல் கேட்கவே, வாசலுக்கு வந்தாள் தைலி.

தெரிந்த ஆள் ஒருவன் வந்து நின்றான். “நெல்லு ஒரு பொதி விலைக்குத் தாரமிண்ணாங்க,” என்றான்.

“நெல்லு இல்லைங்க. உபரியைத்தான் அரசாங்கத்திலே பறிச்சுக்கிட்டாங்களே!” என்றாள்.

அப்போது சேர்வை வந்தார். விவரம் அறிந்தார். “நெல்லு பொதி தொண்ணூறு தேவையா?” என்று கேட்டார்.

“குடுங்க!”

“அப்பா, அரசாங்கத்துக்குத் தெரியாமல் இன்னமும நெல்லைப் பதுக்கி வச்சிருக்கீங்க?...இது துரோகமில்லையா!”

“துரோகத்தைப் பத்திப் பேசினால் பொழைக்க முடியுமா? .. நீ சும்மா உள்ளாறப்போ,” என்று காட்டமாகச் சொல்லிப் பணத்தை சுளைசுளையாக எண்ணி வாங்கினார். “பின்னாடி வா!” என்றார்.

கொல்லைப் புறத்தில் வைக்கோல் பட்டறையின் அடியில் இருந்த நெல் மூட்டைகளை எடுத்து அளந்து கொடுத்தார். “நாட்டைப் பத்தி நமக்குக் கவலை இருந்தால், நம்பளைப்பத்தி யாரு கவலைப்படுவாங்க?...அவனவன்

பணம் வருதின்னா, என்னென்னவோ வேசம் போடு றானே?...ஆளுக்குத் த கு ந் த ா ப் பி லே நடிச்சாத்தான் கையிலே காசு புரளும்!...நீ போ. எல்லாம் எனக்குத் தெரியும்!...இனிமே, யாரும் இங்கிட்டு நெல்லைத் தேடி வர மாட்டாங்க!'' என்று ஒரு போடு போட்டார் சேர்வை.

''அவங்க அவங்க கொள்கையும் குறிப்பும் எப்பிடி இருந்தாலும், நம்ம நாட்டோட நல்லது கெட்டதிலே நம்ம ஒவ்வொருத்தருக்கும் பங்கு இருக்குது என்கிற பொதுத் தேச உணர்ச்சியை நாட்டுச் சனங்க ஒவ்வொருத்தரும் சகட்டு மேனிக்கு உணர்ந்துக் கிடக்கூடிய நாள் வந்தாத் தான் நாடு முன்னேற முடியும்னு சீனாக்காரனை எதிர்த்துப் பேசையிலே நம்ம நாட்டுத் தலை மந்திரி, ஐயா சொல்லி யிருக்கிறதை அப்பத்தா ஆட்டுப் பத்திரிகையிலே படிச்சே னுங்க. அந்தச் சங்கதி ஒட்டுக்கு வாஸ்தவமின்னுதான் தோணுதுங்க!...'' என்றாள் தைலம்மை.

மகளை வியப்புடன் பார்த்தார் தந்தை ''அரசியல் விவகாரங்கூட எம் பொண்ணுக்குத் திரமாய் திரவுசாய்த் தெரிஞ்சிருக்குது போல! பலே!...எனக்கு இதெல்லாம் புரியாது. பணம் காசுதான் புரியும்! நீ அப்பனை குத்திக் காட்டுறத்துக்கு முந்தியே நானே சொல்லிப் போட்டேன்!''... என்று கடகடவெனச் சிரிப்பைக் கக்கினார் செங்காளி யப்பன். சுருட்டு எரிந்தது; நாற்றம் மட்டும் எரியவில்லை. ''ஒஞ் சித்தப்பனுக்கு இப்ப உண்டான திமிரு வந்திருச்சு. புதையல் வேறே கிடைச்சிருக்கில்ல!....அவன் இப்ப தன் மக கண்ணாலத்தை நல்ல இடத்திலே முடிச்சுப் பிட பாடுபடு றானாம்!...எப்படியும் சிலட்டூர்க் கங்காணி மகன் சரவண னையே மாப்புள்ளையாக்கிப் போட வலை விரிச்சிருக் கானாம்!...நம்பகிட்டே மோதுற ரெண்டு மாப்புள்ளை களிலே நீ கழிக்கிற மாப்புள்ளையை தன் அப்பன் தனக்குக் கட்டி வைக்கிறதாய் பூங்காவனம் உங்காதிலே விட்ட சமாச்சாரம் சுத்தப்புரட்டு... ரோசிச்சுக்க, தைலி!... என்றார் சேர்வை.

கைவிளக்கைத் தூண்டிவிட்டாள் தைலி தகப்பன் முகத்தில் வேதனை புள்ளி வைத்திருந்ததை அனுமானித்துக் கொள்ளத் தவறவில்லை அவளது கன்னி மனம். "அப்பா, என் வாழக்கை வெறும் பணம் காசிலே மட்டும் அமையிறதை விரும்பலை நான்!... அதுக்குள்ள வேசம், அந்திசு, கிராக்கி சவடால் எல்லாம் நித்தியமில்லே!...ஆனா, என்னோட வாழ்க்கை தூய்மையான அன்பு என்கிற அடித் தளத்திலே அமைய வேணும்னு நெனைக்கிறேன் நான். இதுதான் உசிதம்னு எனக்குப்படுது!...பணம் காசுக்கு இல்லாத மதிப்பு இதுக்குத்தான் இருக்கு. பணம் இன்னைக்கி வரும்; நாளைக்குப் போயிடும். வாழ்க்கை வருமுங்களா?" என்றாள் தைலம்மை. அவள் உணர்ச்சிச் செறிவுடன் பேசியதால், கோல விழிகளில் ஈரம் விளைந்தது.

"உன் இஷ்டப்படி முடிவு சொல்லிப்பிடு. இனிமே இதைப்பத்தி உன் வாயைக் கிண்ட மாட்டேன்! சாமி ஆணை இது!" என்றார் சேர்வை. "ஆமா, சிங்காரம் மூந்தாநாள் பழஞ் சோறு சாப்பிட்டுப்புட்டுப் போனதி லேருந்து இங்கிட்டு வரலையே?...என்று விசாரித்தார்.

"இல்லீங்க; பாவம்!" என்று இரக்கப்பட்டாள் அவள்.

"விதி போடுற நாடகம் இம்புட்டு கமுக்கமாய் இருக்கும்னு எனக்கு இம்மா நாளும் புரியவே இல்லை!"

அவள் மௌனமானாள்.

காட்டுப் பூனை வீட்டுக்கு ஏன் வந்தது?"

அப்போது, "ஆண்டே!" என்று குரல்வந்தது.

சேர்வை வெளியே வந்தார்.

பள்ளன் சாம்பான் வாசலின் தலைப்பில் மூட்டையுடன் நின்றான். அவன் சொந்தக்காரன் ஒருவனும் இன்னொரு மூட்டையுடன் காட்சி கொடுத்தான். "குத்தகை நெல்லு ரெண்டுகலம் இருக்குங்க! ஆண்டே கோவத்துக்குப் பயந்து

கொண்டாந்துப்புட்டேங்க. இனிமே எங்க வூட்டு அடிப்படியிலே எத்தனை நாளைக்கு பூனை குடியிருக்கப் போகுதோ, அது எங்க சன்னாசிச் சாமிக்குத்தான் வெளிச்சம்!'' என்று மெல்லிய தொனியில் தெரிவித்தான் அந்த ஏழை.

எல்லா நடப்பையும் கவனித்தாள் தைலி.

மரக்கால் எடுக்க உள்ளே சென்றார் சேர்வை.

''சாம்பான்! நீ கிலேசம் காட்டாதே! எங்க அப்பார் இல்லாத கடுத்தத்திலே இங்கிட்டு வா அப்பைக்கப்ப ஒனக்குப் படி அளக்கிறேன். எனக்கு உள்ள படி நெல்லிலே தாரேன். எஞ்சாப்பாட்டைக் குறைச்சுக்கிட்டாப் போவுது!'' என்று சன்னமாகச் சொன்னாள் தைலி.

''ஆத்தா, நீ நல்லா இருப்பே! ஒங்குடி நல்ல விளங்கும், தாயே!'' என்று கை தொழுதான் சாம்பான்.

அதற்குள் சேர்வை வந்து தொலைந்தார். ''என்னாடாலே, கூழைக் கும்பிடு போடுறே?'' என்று இரைச்சல் போட்டார்.

''இது மெய்யான கும்பிடுங்க. அன்பு காட்டின வூட்டுக்குக் கும்பிடு கொடுத்தேனுங்க!'' என்று உருக்கமாக உரைத்தான் சாம்பான். நா தழுதழுத்தது. நிமிர்ந்து நின்றான். கண்கள் கலங்கின.

''அப்பிடியா? சந்தோசம்! நன்றி மறக்காம இருந்தாச் சரி!'' என்று சொல்லி, நெல்லை அளந்தார். ''குறுணி, பதக்கு'' என்ற எண் வரிசை தொடர்ந்து, ''இருபத்தி நாலு மரக்கால்!'' என்று நின்றது. ''ஒருபிடி நெல்லு குறையுது. தொலைஞ்சு போ!'' என்றார்.

ஏழைகள் தலைதப்பிச் சென்றனர்.

"ஆத்தா, நான் இம்பிட்டுப் பாடு படுறதெல்லாம் நான் போகையிலே அள்ளிக் கட்டிட்டுப் போகவா? அல்லாம் ஒனக்காகத்தானே?" என்றார் சேர்வை.

"அதெல்லாம் மெய்தாங்க. எனக்குத் தர்ம நியாயமாயுள்ள சொத்து கெடைச்சாப் போதுமுங்க. எனக்கு மாப்புள்ளையா வார ஆம்பளை வறளியா இருந்தாக்கூட, இருக்கிற சொத்து ரெண்டு தலைமுறைக்குப் பத்துமே!" தைலி பேசினாள்.

"உம் பேச்சு யதார்த்தப்படி சரிதான். அதுக்காக, பணம் வேணாம்'னு சொல்லிப் போட வாய்க்குமா? பணம் தான் ஆத்தா, பந்தியிலே பேசும்! அந்தத் தைரியம் உலகத்திலே வேறே எதுக்கு இருக்குதாம்?" என்று குறுக்குச் சாலிட்டார் அனுபவஸ்தர்.

"அதுவும் சரிதானுங்க!....பணத்து அருமை ஒங்க மகளுக்குப் புரியாத ரகசியமில்லையே, அப்பாரே!"

"பலே, பலே! இப்பதான் என் வயிறு நெறைஞ்சிருக்கு!" என்று நிம்மதியாகச் சிரித்தார் சேர்வை.

"அப்பா, அப்பா! நீங்க ராச்சாப்பாடு உண்ணலை. மறந்துப்புடாதீங்க!" என்று சிரிக்காமல் சொன்னாள் தைலம்மை.

மகளின் சிரிப்பையும் சேர்த்து வட்டியும் முதலுமாகச் சிரித்தார் அக்கரைச் சீமை வீட்டுக்காரரான செங்காளியப்பன்!

அடைக்கலங் குருவி ஒன்று ஒழுங்கை நெடுகக் கத்திக் கொண்டு பறந்து சென்றது!

# கதிர்க் கொத்து 17

## மன ஆழி

பங்குனி பிறந்து விட்டது.

கன்னி முடுக்கில் நின்ற முருங்கைப் போத்து பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தது. ஈசான்யத்தில் வளர்ந்திருந்த கொன்றை மரம் பூக்களைச் சொரிந்து கொண்டிருந்தது. வாசல் திட்டில் வெள்ளையும் சிவப்புமாகப் பூக்கள் கலந்து சிதறிக்கிடந்தன. இளங்காலைக் கதிரொளியில் அக்காட்சி யில்தான் எத்துணை கவர்ச்சிப் பொலிவு!

'வீட்டுக்குத் தூரம்' இருந்த தைலம்மை மம்மலிலேயே குளித்து முழுகி வந்து விட்டாள்; அடிவயிற்றின் வலி சற்றே உபாதை மட்டுப்பட்டிருந்ததாகவே உணரலானாள். தலை மயிரை ஆற்றி, கோடாலி முடிச்சுப் போட்டிருந்தாள். கொண்டையில் ஓரேயொரு செவ்வந்திப்பூ அழகுடன் விளக்கம் தந்தது. அடுப்படியைவிட்டு வாசலுக்கு வந்தாள், சுங்கடியைச் செம்மைப் படுத்திக் கொண்டே ரவிக்கை, கைகளின் சுருக்கத்தைச் சரி செய்தாள். சற்றுமுன் நீர் மொண்டுவரச் சென்ற தருணம் சிங்காரம் எங்கோ விரைவு பாய்ச்சி நடந்ததைக் கண்டதும், அவனை விளித்து சாப் பாட்டுக்கு அழைக்க எண்ணினாள். மறுகணம் அவளுக்கு பெருங்காரார் முண்டர் கோயிலில் சரவணனிடமும் சிங்காரத் திடமும் செய்த எச்சரிக்கை ஞாபகத்திற்கு வந்தது. கட்டுப் படுத்திக் கொள்ள வேண்டியவள் ஆனாள். 'அயித்தை மவன் ரோசக்காரக!' என்ற தீர்மானம் அவளுள் உருப் பெற்றது.

நீர்முட்டி ஏந்தித் திரும்பிய நேரத்திலே அவள் சரவணனையும் சந்திக்கும் வாய்ப்புக்கிட்டிற்று. தான் விதித்த எச்சரிக்கையை அவனும் மறக்கவில்லை என்பதை அவள் கண்டு கொண்டாள். அதற்கு அடையாளமாக,

சரவணன் ''சோகமா?'' என்று கேட்டுவிட்டு ரேக்ளாவில் பறந்து விட்டான்! 'இந்த இளசும் ரோசக்காரருதான்!'

கோயிலில் அவள் சொன்ன எச்சரிக்கை மீண்டும் அவளுள் எதிரொலித்தது. '...என்னை தனது பண்ணுறதிலே உங்களிலே யாரும் இனிமே எண்ணம் கொள்ளப்புடாதுங்க!...' என்ற அந்த அறிவிப்பு அவளைச் சிந்தனை வசப்படச் செய்தது. அரைக்கணம் மனம் அயர்ந்த நிலையில் அப்படியே குத்துக் கல்லாக நின்றாள். தனக்கு சரவணனும், சிங்காரமும் அளித்த புடவை ரவிக்கைகளைத் திருப்பிக் கொடுத்து விடவேண்டுமென்று தந்தையிடம் அவள் தெரிவித்த போது, ''இதுகளைக் கொடுக்கவேண்டாம். அது அபசகுனமாயிருக்கும். உம்முடிவு அம்பலமானதும், அதுகளைப்பத்தி ரோசிச்சுக்கலாமே! ரெண்டு பேரிலே யாரோ ஒருத்தர் தந்ததை எப்படியும் நீ வச்சுக்கத்தானே வேணும்?'' என்று வாதிட்டார். அதற்கும் அவள் ஒப்பவில்லை.

''இதிலே எனக்கு என்னமோ இப்ப இஷ்டம் இல்லே; சமாதானமுமில்லே!...நீங்க அவுக அவுககிட்டே இதுகளைக் குடுத்துப்பிடுங்க. எனக்கு யார் மாப்புள்ளை என்கிறது தெளிஞ்சடியும், இதைப்பத்தி ரோசிச்சுக்கிடலாம். அதான் சிலாக்கியம்!'' என்று தைலம்மை சொல்லிவிடவே, அதன் பிரகாரமே அந்தப்புடவைகளை அவரவரிடம் சேர்ப்பித்தார் சேர்வை. அவர்கள் மறு பேச்சாடாமல் வாங்கிக் கொண்ட விவரமும் அவளுக்கு எட்டியது.

தைலம்மை கழிந்த கால நடப்பின் நினைவில் நின்று பெருமூச் செறிந்தாள்.

பொன்னாயி வேகமாக வந்தாள். கொஞ்சப் பொழுதுக்கு முந்தி அவள் வந்து நெல் கிண்டுவதற்காக வாசலைப் பெருக்கிவிட்டுச் சென்றிருந்தாள். ''தைலி!'' என்று பதட்டத்துடன் அலட்டிக் கொண்டு வந்து நின்றாள் பொன்னாயி.

“உங்க அப்பன்காரரோடே யாரோ ஒரு ஆளு சண்டை போட்டுக்கிட்டாங்க. உங்க அப்பாரு வச்சுக்கிட்டிருந்த செல்லாயிக்குச் சொந்தக்காரனாம். அந்தப் பொம்பளை யோட பணத்தை உங்க அப்பாரு ஏப்பம் விட்டுப்புட்டாராம். அந்தத் தடயம் கட்டுக்கிட்டு மல்லுக்குப்புடிச்சிருக்கான். பேச்சு தடிச்சு, கை கலப்புகூட வந்திருச்சு. நல்ல வேளையா, சிலட்டூர்க்காரரும் உன் அயித்தை மவனும் கூறுக்கிட்டு, அந்தப்புது ஆள் சேக்கைப் பிடிச்சு முன் அறை பின் அறையா நல்ல வாங்கிப் புட்டாங்க!.... அந்த அசலூர்க் காரன் பிராது போடுறதாய் சொல்லிப்புட்டுப் போயிட்டான். நல்லகாலம் இந்த ஆளுங்க ரெண்டுபேரும் வந்தாங்க. இல்லாங்காட்டி, நிலைமை படு மோசமாயிருக்கும். வந்தவன் கோமாவரத்தான் கணக்கிலே இருந்தான். நாகுடிக்கார னாம்!...” என்றாள் அவள்.

“அப்பாருக்கு வேறே ஒண்ணும் இல்லையே?” என்று கவலை மூள விசாரித்தாள் தைலி.

“ஊஹூம்!”

“அப்பன்காரவுகளுக்கு இப்பிடித்தான் ஒவ்வொரு சள்ளை வருது!... இந்த மாதிரி ரெண்டொரு தாக்கலிலே தான் அவர்பேரிலே எனக்கும் கெட்டாப்பிலே ஆத்திரம் மூளுது!...” என்று வருந்தினாள் தைலம்மை.

“விட்டுத் தள்ளு சனியனை!” என்று சொல்லி நெல் கூடையைச் சுமந்துவர ஏகினாள் பொன்னாயி.

“இண்ணைக்கி சந்தைக்கெடு வாச்சே?... அரிசி அரைக்க ஏலுமா?”

“அதுக்குத்தான் செட்டித் தெருவிலே ஒண்ணுக்கு ரெண்டா நெல்லு மிசினு இருக்குதே?...”

“சரி, சரி!”

சந்தைப் பேட்டையிலிருந்து பூவாயியின் தகப்பன் காய் கறி வாங்கித் திரும்பினார்.

பூவாயி இப்போது தைலம்மையின் மனத்தில் சுழன்றாள். 'பூவாயி கதை நெசமாவே கதையாட்டம் தான் நடந்திருச்சு!... பூவாயியை அது இஷ்டப்படி அதோட முறைக்காரன் கடத்திக்கிட்டுப் போட்டான். ஆன, பேசிவச்சிருந்த மாப்புள்ளைக்காரன் ஏமாந்திடலை. முறைக்காரனை அடியே தண்டமா அடிச்சுப் போட முனைஞ்சு, அதாலே ரெண்டுபேருக்கும் அடிதடி வந்து, கடோசீலே ரெண்டுபேரும் கோரட்டுப்படியை மிதிச்சிருக்காங்க! அப்பப்பா! ஒரு பொம்பளையின்னா, எம்புட்டு சோதனை வருது பூலோகத்திலே?...' எண்ணப் பூக்கள் மலர்ந்தன.

'என்னை உத்தேசிச்சு இது மாதிரி மாப்புள்ளைக்காரங்க ரெண்டு பேரும் சண்டை அடிச்சுக்கிடாம இருக்கவேணும். இப்பைக்கு உள்ள நிலவரத்துப்படி பார்த்தாக்க, அம்புட்டு லேசிலே இவங்களுக்குள்ளாற சண்டை வராது! ஏன்னா, அவுங்களுக்குள்ளாற உள்ள நேசம் தனிப்பட்டதாக்கும்!' இவ்வாறு அவள் சிந்தித்து ஆறுதல் படுத்திக் கொண்டாள்.

பொன்னாயி நெல்லைக் கொட்டி கிளறிக் கொண்டிருந்தாள்.

அப்போது, ஏதோ சத்தம் கேட்டது.

"என்னாடி பொன்னாயி, அது சத்தம்?"

"செட்டியவூட்டு ஆச்சிமாருங்க குப்பைச் சண்டை போட்டுக்கிடுறாங்க!"

தைலி காதுகளைத் தீட்டிக் கொண்டு கேட்டாள்.

ராகம் நீண்டது :

**"கொடிகட்டி அரசாண்டு நான்**
**குந்தவச்சு சோறு உண்ணேன்!**
**குடி கெடுத்த கூனி நீயும்**
**குடல் வத்திக் காயுறீயேடீ!**
**கும்பகருணன் பொண்டாட்டியே!"...**

தைலம்மை வாய்விட்டு நகைத்தாள்.

"ஆத்தாடி, ராக்காச்சி குரலாட்டம் கேக்குதே? அது கிட்டே யாரும் வந்து மிச்சம் கட்ட ஏலாதே? ஆச்சிகளுக்கு பாட்டு.

இட்டுக் கட்டுறதாட்டம் எப்பிடித்தான் சரளமா பாட்டு வருதோ?...படம் புடிக்கிறவுங்க கண்டாக்க, இதையும் படமாக்கிப்புடுவாங்க!" என்றாள்.

"நம்ம மாதிரி நாலு பேச்சு ஏசுறதோட நிக்கப்புடாதா? என்னமோ, செட்டித் தெருவிலே எம்புட்டோ பேருங்க விசயம் புரிஞ்சவங்க இருக்காங்க இந்த அசிங்கத்தை மட்டும் அவங்களாலே ஒக்குமத்தாய்க் கட்டுப்படுத்த முடியலையே இன்னம்?" என்று அபிப்பிராயம் கொடுத்தாள் பொன்னாயி.

தைலி தலையை உலுக்கினாள். அதற்குள் அவளுக்கு என்னவோ வேறு சிந்தனை வந்து விட்டதே! கடல் என்றால், அலைகள் அடிக்காமலா இருக்கும்? 'இந்தச் சேர்வைகாரர் விசயத்திலே இந்த ரெண்டு பேருக்குமே சீரான ஒரு அக்கறை இருக்கத்தான் இருக்குது!...'

கஞ்சிக்குக் கறிவேப்பிலை விற்றான் அரிமளத்துக்காரன்.

வாங்கினாள்.

விராட்டிச்சி பிச்சை கேட்டாள்.

போட்டாள்.

கணக்கன் விடுதி ஆள் ஒருவன் வந்து விதை நெல் 'ஜுங்கலம்' விலைக்குக் கேட்டான்.

மாமூல் விலைப்படி கொடுத்தாள்

"தாயம் ஆடுவோமாடி, தைலி?"

குரல் ஈந்தவள் பொன்னாயி.

"நான் இருக்குற இருப்பிலே, தாயம் விளையாடுறது ஒண்ணுதான் குறைச்சல் போ!" என்று அலுத்துக் கொண்டாள் தைலி.

"என்னடி அப்பிடி மனசு விட்டுச் சொல்லுறே?...ஒன் ஒருத்தியை உத்தேசம் பண்ணி அங்கிட்டு ஒருத்தரும் இங்கிட்டு ஒருத்தருமா தவிச்சுக்கிட்டு இருக்காகளே, நீ என்ன முடிவு பேசப் போறீயோ அப்படின்னு?...ஒனக்கென்னடி ராசாத்தி?... ஒன்னோட புத்திசத்திக்கும் உங்க ஆட்டுச் சொத்துபத்துக்கும் எந்த அதிர்ஷ்டசாலிக்கு எழுதிப் போட்டிருக்குதோ?....ம்...!"

"நீ போடி."

"நானு போயிட்டா, அப்புறம் எங்க ஆட்டுக்காரருக்கு யாரு சோறு ஆக்குறதாம்?"

"சத்த மூச்சுடாம இருக்கப்புடாதா?"

"நான் மூச்சுடாம இருந்தா, அப்பறம் என் உயிசிரு என்னஆகுமாம்?"

"அட சாமியே!"

"அந்தச் சாமியைச் சொல்லிக் காட்டுடி, தைலி!"

பன்றி ஒன்று நெல்லை மொய்த்துத் தின்றது.

பொன்னாயி கல்லைக் கண்டாள்; பன்றியையும் கண்டாள்!

"அந்த நாளையிலே அரமனையிலே சுயவரம் நடக்குமாம். ராசாமவள் வந்து மாலை வீசுவாளாம். அம்பத்தாறு தேசத்து ராசாக்களிலே யாரு கழுத்திலே அந்த மாலை விளுதோ, அந்த ஆம்பளைதான் அந்த ராசாத்திக்குப் புருசனாம்!...அதுப்படிக்கு, நீயும் நம்ம எருக்கலக் கோட்டை பூக்காரம்மாகிட்டே ஒரு பூமாலை வாங்கியாந்து, அந்த

ரெண்டு போட்டி மாப்புள்ளைங்களையும் குந்த வச்சு, மாலையை வீசிப்பிடு. அது யாரு கழுத்திலே விளுதோ, அவுகளையே நீ கொண்டுக்கடி!...” என்று சிரித்தாள் பொன்னாயி.

இதைக் கேட்டதும், தைலம்மைக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. “இந்தாப்பாருடி, பொன்னாயி! இதுமாதிரி கிண்டலுக்கும் நைத்தியத்துக்கும் உன்னைத் தொட்டு பொறுத்துக்கிட்டிருக்கேன். ஆபத்து சம்மத்து, ஒரு தூரம், தும்மலின்னா எங்களுக்குச் சோறு ஆக்கிக் கொட்டுறவ நீ. அந்த ஒரு நடப்புக்காவ நானு அடங்கி யிருக்கேன்!....வேறே அசலா இருந்தாக்க, இந்நேரம் சதைச்சு, ஆக்கினை பண்ணியிருப்பேன்! நடந்ததையும் நடக்கிறதையும் நெனைச்சு, இனிமே என்னா நடக்கப் போகுதோன்னு குமைஞ்சுக்கிட்டு குந்திக்கிட்டிருக்கேன். நீயே இப்பிடி எம்முன்னாலே நைச்சியம் பேசினேயின்னா, இதுபத்தி அசலவங்க என்னதான் பேசமாட்டாங்க? மாங்காய் புளிச்சதோ, வாய் புளிச்சதோன்னு பேசறது அவ்வளவு குளுமைப்படாது! ஆமா. அண்ணைக்கே எங்க அயித்தை மவன் அக்கரைச் சீமையிலேருந்து வந்திருந்தா, காதும்காதும் வச்சாப்பிலே கண்ணாலம் எப்பவோ கை கூடியிருக்கும். அவுகளைக் காணாததை ஒட்டி, வேறே இடத்திலே சம்பந்தம் பேசி பரிசம் போடுற தருணத்திலே, ஆத்தா பெரியவ அயித்தை மவனை இந்த மண்ணிலே கொண் டாந்து நிறுத்தியிருக்கா. அவ விளையாட்டை நெனைச்சு நான் மறுகிக்கிட்டிருக்கேன்! இந்த ரெண்டு பேருமே எம் பேரிலே மையல் கொண்டிருக்காங்க. இவுங்களிலே யாரை ஏத்துக்கறது, யாரை மறுக்கிறது—இவுகளை ஒருத்தரை எப்பிடி ஏத்துக்கிறது—இன்னொருத்தரை எப்பிடி மறுக் கிறதுன்னு புரியாமத் தவிச்சுத் தண்ணியா உருகுறேன் நான். இம்மாங்கொத்த இடசங்கத்திலே ஆம்புட்டு, நான் முழிச்சு திக்குமுக்காடிக்கிட்டு இருக்கேன். படுத்தா தூக்கம் வரல்லே. எந்திருச்சா, வேலை பார்க்க செகல்

இல்லே. உண்ணுற சோறு வாய்க்குக் கசக்குது; அப்படியே ரெண்டு பருக்கை உண்ணாலும், அதுவும் உடம்பிலே ஒட்ட மாட்டேங்குது! நீயே நாலுநாள் முந்தி கேட்டே, என்னடி, உன் உடம்பு இப்பிடி மெலிஞ்சிருச்சேன்னு! இப்படிப்பட்ட நிலவரத்திலே நீ என்னைக் கேலி பண்ணுறே கேலி!... ஊம்!''—வரவர, தைலம்மையின் குரல் சுருதி இறங்கி வந்தது. கடை விழிகளில் முத்துக்கள் உருக்காட்டின.

தோழியின் கண்களிலே கண்ணீரைத் தரிசித்ததும் பொன்னாயிக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. ''தைலி, நானு சும்மா விளையாட்டுக்குப் பேசப் போய், உன் மனசான மன்சு இப்பிடி தளும்புமின்னு துளிகூட நெனைக்கல்லே!... என் கேலியைப் பொறுத்துக்கிடு!... உங்கஷ்டம் எனக்கு இல்லையா? உம்மனசு நிலவரம் எனக்குப் புரியாதா? நீ உனக்குள்ளவே ஒரு போராட்டம் நடத்திக்கினு இருக்கிறே! இதுவும் எனக்கு அத்துபடிதான். ஆனா, நீ சாமான்யமான பொண்ணு இல்லேயிங்கிற ரகசியம் எனக்குத்தான் தெள்ளத் தெளிவாத் தெரியும். உனக்கின்னு ஒரு சொந்த முடிவை நீ வச்சிருப்பே என்கிறதும் எனக்குத் தெரியும்! எப்படியோ, நீயும் எங்களை மாதிரி குடியும் குடித்தனமுமா ஆகி, உன் வூட்டிலேயும் நல்ல விளக்கு ஏத்தி வைச்சுடு. அதான் என் இஷ்டமெல்லாம்!.... என் பேச்சைப் பெரிசுபடுத்தி மனசிலே பூட்டி வச்சுக்கிடாதே, தைலி!'' என்று அழாத குறையாகக் கெஞ்சினாள் பொன்னாயி. அவள் கண்களும் நீருபூத்தன.

கண்ணீருக்குக் கண்ணீர் துணை ஆயிற்று.

''நல்லது. நீ போ. வெயில் பொரி பறக்குது. பதம் தப் பாமல் அள்ளு போ!'' என்றாள் தைலி.

பொன்னாயி நெல்லில் ஒரு குத்து எடுத்துக் காலில் மிதித்து அரிசிகளை எடுத்து வாயில் போட்டுப் பதம் பார்த் தாள். பரக்கப்பரக்க நெல்லைக் குவித்து அள்ளத்தலைப் பட்டாள்.

தைலிக்குப் பசி. ஆனால், கஞ்சி குடிக்க மனம் ஒப்பவில்லை, ஏதேதோ சிந்தனைகள் அவள் மன ஆழியில் அலைகளாகக் கொந்தளித்தன. ‘அப்பன்காரரை இன்னம் காணலையே?’ ஒன்றும் இருப்புக் கொள்ளாமல் உள்ளும் புறமுமாக நடைபயின்றாள்.

நல்லவேளை!

அதோ, வந்து விட்டார் செங்காளியப்பன் சேர்வை!....

# கதிர்க் கொத்து 18

## கறையும் கரையும்!

வெக்கை தாளவில்லை!...

செங்காளியப்பன் சேர்வை உருமாலையை எடுத்து முகத்தைத் துடைத்தபடி உள்ளே பிரவேசித்தார்.

முகத்தைத் துடைத்தவளாக, நிலைப்படியில் நின்றாள் சேர்வை வீட்டுத்தங்கம் தைலம்மை, “வந்திட்டீயளா, அப்பா?” என்று ஆவல் துள்ளக் கேட்டாள். பாசத்தின் குமிழ்கள் சிதறிச் சேர்ந்தன.

“ஏன் ஆத்தா, உம் மூஞ்சி களைதப்பி காணுது?” என்று கவலை மேலிடக் கேட்டார் சேர்வை. தந்தை உள்ளம் தவித்தது.

“ஒண்ணுமில்லேங்க. வாங்க, பசியாற!” என்று கூறினாள். விரல்களைச் சொடுக்கி நெட்டி முறித்தாள். மருதாணி நகங்கள் பளபளத்தன.

“நான் பயந்துபோயிட்டேன். நல்லவேளை!... சரி, ஆத்தா! கஞ்சிக் கலயத்தை எடுத்து வச்சு, வட்டியிலே கஞ்சி ஊத்து. இந்தா வந்திட்டேன் மூஞ்சி கழுவிக்கிட்டு!”

அவள் நயமாக மூக்கை உறிஞ்சியபடி, உள்ளே நடந்தாள். தகப்பனின் ஆகார வசதியைச் செய்வதில் கருத்துக் கொண்டாள். வக்கணையாகச் சாப்பிடுவார் சேர்வை. அக்கரைச்சீமையில் புழங்கியவரானதால், அப்படிப்பட்ட தொரு வாய் ருசிபழகிவிட்டது. பணம் மிதந்தால், ருசியும் மிதக்கவேண்டும்தானே? உறைப்பு கூடுதல் வேண்டும். வேளாவேளைக்குக் கவுச்சியும் தேவைப்படும் அவருக்கு. ஊறுகாயும் கறாறாக இருந்தாக வேண்டும்.

தந்தை உண்டுமுடியும் வரை வாயாடாமல் இருந்தாள் தைலம்மை

அவர் சாப்பிட்டு முடித்தார். ''ஆத்தா, மதியத்துக்குக் கொஞ்சம் சுடுதண்ணி வச்சுத்தா,'' என்றார்.

'சரி' சொன்னாள் மகள். சிணுங்கல் இராமல் வெட்டிப் பாய்ந்தது. பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டாள், ''என்னமோ தவசல் நடந்துச்சாமே?'' என்று பைய கேட்டாள்.

''அது ஒங்காதுக்கும் எட்டிருச்சா? செல்லாயியோட முதல் புருசன் அவளை சதா அடிச்சு மிதிச்சு அவள் சேர்த்து வச்சிருந்த பணத்தை சீட்டாட்டத்திலே கல்லாக்கறியா அடிக்க முனைஞ்சான். இந்தத் தொல்லை பொறுக்காம, அவ எங்கிட்டே ஓடியாந்துதஞ்சமடைஞ்சா. நான் அவளுக்கு அடைக்கலம் குடுத்தேன். அதுக்கப்புறம் ரெண்டு வருசம் அரிதி அவன் இந்தப்பக்கமே தலையைக் காட்டலை. இப்ப அவள் செத்துப் போன சேதி கிடைச்சு இங்கிட்டு ஓடியாந்து, அவ வச்சிருந்த பணம் பூராத்தையும் கொடுன்னு எங்கிட்டே கேட்டான். அவளை வச்சுச் சவரணை செஞ்சதுக்கு அல்லாப் பணமும் தீர்ந்துபோயி, மேற்கொண்டு நானே ஏகப்பட்ட பணம் அவளுக்காக செலவழிச்ச நடப்பையும் இதம்பதமாகச் சொல்லிப் பார்த்தேன். அவன் கேட்காம, வார்த்தையை தடிப்பா வுட்டான். அப்பாலே எனக்குக் கண்டவாகிலே கோவம் மூண்டுச்சு. ரெண்டு பேருக்கும்

கைகலப்பு வந்திச்சு. அந்தச் சமயத்திலே சரவணனும் சிங்காரமும் வந்து குதிச்சு, அந்தப் பயலை வசமா மொத்திப்புட்டாங்க!... அந்தப் போக்கணம் கெட்ட பயல் எம் பேரிலே தாவா தொடுக்கிறதாக கருவிக்கிட்டு ஓடிட்டான்!... இந்த விசயத்திலே என்னை அசைக்கவே வழியில்லே!... இதுக்காக நீ ஒண்ணும் மனசை அலட்டிக்காதே, ஆத்தா!''

அவர் விஷயத்தை விளக்கினார்.

ஒவ்வொரு வில்லங்கமும் அறாம இருக்குதே?... ''இதையெல்லாம் நினைக்கிறதா? இல்லே, எங்கண்ணாலத்தைப் பத்தி எண்ணுறதா? விதி கண்ணாமூச்சு காட்டுது! எனக்குக் கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டதொத்து இருக்குதுங்களே?'' என்று துயர் காட்டினாள் தைலி.

''ஆத்தா, நீ மனசு செலுத்தி ரோசிச்சு முடிவு கட்ட வேண்டிய உங்கண்ணால நடப்பைப்பத்திநீ கவலைப்பட்டா யதேஷ்டம். மற்றப்படி என்னாலே ஒனக்கு யாதொரு சள்ளைக் கட்டும் வராது. மாசமும் பொறந்திடுச்சு. காற்றாட்டம் பொழுதும் ஓடிடும். பங்குனி நாவிலே ஒரு முகூர்த்த நாள் இருக்கு. அதுக்கு ஒருநாள் முந்தியானும் நீ உம்முடிவை திட்டவட்டமாச் செப்பிப்புடு. உம் பேச்சுத்தான் எனக்கும் முடிவு. உம் முடிவுதான் எனக்கு மூச்சு!....'' என்றார் சேர்வை,

''அதெல்லாம் நினைப்பிலே இருக்குதுங்க!''

பொன்னாயி வந்து தைலியிடம் சொல்லிக் கொண்டு போனாள்.

அவள் பேசி வாய் மூடவில்லை.

அவர் எழுந்து வெளிப்பகுதியை நோக்கி நடந்தார்.

வாசலில் எலும்பும் தோலுமாக ஒருத்தி நின்றாள். பரதைக் கோலம். பஞ்சடைந்த கண்கள். கிழிசல் துணிமணிகள். அவள் சேர்வையை ஆத்திரம் சுழிக்க நோக்கினாள். ''ஐயா, இனிமே என்னாலே உசிரோட இருக்க முடியாதுங்க,

என்னை உங்க கையாலேயே கொன்னு போட்டுப்புடுங்க ஐயா! உங்களுக்குக் கோடிப்புண்ணியம் கிடைக்குமுங்க!....'' என்று அழுதாள் அந்த ஏழைப் பெண்.

''சனியனே! நீ இன்னம் தொலையலையா?''

''ஏன் இப்படிக் கேக்கமாட்டீங்க? ஒருகாலத்திலே என்னோடு சவகாசம் தேவைப்பட்டுச்சு உங்களுக்கு. அப்ப எங்கிட்டே என்னோட அழகு இருந்திச்சு. பொறகு என் செகல் வடிஞ்சதும், என்னைக் கைவிட்டுப்புட்டு வேறொத்தியோடே சுத்தி அலைஞ்சிங்க! ஒங்களை நம்பி ஏமாந்த என்னை நல்லா ஏசுங்க, பேசுங்க. உங்க கையாலே ஏதாச்சும் நஞ்சைக் குடுங்க. உங்க சங்கனாத்தமே இல்லாமக் கண்ணை மூடிபோடுறேன்!...'' என்று அவள் அவரது, கால்களைப்பற்றிக் கதறினாள்.

அவளை எற்றித் தள்ளினார் சேர்வை. அதே சமயம், தையலியும் வெளியே வந்து விட்டாள். மறைந்திருந்து மேலும் கேட்கக் கூடிய நிலை அங்கு உருவாகவில்லை வந்த தைலம்மை, கதறி அழுத அவ்வுருவத்தைப் பார்த்தாள். அவளுக்கு நினைவு கூடி வந்தது. அந்த அபலையை இனம் கண்டுகொள்ள அவளால் முடிந்தது, ஒருநாள் தண்ணீர்க் குடத்துடன் திரும்பிய காலை, காத்தான் செட்டி சவுக்கைத் தோப்பருகில் மயக்கம் போட்டுக் கிடந்த இவளை வீட்டுக்கு அழைத்து வந்து சோறு படைத்து அனுப்பியதைத் தைலி நினைவு கூர்ந்தாள். இவள் பேரைக் கேட்டபோது, 'தாயே' இந்த நாதியத்தவளோட ஊரு, பேரு, கதை காரணம் எல்லாம் எதுக்கம்மா ஒனக்கு? நான் போயிட்டு வாரேன். தெய்வத்தை நினைச்சாலும் நினைக்காங்காட்டியும் தெனைக்கும் ஒன்னை மனசார நினைக்க மறக்க மாட்டேனாக்கும்!' என்று சொன்னவாகிலே விரைந்து மறைந்த விந்தையின் தடம் இப்போது தைலிக்குப் பட்டவர்த்தனமாகப் புரிந்துவிட்டது. அவள் அந்த அபலையை நெருங்கினாள். ''தாயே, நடப்பைப் புரிஞ்சுக்கிட்டேன். எங்க

அப்பாருக்காக நான் ஒன்னைக் கெஞ்சி வேண்டிக்கிறேன். எங்களை மன்னிச்சுப்புடு. ஒன் ஆயுசுபரியந்தம் இந்த ஊட்டிலே நானு ஒனக்குச் சோறு போடுறேன். நீ இங்கேயே தங்கிக்கிடு. வேறே யாரொண்ணையும் ஊர்க்காட்டிலே புகையவுட்டுப் புடாதே!'' என்று மன்றாடினாள் தைலி

''ஒம் போக்கு எனக்கு ரவைகூட புடிக்கலை, தைலி!'' என்று ஆத்திரத்துடன் இரைந்தார் செங்காளியப்பஞ் சேர்வை.

''ஒங்க போக்குத் தான் எனக்கு இத்திகூட புடிக்கலை, அப்பாரே!'' என்று எதிர்த்துக் குற்றம் சாட்டினாள் சேர்வை மகள்.

சேர்வை பதிலுக்கு ஒன்றும் சொல்லாமல் உள்ளே விரைந்தார். கால் நாழிப் பொழுது கழித்து சுருட்டும் புகைச் சலுமாகத் திரும்பினார். ''ஏலே பாஞ்சாலி!... இந்தா நூறுருவா. இதை வச்சுக்சிட்டுச் சாப்பிடு. பங்குனி முடியிற மட்டும் இங்கிட்டுத் தலையைக் காட்டாதே! அதுக்குள்ளாற எம்மவள் கண்ணாலம் முடிஞ்சிடும். அப்பாலே, நீ எப்ப வேணுமானாலும் வா! நீ ஒருத்திதான் என்னைச் சோதிக் கிறதிலே பாக்கி இருக்கே!.... வாரவிதி வந்துதான் தீரும்! அப்பாலே, எங்க பொண்ணு மனசுப்படி நீ இங்கிட்டே இருந்து சாப்பிடலாம். ஊம், கிளம்பு. ஊரிலே எதையும் சொல்லிப் புடாதே!... அப்புறம், நான மிருகமாய் ஆகிப் பிடுவேன்!'' என்று எச்சரித்துவிட்டு, சேர்வை துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வெளியில் கிளம்பினார்.

கும்பிட்ட பாஞ்சாலியின் ஈர்க்குச்சிக் கைகள் நடுநடுங் கின. ''நானு போயிட்டுவாரேன். நீ இவுக மகள் என்கிற துப்பு எனக்குத் தெரிஞ்சிருந்தும், அண்ணைக்குக்கூட ஒங்கிட்டே நான் எதைப்பத்தியும் சொன்னேனா? தாயே, உங் கண்ணாலம் சிரத்தையா நடக்கட்டும். நீ ரொம்பச் சீரோடே இருப்பே, தைலி!'' என்று சொல்லி விடைபெற்று நடந்தாள்.

அந்தத் தாய் சென்றதிக்கையே வெறித்து நோக்கிய வாறு நின்ற தைலியின் கண்களினின்றும் சுடுநீர் சுரந்து வழிந்தது. 'அட தெய்வமே! இடறின காலே இடறுதே?.... அப்பாரு போட்டு ஆடின வேசம் இன்னம் என்னென்ன மிச்சம்சொச்சம் இருக்குமோ?'....என்று மாளாத வேதனைச் சுமையுடன் நலிந்தது, சமைந்த அப் பெண்ணின் உள்ளம்.

கண்ணீரின் கறை அவளது செழித்த கன்னங்களின் கரையில் ஒட்டி உறவாடிக்கிடந்தது.

அடுப்பு பற்றி எரிந்தது.

தைலம்மையின் இதயத்தில் எரிந்த தீ அடுப்புக்கு இடம் மாறியது போலும்!

கோடிவீட்டுக் கோவிந்தம்மா புருஷன் திருக்கை மீனும் கையுமாக அவ்வழியே சென்றான்.

'அப்பன் காரவுக கோபத்துக்கு இனிமே நான் ஈடுகட்டி யாகணும்!.... அவுகளுக்கென்ன?.. அவுக சொகந்தான் அவுகளுக்கு ஒசத்தி!.... குடும்பத்தோட வழிவழி வந்த கட்டுக்கோப்புப்பத்தியும் கவுரவத்தைப்பத்தியும் என்னோட வார காலத்தைப்பத்தியும் யாருக்கு என்ன அக்கறை!' அவள் பெருமூச்சைப் பிரித்தாள்.

அவளுக்குத் திரும்பவும் தன்னுடைய மணவினைப் பிரச்சினை நினைவில் ஓடியது; புரையாக ஓடியது. மாப்புள்ளைக்காரக ரெண்டு பேரும் நாள் நெருக்குவெட்டிலே என்னைத் தன்னக்கட்டிப் பார்க்கிறதுக்கு ஆள் மாத்தி ஆள் ஒருத்தருக்குத் தெரியாம இன்னொருத்தர் வருவாங்க. எம் மனசை அவுங்க அவுங்க பக்கத்துக்கு வசப்படுத்துறத்-துக்கு இந் நேரம் என்னென்ன மாயமெல்லாமோ செஞ்சிருப்-பாங்க, நானுமட்டும் அன்னிக்குத் திருநாளப்ப அப்பிடி

உசார்ப் படுத்தலைன்னாக்க!...ரெண்டுபேரும் ஆளுக்கு ஆளு அவுக அவுக தன்னடச்சமூப்பாட்டம் என்னைக் கட்டிருக்கிடுறத்துக்குச் சம்பிராயம் கட்டிக்கிட்டாங்க. இதிலே மூலா தாரமாயிருக்கிற என்னைப்பத்தி அல்லது எம்புட்டு முடிவைப்பத்தி அந்த முடிவு யாரு பக்கம்சாயுது என்கிறத்தைப்பத்தி இத்தியாச்சம் அவுக ரெண்டுபேருக்கும் ஞாபகம் இருந்திருக்குமோ, என்னமோ?...சிந்தனைகள் சிதறின — களத்து மேட்டிலே மஞ்சிவெரட்டுக்காளை ஒண்ணை வடசீமையிலேருந்து அப்பன் காரரைப் புடிச்சாரச் சொல்லி, அந்த மாட்டை யாரு அடக்கி ஆளுவாகனோ அவுகளுக்கே நான் அப்படின்னு ஊர்ச்சாவடியிலே அம்பலப் படுத்தினா, இந்தச் சிக்கல் ஒரு நொடியிலே முடிச்சு அவுந்து பூடும்! இதெல்லாம் வெறும் கதை!...பொன்னாயி சொன்னாப்பிலே, சுயவரம் கூட நடத்தலாம். அது நம்ம செட்டித் தெரு அண்ணாச்சி எழுதுற கதை காரணத்துக்கு இணைஞ்சு வரும்!...இல்லாட்டி, ரெண்டு ஆம்பளைச் சிங்கங்களையும் கூப்புட்டு, யாரு புலிப்பால் கொண்டாராங்களோ, அவுகளைத்தான் நான் ஒப்புக்கிடுவேன்னு சொல்லலாமே! இது பயாஸ்கோப்புக்கு ஏத்தது! ம் ...!'

தன்னையும் மீறிய விதத்தில் அவள் சிந்தனை வசப்பட்டாள். தனக்குத்தானே எழுந்து முடிந்ததொரு தீர்மானமாக, ஒரு கணம் அர்த்தமுள்ள புன்முறுவலை ஏந்தினாள் இமைப்பொழுதுக்கு முந்தி தன்னுள் தோன்றிய உபாயங்கள் கூட அவளுக்கு இப்பொழுது அசம்பாவிதமான ஞாபகமாகப் பட்டது. கோயில் நிகழ்ச்சிக்குப் பிற்பாடு சரவணனோ, சிங்காரமோ, தன்னைச் சந்திக்காத தன்மையை நேர்மைக்கு எடுத்துக்காட்டாகவே அவள் கணித்தாள். ஆனால் அந்த நேரிய தன்மைகூட தன்னுள் இனம் புரியாத தவிப்பை உள்ளடக்கிக் காட்டி வந்த விந்தையையும் அவளது மனத்தின் மனம் உணர்த்திக் காட்டத் தப்பவில்லை என்ற யதார்த்தத்தையும் அவள் உணராமலும் இல்லையே!

கதிரவன் இறங்கு முகத்தில் இருந்தான்.

வடிதட்டில் சோற்றை வடித்துக் கவிழ்த்தாள் தைலம்மை. ஒருகால் மச்சம் ஏதாகிலும் தன் தந்தை வளமைப்படி வாங்கி வரக் கூடுமென்ற நினைப்பில் மிளகாய் அறைத்துத் தயார்ப் படுத்தி வைத்தாள். அடுப்பிலிருந்த எரிந்த பனைமட்டையை வெளியே தள்ளிக் கொஞ்சம் தண்ணீரை அதில் தெளித்தாள். அடுப்படியை விட்டு வெளியேறினாள்.

அப்பொழுது, சேர்வை கொடுவாய்ச் செங்கணி மீன்கள் நான்கு வாங்கி வந்தார். "ஆத்தா, இதுகளை ஆக்கு," என்று வெகு தன்மையுடன் சொன்னார். பழைய கோபம் அற்றவராகவே அவர் காணப்பட்டார்.

"ஆகட்டுமுங்க", என்றாள் தைலி. தந்தையின் சரள மான பாசக் கனிவு அவளுக்கு அளவற்றை ஆறுதலைக் கொடுத்தது. மீன்களைப் பதப்படுத்துவதில் முனைந்தாள் அவள்.

"ஆத்தா, மறுதக்கமும் உஞ்சித்தப்பன் சிலட்டூர்க் காரகளைக் கண்டு தண்டியிருக்கானாம். சிங்காரத்தையும் கலந்திருக்கானாம். முந்தின கடுத்தத்திலே, உம்முடிவு கண்டுதான் எப்பேச்சுமின்னு சொன்ன அந்தப் புள்ளைங்க இப்ப கொஞ்சம் மேலேறிப் பேசியிருக்காங்களாம்! வாழ்ந்தா, எங்க தைலியோடதான் வாழ்வு, இல்லாட்டி வாழ்வே இல்லைன்னு ஒவ்வொருத்தரும் தனித்தனியா, ஒருத்தர் சொன்னது இன்னொருத்தருக்குத் தெரியாத வகையிலே தண்டு முறிச்சுச் சொல்லிட்டாகளாம்!... பாவம், தம்பி யாண்டானுக்குத் தலை கிறுகிறுத்துப் போச்சாம்!... ம்... இதுகளை நினைச்சாக்க, இப்ப எனக்கும்கூட தலை சுத்திக் கிட்டு வருது!... ஒன்னையும் அந்த மாப்புள்ளைங்க ரெண்டு பேரையும் சுத்திக்கிணு இந்தப் பாளத்த விதி என்னமாய்க் கூத்து நடத்துது, பார்த்தியா?" என்றார் சேர்வை.

"ஆமாங்க, என்னோட தலைச் சுழி இப்ப அவங்க ரெண்டு பேரையும் சுத்தத் தொடங்கியிருச்சுப் போலே!"

தைலம்மையின் தொண்டை அடைத்தது!

# கதிர்க் கொத்து 19

"ஆத்தா!..."

முகில் வானம் மழை பொழிந்துதானே தீரவேண்டும்?

மழை பெய்தது.

கூடவே, வெய்யிலும் அடித்தது.

குடியிருப்பு வாண்டுகள் "டோய்!" காக்காய்க்கும் நரிக்கும் கண்ணாலம் டோய்!" என்று கைதட்டிக் கூச்சல் பரப்பினர்.

வானத்தில் இந்திரவில் வண்ணம் பரப்பிக் காட்சி யளித்தது.

நீராடி, புத்துடை துலங்கக் காட்சி தந்த அழகுக் கன்னி தைலம்மை எழிற் சோபிதம் குலுங்க வாசற்புறம் வந்து வானத்துக் கனவையும் வையத்துக் கனிவையும் ஒருசேர அனுபவித்த வண்ணம், மேற்கண்ட இரு காட்சிகளையும் கண் கொட்டாமல் பார்த்தபடி நின்றாள். மறுகணம் அவளிடமிருந்து நீள் மூச்சு புறப்பட்டது. அவள் தனக்குத் தானே ஒரு முறை தலையை உலுக்கிக் கொண்டாள். கொண்டையிலிருந்த பூச்சரத்தினின்றும் ஒரேயொரு மல்லிகைப்பூ உதிர்ந்து மண்ணில் விழுந்தது. 'ஆமா, அதான் எம் முடிவாக்கும்!'

இளங்கிரணங்கள் அவளது மென்மை மிகுந்த பாதங்களில் விளையாடிக் கொண்டிருந்தன. அவற்றைப் பிரிய

மனம் இல்லாமல், சற்றுநேரம் நின்றது நின்ற நிலையில் நின்றாள் பிறகு, உள்ளே அடியெடுத்து வைத்தாள்.

உள்ளே நடையில் பழைய கந்தாயங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார் செங்காளியப்பன் சேர்வை.

''அப்பா!'' என்றாள் தைலம்மை.

''என்ன ஆத்தா?'' என்றார் சேர்வை.

''எங் கையாலே கஞ்சி குடிக்கிறீங்களா?'' என்று அன்பின் பரிவுடன் கேட்டாள் மகள்.

ஏனோ மகளைப் பதட்டத்துடன் உற்று நோக்கினார் தந்தை.

தைலியின் நெற்றியில் பளிச்சிட்ட திருநீற்றுப்பட்டை அவருக்கு என்ன சொல்லிக் காட்டியதோ, என்னவோ?

அவள் புனிதம் மண்டிய இளநகை சிந்தி நின்றாள். அச்சிரிப்பில் கற்பின் திண்மை விளையாடிக் கொண்டேயிருந்தது!

''ஆத்தா, உம்பேச்சு என்னமோ புதிராட்டம் தென் படுதே?... ஒன் தங்கக்கையாலேதானே தெனமும் எனக்கு நீ கஞ்சி ஊத்துறே? என்னமோ, என்னை விட்டுப்புட்டு தேசாந்தரம் போற சாடையிலே நீ பேசுறீயே? என்னை விட்டுப்புட்டு—என்னைத் தவிக்க விட்டுப்புட்டு — நீ எங்கிட்டும் போயிடாதே, ஆத்தா!'' என்று தேம்பினார் அவர்.

''நீங்க என்ன அப்பா, என்னென்னமோ பேசுறீங்களே? நான் எதுக்கு எங்கேயும் போகப் போறேன்?...சாதாரணமாக கேட்டேன், எங்கையாலே கஞ்சி குடிக்கிறீங்களான்னு! மனுசக் காயம் என்னா நிச்சயமுங்க?... நீங்க எப்பவும் நம்ம குடும்பத்துப் பேரைக் காப்பாத்தி வச்சுப்புடுங்க. அது போதும்! என்னாலே நம்ம குடும்பப் பேரு ஓங்கத்தான்

ஓங்கும்!...இதை நீங்க எப்பவுமே நம்பலாமுங்க!” என்று தாழ் குரலெடுத்து உரைத்தாள் கன்னிப் பூ தைலம்மை.

“அது ஊரறிஞ்ச உண்மை ஆச்சே, ஆத்தா?...நீ தங்கக் கட்டியாச்சே? ... இன்னொண்ணையும் சொல்லோணும். நேத்தைக்கு ஊர்ச் சாவடிப்பக்கம் காலாற நடந்துக்கிட்டு இருந்தேன். ரெண்டு மூணு இளவட்டங்க கூட நம்ப ஆட்டுச் சம்பந்தத்தை விரும்புறதாச் சாடை தெரிஞ்சுது!...”

“அதையெல்லாம் இப்ப நெனைக்க வேண்டாமுங்க!... என் விதி எந்தலையிலே என்னா எழுதி வைச்சுருக்குதோ, அது ஆத்தா காட்டேறிக்குத்தானே புரியுமுங்க? மேலும், எனக்குன்னு ஒரு மாப்பிள்ளையை இந்த மண்ணிலே ஆத்தா புடிச்சுப்போட்டுத்தானே இருப்பா?....”

“அதான் மெய்யாச்சே!...இன்னொண்ணுகூட தோணுது எனக்கு! சொல்லட்டா, தைலி?”

“தாராளமாகச் சொல்லுங்க!

“இன்னும் இடை நட்டிலே ஒரு நாளுதான் இருக்கு. இப்ப நீயும் நானும் லோகமாதா சந்நதிக்குப் போவோம். போயி, போட்டி போடுற மாப்புள்ளைங்க சரவணன், சிங்காரம் ரெண்டு பேர் பேரையும் ஒரு துண்டுக் கடுதாசியிலே எழுதி திருவுளச்சீட்டுக் குலுக்கிப் போடுவோம். ஒரு புள்ளையை விட்டு அது ரெண்டிலே ஒண்ணை எடுக்கச் சொல்லுவோம். யாருபேரை ஆத்தா தீர்ப்புச் சொல்லுதோ, அதுப்படி அந்த மாப்புள்ளையையே மச்சானாய் ஏத்துக்கிடலாமே?” என்று நிறுத்தினார் சேர்வை.

ஏறு முகக்கதிர்கள் தைலியின் முகவெளியில் ஓயிலாக அளைந்தன. அவள் கண்கள் ஏன் அப்படிக் கலங்கின? அவள் மறுகணம் நெஞ்சை அழுந்தப் பிடித்துக் கொண்டு கண்களை மூடிக்கொண்டு, பற்களைக் கடித்துக் கொண்டு அப்படியே நின்றாள்.

"ஆத்தா!.... என்ன ஆத்தா செய்யுது?" என்று பதறித் துடித்தார் தந்தை.

தைலியின் முகம் வேர்வை கொண்டு திகழ்ந்தது. கண்களைத் திறந்தாள். தகப்பனை ஏக்கத்துடன் பார்த்தாள் "இப்ப நாலுநாளா இம்மாதிரி தான் நெஞ்சுவலி வருது அடிக்கடி! நீங்க சொல்லுற உபாயத்துக்குத் தேவையே கிடையாதுங்க. நானே இண்ணக்குள்ளாற எம் முடிவைச் சொல்லிப்புடுறேனுங்க!... நீங்க மட்டும் எப்பவும் திடமாயிருக்கோணும்!" ... என்று சொல்லி நிறுத்தினாள் தைலி. "ஆமாங்க அப்பாரே!... என்று மேலும் அழுத்தத்துடன் கூறினாள் சேர்வையின் மகள். அவள் நாசி புடைத்தது. நெஞ்சி ஏறி இறங்கியது.

சேர்வை மௌனம் காத்தார்.

கிருத்திகை விரதத்துக்கான வீட்டு அலுவல்களில் அவள் மனம் செலுத்த முற்பட்டாள் 'விருதத்துக்கு மாப்புள்ளைக்காரக ரெண்டுபேரையும் சாப்பாட்டுக்குக் கூப்பிடவேணும்னு ஆசை ஓடுது. ஆனா...? அதற்கு மேல் அவள் எண்ணம் தொடரவில்லை. பெருமுச்சுமட்டுமே தொடர்ந்தது. நல்ல தண்ணீரை எடுத்து முகத்தில் தெளித்துக் கொண்டாள். ஒரு மடக்கு குடித்தாள். எதையோ நினைவு படுத்திக்கொண்டாள் அவளுக்கு மேனிபுல்லரித்தது. 'ஆமா, அதான் எம்முடிவு!...வைராக்கியம் அவள் சித்தத்தில் கொடிகட்டி அரசாண்டது!

தாய்மைக் கோலப்பொலிவுடன் வந்த அங்கம்மா, "தைலி, ஒரு இணுக்கு கருகப்பிலை இருந்தாத் தாரியா?" என்று கேட்டாள்.

தைலி இருந்ததில் கொஞ்சம் எடுத்துக் கொடுத்தாள்.

'இந்த மாசம் கிட்டணியிலே ஒனக்குக் கண்ணாலம் ஆகிப்புடுமின்னு பேசிக்கிறாங்களே? ரொம்ப சந்தோசம்!...

என்னொடத்த வயசுப் பொண்ணு நீ!... வேளை இப்பதான் வந்திருக்கு!...'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள் அங்கம்மா.

பக்கத்து ஒழுங்கைப் பையன் வீரமணி வந்து விளக்குக் கொளுத்திக் கொண்டு சென்றான்.

ஈரத்தரையைப் பற்றிய கவலை இற்று, ''அக்கா!'' என்று கூப்பிட்டவாறு பூங்காவனம் வந்தாள். அவள் கழுத்தில் நாலுவடச் சங்கிலி அழகாக விளங்கிற்று.

தைலி எட்டிப் பார்த்தாள். ''தங்கச்சியா? வா!'' என்று உபசரித்தாள்.

''அக்கா, இப்ப எம்பாடு திண்டாட்டமாப் பூடுச்சே!... நானு இனிமே என்னா செய்யப் போறேன்?... சிலட்டூர்க் காரரும் நம்ப அயித்தை மவனும் ஆக ரெண்டுபேரும் என்னைக் கட்டிக்கிடப் போறதில்லையாம்!— சொல்லிப் பூட்டாகளாம்! தைலி என்ன பூலோக ரம்பையா என்ன, அதையே பத்தி நெனைச்சு ஆலாப் பறக்குறீங்களேன்னு அவங்க ரெண்டுபேரையும் ஏசிப்புட்டு எங்க அப்பன் வந்திட்டாராம்!...'' என்று கலக்கம் காட்டினாள் பூங்கா வனம்.

''அவங்க அவங்க மனசு கொண்டது மாளிகை! இதிலே, மூணாம் பேருக்கு எதிர்ப்பேச்சுக்கு இடமே கெடையாது, தங்கச்சி!... ஒனக்குன்னு ஒருத்தனை ஆண்டவன் இந்த ஊர் நாட்டிலே படைக்காம இருந்திருக்க மாட்டான்!...'' என்றாள் தைலி.

''ஆமா, ஓம்முடிவு எப்ப தெரியப் போவுது!'' என்று ஆவல்பறக்க விசாரித்தாள் பூங்காவனம்.

"அல்லாம் சட்டெனத் தெரிஞ்சுப்புடும். நீபோ! நீ எங்க ஊட்டுப்பக்கம் வந்தது தெரிஞ்சாக்கூட, சித்தப்பன் ஒன்னைத் திட்டுவாங்க!"

"ஆமா, ஆமா!" என்று சொல்லி ஓடினாள் பூங்காவனம்.

தைலம்மை பெருமூச் செறிந்தாள். வாசலுக்கு வந்தாள். மரங்களுக்கு மத்தியில் வெய்யில் கனன்றது. ஆத்தா மூத்தவளின் திருச்சந்நிதியை அடைந்து சேவித்துவரவேண்டும் போலத் தோன்றியது அவளுக்கு. வயல் பக்கம் சென்ற சேர்வை திரும்பாததால், வீட்டைப் பூட்டிக்கொண்டு கிளம்பினாள்.

ஒழுங்கை வந்தது.

குழந்தைகள் மணல் வீடு கட்டி விளையாடினர்.

நடைபயின்றாள். தைலம்மை அழகும் அவளுடன் நடைபயின்றது.

செக்கடிச் சத்தம் காற்றில் மிதந்தது.

பொன்னாயி எதிர்கொண்டாள்.

"வாடி பொன்னாயி கோயிலுக்கு" என்று கூட்டிச் சென்றாள்.

சங்கரன் குடியிருக்கப்பட்ட இடத்தில் அமைதி என்றுமே இருந்ததில்லையே?

விதியின் வினையாகி, வினைக்கும் விதியாகி, அபயக் கரம்காட்டிப் புதிய புன்னகைக் கோலம் ஏந்திக் காட்சி தந்து கொண்டிருந்தாள் அந்த ரத்தக் காட்டேறி அவள் உலகாளும் தாய் அல்லவா? அவள் சிரிப்புக்கு ஈடேது, எடுப்பேது?

தைலம்மை, ஆத்தாளின் சந்நிதியின்முன் வந்து நின்றாள். குங்குமம் இட்டுக் கொண்டாள்.

பொன்னாயி பின்னால் நின்றாள்.

"ஆத்தா மூத்தவளே!"

தைலம்மை உச்சாடனம் கொண்டவளாக தன்னை மறந்த கதியில் வாய்விட்டு அழைத்தாள். அவளது ஒன்றிய இதயம் அந்தத் தாயை அழைத்தது!

ஆத்தாளுக்குப் பேசத் தெரியுமா?

பின், ஏன் அவள் பேசவில்லை?

மீண்டும் அந்த ஆத்தா புன்னகைக் கோலத்தோடுதான் தரிசனம் கொடுத்தாள்.

'ஆத்தா! எம்முடிவை நீ அறிஞ்சவ. எம்பேச்சை அந்த மாப்புள்ளைக்காரகளுக்கு ஊடாலே உடைச்சு வைச்சுப்புடப்போறேன். அதுக்கு உண்டான வல்லமையைத் தா எனக்கு!.... என்னைக் காப்பாத்து!...''

தைலியின் கண்ணீர் மாலையாக நீண்டது.

காட்டேறித் தாய்க்கு மாலை சூட்டி நன்றிக் கடன் செலுத்தத்தான் அவள் கண்ணீர் மேலும் மேலும் வளர்ந்ததோ?

பொன்னாயி நகர்ந்தாள். தைலியின் புதிய முகத்தெளிவைக் கண்டு விழித்தாள். அவள் நெஞ்சு அடித்துக் கொண்டது.

"வாடி பொன்னாயி, நடப்போம். அப்பன்காரரு திரும்பினாலும் திரும்பியிருப்பாக! போகையிலே, நம்ம ஊர்க் களத்து மேட்டுப்பாதையிலே போவம்!..." என்று சொல்லி

முன்னே தைலம்மை நடந்தாள். கால் விரல் மிஞ்சிகள் சுநாதம் எழுப்பின. தொடர்ந்தாள் தோழி.

தைலிக்கு மறுபடியும் நெஞ்சு வலித்தது. இறுகப் பற்றிக் கொண்டாள் நெஞ்சை. மார்பின் மையத்தில் அழுந்திப் பதிந்திருந்த சங்கிலி உறுத்தியதோ?

களத்துமேடு காட்சி தந்தது!...

அங்கே சரவணனும் சிங்காரமும் உட்கார்ந்து தாயம் ஆடிக் கொண்டிருந்த காட்சியைப் பனங்கருவில் வந்த போதே தைலம்மை கண்டு கொண்டாள். அவள் மனம் கட்டு மீறித் துடிக்கத் தொடங்கிவிட்டது. நடந்தாள். அவளுடன் ஊழிப் புயலும் நடந்திருக்க வேண்டும். தள்ளத் தள்ளாடி நடந்த தைலி, அப்படியே களத்துமேட்டின் முகப்பிலிருந்த பெரிய புளிமரத்தில் மோதிக் கொண்டாள் மறுகாணம் நிலை குப்புறத் தரையில் சாய்ந்து விட்டாள் தைலம்மை. தரையில் கிடந்த சுக்கான் கல்லில் அவள் மண்டை அடிபட்டது!

''ஐயையோ! என்று அலறினாள் பொன்னாயி.

தைலியின் நெற்றிமேட்டில் ரத்தம் பீறிட்டது.

அதற்குள், சரவணனும் சிங்காரமும் அங்கு ஓட்டமாக ஓடி வந்து கொண்டிருந்தார்கள்!

சேலை முனையைக் கிழித்து, தைலியின் நெற்றித் திட்டில் சொட்டிக் கொண்டிருந்த உதிரத்தைத் துடைத்தாள் துணிக் கிழிசலை அவள் நெற்றியைச் சுற்றிக் கெட்டியாகக் கட்டுப் போட்டாள் பொன்னாயி. அவள் காலை உதறிக் கொண்டு திடுக்கிட்டுக்குதித்த போது பாம்பொன்று, தரையில் கிடந்த தைலம்மையின் காலடியினின்றும் ஓடியதைக் கண்டாள். அவள் மேலும் பதறினாள்.

அக்காட்சி சரவணனுக்கும் சிங்காரத்திற்கும் தட்டுப் பட்டது. அவர்கள் காதுகளில், ''ஐயையோ! உள்ள

கஷ்டம் பத்தாதின்னு பாம்பு வேறே தைலியைக் கடிச்சிட்டுதுபோலேத் தோணுதே?'' என்று பொன்னாயி கூச்சலிட்டதும் விழுந்தது. ''ஆ!'' என்ற அலறலொலி ஏக காலத்தில் அவர்கள் இருவரது உந்திக் கமலங்களையும் விட்டு எழுந்து விழுந்தது. மூச்சமுட்ட வந்து நின்றவர்கள் ஒருகணம் அந்தப் பாம்பைக் கவனித்தார்கள்.

அந்தப் பாம்பு தைலம்மையின் மேனியை வளைத்து ஊர்ந்து அவளது தலைமாட்டில் அழகாகப் படம் விரித்தது.

ஆம்; சத்தியத்தின் தரிசனம் அது!

கையெடுத்துக் கும்பிட்டார்கள் சரவணனும் சிங்காரமும்.

''எங்க தைலியைக் காப்பாத்து நாகம்மாதாயி!'' என்று கும்பிட்டாள் பொன்னாயி.

பாம்பு தலையைத் தரையில் பதித்துக் கொண்டு தைலம்மையை ஒருமுறை பார்த்துவிட்டு மண்ணில் ஊர்ந்தது.

கூட்டம் களத்துமேட்டில் நெரியத் தலைப்பட்டது.

பூங்காவனம் விம்மினாள்!

தைலம்மை மூடிய கண்களைத் திறக்காமல், சுயநினைவற்று, மயக்க நிலையில் சவம் போலக் கிடந்தாள். மண்டைக் குருதி நிற்கவில்லை; வழிந்து கொண்டேயிருந்தது.

தலையின் கொண்டைப்பூக்களும் படர்ந்திருந்த தும்பைப் பூக்களும் ரத்தக் கண்ணீர் சொரிந்தன.

ஆளுக்கொரு பக்கமாக அமர்ந்து தைலியை நோக்கினார்கள்.

நோக்கியவர்கள் சரவணனும் சிங்காரமும்! அவர்கள் கண்கள் கண்ணீரை வடித்துக் கொண்டிருந்தன.

அதற்குள் “ஆத்தா!” என்று அலறிக் கதறியவண்ணம் ஓடோடி வந்து விழுந்தார் செங்காளியப்பன் சேர்வை. மகளைப் பார்த்தார். மகளின் காலடியிலிருந்து பாம்பு நழுவியோடிய தகவலும் சொல்லப்பட்டது. “பாம்பு கீம்பு தீண்டியிருக்குமோ? சொரணை தப்பிக் கெடக்குதே என் பொண்ணு!” என்று ஓலமிட்டார்.

“ஐயையோ!” என்று ஒருசேரக் கதறினார்கள் சரவணனும் சிங்காரமும்.

அதற்குள் பாம்பாட்டி முனியன் அங்கு வந்து விட்டான். தைலியைப் பார்த்தான். நாடியின் கணிப்பை அறிந்தான். “அதெல்லாம் இல்லீங்க. நஞ்சு ஒண்ணும் இது மேனியிலே தண்டலைங்க! அதுக்குண்டான தடயம் துளிகூட தட்டுப் படலீங்க சாமியோ!” என்றான்.

“ஆத்தா, எல்லாம் உன்னோட பிச்சைதான்!” என்று நல்ல மூச்சு விட்டபடி செருமலானார் சேர்வை.

அப்போது, தெய்வாதீனமாகக் கண்களை மெல்லத் திறந்தாள் தைலம்மை. சுற்றிச் சூழ, நோக்கினாள். தன் தந்தையைப் பார்த்தாள். அதே சுவட்டில், சிங்காரத்தையும் சரவணனையும் கூர்ந்து ஊடுருவி நோக்கினாள் அவள்.

சரவணனும் சிங்காரமும் தங்களையும் மறந்து தேம்பிக் கொண்டிருந்தார்கள்.

இப்போது தைலம்மை மெல்லத் தலையைத் தூக்கினாள். மூச்சை அடக்கிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். பொன்னாயியின் கைத்தாங்கலில் சாய்ந்து கொண்டாள்.

இடது கையால் தலையைப் பிடித்தவண்ணம் அவர்கள் இருவரையும் மாறி மாறி—மாற்றி மாற்றிப் பார்த்தாள். அவளருகில் வந்து குந்தினார் சேர்வை.

இன்னமும் சிங்காரமும் சரவணனும் விம்மி வெடித்துக் கொண்டுதான் இருந்தார்கள்.

"இந்தப்பாருங்க, நீங்க ரெண்டுபேரும் இனிமே அழப் புடாதுங்க. எனக்கோசரம் இனியும் நீங்க கண்ணீர் விடாப் புடாதுங்க!... நீங்க ரெண்டுபேரும் பெரிய மனசுபண்ணி என்னைச் சமிச்சுப் புடவேணும்!... உங்க ரெண்டு பேரிலே யாருமே என்னை இனிமே அடைய முடியாதுங்க! ஒங்க ரெண்டு பேரையும்—ஒங்க ரெண்டுபேரோட பாசத்தையும் அன்பையும்—என்னாலே இந்தச் சென்மத்துக்கு மறக்கவே ஏலாதுங்க!... நீங்க ரெண்டு பேரும் இந்தக் களத்து மேட்டிலே ஒருத்தருக்கொருத்தர் வச்ச சம்பிராயம் தோத்துப் போயிட்டதாக நீங்க ரெண்டு பேருமே நெனைச்சு வருத்தப் படக் கூடாதுங்க! இந்த விளையாட்டிலே மெய்யாலுமே தோத்தவள் நானேதான்!... என்னை நீங்க ரெண்டு பேரும் சமிச்சுப்புடுங்க!" என்று விம்மி, அவர்கள் இருவரையும் சரவணன், சிங்காரம் ஆகிய இருவரையும்—நோக்கிக் கைகளைக் குவித்தாள் தைலம்மை. அவளது அழகான மார்பகம் அழகாக எம்பித் தாழ்ந்தது. அவளது பேசும் விழிச் செம்புகளினின்றும் பேசாத கண்ணீர் புனிதச்செறிவுடன் ஆறாகப் பெருகி வழிந்து சொட்டிக் கொண்டிருந்தது.

சரவணனும் சிங்காரமும் அப்படியே ஐயனார் சிலைகளாக மாறி நின்றார்கள். குனிந்த தலைகள் நிமிரவேயில்லை.

செங்காளியப்பன் சேர்வை வாயடைத்துப் போனார். அவர் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அவிழ்ந்த குடுமி அவிழ்ந்தபடியே கிடந்தது.

புடவையையும் ரவிக்கையையும் ஒழுங்கு படுத்திக் கொண்டு எழுந்தாள் தைலம்மை. மூச்சு கூட்டி நின்றாள் சேலையின் முக தலைப்பைக் கொய்து முகத்தைத்துடைத் துக் கொண்டாள். குங்குமமும் ரத்தத்திலகமும் ஒன்றினின் றும் ஒன்று பிரிக்க முடியாத பாவைனயில் பளிச்சிட்டுத் திகழ்ந்தன. தலைமுடியைக் கோதி விட்டாள். கொண்டைப் பூவைச் சரிப்படுத்தி விட்டாள். தலையை நிமிர்த்தினாள்; தந்தையைக் குறி வைத்து விழி விரித்தாள். "அப்பா! வாங்க நம்ம ஊட்டுக்குப் போவோம்!...." என்று கூறினாள், அவளது பேச்சில், குரலில், பான்மையில் இப்போது புத்தம் புதிய தெளிவு இருந்தது. முகத்தில் வேர்வை இருந்தது.

தந்தையும் மகளும் புறப்பட்டார்கள்!...

அவர்களுக்குக் குறுக்கே காகம் ஒன்று சோற்றுக்கைப் பக்கமாகப் பறந்து சென்றது. நல்ல சகுனம் காட்டிப் பறந்து சென்றது.

உச்சி வெய்யில் இப்படியா வறுத்துக் கொட்டும்?

களத்துமேட்டின் சந்தடி கொஞ்சம் கொஞ்சமாக அடங்கிக் கொண்டே இருந்தது.......

**நிறைவு**

# செல்வி பதிப்பகப் புத்தகங்கள்

---

படிக்கப் பயன் தரும் : பயிலச் சுவை தரும் :

| | | |
|---|---|---|
| தமிழண்ணல் | : | தாலாட்டு |
| அழ. வள்ளியப்பா | : | பாடிப் பணிவோம் |
| பூவை. எஸ். ஆறுமுகம் | : | தாயின் மணிக்கொடி<br>ஆடும் தீபம்<br>களத்து மேடு |
| ஆழி. வே. ராமசாமி | : | விஞ்ஞான வேடிக்கைகள்<br>ஏழைப் பெண்<br>அத்திப் பழம்<br>தங்கத் தம்பிகள் |
| இரவீந்திரநாத் தாகூர் | : | கீதாஞ்சலி<br>சாதனா |
| வி. ஆர். எம். செட்டியார் | : | தாகூரின் கவிதை,<br>சிறுகதை, நாடகம் |

| | | |
|---|---|---|
| சிந்தனைக் கவிஞர் பெரி. சிவனடியான் | : | கவியரங்கக் கவிதைகள்<br>அவளுக்காக (நாடகம்) |
| முல்லை P L. முத்தையா | : | பாரதியார் விருந்து |
| எம். சோலையன் | : | பாரதியும் மில்டனும் |
| எண் சோதிடக்கடல் பண்டித மு. முத்துவேங்கடாசலம் | : | பிறந்த நாள்<br>சோதிடப் பலன்கள்<br>நீங்களும் சோதிடராகலாம்<br>அரதன மாலை<br>(காளிதாசனின் இரத்தினாவளி) |
| பரிசு பெற்ற கதைகள் | : | பதினைந்து சிறு கதைகள் |
| டாக்டர் ரெ. முத்துக்கணேசன் | : | சித்தர் நெறி |
| அய்க்கண் | : | இளவெயினி |

---


உங்கள் தேவைக்கு எழுதுங்கள் :

செல்வி பதிப்பகம்

புத்தகம் வெளியிடுவோர்
விற்பனையாளர்
காரைக்குடி-623 001
டெலிபோன் : 2424

# செல்வி பதிப்பகப் புத்தகங்கள்



படிக்கப் பயன்தரும்
பயிலச் சுவைதரும்

## புதிய புத்தகங்கள்

தாலாட்டு —தமிழண்ணல்

பாரதியும் மில்டனும் —M. சோலையன்

பாரதியார் விருந்து —முல்லை பி.எல். முத்தையா

கவியரங்கக் கவிதைகள் —பெரி. சிவனடியார்

களத்து மேடு —பூவை எஸ். ஆறுமுகம்

பிறந்த நாள் சோதிடப் பலன்கள்
நீங்களும் சோதிடராகலாம்
—பண்டிதர் மு. முத்துவேங்கடாசலம்

தாகூரின் கவிதை, சிறுகதை, நாடகம்
கீதாஞ்சலி
—V. R. M. செட்டியார்

**செல்வி பதிப்பகம்**

புத்தகம் வெளியிடுவோர்
விற்பனையாளர்
காரைக்குடி-623 001


Wrapper Printing: Om Vinayaga Printers Madras-33